வெளியீடு : 24-1-2017 Issued : 24-1-2017

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 19, 2016—தொகுதி 12—எண் 2

Friday, the 19th August 2016—Volume 12—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

19–8–2016

உள்ளடக்கம்

	பக்கங்கள்
1. வினாக்கள்–விடைகள்—	
உடுக்குறியிட்ட வினாக்கள்	439-466
2. 17–8–2016 அன்று முதல் ஒரு வார காலத்திற்கு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கிவைத்ததை மறுபரிசீலனை செய்யக் கோருதல்—	467-469,470
**திரு. கே.என். நேரு*	467
திரு. கரி. இராமசாமி	467-468
**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்*	468-469
3. கவன ஈர்ப்பு—	
மதுரை (வடக்கு) தொகுதி, வண்டியூர், செல்லூர் கண்மாய்களைத் தூர் வாருதல்	469,470-477
திரு. வி.வி. இராஜன் செல்லப்பா	469,470-471, 473-477
**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி*	471-473, 475-476
4. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*	477-578
(அ) கோரிக்கை எண் 5—வேளாண்மைத் துறை	
(ஆ) கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	
மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு	477-480,521, 543-577

4. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*	*பக்கங்கள்*
(அ) கோரிக்கை எண் 5—வேளாண்மைத் துறை *(ஆ) கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)* —*தொடர்ச்சி*	
**மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி*	478-480, 523, 526, 530-543
திரு. எம். செல்வராசு	481-484
**திரு. வி. சேகர்*	485-496
**திரு. கே.ஏ. பாண்டியன்*	496-508
**திரு. கோ. லோகநாதன்*	508-517
**திரு. எம். தமிமுன் அன்சாரி*	517-529
**மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு*	527-528
**மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்*	529-530
5. அரசினர் தீர்மானம்—	
விதி 32–ஐத் தளர்த்துதல்	578-579
6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்	579-580

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆவணி 3, திருவள்ளுவர் ஆண்டு–2047

2016 ஆகஸ்ட் 19, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்; அதனால்
உழந்தும் உழவே தலை."

சுழன்றுகொண்டிருக்கும் இவ்வுலகில் மக்கள் பல தொழில்களைச் செய்தாலும் அவையனைத்தும் உழவுத் தொழிலையே நம்பி உள்ளன. எனவே, முதன்மையான தொழிலாக விளங்குவது உழவுத் தொழிலே.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

87—

புறவழிச் சாலை

***3314—திரு. பி.வி. பாரதி:**

மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2016 ஆகஸ்ட் 19

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சியில் புறவழிச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சியில் புறவழிச் சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.*

திரு. பி.வி. பாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குப் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். 10 கோடி தமிழ் மக்களின் இதயத் துடிப்பாகவும், ஒன்றரைக் கோடி கழகத் தொண்டர்களின் உயிர் மூச்சாகவும் இருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய சீர்காழி தொகுதியிலுள்ள வைத்தீஸ்வரன்கோயில் மிகப் பிரசித்தி பெற்ற நவக்கிரக ஸ்தலங்களுள் ஒன்றாக இருக்கிறது. சிதம்பரத்திலிருந்து சீர்காழி, வைத்தீஸ்வரன்கோவில் பகுதிகளைக் கடந்து மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சாவூர் வரை மாநில நெடுஞ்சாலை செல்கிறது. குறிப்பாக, வைத்தீஸ்வரன்கோயில் தினந்தோறும் மக்கள் கூடுகின்ற ஓர் இடமாக இருக்கிறது. இந்த ஸ்தலத்திற்கு அதிகமான பக்தர்கள் வருகின்ற காரணத்தினாலும், குறிப்பாக பங்குனி மற்றும் சித்திரை மாதங்களில், பங்குனி மாதத்தில் சேலத்திலிருந்து குலதெய்வ வழிபாட்டிற்காக வருகின்றவர்களும், சித்திரை மாதத்தில் காரைக்குடி மற்றும் சிவகங்கையிலிருந்து குலதெய்வ வழிபாட்டிற்காக வருகின்றவர்களும், மேலும், செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மிக அதிக அளவில் பக்தர்கள் கூடுகின்ற ஓர் இடமாக இருக்கின்ற காரணத்தினாலும், மிக அதிக அளவில் வாகனங்கள் வருவதால் போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கிறது. கிட்டத்தட்ட 3 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கின்ற காரணத்தினால். . .*

2016 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. பி.வி. பாரதி: *முக்கியத்துவம் கருதி, அந்தப் பகுதியில் புறவழிச் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம்–சீர்காழி சாலை 53.350 கி.மீ. நீளம் கொண்ட மாநில நெடுஞ்சாலை எண் 64, வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சி வழியாகச் செல்கிறது. தற்போது இச்சாலை 7 மீட்டர் அகலத்தில் இரு வழிச் சாலையாக, போக்குவரத்திற்கு ஏற்றதாக நல்ல நிலையில் உள்ளது. வைத்தீஸ்வரன் கோவில் பேரூராட்சிக்கு 3.60 கி.மீ. நீளம் கொண்ட புதிய புறவழிச் சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன், நிதி நிலைமைக்கேற்ப புறவழிச் சாலை அமைக்க அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.*

திரு. பி.வி. பாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறவழிச் சாலை அமைப்பதற்குரிய அனைத்து அடிப்படை முகாந்திரப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தொகுதி மக்கள் சார்பாகத் தெரிவித்துக்கொள்வதிலே பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. வி. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவி எங்கள் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா எனும் மூன்றெழுத்தால் அகிலத்தையே ஆளுகின்ற எங்கள் தாயே, தமிழர்களின் ஒட்டுமொத்த வறுமையைப் போக்கி, எல்லோரும் எல்லாமும் பெற்றிட வழிவகை செய்த எங்கள் தாயே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகின்றேன்.*

முற்பகல் 10–05

மயிலாடுதுறை தொகுதி, நகருக்கு புறவழிச் சாலை, கும்பகோணம்–சீர்காழி சாலையாக 28.6–ல் ஆரம்பித்து, மயிலாடுதுறை–திருத்துறைப்பூண்டி சாலை கி.மீ. 4.4–ல் முடியும் வரை புறவழிச் சாலை அமைக்க 16.8 கி.மீ. தூரம். இந்தப் புறவழிச் சாலையை இந்த நிதி ஆண்டில் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற மயிலாடுதுறை புறவழிச் சாலை, நில எடுப்புப் பணி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நிலம் எடுக்கின்ற பணி நிறைவடைந்த பிறகு, புறவழிச் சாலை அமைக்கின்ற பணி தொடரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள். அனுமதி கேட்டார், (குறுக்கீடு) கேள்வி கேளுங்கள்.*

திரு. கே.வி. சேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* **

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2016 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் பார்த்தேன். அந்த பிரச்சினை முடிந்து விட்டது. உட்காருங்கள். இது அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். பாலசுப்பிரமணி அவர்கள்.*

திரு. ஆர். பாலசுப்பிரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆம்பூர் நகரத்திற்கு இரயில்வே மேம்பாலப் பணிகள் 2014–2015–ல் அறிவிக்கப்பட்டது. அந்தப் பணிகள் இன்னும் துவங்கப்படாத நிலையில் இருக்கின்றன. அது எப்பொழுது துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் இரயில்வே மேம்பாலப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். அதில் முதல் கட்டப் பணி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முதற்கட்ட பணியிலே, நிலம் எடுக்கின்ற பணி மிக முக்கியமான பணி. நேர்பாடு எடுக்க வேண்டும். ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. முதற்கட்டப் பணி முடிவடைந்தவுடன் அந்தப் பணி தொடரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி அவர்கள்.*

திரு. பா. நீதிபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். உசிலம்பட்டி தொகுதியிலே, உசிலம்பட்டி நகர் பகுதியிலே, கேரளா, கம்பம், தேனி செல்லும் பேருந்துகள் வந்து செல்கின்றன. இதனால் உசிலம்பட்டி நகரத்திற்குள்ளே போக்குவரத்து மற்றும் மக்களுக்கு இடையூறுகள் ஏற்படுவதோடு*

விபத்துகளும் அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, கடந்த ஆண்டு, நகரத்திற்குள் பேருந்துகள் வந்து செல்லாமல், சுற்றுப்புறச் சாலை அமைப்பதற்காக அதிகாரிகள் மட்டத்திலே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அது நிலுவையில் உள்ளது. ஆகவே, அந்தத் திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும், ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதில் எதிர்பார்க்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி புறவழிச் சாலைப் பணி விரைந்து நடக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. உசிலம்பட்டி நகரத்திலே அமைக்கப்படுகின்ற புறவழிச் சாலை தேசிய நெடுஞ்சாலையின்கீழ் வருகின்றது. ஆகவே, அதற்கு மாற்று இடம் தேர்வு செய்வதற்காக, இன்றைக்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு, மைய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அனுமதி கிடைக்கப் பெற்றவுடன், புறவழிச் சாலை அமைக்கின்ற பணி தொடரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வி. கஸ்தூரி வாசு அவர்கள்.*

திருமதி வி. கஸ்தூரி வாசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவியியலாய்ப் பிறந்த எங்கள் புரட்சித் தலைவி, கடையேழு வள்ளல்கள் கடந்த எட்டாம் வள்ளலாம், (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளின் துயர் துடைக்க வந்த தாய், மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த மகராசி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். வால்பாறை தொகுதி, ஆழியாறு செல்லும் பாதையில் வால்பாறைக்கும், ஆழியாறுக்கும் அதிக வாகனங்கள் செல்வதுடன், அதிகமான வாகனங்கள் சாலைகளில் நிறுத்தப்படுகின்றன. எனவே, பொள்ளாச்சி முதல் ஆழியாறு வரை செல்லும் பாதை, 4 வழிச் சாலையாக மாற்றப்படுமா? அதற்கு*

2016 ஆகஸ்ட் 19]

அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாலையை விரிவுபடுத்த வேண்டுமென்று இங்கே கேட்டிருக்கின்றார்கள். ஒவ்வோர் ஆண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, போக்குவரத்து நெரிசல் இருக்கின்ற சாலைகளைக் கணக்கிட்டு, அதற்கு ஏற்றவாறு சாலையை அகலப்படுத்தி வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற சாலையும் ஆய்வு செய்யப்பட்டு, அந்த ஆய்விலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றபட்சத்தில், நிதிநிலைமைக்கேற்ப விரிவுபடுத்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது காங்கேயம் சட்டமன்றத் தொகுதியில், காங்கேயம் நகரத்தினுடைய மையப் பகுதியில் தேசிய நெடுஞ்சாலை உள்ளது. அது மிக முக்கியமான நெடுஞ்சாலையாகும். கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி வழியாகக் கோவை மற்றும் கேரள மாநிலத்திற்குச் செல்லுகின்ற பிரதான தேசிய நெடுஞ்சாலையாகும். அந்தத் தேசிய நெடுஞ்சாலையில்* signal *இருக்கிற ரவுண்டானா அருகில் காங்கேயம் காவல் நிலையம், தாலுகா அலுவலகம், நீதிமன்றங்கள், கோயில்கள் அமைந்திருக்கின்ற மிக முக்கியமான பகுதி. மேலும், அங்கு திருமண மண்டபங்களும் அமைந்துள்ளன. திருமண நாட்களிலே போக்குவரத்து நெருக்கடி மிக அதிகமாக இருக்கிறது. அங்கிருந்து 1 கிலோ மீட்டர், 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு அந்த நல்ல நாட்களிலே போக்குவரத்துத் தடைபடுகிற சூழல் உள்ளது. அந்த நிலையைப் போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, காங்கேயம் நகரைச்*

சுற்றிலும் புறவழிச் சாலை அமைத்துத் தரவேண்டும். ஏனென்றால் அங்கிருந்து சென்னிமலை, ஈரோடு, சிவன்மலை, திருப்பூர் என்று சுற்றிலும் பிரதான சாலைகள் உள்ள, மையமாக இருக்கிற அந்தச் சந்திப்பை போக்குவரத்து நெருக்கடி இல்லாமல் செய்திட ஒரு சுற்றுச் சாலை, புறவழிச் சாலை அமைத்துத் தந்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயத்திற்கு புறவழிச் சாலை அமைத்துத் தரவேண்டுமென்று இங்கே உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். நான் ஏற்கெனவே இந்த அவையிலே குறிப்பிட்டிருக்கின்றேன். ஒவ்வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட புறவழிச் சாலை அமைப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஆகவே, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளில் எங்கெங்கெல்லாம் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றதோ அந்தப் பகுதிகளையெல்லாம் ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையிலே நிதிநிலைமைக்கேற்ப ஒவ்வோர் ஆண்டும் புறவழிச் சாலை அமைக்கின்ற பணியை அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காங்கேயம் பகுதியிலும் சுற்றுச் சாலை அமைக்க வேண்டுமென்று இங்கே கேட்டிருக்கின்றார்கள். அந்தப் பகுதியை ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையிலே, அங்கு எந்த அளவுக்கு போக்குவரத்துச் செறிவு இருக்கிறதென்பதைக் கணக்கிட்டு, நிதி நிலைமைக்கேற்ப வருகின்ற காலத்திலே அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.*

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் பிரச்சாரத்தின்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நமக்கு நாமே என்றில்லாமல்,*

நமக்கு மக்கள்தான் முக்கியம் என்று கோரிக்கை வைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு மக்களும், 'குடும்ப ஆட்சி வராமல் முடியட்டும், தமிழகம் அம்மா தலைமையில் விடியட்டும்' என்று தீர்ப்பளித்து, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் 6 ஆவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களை வணங்குகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் நகரம் மிகவும் பழமை வாய்ந்த நகரம். அரியலூர் மாவட்டத்திலே இராஜேந்திர சோழனால் உருவாக்கப்பட்ட நகரம். (குறுக்கீடு) அந்த நகரத்திற்கு மேற்புறத்திலே திருச்சி, அரியலூர் போன்ற. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு) திரு. ராமஜெயலிங்கம், கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: *ஜெயங்கொண்டத்தின் நான்கு புறங்களிலும் பெரிய நகரங்கள் இருக்கின்ற காரணத்தினால் ஜெயங்கொண்டம் நகரத்தில் புறவழிச் சாலை அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டத்திற்கு புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, ஜெயங்கொண்டம் நகராட்சிப் பகுதியிலே செல்லுகின்ற வாகனங்களுடைய எண்ணிக்கையை ஆய்வு செய்து, அந்த ஆய்விலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல அதிகமான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றபட்சத்தில், நடப்பாண்டில் நிதிநிலைமைக்கேற்ப அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2016 ஆகஸ்ட் 19

88—

பகுதி நேர நியாய விலைக் கடை

***436—திரு. சு. ரவி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் தொகுதி, கீழ்க்குப்பம் ஊராட்சி, மேலத் நகர் மற்றும் ஜவகர் நகர் பகுதிகளில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், காவனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் நடத்தப்படும் கீழ்க்குப்பம் முழு நேர நியாய விலைக் கடை 585 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதி நேரக் கடையைப் பிரித்த பின் தாய்க் கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமென்ற நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், மேலத் நகர் மற்றும் ஜவகர் நகர் பகுதிகளில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

முற்பகல் 10–15

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

'வயிற்றுக்குச் சோறிட வேண்டும்–இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்'

என்றான் பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி. பாரதியின் கூற்றை நடைமுறைப்படுத்தி விலையில்லா 20 கிலோ அரிசி தந்து, பசியில்லா தமிழகத்தை உருவாக்கியவர் மாண்புமிகு இதய தெய்வம்

2016 ஆகஸ்ட் 19]

அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட கீழ்க்குப்பம் ஊராட்சியைச் சேர்ந்த மேலத் நகர் மற்றும் அதைச் சுற்றியுள்ள ஜவகர் நகர், ஜெயம் நகர், மூகாம்பிகை நகர், ஜெ.ஜெ. நகர் ஆகிய பகுதிகளில் வாழுகின்ற சுமார் 175 குடும்ப அட்டைதாரர்கள் 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கீழ்க்குப்பம் நியாய விலைக் கடைக்குச் சென்று ரேஷன் பொருட்களை வாங்கி வருகிறார்கள். தூரம் மிக அதிகமாக உள்ளதால், குறிப்பாக பெண்களும், முதியவர்களும் சிரமப்படுகிறார்கள். மழைக் காலங்களில் இன்னும் அதிகமாக சிரமப்படுகிறார்கள். ஆகவே, மேலத் நகரில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துத் தரவேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் தொடர்ந்து கோரி வருகின்றார்கள். இன்று அந்தக் கோரிக்கையை அவையிலே நான் முன்வைத்தபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கடையைப் பிரிக்கின்றபோது, தாய்க் கடையிலே 500 குடும்ப அட்டைகளுக்குக் குறைவாக இருக்கிற காரணத்தினால் பரிசீலிக்க இயலாது என்றும், வாய்ப்பில்லை என்றும் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்கின்ற அந்தப் பகுதி நேர நியாய விலைக் கடைக்கும், தாய்க் கடைக்கும் 3 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. 174 குடும்ப அட்டைகள் உள்ளன. வாடகையில்லாக் கட்டடம் தருவதற்கு அந்தப் பகுதி மக்கள் தயாராக இருக்கிறார்கள். தாய்க் கடையிலிருந்து பிரிக்கின்றபோது, 500 குடும்ப அட்டைகளுக்குக் குறைவாக உள்ளது என்கிற ஒரேயொரு நிபந்தனை மட்டும்தான் பூர்த்தியாகவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதி மக்களுடைய நலனைக் கருதி இந்த ஒரு விதியைத் தளர்த்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முடியாது', 'இல்லை' என்ற வார்த்தைகளே தன் அகராதியிலிருந்து அகற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) எனது கோரிக்கையை கருணையின் வடிவமாய்த் திகழும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று மேலத் நகரில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடையை அமைத்துத் தரவேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் வாழ்கிற மக்கள் குறிப்பாக கீழ்க்குப்பம் நியாய விலைக் கடைக்கு வருவதற்கு 3 கிலோ மீட்டர் தூரம் நடந்து வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறதென்றும், அதனால் மக்கள் சிரமப்படுகிறார்கள் என்றும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம், இந்திய நாட்டில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாக பொது விநியோகத் திட்டத்தை மிகச் சிறப்பான முறையில், மெச்சத்தக்க வகையில், அனைவரும் பாராட்டுகிற வகையில் செயல்படுத்துகின்ற ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஏறத்தாழ 1 கோடியே 91 இலட்சம் குடும்பங்களுக்கு விலையில்லா அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கி, அந்தந்தப் பகுதி மக்களுடைய சிரமங்களைப் போக்க வேண்டும், மேற்கண்ட பொருட்கள் அவர்களுக்குத் தங்குதடையின்றி கிடைக்க வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையில், கருணையுள்ளத்தோடு கடந்த 5 ஆண்டுகளில் ஏறத்தாழ 602 முழு நேரக் கடைகளும், 1,434 பகுதி நேரக் கடைகளும், ஆக மொத்தம் 2,036 கடைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக மக்களுக்காகவே திறந்து, நடத்தி வருகிறார்கள். மேலும், கூடுதலாக 36 நகரும் நியாய விலைக் கடைகளையும் வழங்கி, மக்களுக்குப் பொருட்கள் தங்குதடையின்றிக் கிடைக்க வேண்டுமென்று செயல்பட்டுவரும் தாயினுடைய ஆட்சியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, துறை ரீதியாக ஆய்வு செய்து, பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலத் நகரில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடையைத் திறக்க பரிசீலிக்கப்படும் என்ற ஒரு நல்ல பதிலை வழங்கியுள்ளார்கள்.*

கும்பிட்ட கரங்கள் விலகுவதற்கு முன்னரே வரம் தரும் அன்னையாய் விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அந்தப் பகுதி மக்களின் சார்பிலே நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் திருப்பூர் மாவட்டத்திற்கு ரூ.33 கோடி செலவில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள் நீதி தேவதையாக விளங்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு, கோடானு கோடி நன்றிகளை அவர் தம் பாத மலர்களில் பணிந்து சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திருப்பூர் மாவட்டம், போயம்பாளையம் நியாய விலைக் கடையில் 1,500 குடும்ப அட்டைகளுக்குமேல் உள்ளன. இதனால் பொதுமக்கள் ரேஷன் பொருட்களை வாங்குவதற்குச் சிரமப்படுகிறார்கள். இங்கு வசிக்கும் மக்கள் அனைவருமே ஏழைக் குடும்பத்தினர். அவர்கள் அனைவரும் தொழிலாளர்களாக இருக்கின்ற காரணத்தால், ரேஷன் பொருட்களை வாங்குவதற்கு நீண்டநேரம் காத்திருப்பதால், வேலைக்குப் போக முடியாத சூழ்நிலை உருவாகிறது. ஆகவே, பொதுமக்கள் சிரமமின்றி ரேஷன் பொருட்களை விரைவில் வாங்கும்விதமாக, போயம்பாளையம் நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து, ஒரு புதிய நியாய விலைக் கடையை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, ஒரு முழு நேர நியாய விலைக் கடையை நடத்த வேண்டுமானால், அதாவது, கிராமப்புறங்களாக இருந்தால், 500 குடும்ப அட்டைகளும், நகர்ப்புறங்களாக இருந்தால், 1,000 குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும். கிராமப்புறங்களில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். இதுபோன்ற சூழ்நிலை இருக்கும்பட்சத்தில், அங்கு நியாய விலைக் கடை அத்தியாவசியமாகத் தேவைப்படும் சூழ்நிலையில், நிபந்தனைகளுடன், ஒன்றரை கிலோ மீட்டருக்குமேல் தூரம் இருக்கும்பட்சத்தில், மக்கள் சிரமப்படக் கூடாது என்ற அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு கடைகளைத் திறந்து நடத்திக்கொண்டு வருகின்றது. ஒரு முழு நேர நியாய விலைக் கடையை நடத்தும்போது, அதற்கான செலவினங்கள் அதிகமாகிவிடுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதாவது, பணியாளர் செலவு, அந்தக் கடைக்கான முன் வாடகை, வாடகை, எலெக்ட்ரிகல் செலவு மற்றும் பல்வேறு இதர செலவினங்களும் ஏற்படுகின்றன. இந்த நியாய விலைக் கடைகளை கூட்டுறவுக் கடன் சங்கங்கள்தான் நடத்துகின்றன. கூட்டுறவுக் கடன் சங்கங்கள் குறைந்த நிதியாதாரத்தைக் கொண்டுதான் இந்த நியாய விலைக் கடைகளை நடத்துகின்றன. மேற்படி கடையை அமைக்க வேண்டுமென்ற கட்டாயம் ஏற்படும் சூழ்நிலையில், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.*

திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாடனை தொகுதிக்குட்பட்ட ஆர்.எஸ். மங்கலம் மற்றும் திருவாடனை ஆகிய இடங்களில் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றன. இரண்டுக்கும் புதிய அலுவலகங்களைக் கட்டிக் கொடுக்க அரசு முன்வர வேண்டுமென்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2016 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வியைக் கேட்டிருக்கின்றார்கள். ஆர்.எஸ். மங்கலம் மற்றும் திருவாடனை ஆகிய இடங்களில் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்த இடங்கள் இருக்கின்றன. அந்த இடங்களில் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று உறுப்பினர் திரு. கருணாஸ் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், இன்றைக்கு இருக்கின்ற 4,480 தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அனைத்தும் சொந்தக் கட்டடங்களில் இயங்க வேண்டும், வாடகைக் கட்டடங்களில் இயங்கக்கூடாது என்ற அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இந்த ஆண்டுகூட, 90 தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பரிசீலித்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்டதையும் கொடுப்பார்கள், கேட்காததையும் கொடுக்கக்கூடியவர். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்களின் கோரிக்கையை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாகப் பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 89, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

89—

துணை மின் நிலையம்

***1605—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பாலாபுரம் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பள்ளிப்பட்டு வட்டம், பாலாபுரம் கிராமத்தில் தனியாக ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். ஏற்கெனவே, சோளிங்கர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து சீரான மின்சாரம் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. தற்போது, வருடத்திற்கு 3 சதவிகிதம் மட்டுமே அங்கு வளர்ச்சி இருக்கின்ற காரணத்தால், துணை மின் நிலையம் அமைக்கத் தேவை எழவில்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி, தமிழகத்தில் ஏழைகளே இல்லை என்கின்ற நிலையை உருவாக்க என் உழைப்பையே அர்ப்பணிக்கிறேன் எனச் சூளுரைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பிரகடனம், தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக உயர்வடையும் என்பதை உறுதிபடுத்தப்பட்டுள்ளது. மேலும், தேர்தல் வாக்குறுதிப்படி அடுத்த 5 ஆண்டுகளில் 18,500 மெகா வாட் மின்சாரம் தற்போதைய மின் உற்பத்தித் திறனுடன் கூடுதலாகச் சேர்க்கப்படும் என்ற நிலை மிகை மின் மாநிலம் என்பதற்குச் சான்றாகும்.*

முற்பகல் 10—25

துணை மின் நிலையம் அமைப்பது தொடர்பாக, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் பாலாபுரம் கிராமத்தில்

2016 ஆகஸ்ட் 19]

துணை மின் நிலையம் அமைக்க 18–6–2015 ஆம் தேதியிட்ட கடிதத்தில் நில உரிமை மாற்றம் செய்ய அரசுக்குப் பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது என்றும், நிலத்திற்கு ரூ.9,88,000/–ஐ செலுத்த சம்மதக் கடிதம் கோரி அரசிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது என்றும், எனவே சம்மதக் கடிதம் அனுப்ப காஞ்சிபுரம் மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். இதற்கு மேற்பார்வைப் பொறியாளர் 24–8–2015 ஆம் தேதியிட்ட கடிதத்தில், துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசால் நிர்ணயிக்கப்படும் நிலக் கிரையத் தொகையினைச் செலுத்துவதற்கான சம்மதக் கடிதத்தை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பியுள்ளார். மேலும், இப்பகுதியில் 20 ஊராட்சிகள் உள்ளன. இந்தச் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், மறுபரிசீலனை செய்து நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதி, பாலாபுரம் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு துணை மின் நிலையத்திற்கும், அடுத்த துணை மின் நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் அதிகமாக இருந்தால்,* line loss *அதிகமாகும் என்ற காரணத்தினால் இடையில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கிறோம். மின் பளு அதிகமாக இருந்தால் அதற்கு மின்மாற்றியை மாற்றினால் போதும். ஏற்கெனவே இருக்கும் மின்மாற்றியில் 70 சதவிகிதம் அளவு மின் பளு இருந்தால் மட்டும்தான் மாற்ற முடியும். இப்பொழுது இருக்கின்ற மின்மாற்றியில் 28 எம்.வி.ஏ.–ம், இன்னொரு மின்மாற்றியில் 7.9 எம்.வி.ஏ. மட்டும்தான் மின் பளு உள்ள காரணத்தினால்தான், நான் ஏற்கெனவே அந்தப் பதிலைச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சியர் பரிந்துரை அனுப்பியிருக்கிறார் என்ற தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் அந்தப் பகுதியில், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, வருடத்திற்கு 3 சதவிகிதம் மட்டும்தான் வளர்ச்சி இருக்கிறது. வளர்ச்சியைப் பொறுத்துதான் துணை மின் நிலையம் அமைக்க வேண்டும். அங்கே மின் பளுவும், மின் அழுத்தமும் குறைவாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவார்களென்றால், உடனடியாக அந்த*

மின்மாற்றியை மாற்றி அந்தப் பகுதியிலே சீரான மின்சாரம் வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முழு முயற்சி எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கோரிக்கை எதிர்காலத்திலே பரிசீலிக்கப்படும் என்று வாக்குறுதி தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதியின் சார்பிலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் மின்சாரத் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையே உள்ள இடைவெளி சரிசெய்யப்பட்டுள்ளது. வரவு—செலவுத் திட்டத்தில் எரிசக்தித் துறைக்கு 13,856 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒதுக்கீடு செய்து சாதனை படைத்துள்ளது. நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதியில் திருத்தணி நகராட்சி வளர்ந்து வரும் நகரம் ஆகும். இங்கு துணை மின் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்பது மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாகும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் திருத்தணியில் இவ்வாண்டே துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, மின் பளு எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைக் கணக்கில் எடுத்து, முதலிலே மின் மாற்றிகளுடைய பளு அதிகமாக இருந்தால் மின் மாற்றி மாற்றிக் கொடுக்கப்படும். மேலும், வேறொரு துணை மின் நிலையத்திலிருந்து இந்தத் துணை மின் நிலையத்திற்கு வருகின்ற தூரம் அதிகமாக இருந்தால் அதைக் கணக்கிட்டு சரி செய்வதற்காக புதிய துணை மின் நிலையம் அமைக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்தணி நகராட்சிப்*

பகுதியிலே ஒரு புதிய துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதன் மின் பளுவைப் பார்த்து தேவை இருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்கள்.*

திரு. விருகை V.N. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நல்லவர் இலட்சியம் வெல்வது நிச்சயம்', 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என வாழ்ந்து வருகின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். விருகம்பாக்கம் தொகுதிக்கு ஒரு புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டும். காரணம் தற்போது இயங்கிவரும் 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட துணை மின் நிலையங்கள் மதுரவாயல் தொகுதியில் 3 உள்ளன. அவற்றிலிருந்து மதுரவாயல் தொகுதியில் ஒரு பகுதிக்கும், விருகம்பாக்கத்தில் ஒரு பகுதிக்கும் மின் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. விருகம்பாக்கம் தொகுதியானது, வளர்ந்து வருகின்ற பகுதி. மிகவும் அடர்த்தியான வீடுகள் உள்ள பகுதியாகும். அங்கு, புதிய, புதிய வீடுகள் அதிகமாக வருகின்ற காரணத்தினால், ஒரு புதிய துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதி மின் அழுத்தம் அதிகமாக இருக்கின்ற பகுதிதான். சென்னையைப் பொறுத்தவரை, துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் கிடைப்பது அரிதாக இருக்கின்றது. இடம் கிடைத்த பின்னர் புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய எண்ணம்.*

விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிக்கையில்கூட, கிட்டத்தட்ட 16,000 மின்மாற்றிகள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எனவே, தற்பொழுது, உடனடியாகத் துணை மின் நிலையம் தேவைப்படின், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கின்ற 16 M.V.A.–க்குப் பதிலாக, மின் அழுத்தம் அதிகமாக இருக்கின்ற M.V.A. வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதுவும், சென்னை பகுதியிலே பார்த்தோமானால், இடம் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அவர் குறிப்பிடுகின்ற பகுதியிலே ஏதாவது இடம் இருக்கிறதென்று சொன்னால், உடனடியாக ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதுமட்டுமல்லாமல், சென்னையைப் பொறுத்தவரை, மாண்புமிகு அம்மா அவர்கள் வருங்காலத்தில் மின் தடை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் பல்வேறு பணிகளைச் செய்ய ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, அந்தப் பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இடம் தேர்வு செய்யப்பட்ட பின்னர், புதிய துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 90, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

90—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***1702—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2016 ஆகஸ்ட் 19]

(அ) கன்னியாகுமரி மாவட்டம், இடைக்கோடு பேரூராட்சி, சூரன்குழி மற்றும் அம்பேற்றின் சாலை பொத்தை ஆகிய பகுதிகளில் 1,00,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், இடைக்கோடு பேரூராட்சி, சூரன்குழி பகுதிக்கு இளஞ்சிறைப் பகுதியிலுள்ள 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலமும் மற்றும் அம்பேற்றின் சாலை பொத்தை பகுதியில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலமும் அப்பகுதிகளில் வாழும் மக்களுக்குப் போதிய அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், இவ்விடங்களில் கூடுதலாக ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுக் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கான தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள். (குறுக்கீடு) வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

91—

பசுமை வீடுகள்

***4021—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சிப் பகுதியில் வசிக்கும் கைத்தறி நெசவாளர்களுக்குப் பசுமை வீடுகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பேரூராட்சிப் பகுதியில் வசிக்கும் நெசவாளர்களுக்குப் பசுமை வீடுகள் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நெசவாளர்களுக்கான பசுமை வீடுகள் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, நெசவாளர்கள் தற்போது நகர்ப்புறத்திலோ அல்லது வேறு கிராம ஊராட்சியிலோ வசித்தாலும், கிராமப்புறத்தில் நெசவாளரின் பெயரிலோ அல்லது அவரது குடும்பத்தினரின் பெயரிலோ வீடு கட்டுவதற்குத் தேவையான வீட்டுமனைப் பட்டா நிலம் இருக்குமானால், அவர்கள் இத்திட்டத்தின்மூலம் பயன் பெறலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல் தோன்றி மண் தோன்றா காலத்து முன்தோன்றிய மூத்த குடி நம் தமிழினம். உலக மக்களுக்கு நாகரிகத்தைக் கற்றுத் தந்தவன் தமிழன். தமிழருக்கு ஆடை கொடுத்து, அவர்களை முழு மனிதன் ஆக்கியவன் நெசவாளி. அந்த நெசவாளிகளுக்கு வழங்கும் ஓய்வூதியத்தை உயர்த்தி, விலையில்லா மின்சாரத்தை இரட்டிப்பாக்கி, அவர்களின் தொழில் சுமையைக் குறைத்திடும் வகையில் மோட்டார் பொருத்திய ராட்டை, பெடல் தறிகள், ஜக்கார்டு தூக்கும் கருவிகள்,* Pneumatic Jacquard *போன்றவற்றை வழங்கி, அவர்களது வாழ்வில் ஒளியேற்றும்விதமாக இந்தியாவிலே வேறு எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத, (மேசையைத் தட்டும் ஒலி) பிற திட்டங்களைக் காட்டிலும் அதிக நிதியைக் கொடுத்து, 10,000 நெசவாளர்களுக்கு சூரிய சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தினைத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) ஆடை தந்து, மானம் காக்கும் நெசவாளர்களின் வாழ்வைக் காத்திட்ட ஒரே தலைவி, ஒப்பற்றத் தலைவி, எங்கள் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

2016 ஆகஸ்ட் 19]

எனது தொகுதிக்குட்பட்ட வடுகம்பாளையம், வெள்ளாளபாளையம், இலுப்பநத்தம் ஆகிய ஊராட்சிகளிலே 186 பசுமை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஊரகப் பகுதிகளில் மட்டும் இந்த நெசவாளர்கள் திட்டம் தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது. தமிழ்நாட்டிலே உள்ள மொத்த நெசவாளர்கள் ஜனத்தொகையிலே 50 சதவிகிதத்திற்கும் மேலாக பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி போன்ற பகுதிகளில் வசித்து வருகிறார்கள். நமக்கும் இந்தத் திட்டம் கிடைக்குமா என்று ஏக்கத்தோடு இருக்கிற அவர்களுக்கு வாழ்வளிக்கும் வகையிலே, இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி போன்ற பகுதிகளிலே பட்டா இருக்கும் இடங்களைக் கண்டறிந்து, பசுமை வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டம் விரிவுபடுத்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, கைத்தறி நெசவாளர்களுக்குப் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தை எதிர்வரும் காலங்களிலே பேரூராட்சி, நகராட்சி போன்ற பகுதிகளிலே விரிவுபடுத்தப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

92—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***2541—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சியிலுள்ள அருள்புரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சி, அருள்புரம் உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.*

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள் அனைவருக்கும் தரமான கல்வியைத் தந்து, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்க, அயராது உழைத்துக் கொண்டிருக்கும் எங்கள் தாயே, காவேரியை*

2016 ஆகஸ்ட் 19]

மீட்டெடுத்து, மேகதாதுவில் காவேரி ஆற்றின் குறுக்கே அணையைக் கட்ட விடமாட்டேன் என வீர சபதம் ஏற்றிருக்கும் எங்கள் வீரத் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) வள்ளல்களுக்கெல்லாம் வள்ளலாக, குறுவை, சம்பா சாகுபடி பயிருக்கும், தரிசு நிலங்களை வளமாக்கவும், நிதியை ஒதுக்கித் தந்து, வேளாண்மையில் ஒரு புதிய புரட்சியை ஏற்படுத்திய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சியில், அருள்புரத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அரசு உயர்நிலைப் பள்ளியில், 300–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றார்கள். அருள்புரம், அரசு உயர்நிலைப் பள்ளி அமைந்திருக்கின்ற கரைப்புதூர் ஊராட்சியிலே, நான்கு நடுநிலைப் பள்ளிகள் மற்றும் 5 ஆரம்பப் பள்ளிகளில், கிட்டத்தட்ட 1,000–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றார்கள்.

அருள்புரம், அரசு உயர்நிலைப் பள்ளியானது, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2002 ஆம் ஆண்டிலே ஆரம்ப பள்ளியாகத் துவக்கப்பட்டு, 2006 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலேயே நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டு, அது உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டது. 2012 ஆம் ஆண்டு RMSA திட்டத்தின் மூலமாக, அரசு வழங்கிய ரூபாய் 58 இலட்சத்தோடு, பொதுமக்களின் பங்களிப்பையும் சேர்த்து 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே 12 வகுப்பறைகள், ஆய்வகங்களுடன்கூடிய நல்ல தரமான கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

மேலும், அந்தப் பகுதியிலே சாயப் பட்டறைத் தொழிற்சாலைகளும், பனியன் தொழிற்சாலைகளும் நிறைந்து இருக்கின்ற காரணத்தாலே, வெளி மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் அங்கே நிறைய பேர் தங்கி வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுடைய குழந்தைகளெல்லாம் உயர் கல்வி கற்பதற்கு தனியாருடைய பள்ளிகளிலே சேர்வதற்குக் கட்டணம் செலுத்த முடியாத நிலையிலே இருக்கின்ற காரணத்தினாலும், அருள்புரம் உயர்நிலைப் பள்ளி மற்றும் கரைப்புதூர் ஊராட்சியில் இருக்கும் மாணவ, மாணவிகள் மேல்நிலைக் கல்வி பயில

9 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருப்பூர் அல்லது பல்லடம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, பெண்கள் கல்விக்காக முன்னுரிமை தந்து, நல்ல பல திட்டங்களைத் தந்து கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே, அந்த விதிகளைத் தளர்த்தி, அருள்புரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பெஞ்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை நிலை எண் 235, பள்ளிக் கல்வித் துறை, நாள் 24–5–1997–ல் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்தும் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அவ்வரசாணையின்படி, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த பின்வரும் நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்:*

அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பொதுமக்கள் பங்குத் தொகை 2 இலட்சம் ரூபாய் செலுத்தியுள்ள பள்ளிகளுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும்; மகளிர் பள்ளிகளுக்கு முதலிடம் அளிக்கப்பட வேண்டும்; மலைப் பகுதி, ஆதி திராவிடர் மக்கள்தொகை அதிகம் உள்ள இடங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

முற்பகல் 10–40

அரசாணை நிலை எண் 49, பள்ளிக் கல்வித் துறை, நாள் 1–3–2007–ல் குறிப்பிட்டுள்ளபடி, கீழ்க்கண்டவாறு நிலப்பரப்பு இருத்தல் வேண்டும். மாநகராட்சிப் பகுதிகளுக்கு 6 கிரவுண்டு, மாவட்டத் தலைமை இடங்கள் 8 கிரவுண்டு, நகராட்சிப் பகுதிகளுக்கு 10 கிரவுண்டு, பேரூராட்சிப் பகுதிகளுக்கு 1 ஏக்கர், ஊரகப் பகுதிகளுக்கு 3 ஏக்கர், 10 ஆம் வகுப்பில் குறைந்தபட்சம் 100 மாணவர்கள் இருத்தல் வேண்டும். ஒரு மேல்நிலைப் பள்ளிக்கும் அடுத்த மேல்நிலைப் பள்ளிக்கும் குறைந்தபட்சம் 8 கிலோ மீட்டர்

2016 ஆகஸ்ட் 19]

தூரம் இருத்தல் வேண்டும். இதற்கென விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டும், தேவையின் அடிப்படையிலும், மக்களுக்கு அதிகமாகப் பயன்படும் இடங்களைக் கருத்தில்கொண்டும், அந்தந்த மாவட்டத்தில் உள்ள பிற்பட்ட பகுதிகளில் உள்ள மாணவர்கள் அதிகம் பயன்படுவதைக் கருத்தில்கொண்டும் மற்றும் அரசின் நிதிநிலையைக் கருத்தில்கொண்டும் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.*

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த விதிகளைக் குறிப்பிட்டு, ஓர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு பொதுமக்களுடைய பங்களிப்புத் தொகையாக இரண்டு இலட்சம் ரூபாய் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்தப் பகுதியில் இருக்கின்ற பொதுமக்கள் இரண்டு இலட்சம் ரூபாயைச் செலுத்துவதற்கும் தயாராக இருக்கின்றார்கள். போதுமான இடவசதியும் அங்கே உள்ளது. அந்தப் பள்ளியில் சுற்றுச்சுவர், கழிப்பிட வசதி உட்பட அனைத்து வசதிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. அந்தப் பள்ளியில் படிக்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை மட்டும்தான் குறைவாக உள்ளது. அருகாமையில் இருக்கின்ற பள்ளிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, தரமான கல்வியினைத் தருகின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கின்ற வகையில், வருகின்ற ஆண்டில், பெண்கள் மேல்நிலைப் பள்ளியாவது அமைத்துத்தர வேண்டுமாய்த் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் துறை அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பெஞ்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை முன்னுரிமை அடிப்படையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்*

தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

93—

தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகம்

*__906__—**திரு. எம். இராமச்சந்திரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டிலேயே தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்தை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாட்டில் தொழிலாளர் உதவி ஆய்வாளர் அலுவலகத்தை மீண்டும் செயல்படுத்துவதற்கான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள். (குறுக்கீடு) வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2016 ஆகஸ்ட் 19]

2. 17–8–2016 அன்று முதல் ஒரு வார காலத்திற்கு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கிவைத்ததை மறுபரிசீலனை செய்யக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு, என்னவென்று சொல்லுங்கள்.*

*** திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு முக்கியமான மானியக் கோரிக்கைகள் இனி நடைபெற இருக்கின்றன. இன்றைக்கு விவசாயத் துறை மானியக் கோரிக்கை நடைபெறவுள்ளது. வருகின்ற 22 ஆம் தேதி காவல் துறை மானியக் கோரிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பதில் சொல்ல இருக்கின்றார்கள். இப்படி முக்கியமான துறைகளினுடைய மானியக் கோரிக்கைகள் நடைபெறுகின்றபோது, திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் அதில் கலந்துகொண்டு, தங்களுடைய கருத்துகளை எடுத்துச் சொல்லவும், தங்களுடைய விளக்கத்தைப் பெறவும், உங்களுடைய தீர்ப்பினை தாங்கள் மறுபரிசீலனை செய்து அவர்களை அனுமதிக்குமாறு உங்களை மீண்டும் நான் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17 ஆம் தேதி அன்று நடந்த நிகழ்ச்சியின் காரணமாக, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தின் விளைவாக சபாநாயகர் அவர்கள் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கின்றீர்கள். அந்தத் தீர்ப்பைப் பற்றி நான் விமர்சனம் செய்ய விரும்பவில்லை. ஆனால், அதன் அடிப்படையில் இன்னும் அவர்களைத் தொடர்ந்து வெளியில் அனுப்பி வைத்திருப்பதைப்பற்றி நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும். நமது சபையைப் பொறுத்தமட்டில், இதற்கு பல முன்னுதாரணங்கள் இருக்கின்றன. அந்த முன்னுதாரணங்களையெல்லாம் இப்போது சபையிலே சொன்னால், அது பல பிரச்சினைகளைக் கிளப்புவதற்கு வாய்ப்பிருக்கிறது. தயவுசெய்து நீங்கள் உங்களது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர்*

அவர்கள், அவர்களுடைய துறைசார்பாகப் பதில் சொல்லவிருக்கின்றார்கள். அன்றைக்கு எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் நிச்சயமாக சட்டமன்றத்தில் இருக்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கையை எடுத்து, நீங்கள் அவர்களை மீண்டும் சபைக்கு அழைக்க வேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே மிகுந்த கனத்த இதயத்தோடு வந்திருக்கின்றேன். சிறுபான்மை சமுதாயப் பேரியக்கத்தின் ஒரே பிரதிநிதியாக வந்திருக்கின்ற நான், என்னுடைய சட்டமன்றக் கடமையை ஆற்ற வேண்டுமென்ற நிலையிலும், ஒட்டுமொத்தமாக எதிர்க்கட்சி உறுப்பினர்களெல்லாம் அவை நடவடிக்கைகளில் பங்கேற்காமல் இருப்பது மிகவும் வேதனை அளிக்கக்கூடிய விஷயமாகும். ஜனநாயகம் தழைக்க வேண்டுமென்ற அடிப்படையில், சட்டமன்றத்தில் நடந்த ஒரு விஷயத்தை இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒருங்கிணைந்த மதராஸ் மாகாணம்,* Madras Presidency–*யிலே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேச வருவதை சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தப்பட்டதுதான். அப்போது எதிர்க்கட்சித் தலைவராக, எங்கள் இயக்கத்தைச் சார்ந்த காயிதே மில்லத் அவர்கள் இடம் பெற்றிருந்தார்கள். அப்போது எங்களோடு எதிரணியில் இருந்த கம்யூனிஸ்டு உறுப்பினர் அவர்கள் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து, அதனை வழிமொழிவதற்கு ஆளில்லாத சூழ்நிலையில், எதிரணியில் இருப்பவர் என்றும் பார்க்காமல், அவரது தீர்மானம் இந்த அவையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காக வேண்டி, அதனை வழிமொழிந்த பெருமை அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த எங்கள் தலைவர், காயிதே மில்லத் அவர்களையேச் சாரும். அந்த அளவிற்கு ஜனநாயகம் தழைத்திருந்த*

நமது சட்டமன்றத்தில், அனைவரும் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றக்கூடிய வகையில் நீங்கள் தயவுகூர்ந்து உங்களுடைய தீர்ப்பினை மறுபரிசீலனை செய்ய வேண்டும். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்று அறிவித்து, இன்று பல்வேறு திட்டங்களை அறிவிக்கிறார்கள். அந்த 'மக்களில்' நாங்களும் ஒருவராக இருக்கின்றோம். அ.தி.மு.க–வைச் சேர்ந்தவர்கள் மட்டும் மக்களல்ல, நாங்களும் மக்கள்தான். எங்களுடைய ஜனநாயகக் கடமையை நிறைவேற்றக்கூடியவகையில், குறிப்பாக 22 ஆம் தேதியன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவல் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்திலே பதிலளிக்க இருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையன்று, ஜனநாயகக் கடமையை முழுமையாக நிறைவேற்றக்கூடியவகையில், அனைத்து தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களும் பங்கேற்கக்கூடியவகையில், நாங்கள் எல்லாம் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றக்கூடியவகையில் நீங்கள் தயவுகூர்ந்து உங்களுடைய முடிவை மறுபரிசீலனை செய்து தி.மு.க. உறுப்பினர்கள் இந்த அவையில் பங்கேற்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்பதை, இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

மதுரை (வடக்கு) தொகுதி, வண்டியூர், செல்லூர் கண்மாய்களைத் தூர் வாருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர், திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.*

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் வள ஆதாரங்களைக் காப்பதிலும்... (குறுக்கீடுகள்)*

2. 17–8–2016 அன்று முதல் ஒரு வார காலத்திற்கு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கிவைத்ததை மறுபரிசீலனை செய்யக் கோருதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. இராஜன் செல்லப்பா, ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் வைத்த கோரிக்கைக்கு நேற்றைக்கே என்னுடைய பதிலை விளக்கமாக இந்த அவையில் நான் சொல்லிவிட்டேன். மேலும், எவ்வளவு பொறுமையைக் காக்க முடியுமோ அவ்வளவு பொறுமை காத்து, வேறு வழியின்றிதான் கடைசியாக அப்படி ஒரு நடவடிக்கையை எடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு நான் தள்ளப்பட்டேன். ஆகவே, எடுத்திருக்கிற முடிவில் மறுபரிசீலனைக்கு வாய்ப்பில்லை என்பதை உங்கள் கோரிக்கைக்கு என்னுடைய பதிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இது அவை நிறைவேற்றிய தீர்மானம். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே இந்த அவை நிறைவேற்றித் தந்த தீர்மானத்தைத்தான் நான் செயல்படுத்தியிருக்கிறேன். ஆகவே, நான் அதை மறுபரிசீலனை செய்வதற்கு வாய்ப்பேயில்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

3. கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

மதுரை (வடக்கு) தொகுதி, வண்டியூர், செல்லூர் கண்மாய்களைத் தூர் வாருதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.*

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் வள ஆதாரங்களைக் காப்பதிலும், நீர் வளத்தைப் பெறுவதில் தமிழகத்தின் உரிமைகளுக்காகப் போராடி வெற்றி மேல் வெற்றியைப் பெறுவதில், தனக்கு நிகர் . . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. வி.வி. இராஜன் செல்லப்பா, நிகழ்ச்சி நிரலில் இருப்பதைப் படியுங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் படிக்கப் போகிறேன்.*

2016 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.வி. இராஜன் செல்லப்பா, முதலில் நிகழ்ச்சி நிரலில் இருப்பதைப் படியுங்கள். பிறகு பேசலாம்.

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை (வடக்கு) தொகுதி, வண்டியூர், செல்லூர் கண்மாய்களைத் தூர் வார வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வடக்குத் தொகுதியிலுள்ள. . . (குறுக்கீடுகள்)

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இதுசம்பந்தமாக விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

மதுரை மாவட்டத்தில் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் 1,339 பாசனக் கண்மாய்கள் உள்ளன. மேலூர், பெரியாறு பிரதானக் கால்வாய் கோட்டத்தின் கட்டுப்பாட்டில் 1,012 பாசனக் கண்மாய்கள் உள்ளன. அவற்றில் மதுரை கிழக்கு வட்டம், வண்டியூர் கண்மாய் மதுரை மாநகருக்குள் அமைந்துள்ள பெரிய கண்மாய் ஆகும். கண்மாயின் பதிவு பெற்ற பாசனப் பரப்பு 964.12 ஏக்கர். கண்மாயின் முழுக் கொள்ளளவு 107 மில்லியன் கன அடி ஆகும். பெரியாறு பிரதானக் கால்வாய் 9–வது கிளை வாய்க்கால், 30–வது மடை மற்றும் சாத்தையாறு வடிநில உபரி நீர் முழுவதும் இக்கண்மாயைச் சென்றடைகிறது.

2013–2014 ஆம் நிதியாண்டில் பொதுப் பணித் துறை/நீர்வள ஆதாரத் துறை நிதியிலிருந்து பாரம்பரியமிக்க கண்மாய்கள் புனரமைப்புத் திட்டம், பகுதி–II (Restoration of Traditional Water Bodies Scheme)–ன்கீழ் வண்டியூர் கண்மாய் ரூ.1.25 கோடியில் புனரமைக்கப்பட்டது. இதன்படி, கண்மாய் கரை மற்றும் தண்ணீர் வரத்துப் பகுதிகள் மேம்படுத்துதல், கலுங்குப் பகுதியைப் பழுது

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2016 ஆகஸ்ட் 19

பார்த்தல், தேவையான பகுதிகளில் பாதுகாப்புச் சுவர் கட்டுதல் மற்றும் கண்மாயின் எல்லைகளை அளந்து எல்லைக் கற்கள் நடுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது கண்மாயின் பாசனப் பகுதிகள் நகரமயம் ஆகிவருவதால், பாசனம் செய்யும் பரப்பு வெகுவாகக் குறைந்து வருகிறது. தற்போதைய பாசனப் பரப்பு சுமார் 100.00 ஏக்கர் ஆகும். ஆனால், தற்பொழுது கண்மாயில் மதுரை நகரின் மழைநீர் வந்து சேர்வதால், கண்மாயில் வண்டல் மண் படிந்து மேடாகிவிட்டது. தற்போதைய கொள்ளளவு 63.00 மில்லியன் கன அடியாகக் குறைந்துள்ளது. கண்மாயில் படிந்துள்ள வண்டலை நீக்கினால் கூடுதலாகத் தண்ணீர் தேக்க இயலும். இக்கண்மாய் மதுரை மாநகரின் முக்கியமான பகுதியில் அமைந்துள்ளதாலும், அதனைச் சுற்றி 18,000 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைந்துள்ளதாலும் இக்கண்மாயைத் தூர்வாருவது அவசியமாகிறது.

எனவே, வண்டியூர் கண்மாயைத் தூர் வாரி அதன் கொள்ளளவை அதிகப்படுத்த மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. உரிய நிருவாக அனுமதி வழங்கப்பட்டு இக்கண்மாய் தூர்வாரிச் சீரமைக்கப்படும். இதன்மூலம் இக்கண்மாயின் அருகாமையில் உள்ள குடியிருப்புகளின் நிலத்தடி நீர் மட்டம் உயர வாய்ப்புள்ளது.

மதுரை மாநகரம், பெரியார் வைகை கோட்டத்தின் பராமரிப்பில் 188 முறை பாசனக் கண்மாய்களும், 22 முறைசாரா பாசனக் கண்மாய்களும், ஆக மொத்தம் 210 கண்மாய்கள் உள்ளன. இதில் 13 கண்மாய்களின் ஆயக்கட்டுகள் நகர்ப்புறமாக மாறிவிட்டன. அதில் செல்லூர் கண்மாய் மதுரை மாநகராட்சியின் மையப் பகுதியில் மதுரை வடக்கு வட்டத்தில், வைகையாற்றின் வடக்கே அமைந்துள்ளது. செல்லூர் கண்மாய் பாண்டியர் காலத்திலிருந்து இருந்து வருகிறது. இக்கண்மாயின் மொத்த பாசன நிலங்கள் முழுவதும் சுமார் 20 ஆண்டுகள் முன்பாக நகர்ப்புறமாக மாறிவிட்டன.

செல்லூர் கண்மாய், பெரியாறு பிரதானக் கால்வாய், 4-வது கிளை வாய்க்காலில் உள்ள தண்டலைப் பிரிவு வாய்க்காலில் உள்ள பழைய ஆனையூர் பகிர்மானக் கால்வாய்மூலம் தண்ணீர் பெறுகிறது. மேலும், ஆனையூர், விளாங்குடி, சிலையனேரி, தத்தனேரி மற்றும் முடக்கத்தான் கண்மாயிலிருந்து வரும் மிகை நீரும் (surplus water) செல்லூர் கண்மாயின் நீர் ஆதாரங்களாகும்.

2014–2015 ஆம் ஆண்டு செல்லூர் கண்மாயை ரூ.8.00 இலட்சம் செலவில் தூர்வாரி, கரை அமைக்கப்பட்டது. இக்கண்மாயில் வரும் நீர், கண்மாயில் நிரம்பியது போக மீதமுள்ள நீர் கலுங்கு வழியாக வைகை ஆற்றில் கலந்துவிடும். பெரியாறு பிரதானக் கால்வாயின் 4–வது கிளை வாய்க்காலில் இக்கண்மாய் கடைசி கண்மாய் ஆகும். ஒவ்வோர் ஆண்டும் பாசனத்திற்கு பிற கண்மாய்களுக்குத் தண்ணீர் அளிக்கும்பொழுது, நிலத்தடி நீர் செறிவூட்டுவதற்காக இக்கண்மாய்க்கும் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

இக்கண்மாயைச் சீரமைக்க 2016–2017 ஆம் ஆண்டு வருடாந்திரப் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.15.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டு, மட்ட அளவு எடுக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், குடியிருப்புப் பகுதிக்கு வெள்ளநீர் செல்லாமல் தவிர்க்கும்பொருட்டும், தண்ணீரைக் கண்மாயின் மையப் பகுதிக்குக் கொண்டு செல்லும்பொருட்டும், செல்லூர் கண்மாயின் உட்பகுதியில் வெள்ளநீர் தங்குதடையின்றி செல்வதற்கும், இக்கண்மாய் நகர்ப்புறத்தில் உள்ளதால் குப்பைகளை கண்மாயினுள் கொட்டுவதைத் தவிர்க்கும்பொருட்டும், ஆக்கிரமிப்புகள் ஏற்படாத வண்ணம் பாதுகாக்கவும் கண்மாய்க் கரையில் கம்பி வேலி அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா, பேசுங்கள்.*

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விவர அறிக்கையை படித்துப் பார்த்தேன். (குறுக்கீடுகள்) நீர்வள ஆதாரங்களைக் காப்பதிலும், நீர்வளத்தைப் பெருக்குவதிலும் தமிழகத்தின் உரிமைகளுக்காகப் போராடி வெற்றி மேல் வெற்றி பெறுவதில், தனக்கு நிகர் தானே என்று நிரூபிக்கும் தமிழக மக்களின் (மேசையைத் தட்டும் ஒலி) குல தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

(இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கை மிகத் தெளிவாகவும், அதில் மதுரை பகுதியில் பல்வேறு திட்டங்களைச்

செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இருப்பதையும் கண்டு மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நீர்நிலைகளை ஆக்கிரமிப்பு செய்ததுபோக, நீர்நிலை ஆதாரங்களில் எஞ்சியுள்ள கண்மாய்கள், 72 ஏக்கர் பரப்பளவுள்ள செல்லூர் கண்மாய், சுமார் 600 ஏக்கர் பரப்பளவுள்ள வண்டியூர் கண்மாய், சுமார் 300 ஏக்கர் பரப்பளவுள்ள மாடக்குளம் கண்மாய் ஆகும். மக்களின் குடிநீர் ஆதாரத்திற்குப் பயன்படும் வகையிலே இந்த 3 கண்மாய்களும், இன்றைக்கு நீராதாரம் கருதி மதுரை மாவட்ட மக்களின் பயன் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதனடிப்படையில் அந்த மூன்று கண்மாய்களும் பராம்பரியமிக்கக் கண்மாய்கள், மக்களின் குடிநீர் ஆதாரத்திற்குப் பயன்படுகிற கண்மாய்கள். குறிப்பாக, அந்தக் கண்மாய்களில் சீமைக் கருவேல மரங்கள் அதிகமாகப் பரவிக் கிடக்கின்றன. ஏற்கெனவே சீமைக் கருவேல மரங்களை அகற்றுவதிலும் தேங்கிக் கிடக்கிற வண்டல் மண்ணை அகற்றுவதிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு திட்டங்களுக்கு வழி வகுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் நீராதாரங்கள் பெருகியிருக்கின்றன என்பதில். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா, பேசுங்கள்.

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: நீராதாரங்களைப் பெருக்குவதில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மிகச் சிறப்பாகப் பணியாற்றுவதன் அடிப்படையிலே, சீமைக் கருவேல மரங்களை அகற்றுவதிலும், வண்டல் மண்ணை அகற்றுவதிலும் நீராதாரமிக்க வண்டியூர் கண்மாய், செல்லூர் கண்மாய் மற்றும் மாடக்குளம் கண்மாய்களைத் தூர் வாரினால், மதுரை மக்கள் பயன்பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஏற்கெனவே மதுரையின் விரிவாக்கப்பட்ட பகுதிகளுக்கு மதுரை–மேலூர் காவேரிக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வசதியும், வைகை குடிநீர்த் திட்டத்தின் அடிப்படையில் மூன்றாவது குடிநீர்த் திட்டத்திற்கு 310 கோடி ரூபாயில் அனுமதியும் அளித்திருக்கிறார்கள். ஆகவே, நீராதாரமிக்க இந்த மூன்று கண்மாய்கள் முழுமையாகச் சீர்படுத்தப்படுமேயானால்,

2016 ஆகஸ்ட் 19] [திரு. வி.வி. இராஜன் செல்லப்பா]

மதுரை மாவட்டம் மின் மிகை மாவட்டம் என்று சொல்வதைப்போல, நீர் மிகை மாவட்டமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் மாறும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான வழிவகைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்க வேண்டும் என்று பணிவோடு வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கிழக்கு வட்டம், வண்டியூர் கண்மாய், மதுரை மாநகருக்குள் அமைந்துள்ள பெரிய கண்மாய் ஆகும். வண்டியூர் கண்மாயின் பதிவு பெற்ற பாசனப் பரப்பு 964.12 ஏக்கராகும். கண்மாயின் முழுக் கொள்ளளவு 107 மில்லியன் கன அடியாகும். 2013–2014 ஆம் நிதியாண்டில் பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதாரத் துறையின் மூலமாக 1.2 கோடி ரூபாய் செலவில் வண்டியூர் கண்மாய் புனரமைக்கப்பட்டுள்ளது. தற்போது கண்மாயின் பாசனப் பகுதி நகரமயமாக்கப்பட்ட காரணத்தினாலே பாசனப் பரப்பினுடைய அளவு 100 ஏக்கராக இருக்கின்றது. இதனுடைய கொள்ளளவு தற்போது 63 மில்லியன் கன அடியாகக் குறைந்துள்ளது. கண்மாய்களில் படிந்துள்ள வண்டல் மண்ணை நீக்கி, மேலும் கூடுதல் நீர் தேக்கவும், சுமார் 18,000 ஆழ்துளைக் கிணறுகள் இக்கண்மாயைச் சுற்றி அமைந்துள்ளதாலும் ஆழப்படுத்துவது அவசியமாகின்றது. எனவே, வண்டியூர் கண்மாயைத் தூர்வாரி, அதன் கொள்ளளவை அதிகப்படுத்த 5.50 கோடி ரூபாய் அளவிலே பணிகள் மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

அதேபோல, மதுரை செல்லூர் கண்மாய். இது பாண்டியர்கள் ஆண்ட காலத்திலிருந்து இருந்து வருகிறது. இந்தக் கண்மாயின் மொத்த பாசனப் பரப்பு 72.7 ஹெக்டேர் ஆகும். இந்த

நிலங்களெல்லாம் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பாகவே நகர்ப்புறமாக மாறிவிட்டன. மேலும், ஆனையூர், விளாங்குடி, சிலையனேரி, தத்தனேரி மற்றும் முடக்கத்தான் கண்மாய்களிலிருந்து வரும் மிகை நீரும் (surplus water) செல்லூர் கண்மாயின் நீர் ஆதாரமாகும். 2014–2015 ஆம் ஆண்டு ரூ.8 இலட்சம் செலவில் தூர் வாரப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இக்கண்மாய் 2016–2017 வருடாந்திரப் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்படவுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாடக்குளம் கண்மாய் மதுரை மாநகரில் உள்ள பிரதான கண்மாயாகும். முந்தைய காலத்தில் இதன் ஆயக்கட்டுப் பகுதி 2,548 ஏக்கராக இருந்தது. நகரமயமாக்கப்பட்டதால் தற்போது சுமார் 400 ஏக்கர் ஆயக்கட்டு பகுதி உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இக்கண்மாயில் தண்ணீர் தேக்கப்படுவதால் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக உயர்வதற்கு வாய்ப்பு இருப்பதால் இக்கண்மாயைத் தூர் வாரி, நீர் தேக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று அரசின் நிதி நிலைக்கேற்ப ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள்.

திரு. வி.வி. இராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆட்சியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்துகள் எங்களுக்கு ஏற்புடையது, வரவேற்கிறோம். குறிப்பாக, வண்டியூர் கண்மாய் மற்றும் ஏனைய மூன்று கண்மாய்களும் பாரம்பரியமிக்க கண்மாய்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த வண்டியூர் கண்மாயின் மேற்புறம்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது, பாண்டிகோவில் அருகே மிகப் பெரிய மாநாட்டை நடத்தி வெற்றிக் கூட்டத்தை நடத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தார்கள். அப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இடம் அந்த இடம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னும் கூடுதல் அறிவிப்பு செய்ய வேண்டுமென்று

பணிவோடு கேட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பரிந்துரை செய்ய வேண்டுமென்றும் கேட்டு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

4. மானியக் கோரிக்கைகள், 2016–2017, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை

(ஆ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

(அ) கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2016–2017 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நிரந்தர முதல்வர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களுக்கு என்னுடைய கோடானுகோடி நன்றிகளையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி, என்றென்றும் வெற்றி எனச் சாதனைகள் (மேசையைத் தட்டும் ஒலி) பல புரிந்து, மக்கள் பணி ஒன்றையே தனது இலட்சியமாக, இலக்காக எண்ணி செயலாற்றி வருகிறார்கள். அவரது மலர்ப் பாதம் பணிந்து வணங்குகிறேன். அன்னைத் தமிழகத்தை ஆறாவது முறையாக, தொடர்ந்து இரண்டாவது முறையாக ஆளப் பிறந்த அன்னையே, அன்பின் திருவுருவே, தமிழக மக்களின் ஆராதனைக்குரிய தெய்வமே, தாயே, தங்கத் தாரகையே, தமிழ் சிறக்க, தரணி செழிக்க, தமிழ் மண் சிறக்க, மக்கள் செழிக்க, நாடு சிறக்க, நல்லாட்சி நடத்தி மக்களைக் காத்துவரும் நடமாடும் கண்கண்ட தெய்வமே, அம்மா, தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். அம்மா, விசுவாசத்திற்கு விலாசமும், உண்மைத் தொண்டர்களுக்கு உயர்வும் வழங்கிய*

உன்னதத் தலைவியே, ஒப்பற்றத் தெய்வமே, வணங்கும் கைகள் விலகும் முன்னே வரம் அருளும் அன்னையே, எங்கள் குல தெய்வமே, *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா, தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.6,434,20,72,000/–, மூலதனக் கணக்கில் ரூ.356,55,68,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.150,50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை.*

(ஆ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை), மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–00

***மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றிய திராவிட இயக்கத்தை அணையாமல் ஒளிரச் செய்து, தன்னையே தந்து, தமிழக மண்ணையும் மக்களையும் காக்கும் மகராசியே, நாடே போற்றும் வல்லவரே, ஓய்வறியாமல் உழைத்து, உறங்காமல் விழித்து, *(மேசையைத் தட்டும் ஒலி)* தனக்காக எதுவுமின்றி, தமிழுக்கே எல்லாம் என வழங்கி தமிழகத்தைத் தனது உயிராய்க் காத்துவரும் தனி மனித இராணுவமே. *(மேசையைத் தட்டும் ஒலி)* வேதனையை வெற்றியாகவும், சோதனையைச் சாதனையாகவும் மாற்றும் மகா சக்தியே, ஐந்தறிவு ஜீவன்களுக்கும்

அன்பு காட்டி அரவணைக்கும் தாய் உள்ளமே, (மேசையைத் தட்டும் ஒலி) அற்புதங்களையும், சாதனைகளையும் அன்றாடம் படைக்கப் பிறந்த எங்கள் தாயே, எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்ற அண்ணாவின் சொல்லிற்கிணங்க வேதனைகள் அனைத்தும் தாங்கி, தங்கமாக ஜொலிக்கும் தங்கத் தலைவியே, (மேசையைத் தட்டும் ஒலி) மழை பொழியும்போது, தாகம் எடுத்து தவிக்கும் கும்பலுக்கும், வெயில் அடிக்கும்போது, குளிர் எடுத்து நடுங்கும் கூட்டத்திற்கும் பாடம் கற்பித்து, தீய சக்திகளைக் களையெடுத்து, தூய சக்தியைத் தலை நிமிர வைத்து (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் நிரந்தர முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற இடத்தைப் பூர்த்தி செய்த புண்ணியத் தாயே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,095,18,60,000/–, மூலதனக் கணக்கில் ரூ.93,78,03,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகள் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக

ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை @@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு அவர்கள்.

@ 581 முதல் 747 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 749 முதல் 816 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

முற்பகல் 11–05

திரு. எம். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வான்புகழ் கொண்ட வரலாற்றுத் தலைவியே, உலகம் போற்றும் உத்தமத் தலைவியே, தமிழினம் காக்கும் தங்கத் தலைவியே, ஏழை எளியோரின் நலன் காக்கும் எழுச்சித் தலைவியே, வல்லரசு போற்றும் நல்லரசே, (மேசையைத் தட்டும் ஒலி) வீழ்ந்து கிடந்த தமிழகத்தை விதி 110–ன்மூலம் வீறுநடை போடச் செய்த வீர வரலாற்றின் வெற்றித் திருமகளே, தாழ்ந்து கிடந்த தமிழகத்தை தரணி போற்றும் திட்டங்களால் தலைநிமிரச் செய்திட்ட தனிப்பெருந் தலைவியே, (மேசையைத் தட்டும் ஒலி) விண்ணைத் தொடும் உங்கள் வளர்ச்சித் திட்டங்கள் இந்த மண்ணைக் காக்கும் உன்னதத் திட்டங்கள், உலகமே உங்கள் திட்டங்களை வியந்து பார்க்கிறது; பிற மாநிலங்களும் உங்கள் திட்டங்களைப் பின்பற்ற முயற்சிக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இவர் போன்ற முதல்வர் எங்களுக்கு இல்லையே என்று ஏங்குகின்றனர் மற்ற மாநில மக்கள்; நாடு போற்றும் நல்லரசு தொடர வேண்டும் என்று விரும்புகிறார்கள் தமிழக மக்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கயவர்களின் சூழ்ச்சியால் கட்டுண்ட காவேரியை மீட்டெடுத்து, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்தி, விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படும்போதெல்லாம் நிவாரண உதவித் தொகைகள் வழங்கி, இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி, குறு, சிறு விவசாயிகளின் விவசாயக் கடன்கள் முழுவதையும் இரத்துச் செய்து, விவசாய மின் இணைப்புகளுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கி, உழவர்களின் நலன் காக்கும் உத்தமத் தலைவி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி பாயும் திருச்சி மாவட்டத்தில், தாத்தையங்கார்பேட்டை என்னும் ஒன்றியத்தில், வாளவந்தி என்னும் குக்கிராமத்தில் ஒரு சிறு விவசாயக் குடும்பத்தில் பிறந்து, உலகுக்குத் தெரியாமல் இருந்த சாதாரண கடைக்கோடி தொண்டனான என்னை, 1998 ஆம் ஆண்டு மாவட்டக் கழகப் பிரதிநிதியாகப் பணியாற்ற வாய்ப்பினை வழங்கி, நான்கு முறை ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினராகப் போட்டியிட வாய்ப்பினை வழங்கி, அதில், இரண்டு முறை ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினராக்கி, இரண்டு முறை

தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தின் ஒன்றியக் குழுத் தலைவர் என்னும் பொறுப்பினை வழங்கி, இந்த ஏழைக்கும் முகவரி தந்து, ஆசீர்வதித்த தாயே, இந்தப் பேரவைக்கு நான் சாதாரண பார்வையாளராக வந்து, பார்வையாளர் மாடத்திலிருந்து பலமுறை தங்களுடைய ஆற்றல் கண்டு தங்களை வணங்கிச் சென்றிருக்கிறேன். ஆனால், நானும் இந்த மாமன்றத்தினுள் அமர்ந்து உரையாற்றுவேன் என்று என் கனவில்கூட நினைத்துப் பார்த்தது கிடையாது. அப்படிப்பட்ட என்னை, 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் முசிறி தொகுதியில் போட்டியிடும் வாய்ப்பினைத் தந்து, என்னை வெற்றி பெறச் செய்து, இந்தப் பேரவையில் உறுப்பினராக அமர வைத்து, உரையாற்றுகின்ற வாய்ப்பினையும் எனக்கு அளித்து, என்னை ஆசீர்வதித்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது சார்பாகவும், எனது குடும்பத்தினரின் சார்பாகவும் என்னுடைய நன்றியினை உங்கள் பாதக் கமலங்களில் காணிக்கையாக்குகிறேன் அம்மா! அதிக வாக்களித்து, அமோக வெற்றி பெறச் செய்த முசிறி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இரவு, பகல் பாராமல் உழைத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அனைத்து நிருவாகிகளுக்கும் எனது சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறி தொகுதி மக்களின் நலன் கருதி, ஒரு சில கோரிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகச் சமர்ப்பிக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறி தேர்வுநிலைப் பேரூராட்சிப் பகுதியில் 40 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் வசித்து வருகின்றனர். முசிறி நகரம் பழமை வாய்ந்த ஒரு விவசாய நகரம். இந்தப் பேரூராட்சி, சிறந்த பேரூராட்சி என்ற விருதினை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களால் பெற்ற பெருமைக்குரியது. இந்தப் பேரூராட்சியை நகராட்சியாகத் தரமுயர்த்தித் தரும்படி மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்கள் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

முசிறி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அமைத்துத் தரும்படி மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்கள் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

முசிறி, தொட்டியம், மணமேடு, ஸ்ரீராம சமுத்திரம், காட்டுபுத்தூர் ஆகிய பகுதிகள் வாழை, வெற்றிலை கொடிக்கால் நிறைந்த விவசாயப் பகுதிகளாகும். அந்தப் பகுதி விவசாயிகளுக்கு நிரந்தரப் பாசன வசதி கிடைக்கும் வகையில், காவேரி ஆற்றில் நிரந்தர கொறம்பு அமைத்துத் தரும்படி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்கள் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

முசிறி தொகுதிக்குட்பட்ட தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குப் புதிய அலுவலகம் கட்டித் தரும்படி மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்கள் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

முசிறி தொகுதி அதிக கிராமப் பகுதிகளைக் கொண்ட தொகுதியாகும். இங்குள்ள மாணவிகள் 50 கிலோ மீட்டர் தூரம் சென்று மேற்படிப்பைப் படிக்க வேண்டிய ஒரு சூழ்நிலையுள்ளது. கல்லூரிக்குச் செல்வதில், இவர்களுக்கு ஏற்படும் இன்னல்களைப் போக்கும் வகையிலும், ஏழையெளிய மாணவிகள் சிரமமின்றி உயர் கல்வியை முழுமையாகப் பெறும்வண்ணமும், முசிறியில் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைத்துத் தரும்படி மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்கள் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் முசிறியிலிருந்து சென்னைக்கு குளிர்சாதன வசதியுடன்கூடிய சொகுசுப் பேருந்து இயக்க வழிவகை செய்து தரும்படி மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்கள் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளியோர் நலன் காக்க விலையில்லா அரிசி, விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி, விலையில்லா கறவை மாடுகள், விலையில்லா வெள்ளாடுகள், விலையில்லா மடிக்கணினிகள், விலையில்லா மிதிவண்டிகள், விலையில்லா வேளாண் இடுபொருட்கள், விலையில்லா பசுமை வீடுகள், விலையில்லா சீருடைகள், விலையில்லா பாடப் புத்தகங்கள், விலையில்லா வேட்டி சேலைகள் என அத்தனையும் வழங்கியவர் மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற உன்னதத் திட்டம் தந்து, உழவர்களைக் காத்திட்ட உத்தமத் தலைவி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி உங்கள் கவிபாடும், முல்லைப் பெரியாறும் உங்கள் புகழ்பாடும், தமிழ் இனம் என்றும் உங்களைக் கொண்டாடும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே! *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதி, வளம், வளர்ச்சி என்ற தாரக மந்திரத்தோடு தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றி, வளமான தமிழகத்தை உருவாக்கி, மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் தாயே, விவசாயிகளின் வாழ்வில் விடியலை ஏற்படுத்த, நித்தம் பல புதிய திட்டங்களைத் தந்து, விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காத்திடும் தாயே, உங்கள் காலத்தில் நாங்கள் வாழ்வது இறைவன் எங்களுக்குத் தந்த வரமே. *(மேசையைத் தட்டும் ஒலி)* உங்களுக்குத் தொண்டனாக இருப்பது நாங்கள் செய்த தவமே. *(மேசையைத் தட்டும் ஒலி)* தாயே, வாழும் காலமெல்லாம் உங்களுக்கு விசுவாசமாக வாழ வேண்டும். என் உதடுகள் அதிகம் உச்சரிக்கும் வார்த்தை அம்மா, அம்மா என்றே இருக்க வேண்டும் என இறைவனை வேண்டுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா என்றால் அன்பு, அம்மா என்றால் அறிவு, அம்மா என்றால் ஆற்றல், அம்மா என்றால் அரசு, அம்மா என்றால் நல்லாட்சி, அம்மா என்றால் வெற்றி, ஆக வரும் உள்ளாட்சித் தேர்தலிலும் அம்மா அவர்களுக்கே வெற்றி என்று சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என் சிரம் வைத்து வணங்கி, நன்றிகூர்ந்து எனது கன்னிப் பேச்சை நிறைவு செய்கின்றேன். வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சேகர் அவர்கள்.

***திரு. வி. சேகர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பு, பாசம், பரிவு இதன் பொருள் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அறிவு, ஆற்றல், திறமை இதன் அர்த்தம் எங்கள் அம்மா. கனிவு, தெளிவு, துணிவு இதன் தத்துவம் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) உண்மை, உழைப்பு, உயர்வு இதுவும் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) தரணிக்குத் தெய்வமாய், தஞ்சைக்கு தாயாய், தமிழுக்கு அரணாய், தமிழருக்குத் துணையாய், வந்துதித்த வரலாற்றுத் தலைவி எங்கள் அம்மா. எங்கள் வாழ்க்கைப் பாடத்தின் பிள்ளையார்சுழி எங்கள் அம்மா. விலையில்லா பல்பொருள் தரும் கலைமகள் எங்கள் அம்மா. உலகத் தமிழர்களின் இதயங்களில் வாழும் மலைமகள் எங்கள் அம்மா. ஆழ்கடல் பொங்கினால் எதிரிகள் தாங்காத அலைமகள் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா உணவகமே தங்கள் அன்பின் உச்சம் அம்மா. நதிநீர்ப் பிரச்சினைகளுக்குச் சட்டப் போராட்டங்கள் நடத்துவது தங்கள் அறிவின் உச்சம் அம்மா. தமிழ்நாடு உயர் நீதிமன்றம் தங்கள் ஆற்றலின் உச்சம் அம்மா. எதிர்க்கட்சிகள் வாய்மூடி மவுனியாக இருப்பதே தங்கள் ஆட்சியின் உச்சம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) வந்து எதிர்த்த அனைத்தையும் வென்று, வாகை சூடி நிற்கும் விவேகமிகு குந்தவை நாச்சியார், தமிழ் நிலத்தின் ஜான்சி ராணி எங்கள் அம்மா.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசியை விரட்டி அடித்து, பட்டினிக்கு விடை கொடுத்து, வறுமைக்கு முடிவு கட்டியவர் எங்கள் அம்மா. தமிழகத்தைத் தன்னிறைவு பெற்ற மாநிலமாகக் கொண்டுவர மாண்புமிகு அம்மா அவர்கள் எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களைக் கொண்டுவந்து, அதனைச் செயல்படுத்த அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருவதை இந்த அகிலமே அறியும். எதைச் செய்தாலும் அதைச் சிறக்கச் செய்ய வேண்டும். அது மற்றவர்களுக்கெல்லாம் முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என சிந்தித்துச் செயலாற்றுபவர் எங்கள் அம்மா. அதனால்தான் மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களை, இந்திய தேசம் மட்டுமல்ல, வெளிநாட்டினரும் வரவேற்றுப் பாராட்டுகின்றனர். அறிவை அறிந்துகொள்ளும் அறிவுடைய அனைவருமே இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டுகின்றனர். போற்றிப் புகழ்கின்றனர்.

குறிப்பாக, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் கொண்டுவந்த தொட்டில் குழந்தைத் திட்டம், அனைத்து

மகளிர் காவல் நிலையம், (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் பாதுகாப்புத் திட்டம், வன்கொடுமைத் தடுப்புச் சட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் சுய உதவிக் குழு, மழைநீர் சேகரிப்புத் திட்டம், அம்மா உணவகம், அம்மா மருந்தகம், அம்மா உப்பு, அம்மா சிமென்ட், அம்மா குடிநீர், மாணவ–மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினி, (மேசையைத் தட்டும் ஒலி) சைக்கிள், உதவித் தொகை மற்றும் ஊக்கத் தொகை மற்றும் 16 வகையான கல்வி உபகரணங்கள். தாலிக்கு ஒரு பவுன் தங்கம், அனைவருக்கும் வீடு, மக்களைத் தேடி அரசே செல்லும் 'அம்மா திட்டம்' எனப் பல திட்டங்கள் வரிசை கட்டி வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வாரி வழங்கி வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகமே எனது குடும்பம், தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள், தமிழக மக்களின் நலனே என் நலன் என்று சூளுரைத்து, மக்களுக்காகவே தவ வாழ்வு வாழும் எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் எப்போதெல்லாம் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்றாரோ, அப்போதெல்லாம் தமிழ் மக்களுக்குப் பொற்காலம், மற்ற காலங்களெல்லாம் தமிழ் மக்களுக்குப் போதாத காலம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தனது உரையில் 'ஏழைகளே இல்லாத தமிழகத்தை உருவாக்குவேன் என்றும், தமிழ்நாட்டின் பொருளாதாரம் புத்துயிர் பெற்று எழுச்சிபெறும் வகையிலும், நேர்முக மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினைப் பெருக்கும் வகையிலும், மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் வகையிலும், இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்ற வேண்டும்' என்றும் குறிப்பிட்டுள்ளார். அந்த இலட்சியப் பாதையில்தான் பீடுநடை போடுகிறார் நம் ஆற்றல் பேரரசி மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பின்புலமும் இல்லாத ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, திருச்சி சட்டக் கல்லூரி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாணவர் அமைப்பு துணைச் செயலாளராகவும்,

பின் தஞ்சை தெற்கு மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞரணி செயலாளராகவும், பின் வழக்கறிஞர் பிரிவு மாவட்ட இணைச் செயலாளராகவும், பின் ஆலத்தூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும், நடைபெற்று முடிந்த சட்டமன்றப் பேரவைத் தேர்தலில் பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்து, தனது செல்வாக்குமூலம், என்றுமே பட்டுக்கோட்டை தொகுதி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டை என்பதை நிரூபித்து, என்னை வெற்றி பெறச் செய்து (மேசையைத் தட்டும் ஒலி) பார்போற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க இப்பேரவையில் சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்ற வாய்ப்பளித்த மாட்சிமைப் பொருந்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நானும் எனது தலைமுறையும் என்றென்றும் தங்களுக்கு விசுவாசமாக இருப்போம் அம்மா என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்து, அல்லும் பகலும் அயராது உழைத்திட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் உண்மை விசுவாசிகளுக்கும், வெளிநாடுகளிலிருந்து தங்கள் ஆதரவை எனக்குத் தெரிவித்த பட்டுக்கோட்டை தொகுதியைச் சேர்ந்த, வெளிநாட்டில் வாழும் அனைத்து தமிழ் நெஞ்சங்களுக்கும், வாக்களித்து வெற்றிபெறச் செய்த, வாக்காளப் பெருமக்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியை உங்கள் பாத மலர்களில் காணிக்கையாக்குகிறேன்.

சோழநாடு சோறுடைத்து என்பது பழமொழி. நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சை என்பார்கள். மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டிப் போரடித்த பூமி எங்கள் பூமி. வேளாண் பெருமக்களுக்கு எண்ணற்ற சலுகைகளை, உதவிகளை வழங்கி, மீண்டும் தஞ்சை டெல்டா பகுதியில் விவசாயம் செழிக்க வழிவகை செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் நேற்றைய தினம் விதி 110-ன்கீழ் இந்த மாத இறுதிக்குள் சம்பா பயிருக்குத் தேவையான தண்ணீர் மேட்டூர் அணையில் கிடைக்கப் பெறவில்லை எனில், நேரடி நெல் விதைப்புமூலம் சம்பா சாகுபடி மேற்கொள்வதற்கு, காவேரி டெல்டா விவசாயிகள் பயன்பெறும்வகையில், சம்பா தொகுப்புத்

திட்டத்தை அறிவித்துள்ளார்கள். அதன்படி, விவசாயிகள் நெல் விதைப்பு மேற்கொள்வதற்காக தரிசு உழவுப் பணிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.500/-வீதம் மானியம் வழங்கப்படும் என்றும், இதற்கென ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும், விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகள் பெற ஏதுவாக, விதைகளுக்குக் கிலோ ஒன்றுக்கு பத்து ரூபாய் மானியம் வழங்கி, இதற்கென 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும், இயந்திர முறையில் நெல் விதைப்பு மேற்கொள்ள ஏக்கர் ஒன்றுக்கு ரூ.600/ – வீதம் மானியம் வழங்கியும், இதற்கென 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும், நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ளப்படும் இடங்களில் களை பாதிப்பு அதிகளவு இருக்கும். ஆகையால், களைக்கொல்லி மருந்து தெளிக்க, ஏக்கருக்கு ரூ.280/– மானியம் வழங்கியும், இதற்கென 9 கோடியே 80 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும், நடவு இயந்திரம்மூலம் நடவு மேற்கொள்ளப்படும் இடங்களுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ.2,000/– வீதம் மானியம் வழங்கியும், இதற்கென 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும், துத்தநாகச் சத்துக் குறைபாட்டினால் நெல் மகசூல் குறையும் என்பதால், இத்தகைய குறைபாடுள்ள வயல்களில் Zinc Sulphate–ஐப் பயன்படுத்த, ஏக்கருக்கு ரூ.200/–வீதம் மானியம் வழங்கியும், இதற்கென 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும், ஆக மொத்தம் 64 கோடியே 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் மாட்சிமைப் பொருந்திய புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு காவேரி டெல்டா விவசாயிகளின் சார்பில் நெஞ்சம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–20

பதவியேற்று கையெழுத்திட்ட முதல் கோப்பிலேயே சிறு, குறு விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்ததோடு மட்டுமல்லாமல், குறுவை சாகுபடிக்கும் குறுவைத் தொகுப்புத் திட்டம் வழங்கியவர்தான் நம் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை இதற்கு முன் எந்த முதல்வரும் செய்ததில்லை, இனி எவரும் செய்யப் போவதுமில்லை. என்றும் விவசாயிகளின் நலன் காக்கின்ற அரசு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்றால் அது மிகையாகாது. காவேரியாற்றின் குறுக்கே கர்நாடக அரசு, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மீறும் வகையிலும், தமிழ்நாடு அரசின் இசைவு

பெறாமலும், எந்தவொரு திட்டத்தையும் செயல்படுத்த உத்தேசிக்குமானால், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட, சட்டப்பூர்வமான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு மேற்கொள்ளும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை அறிவித்த தமிழ்ச் சமுதாயத்தின் உயிர்நாடியாய் விளங்குகின்ற, விவசாயிகளின் நலன் காக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, தஞ்சை மாவட்ட மக்களின் சார்பாக நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விதி 110—ன்கீழ், தஞ்சை மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் மின்னணு எடை இயந்திரம்மூலம் நெல் கொள்முதல் செய்யவும், அதற்குண்டான தொகை முழுவதும் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் மின்னணுத் தீர்வு சேவை (ECS) மூலம் உடனடியாக வரவு வைக்கப்படும் என்ற அறிவிப்பு வேளாண் பெருமக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் பெருமக்களுக்கு, அவர்களே எதிர்பாராத அளவிற்கு எண்ணற்ற சலுகைகளையும், உதவிகளையும் வழங்கி, எப்பொழுதும் அட்சயப் பாத்திரமாய் திகழும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியில் வேளாண் துறைக்கு மட்டும் 23 ஆயிரத்து 655 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளார்கள். காவேரி நதி நீர்ப் பிரச்சினைக்கு, சட்டப் போராட்டம் நடத்தி, மத்திய அரசுடன் பல்வேறு காலகட்டங்களில் வாதாடி, போராடி காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட்டு, வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்கள் என்பதை நாடறியும். இந்த நிதிநிலை அறிக்கையில், உற்பத்தியைப் பெருக்கி, பண்ணை அளவிலான உற்பத்தித் திறனை அதிகரித்து, விவசாயிகளின் வருவாயினை உயர்த்தி, நீடித்த நிலையான வேளாண் வளர்ச்சியை ஏற்படுத்துவதே முக்கிய உயிர் மூச்சாய்க் கொண்டு, வேளாண் துறைக்கு முதன்மைக் கவனம் செலுத்தப்பட்டிருப்பது கண்கூடாய்த் தெரிகிறது. இந்த நிதியாண்டிற்கான உணவு தானிய உற்பத்தி 147 இலட்சம் மெட்ரிக் டன்னாக அரசு நிர்ணயித்திருப்பது நிச்சயம் நிறைவேறும் என்பதை அறுதியிட்டுச் சொல்ல முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) மானாவாரி நில விவசாயத்திற்கு நீர்

ஆதாரங்களை மேம்படுத்தி, மழை நீரைச் சேமித்து, விரயமின்றி பயன்படுத்தும் வழிமுறைகள் நிச்சயமாக சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும். 27.50 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயறு சாகுபடி மேற்கொள்ள உள்ள அறிவிப்பு, பச்சைப் பயறு, உளுந்து, துவரை போன்ற பயறு வகை சாகுபடி விவசாயிகளை ஊக்கப்படுத்தும் என்பது திண்ணம். வேளாண் பயிர்கள், தோட்டக்கலைப் பயிர்கள், பயிரிட நுண்ணீர்ப் பாசனத்திற்கு மானியம் வழங்கும் கொள்கையில் மாற்றம் இல்லை என்ற அறிவிப்பு வேளாண் பெருமக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். பண்ணை இயந்திரமயமாக்கல் திட்டத்தின்கீழ் இயந்திரங்களைப் பயன்படுத்துவதை பல்வேறு நிலைகளில் ஊக்குவிக்கும் தற்போதைய முயற்சிகள் தொடரும் என்பதால், பண்ணை இயந்திரமயமாக்கல் திட்டம் புதுப் பொலிவுடன் திகழ இந்த நிதியாண்டில் மேலும் 112 மையங்கள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது. வணிக ரீதியாக அதிக வருவாய் ஈட்டித் தரும் கொக்கோ பயிரை ஊக்குவிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் வேளாண் பெருமக்களை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லும் என்பது திண்ணம். தட்டுப்பாடின்றி உரம் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அறிவிப்பு வேளாண் பெருமக்களை நிம்மதியில் ஆழ்த்தியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சைத் தரணியில், கால்நடை மருத்துவக் கல்லூரி, விவசாயக் கல்லூரி மட்டுமல்லாது பொறியியல் கல்லூரியையும் அமைத்துக் கொடுத்த மாட்சிமைப் பொருந்திய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) தஞ்சை மாவட்ட மக்கள் என்றும் நன்றியுடன் இருப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டம் மற்றும் விலையில்லா வெள்ளாடுகள்/செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்களின்கீழ், 60,000 பெண் பயனாளிகளுக்கு 60,000 கறவைப் பசுக்களும், (மேசையைத் தட்டும் ஒலி) ஏழ்மையிலும் ஏழ்மை நிலையிலுள்ள 7,00,000 பெண்களுக்கு 28,00,000 வெள்ளாடுகள்/செம்மறியாடுகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கறவைப் பசுக்களின் வாயிலாக தினமும் தோராயமாக 2.66 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்தக் கறவைப் பசுக்கள் ரூ.37.89 கோடி மதிப்பிலான 75,796 கன்றுகளை

ஈன்றுள்ளன. மேலும் வழங்கப்பட்ட ஆடுகள், 1,116 கோடி ரூபாய் மதிப்பிலான 44.67 இலட்சம் குட்டிகளை ஈன்றுள்ளன.

முற்பகல் 11—25

விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறியாடுகள் திட்டத்தில் வழங்கப்பட்ட கால்நடைகளின்மூலம் கிடைக்கப்பெற்ற சுமார் 6.71 இலட்சம் மெட்ரிக் டன் தொழு உரத்தின் மதிப்பு ரூ.108.04 கோடி ஆகும். இதன் வாயிலாக கிராமப்புற ஏழையெளிய பெண்கள் பொருளாதார ஏற்றம் அடைந்துள்ளனர். இந்தத் திட்டங்களின் வெற்றியைத் தொடர்ந்து, இந்த நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும் விலையில்லா கறவைப் பசுக்கள் ஒன்றின் கொள்முதல் விலை ரூ.30,000/—த்திலிருந்து ரூ.35,000/— ஆக நடப்பாண்டில் உயர்த்தி வழங்கப்படும் என்ற அறிவிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது. இதன்மூலம் கிராமப் பொருளாதாரம் மேம்படும் என்பதில் ஐயமில்லை.

எனது தொகுதிக் கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்து அவற்றை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை தொகுதி, காவேரி டெல்டாவின் கடைக்கோடி பகுதியாகும். பட்டுக்கோட்டை மற்றும் மதுக்கூர் ஒன்றியங்களை உள்ளடக்கிய 111 கிராமப் பஞ்சாயத்துகளைக் கொண்ட விவசாய பூமி. தென்னையை முதன்மைப் பயிராகவும், நெல் சாகுபடியை உயிர் நாடியாகவும் கொண்டு விவசாயத்தை மட்டுமே இப்பகுதி மக்கள் வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளார்கள். தென்னை விவசாயிகளுக்கு ஆதார விலை கிடைக்கும் வகையில், கொப்பரையை அரசே கொள்முதல் செய்ய ஆணையிட்ட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு எங்கள் தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்திட, தேங்காயை அரசே கொள்முதல் செய்து அதன்மூலம் எண்ணெய் உற்பத்தி செய்து, ரேஷன் கடைகளில் மக்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதம் பணிந்து வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை தொகுதியில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்றும், பட்டுக்கோட்டை தொகுதியில் மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க வேண்டுமென்றும் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

துவரங்குறிச்சி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், அதிராம்பட்டினம் கரையூர் தெருவில் இயங்கிவரும் அரசு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தித் தர வேண்டும்.

மன்னார்குடி—மதுக்கூர் சாலையில் அண்டமி அருகில் கண்ணனாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைத்துத் தர வேண்டும்.

மதுக்கூர் பெருகவாழ்ந்தான் சாலையில் சொக்கநாவூர் அருகே காட்டாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைத்துத் தர வேண்டும்.

பட்டுக்கோட்டை நகருக்குக் குடிநீர் ஆதாரமாக விளங்கும் மகாராஜசமுத்திரம் ஆற்றின் குறுக்கே தடுப்பணைக் கட்டி குடிநீர் செறிவூட்டல் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்பிவயல் அருகே 20—க்கும் மேற்பட்ட கிராமங்கள் விவசாயத்திற்குப் பயன்படுத்தும் வகையில் காட்டாற்றில் தடுப்பணை கட்டித் தர வேண்டும்.

அதிராம்பட்டினம், மதுக்கூர் பேரூராட்சிகளிலுள்ள சாலைகளை மேம்பாடு செய்து தர வேண்டும்.

அதிராம்பட்டினம், கரையூர் தெருவில் இருந்து துறைமுகம் வரை செல்லும் சாலையை தார்ச் சாலையாக அமைத்துத் தர வேண்டும். மேலும், அதனருகே ஆற்றுநீர் கடலில் கலக்கும் முகத்துவாரத்தைத் தூர்வாரிச் செப்பனிட்டுத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மதுக்கூர் ஊராட்சி ஒன்றியம், இளங்காடு கிராமம், பட்டுக்கோட்டை ஒன்றியம், நரசிங்கபுரம் ஊராட்சி மற்றும் சாந்தாங்காடு கிராமங்களில் நியாய விலைக் கடைகள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடக்கு மதுக்கூர் கிராமத்தில் கூத்தங்குளி பகுதியில் வசிக்கும் ஏழை மக்களுக்கு அரசின் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை ஒன்றியம், இராஜாமடம் ஏரிப்புறக் கரையில் வாழும் மீனவ மக்களுக்கு வீட்டுமனை மற்றும் கான்கிரீட் வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழஞ்சூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டுமென்றும், அதிராம்பட்டினம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாக்கடை, கழிவுநீர் தேங்கி நிற்காத வகையில் கழிவுநீர்க் கால்வாய் வசதிகள் செய்து தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை நகருக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் Trauma விபத்து அவசரச் சிகிச்சைப் பிரிவு தொடங்க வேண்டுமென்றும், கண் மருத்துவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்றும், அந்த மருத்துவமனையின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, M.R.I. Scan, C.T. Scan வசதிகள் செய்து தர வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மேலும் இம்மருத்துவமனையில் உள் நோயாளியாகத் தங்கி மருத்துவ சிகிச்சை பெறும் நோயாளிகளின் கவனிப்பார்கள் (Attender) அமர்வதற்கு கட்டட வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுக்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆலத்தூர் சுகாதார நிலையத்தை மேம்படுத்தி 30 படுக்கை வசதிகள் கொண்டதாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை, மதுக்கூர், அதிராம்பட்டினம் பகுதியில் நிலமற்ற குடிசைகளில் வாழும் ஏழையெளிய மக்கள் பயன்பெறும் வகையில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

பட்டுக்கோட்டை தொகுதியில் அரசுக்குச் சொந்தமான கோயில் நிலங்களில் வாழும் ஏழை எளியவர்கள் குடிசைகளில் தங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படுவதில்லை. எனவே, அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மதுக்கூர் நகரில் இயங்கிவரும் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரவும், பட்டுக்கோட்டை தொகுதி, செம்பாளூர் கிராமம், பழவேரிக்காடு மற்றும் ஆலத்தூர் ஆதி திராவிடர் காலனி மற்றும் பட்டுக்கோட்டை நகரம், கோட்டை சிவன்கோவில் தெரு, வளவன்புரம் ஆகிய பகுதிகளுக்கு சமுதாயக் கூடம் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏனைய எனது தொகுதிக் கோரிக்கைகளை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த எங்கள் தாய், அறிவின் சிகரம், ஆற்றலின் இமயம், ஆளுமையின் உச்சம் நம் புனிதத் தாய் மாண்புமிகு அம்மா அவர்களின் வழி நடப்போம், உள்ளாட்சித் தேர்தலில் வாகை சூடுவோம், வரலாறு படைப்போம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில்,

ஏர் பூட்டித் தோளில் வைத்து,
இல்லாமை வீட்டில் வைத்து,
போராடும் காலமெல்லாம் போனதம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)
எல்லார்க்கும் யாவும் உண்டு
என்றாகும் காலம் இன்று
நேராகக் கண்ணில் வந்து தோன்றுதம்மா! தோன்றுதம்மா!

என்று சொல்லி, எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழாம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா என்று சங்கே முழங்கு, சங்கே முழங்கு என்று கூறி (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குத் தந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

பட்டுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட கரம்பயம் கிராமத்தில் அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயத்தில் அனைத்துத் தரப்பு மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு, ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் உள்ள திருமண மண்டபத்தைக் கட்டித் தர வேண்டுகிறேன்.

பட்டுக்கோட்டை நகரிலுள்ள அருள்மிகு நாடியம்மன் திருக்கோயில், பெருமாள் கோயில் மற்றும் ஆலத்தூர் அருள்மிகு காருடைய அய்யனார் மற்றும் வீரனார் திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து, கும்பாபிஷேகம் செய்து தர வேண்டுகிறேன்.

அதிராம்பட்டினம் சாலையில் மாளியக்காட்டிலிருந்து மகிழங்கோட்டை வழியாக இராஜமடம் செல்லும் கிழக்குக் கடற்கரை (ECR) இணைப்புச் சாலையை அகலப்படுத்தி, மேம்படுத்தித் தர வேண்டுகிறேன்.

பரக்கலக்கோட்டை அருள்மிகு பொது உடையார் திருக்கோயில் பகுதியைச் சுற்றுலாத் துறையின்மூலம் மேம்பாடு செய்து, பக்தர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து தர வேண்டுகிறேன். பட்டுக்கோட்டை நகரிலிருந்து தளிக்கோட்டை, ஆலம்பள்ளம் மற்றும் புலவஞ்சி, கருப்பூர், அண்டமி கிராமங்களுக்குப் புதிய வழித் தடத்தில் பேருந்து வசதி செய்து தர வேண்டுகிறேன்.

கீழக்குறிச்சி, ஓலையகுன்னம் பகுதிகளுக்கு பட்டுக்கோட்டையிலிருந்து மதுக்கூர் செல்லும் வழியாகப் புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க வேண்டுகிறேன்.

கிழக்குக் கடற்கரைச் சாலை (ECR) வழியாக வரும் அனைத்துப் பேருந்துகளும் பட்டுக்கோட்டை நகரப் பேருந்து நிலையம் வந்து செல்லவும், பட்டுக்கோட்டை நகருக்குப் புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தரவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை நகரில் மகாராஜசமுத்திரம் பகுதியில் 1.5 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்து, 360 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டும் திட்டத்தினைச் செயல்படுத்திடவும், வளர்ந்துவரும் மதுக்கூர் மற்றும் அதிராம்பட்டினம் பேரூராட்சிப் பகுதிகளுக்கு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தரவும் கேட்டுக்கொள்கிறேன்.

100 நாள் வேலைத் திட்டத்தினை பேரூராட்சிப் பகுதிகளில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

வேப்பங்காடிலிருந்து கிளாமங்களத்திற்கும், புதுக்கோட்டை உள்ளூரிலிருந்து அணைக்காடுக்கும், கன்னியாக்குறிச்சியிலிருந்து

கீழக்குறிச்சிக்கும், கருங்குளத்திலிருந்து சுந்தரநாயகிபுரத்திற்கும் செல்லும் சாலைகளை மேம்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை–மதுக்கூர் படப்பைக்காடு, பாட்டுவனாச்சி பாலத்தை உயர்மட்டப் பாலமாக அமைத்துத் தர வேண்டுகிறேன். பட்டுக்கோட்டையிலிருந்து சென்னைக்கும், பெங்களூருக்கும் குளிர்சாதன வசதி கொண்ட பேருந்து இயக்க வேண்டுமென்றும், காசாங்காட்டிலிருந்து வெண்டாக்கோட்டைக்கும், துவரங்குறிச்சியிலிருந்து மறவக்காடுக்கும், செண்டாங்காடிலிருந்து ஆத்திக்கோட்டைக்கும், சிலம்பவேளாங்காட்டிலிருந்து காசாங்காடுக்கும் செல்லும் சாலைகளை மேம்படுத்தித் தர வேண்டுமென்றும் நரசிங்கபுரத்திலிருந்து அதிராம்பட்டினம் செல்லும் சாலையில் நசுவினி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைத்துத் தரவும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.

***திரு. கே.ஏ. பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டின் இதயத் துடிப்பாம், செந்தமிழ் நாட்டின் சீர்மிகு தலைவியாம், எட்டயபுரத்தின் எழுச்சிமிகு கவிஞனின் எட்டாக் கனவை எட்டிப் பிடித்து, பட்டங்கள் ஆளவும், திட்டங்கள் வரையவும் பாரதம் போற்றும் புதுமைப் பெண்ணே, புறநானூற்றின் புதிய வார்ப்பே, புரட்சித் தலைவரின் புரட்சி கீதமே, (மேசையைத் தட்டும் ஒலி) இயல், இசை, நாடகத் தமிழின் இனிமையே, அறிவியல் தமிழ் தந்த அன்னையே, மலைதனில் வாழும் மக்களின் உயிரே, அரசியல் வானின் அற்புதச் சுடரே, தமிழ் இனத் துரோகிகளை விரட்டியடித்து, வெற்றிமேல் வெற்றி குவிக்கும் எங்களின் வெற்றித் திருமகளே, (மேசையைத் தட்டும் ஒலி) தஞ்சமென்று வந்தவரை தாய்போல் ஆதரித்து, வஞ்சகர்களின் செயல்களுக்கு வாள் முனையில் தீர்ப்பளித்து, அன்புக்கு இடம் கொடுத்து, அறம் காத்து, மக்களின் முறை காத்து, எளியோரின் குறை போக்கும் எங்களின் குல விளக்கே, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உங்களின் புனித பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது முன்னோர்கள், எனது பாட்டனார், எனது தந்தையார், இன்று எனக்கும் தெரிந்த ஒரே தொழிலான உழவுத் தொழிலைச் செய்துவரும் இந்த உழவர் மகனுக்கு வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்தத் தங்களுக்கு மேலான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையேழு வள்ளல்களை மிஞ்சிய எட்டாவது வள்ளல், எம்.ஜி.ஆரின் அரசியல் வாரிசாக, அள்ளி, அள்ளித் தரும் ஒன்பதாவது வள்ளலாகத் திகழும் மாண்புமிகு அம்மா அவர்கள் *(மேசையைத் தட்டும் ஒலி)* கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் வேளாண்மைத் துறைக்கு ரூ.23,655 கோடியை ஒதுக்கித் தந்துள்ளார்கள்.

விளைச்சல் நன்றாக இருந்தால்தான் விவசாயி கடனின்றி நிம்மதியாக வாழ முடியும். அந்த விளைச்சல் சிறப்பாக அமைய நல்ல தரமான உரம் வேண்டும். அந்த உரங்கள் விவசாயிகளுக்குத் தட்டுப்பாடின்றி கிடைக்க 'TANFED' நிறுவனத்திற்கு வட்டியில்லா முன்பணம் மற்றும் கடன் உதவியாக ரூ.580 கோடியை வாரி வழங்கிய வள்ளல், வேளாண் மக்களின் காவல் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் ஆதாரம் குறைந்துவரும் நிலையில், நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அதை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறார் நம் மாண்புமிகு அம்மா அவர்கள்.

ஒரு முறை ஓர் உணவகத்திற்குச் சென்று சாப்பிட்டுவிட்டு, கை கழுவச் சென்றபோது அந்த இடத்தில் ஒரு விளம்பர நோட்டிஸ் ஒட்டப்பட்டிருந்தது. அதில், நம் தாத்தா காலத்தில் ஆறுகளில், ஏரிகளில் தண்ணீரைப் பார்த்தோம். நம் அப்பா காலத்தில் கிணறுகள், குளங்களில் தண்ணீரைப் பார்த்தோம். நம் காலத்தில் கேன்கள் மற்றும் பாட்டில்களில் தண்ணீரைப் பார்க்கின்றோம். இனி நம் சந்ததியர் காலத்தில் என எழுதி, ஒரு பெரிய கேள்விக்குறியைப் போட்டிருந்தார்கள். தண்ணீரின் அவசியத்தை, அதன் முக்கியத்துவத்தை இதைவிட எளிதில் யாரும் சொல்லிவிட முடியாது. இதன் அவசியத்தைக் கருதித்தான் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் மழை நீர்சேகரிப்புத் திட்டத்தைக் கொண்டுவந்து, *(மேசையைத் தட்டும் ஒலி)*

வெற்றிகரமாக, இந்திய தேசமே பின்பற்றுகின்ற வகையில் செயல்படுத்தியிருக்கின்றார்கள். அந்த வரிசையில், நுண்ணீர்ப் பாசனத்திற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவிகிதமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகிதமும் மானியம் வழங்கி வருகிறார்கள்.

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதர் குல திலகம், மக்கள் போற்றும் மாதரசி, மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த இந்தத் திட்டத்தின்கீழ் இதுவரை 1,65,802 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். அவர்கள் பெற்ற மானியத் தொகை எவ்வளவு தெரியுமா? 799 கோடியே 35 இலட்சம் ரூபாய். இதுதான் எங்கள் அம்மா.

இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். ஒரு காலத்தில் புழுத்துப் போன அரிசிக்காகவும், கோதுமைக்காகவும், ஆட்டா மாவுக்காகவும், நியாய விலைக் கடைகள் முன், வரிசையில் மக்கள் நின்று காத்துக் கொண்டிருந்த அவல நிலை இருந்தது. யாருடைய ஆட்சியில் இந்த அவல நிலை இருந்தது என்பது 50 வயதைக் கடந்தவர்களுக்குத் தெரியும். ஆனால், மனிதப் புனிதர், மாணிக்கத் தலைவர், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிக்கு வந்த 1977 ஆம் ஆண்டு முதல் அரிசி, பருப்பு, பாமாயில், மண்ணெண்ணெய் போன்ற அனைத்துப் பொருட்களும் தட்டுப்பாடின்றி கிடைத்தன. மக்கள் திலகத்தின் வாரிசான மாதர் குலத் திலகம் மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அதே வழியில் ஏன், அதைவிட ஒரு படி மேலேபோய், வீடுதோறும் 20 கிலோ விலையில்லா அரிசி வழங்கி, உலகத்தில் எங்கும் இல்லாத உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையின் பொற்காலம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலம் என்றால் அது மிகையாகாது. 2011–2012 ஆம் ஆண்டில், உணவு தானிய உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் முதலிடம்; ரூ.2 கோடி ரொக்கப் பரிசும் மற்றும் Krishi Karman விருதும் பெற்றது. 2013–2014 ஆம் ஆண்டில், சிறு தானிய உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் முதலிடம்; ரூ.2 கோடி ரொக்கப் பரிசும் மற்றும் “Krishi Karman” விருதும் பெற்றது. 2014–2015 ஆம் ஆண்டில், பயறுவகை உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம்

முதலிடம்; ரூ.2 கோடி ரொக்கப் பரிசும் மற்றும் Krishi Karman விருதும் பெற்றது.

கடந்த 5 ஆண்டுகளில், தொடர்ந்து மூன்று முறை (மேசையைத் தட்டும் ஒலி) Krishi Karman விருதினை இந்தியத் திருநாட்டில் பெற்ற ஒரே மாநிலம், நம் தாய் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆளுகின்ற தமிழ்நாடு என்பதனை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்வரும் வடகிழக்குப் பருவமழையிலும், குறைவான மழை மற்றும் நமக்குத் தேவையான அளவு தண்ணீர் மேட்டூர் அணையில் கிடைக்கப் பெறாத சூழ்நிலையில் காவேரி டெல்டா விவசாயிகள் எந்தப் பாதிப்புக்கும் உள்ளாகக்கூடாது என்பதனால் கருணை மழை பொழிந்து காவேரி டெல்டா விவசாயிகளின் வயிற்றில் பால் வார்த்து, (மேசையைத் தட்டும் ஒலி) 64.30 கோடி ரூபாய் மானியத்தை வழங்கி, சம்பா சாகுபடி சிறப்புத் திட்டத்தினை நேற்று இந்த அவையிலே 110–விதியின்கீழ் அறிவித்து, காவேரி டெல்டா விவசாயிகளின் தலைவிதியை மாற்றிய பொற்கால முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். கடலூர் மாவட்டம், காவேரி டெல்டா விவசாயிகளில் நானும் ஒருவன் என்கின்ற வகையில், எனது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தன்னை ஒரு விவசாயி என்று குறிப்பிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சியைக் காண்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். விவசாயிகளின் குறைகளைப் போக்கி, அவர்கள் வாட்டத்தைப் போக்கி மாற்றத்தைத் தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். மாற்றத்தைத் தந்த விவசாயிகளுக்கு ஏற்றம் தந்த முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

2011–2016 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் "உழவர் பெருவிழா"–வை நடத்தி அறுசுவை விருந்தளித்த விவசாயிகளின் அட்சயபாத்திரம், மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதனைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாம் பசுமைப்

புரட்சிக்கு வித்திட்டவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதனைப் பெருமையோடு இந்த அவையில் தெரிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை, வெள்ளம், புயல், சூறாவளி என இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மட்டுமே இழப்பீடுகள் வழங்கப்பட்டு வந்தன. ஆனால், காலம் வழங்கிய கருணைக் கொடையாம் மாண்புமிகு அம்மா அவர்கள் வறட்சிக்கும் நிவாரணம் வழங்கி சாதனை படைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், காவேரி டெல்டா விவசாயிகள் 3 இலட்சத்து 53 பேருக்கு வறட்சி நிவாரண நிதியாக 5,024 கோடியே 26 இலட்ச ரூபாயும், சென்னையைத் தவிர பிற மாவட்டங்களில் 19 இலட்சத்து 27 ஆயிரம் விவசாயிகளுக்கு 800 கோடியே 79 இலட்சம் ரூபாயும் வறட்சி நிவாரணமாக வழங்கியுள்ளார்கள். வேளாண்மைத் துறையில் புதுப்புது தொழில்நுட்பங்களைப் புகுத்தி வரும் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தில் உள்ள நூறு வட்டாரங்களில் 150 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள் உருவாக்கியுள்ளார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–40

சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தித் திறனை அதிகரித்திட, சிறப்புக் கவனம் செலுத்தி இந்த நிதியாண்டில் பயறு உற்பத்தியில் 9.80 இலட்சம் மெட்ரிக் டன் அளவை அடையும் நோக்கத்துடன் 27.50 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ள இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் இலக்கு நிர்ணயித்திருப்பதைத் தமிழக மக்கள் வரவேற்றிருக்கிறார்கள் தாயே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்காலமும் மக்களுக்கே முழுமதியாய் ஜொலிக்கும் தாய், எக்காலமும் ஏழைகளுக்கே உழைக்கும் தாய், (மேசையைத் தட்டும் ஒலி) காவேரியை மீட்டு வந்து கல்லணையில் சேர்த்த தாய், முல்லைப் பெரியாறின் உரிமைக் காத்து, கழனிவாழ் உழவர்களின் கண்ணீரைத் துடைத்த தாய், இன அழிப்பு செய்த இலங்கைக்குக் குலைநடுக்கம் கொடுத்த தாய், இவ்வுலகத் தமிழர்களை இமையாகக் காக்கும் தாய், அன்றைய பிரதமர் லால்பகதூர் காலத்தில்

அன்னைத் திருநாட்டை ஆபத்து சூழ்ந்தபோது அணிந்திருந்த நகைகளை வாரி வழங்கிய வள்ளல் தாய், (மேசையைத் தட்டும் ஒலி) தேசமே பெரிதென தெளிவு மனம் கொண்ட தாய், அன்னை தெரசாவும், அமெரிக்க நாட்டு ஹிலாரியும் வாயார வாழ்த்திய தாய், திறமைகளின் குவியலாகி, திராவிடத்து அரசியலின் திசைகாட்டியான தாய், சாதிக்கு தலைவணங்குவோர் மத்தியில் நீதிக்குத் தலைவணங்கி நித்தம் நித்தம் நடக்கும் தாய், ஏங்கி நிற்கும் ஏழைகளை ஏணியாக நின்று உயர்த்தும் தாய், தன்னலத்தை மறந்து தமிழகத்தின் நலனுக்கே நாளெல்லாம் உழைக்கின்ற எங்கள் தங்கத் தாயே, அராஜகத்தை, அக்கிரமத்தை, சூழ்ந்துவரும் எதிரிகளின் பணபலத்தை சுக்கு நூறாக்கி எதிர்காலத் தமிழகத்தைப் பாதுகாப்பதற்கு உங்களால் மட்டுமே முடியும் என்று முடிவெடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) கிராமப்புறத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஏழையெளிய பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சாமானிய மக்களுக்கும், அதிலும், காட்டிலேயும் மேட்டிலேயும் வாழ்கின்றானே விவசாயி, அவனது கண்ணீரைத் துடைப்பதற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்ட காரணத்தினால், (மேசையைத் தட்டும் ஒலி) 32 ஆண்டுக் கால இடைவெளிக்குப் பிறகு வங்கக் கடலோரம் 6 அடி சந்தனப் பேழையில் உறங்கியும்– உறங்காமலும் விழித்துக்கொண்டிருக்கிறாரே எங்களது அறிவுலக மேதை, ஆருயிர் அண்ணன், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக்குப் பிறகு (மேசையைத் தட்டும் ஒலி) ஆளுகின்ற கட்சியே மீண்டும் ஆட்சியைப் பிடித்த வரலாற்றுக்குச் சொந்தக்காரர், தமிழ்த் தாயின் தலைமகள், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை 6–வது முறையாக முதல்வராக்கி அரியணையில் அமர வைத்திட்ட தாய்த் தமிழகத்தை நான் தலைகுனிந்து வணங்குகின்றேன், தலை நிமிர்ந்து வணங்குகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜாதி எல்லைகளைத் தாண்டி, மத எல்லைகளைத் தாண்டி, மொழி எல்லைகளைத் தாண்டி, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட அனைத்துத் தரப்பு மக்களும் பயனடைகின்ற வகையிலே, வரியில்லாத பட்ஜெட்டை வழங்கியிருக்கின்ற வரலாற்றின் வணக்கத்திற்குரிய எங்களின் திராவிடத் தாயை நான் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சுனாமி, தானே புயல், கொட்டித்தீர்த்த பருவ மழை போன்ற இயற்கைச் சீற்றத்தினால், அவ்வப்போது பாதிப்பிற்குள்ளாகும் எங்களின் கடலூர் மாவட்ட மக்களின் நிலைமையைக் கண்டு, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலார் பிறந்த மண்ணில், எனது மாவட்ட மக்களின் கண்ணீரைத் துடைத்து, கண்ணைக் காக்கும் இமைபோல், எம் மாவட்ட மக்களின் துன்பங்களையும், துயரங்களையும் போக்கிட கருணையே வடிவான எங்களின் கருணைத் தாயே, இந்த நிதிநிலை அறிக்கையில் நிரந்தர வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிட ரூ.140 கோடியை ஒதுக்கியதோடு, குறிப்பாக பருவ மழைக் காலங்களில் காவேரியின் டெல்டா பகுதியான எனது சிதம்பரம் தொகுதி மக்கள் காவேரியில் ஏற்படும் வெள்ளப் பெருக்கால் அடைந்துவரும் தொடர் துன்பங்களைப் போக்கிடும் வகையில் ரூ.140 கோடியில், 100 கோடி ரூபாயை வாரி வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம், தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் புனித பொற்பாதங்களுக்கு என் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியத் திருநாடும் தாய்த் தமிழகமும் வியந்து போற்றிய அரசியல் தலைவர்களை, அறிவுலக மேதைகளை, தமிழ்ச் சான்றோர்களை, தலைசிறந்த தமிழறிஞர்களை உருவாக்கிய பழமைவாய்ந்த பெருமைக்குரிய சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டம், 1929–ஐ இரத்து செய்து, இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலோடு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டம், 2013–ஐக் கொண்டு வந்ததோடு, இந்த நிதிநிலை அறிக்கையில், இப்பல்கலைக்கழகத்திற்கு ரூ.152.97 கோடியை ஒதுக்கியதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) 2013 முதல் இன்று வரை, இப்பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்திற்காக ரூ.600.87 கோடி நிதியை ஒதுக்கிய வாழும் கலைமகள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது சார்பாகவும், எனது சிதம்பரம் தொகுதி மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதற்கிணங்க எனது மாவட்டத் தலைநகரான கடலூரில்,

"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி
சின்னஞ்சிறு கைகளை நம்பி
ஒரு சரித்திரம் இருக்குது தம்பி"

என்கின்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் பாடல் வரிகளுக்கேற்ப, பிறக்கும் குழந்தைகளின் நலனைப் பாதுகாத்திட, கடலூரில் ரூ.20 கோடி செலவில் புதிய மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவு ஏற்படுத்தப்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததற்கு, எங்களின் சிங்கத் தலைவியாம் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு எனது நன்றியினைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடிமைகளாக முடக்கப்பட்டு, சமூகத்தில் அகதிகளாக ஒதுக்கப்பட்டு, வறுமையிலும், இழிவிலும், வதங்கிக் கிடக்கும் ஈழத் தமிழர்களின் நலனுக்காக, அனைத்து மனிதர்களும் சமமாகப் படைக்கப்பட்டவர்களே என்ற கோட்பாட்டின்படி இலங்கைத் தமிழர்கள் இலங்கையிலே சிங்களருக்குச் சமமாக நடத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தில், ஈழத் தமிழர்களின்மீது அடக்குமுறையையும், அநீதியையும் அனலாகக் கக்கிக் கொண்டிருக்கும் இலங்கை அரசுக்கு எதிராக வரலாற்றுச் சிறப்புமிக்க பல தீர்மானங்களை இந்த மாமன்றத்திலே நிறைவேற்றியவர்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

இலங்கையிலே அமைதி நிலவிட, நீதியின் வெளிச்சம் கிடைத்திட, தொடர்ந்து உரிமைக் குரல் எழுப்பிக் கொண்டிருக்கும் உலகத் தமிழர்களின் ஒப்பற்ற, ஒரே தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதிநிலை அறிக்கையில் அகதிகள் முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்குத் திருமண உதவித் திட்டங்கள், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் போன்ற பல்வேறு நலத் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். அவர்கள் கண்ணியத்தோடும், பாதுகாப்போடும் வாழ்வதற்கும், இலங்கைத் தமிழ் அகதிகள் நலனுக்காக ரூ.105.98 கோடி நிதியை ஒதுக்கியதோடு, ஈழத் தமிழர்களின் பாதுகாவலராக விளங்குபவர்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இலங்கையிலே

மட்டுமல்ல, நமது தாய்த் தமிழகமும் அமைதியும், நீதியும் பூத்துக் குலுங்கும் பசுஞ்சோலையாக இருக்க வேண்டும் என நித்தம் நித்தம் சிந்தித்துச் செயலாற்றும் அற்புதமான தலைவர்தான் மாண்புமிகு அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே ராஜபக்சேவினுடைய அரசு ஒரே நாளில் ஒன்றரை இலட்சம் ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்தது. இலங்கையிலே இப்படிப்பட்ட தமிழ் இனப் பேரழிவு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் முந்தைய மத்திய அரசு இலங்கைக்கு ரேடார் கொடுத்தது; வட்டியில்லாக் கடன் கொடுத்தது; சீனாவில் இருந்தும், பாகிஸ்தானில் இருந்தும், ஈரானில் இருந்தும், இஸ்ரேலில் இருந்தும் ஆயுதங்களை வாங்கி, எங்களுடைய தொப்புள் கொடி உறவுகளை, எங்களுடைய சகோதர, சகோதரிகளைக் கூண்டோடு அழித்த கொடுஞ்செயலுக்கு யார் காரணம்? தி.மு.க. அங்கம் வகித்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுதான் காரணம். அவர்களுக்குத் துணை நின்றது யார்? தோள் கொடுத்தது யார்? கூட்டணியில் அங்கம் வகித்த தி.மு.க.–தான் என்பதனை இந்தியத் துணைக் கண்டமும், ஏன் உலகத் தமிழர்களும் நன்கு அறிவார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

எனவேதான், தீய சக்திகளிடமிருந்து தமிழக மக்கள் விலகி நின்று, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத் தோள் கொடுத்து, துணை நின்ற காரணத்தால்தான் இன்றைக்குத் தொடர் வெற்றியை, ஆறாவது முறையாக தமிழக முதலமைச்சராக அரியாசனத்தில் அமர்த்தி, அகில இந்தியாவையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் விவசாயிகளுக்காக அறிவித்த திட்டங்களால் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 50,94,636 ஆகும். அவர்களுக்காக வழங்கப்பட்ட நிதி ரூ.23,214 கோடி ஆகும். 16 இலட்சம் விவசாயிகளின் நலனுக்காகத் தள்ளுபடி செய்யப்பட்ட தொகை ரூ.5,780.92 கோடி ஆகும்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற சிவனடியார்களால் போற்றிப்

பாடப்பெற்ற புண்ணியத் திருத்தலமாகவும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 1991–1996 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில், திருமணம் ஆகுமா? ஆகாதா என்று ஏங்கி நின்ற 5,000–க்கும் மேற்பட்ட ஏழைத் தாய்மார்களின் குடும்பத்தைச் சேர்ந்தோருக்கு, கெட்டி மேளம் முழங்கிட, மங்கல நாண் எடுத்துக் கொடுத்து, திருமணம் நடத்தி வைத்திட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழக வளாகத்தை உள்ளடக்கியதும், நஞ்சையும்–புஞ்சையும் கொஞ்சி விளையாடும் காவேரி ஆற்றின் கடைமடைப் பகுதியான சிதம்பரம் தொகுதியில், வரலாற்றுச் சாதனையாக 32 ஆண்டுகளுக்குப் பிறகு, ஆளுங்கட்சியைச் சேர்ந்த, ஆளுகின்ற கட்சியின் சட்டமன்ற உறுப்பினராக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடும், பேராதரவோடும் என்னைத் தேர்ந்தெடுத்த சிதம்பரம் தொகுதியில் வாழுகின்ற விவசாயிகள், தொழிலாளர்கள், கல்வியாளர்கள், சான்றோர்கள், வியாபாரிகள் என பலதரப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த அத்துணைபேரும் நீண்டநாள் கோரிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என ஆவலோடு எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள் தாயே.

எண்ணியதை, எண்ணியபடி செய்து முடிக்கும் ஆற்றல் படைத்த எங்களின் ஆற்றல் அரசியே, கீழ்க்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமாய்த் தங்களின் புனித பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி கேட்டுக்கொள்கிறேன்:

தில்லை நடராஜர் ஆனந்தத் தாண்டவம் ஆடும் ஆன்மிகத் தலமான சிதம்பரம் நகரில் மகளிருக்கென்று தனியாக ஓர் அரசு கலைக் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் நகரில் மகளிருக்கென்று தனியாக தொழிற்பயிற்சி மையம் ஒன்று அமைத்துத் தருவதோடு, சிதம்பரம் நகராட்சிக்குச் சொந்தமான நகராட்சி பயணியர் விடுதி சிதம்பரம் பேருந்து நிலையம் அருகே செயல்பட்டு வந்தது. இந்தப் பயணியர் விடுதி சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு பழுதடைந்ததால் தற்போது பயன்பாட்டில் இல்லை. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் மீண்டும் புதுப் பொலிவுடன் சிதம்பரம் நகராட்சி பயணியர் விடுதியைக் கட்டித் தர வேண்டுமாய் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பதற்கிணங்க, தமிழகத்தில் மாபெரும் கல்விப் புரட்சியைச் செய்துவரும் வாழும் கலைமகள் மாண்புமிகு அம்மா அவர்களே, எனது தொகுதியில் பழம்பெருமை வாய்ந்த அறிவுக் கோயிலான அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைமுறையில் இருந்த B.A., B.Sc., B.L. போன்ற பாடப் பிரிவுகள் சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பு நிறுத்தப்பட்டன. சிதம்பரம் நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராம மாணவ, மாணவிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, மீண்டும், B.A., B.Sc., B.L. போன்ற பாடப் பிரிவுகள் தொடங்குவதோடு, I.A.S., I.P.S. போன்ற அகில இந்திய அளவிலான தேர்வு எழுதும் மாணவ, மாணவிகளின் நலனைக் கருத்தில்கொண்டு சிறப்புப் பயிற்சி மையம் ஒன்றினை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்திய நாட்டின் இரும்பு பெண்மணி, செந்தமிழ் நாட்டின் சீர்மிகு தலைவி, மாண்புமிகு அம்மா அவர்களின் தொடரும் பொற்கால ஆட்சியில், எனது சிதம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொள்ளிடம் கரையோரத்தில் வல்லம்படுகை, பெராம்பட்டு, கீழகுண்டலபாடி, மேலகுண்டலபாடி, வேளக்குடி உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. குடகுமலையில் பிறந்து, தஞ்சையில் தவழ்ந்து கொள்ளிடத்தில் வடிகாலாய் வரும் கொள்ளிடக் கரையில் மழை மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களில் திறந்துவிடப்படும் தண்ணீரோடு, முதலைகளும் அடித்து வரப்படுகின்றன. இதனால் பழைய கொள்ளிடம் ஆற்றில். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் தங்களுடைய மற்ற தொகுதிக் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன். இன்னும் ஒரு நிமிடத்தில் தங்கள் உரையை முடியுங்கள்.*

திரு. கே.ஏ. பாண்டியன்: *என்னுடைய சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியினுடைய அனைத்து கோரிக்கைகளையும் இந்த மாமன்றத்தில் நான் பேசியதாகக் கருதி, அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

கம்பன் என்ற மானிடன் வாழ்ந்ததும்; காளிதாசன் கவிதை புனைந்ததும்; சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்; தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்; பாரினில் நல்லிசை பாண்டிய சோழர்கள் அறம் வளர்த்து, தர்மம் வளர்த்த தமிழகத்தில் ஆறாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களே, ஏழரைக் கோடி மக்களின் ஈடு இணையற்ற இமயமாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி, என்னுடைய உரையை முடித்து அமருகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

கொள்ளிடம் ஆற்றின் கரையோரத்தில் முதலைப் பண்ணை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சிதம்பரம் தொகுதிக்குட்பட்ட சாமியார்பேட்டையில் சுற்றுலா மையம் ஒன்றினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாமியார்பேட்டை, கிள்ளை, புதுகுப்பம், முடசல்ஓடை, முழுக்குதுறை, எம்.ஜி.ஆர். திட்டு போன்ற மீனவக் கிராமங்களில் மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குள் நேரடியாகச் செல்கின்ற வகையில் முகத்துவாரத்தை ஆழப்படுத்தியும், படகுகளை நிறுத்துகின்ற வகையில் தூண்டில் வளைவும் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் தொகுதிக்குட்பட்ட கொள்ளிடம் கரையோரங்களில் உள்ள கீழதிருக்கழிப்பாலை, ஜெயங்கொண்டபட்டினம், அகரநல்லூர், வேளக்குடி போன்ற கிராமங்களில் மழைக் காலங்களில் வெள்ளநீர் உட்புகாமல் தடுக்கவும் மற்றும் மேலமூங்கிலடி அருகே ஓடும் வெள்ளாற்றில் மழைக் காலங்களில் பெருக்கெடுத்து ஓடும் வெள்ளநீரால் ஏற்படும் கரை அரிப்பைத் தடுக்கும்பொருட்டும் தடுப்புச் சுவர் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் கடல் நீரோடு, குடிநீரும் கலந்து உப்பு நீராக மாறுவதைத் தடுக்கும் வகையிலும், விவசாயிகளுக்குத் தேவையான தண்ணீரைச் சேமித்து வைப்பதற்கு ஏதுவாகவும் கொள்ளிடம் ஆற்றில் வல்லம்படுகையிலும்,

வெள்ளாற்றில் பு. முட்லூரிலும் கதவணைகள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் நகரில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தையும், சிதம்பரம் இரயில்வே பீடர் ரோட்டில் புதிதாகக் கட்டப்படவிருக்கும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதி, ஹோட்டல் கட்டும் பணிகளையும் விரைவில் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடலூர் மாவட்ட எல்லை முடிவடையும் இடத்திலும், நாகை மாவட்ட எல்லை ஆரம்பமாகும் இடத்திலும் அமைந்துள்ள கொள்ளிடம் கரையோரத்தில் அமைந்துள்ள வல்லம்படுகை கிராமத்தில் படகுக் குழாம் மற்றும் சிறுவர் பூங்கா அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிதம்பரம் நகரில் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் அருகே அமைந்துள்ள பழுதடைந்த காவலர் குடியிருப்புகளை அகற்றிவிட்டு, புதுப்பொலிவுடன்கூடிய அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட பரங்கிபேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலத்திற்குப் புதிய அலுவலகம் கட்டித் தர வேண்டும்.

அருள்மிகு நடராஜர் ஆலயம் அமைந்துள்ள சிதம்பரம் நகரின் நான்கு வீதிகளிலும் இரவைப் பகலாக்கும் சோடியம் விளக்குகளை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. லோகநாதன் அவர்கள்.

முற்பகல் 11—55

***திரு. கோ. லோகநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கழகத்தின் இதயம், தமிழகத்தின் இமயம், தமிழும், தமிழரும், தமிழ் நிலமும் தலை நிமிர்ந்திட தன்னையே அர்ப்பணித்த தியாக தீபம் நம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) வீரமும், விவேகமும் ஒருசேரப்பெற்ற வெற்றித் தலைவி நம் அம்மா. சாதனைகளைச் சரித்திரமாக்கி வரும் எங்கள் சத்தியத் தலைவி மாண்புமிகு அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) திராவிடப் பெருங்கடலில் நிலை தவறி மூழ்கி இருந்த கழகக் கப்பலையும்,

அதில் பயணித்த தொண்டர்களையும் காப்பாற்றி, கரை சேர்த்த கடமைமிக்க காவியத் தலைவி நம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அரசியலை, ஆட்சியை, அதிகாரத்தை வெறும் வாய்ச்சவடால்மூலம் மட்டும் வளைத்துப் போட்டிருந்த ஒரு கூட்டத்தின் முகமூடியைக் கிழித்து தெருவுக்குக் கொண்டுவந்து புலம்ப வைத்தவர் புரட்சித் தலைவி நம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய மண்ணிற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகத் தமிழகம் அனைத்துத் துறைகளிலும் தன்னிறைவு அடைந்திட அயராது உழைக்கும் ஆற்றல்மிகு தலைவி நம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அலைமகளும், கலைமகளும், மலைமகளும் ஓர் உருவாய் வந்த நம் தெய்வத் திருமகள் அம்மா. நாடும், மக்களுமே உயிர் மூச்சென வாழும் எங்கள் திருவருள் தெய்வம் அம்மா. கண்ணை இமை காப்பதுபோல் கழகத்தையும், கழகத் தொண்டர்களையும் காத்து நிற்கும் நம் காவல் தெய்வம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் நித்தம், நித்தம் வணங்கும் கழகக் காவல் தெய்வம் ஏழைகளின் குல தெய்வம், வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எத்தனையோ மாமனிதர்கள், சான்றோர்கள் அலங்கரித்த இந்தப் பேரவையில் சாதாரண விவசாயக் குடும்பத்தில், தமிழகத்தின் கடைகோடியில் இருக்கின்ற செஞ்சி கிராமத்தில், என் தந்தை கோவிந்தசாமி, என் தாயார் கோவிந்தம்மாளுக்கு முதல் மகனாகப் பிறந்த, முன்னாள் இராணுவ வீரரான என்னை, கிளை மேலமைப்புப் பிரதிநிதியாகவும், கிளை கழகச் செயலாளராகவும், ஒன்றியக் குழு உறுப்பினராகவும், ஒன்றியக் குழுத் தலைவராகவும், ஒன்றிய மாவட்ட பிரதிநிதியாகவும் பதவிகள் தந்து, இப்போது மாண்புமிகு அம்மா அவர்களின் அருட்பார்வையால் 2016–ல் சட்டமன்றத் தேர்தலிலே கீழ்வைத்திணான்குப்பம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக நிறுத்தி, வரம் தந்து, வெற்றி பெறச் செய்து, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தப் பேரவையில் உறுப்பினராகக் கால்பதிக்க வாய்ப்பு வழங்கிய இதய தெய்வம் எங்களின் குல தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நானும், என் குடும்பத்தினரும், என் சந்ததியினரும் உயிருள்ளவரை விசுவாசமாக இருப்போம் எனக் கூறி கோடானுகோடி நன்றி மலர்களைச் சமர்ப்பித்து வணங்குகிறேன் தாயே. என்னைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து இப்பேரவைக்கு அனுப்பிய கீழ்வைத்திணான்குப்பம்

சட்டமன்றத் தொகுதி கழக முன்னோடிகளுக்கும், கூட்டணிக் கட்சிகளுக்கும், தொகுதி மக்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலவின் ஒளி வெள்ளத்தை மேகங்கள் நிரந்தரமாக மறைத்திட முடியாது. கரைபுரண்டோடும் வெள்ளத்தைக் கைகளால் தடுத்திட முடியாது. சிறு நரிக் கூட்டம், சினம் கொண்ட சிங்கத்தின் முன் நிற்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12—00

ஒரு நூறு பகைவர்கள் கூட்டம் எதிர் நின்றாலும், தன்னந்தனியாக அதை எதிர்கொண்டு, சிங்கம் எனச் சிலிர்த்தெழுந்து சிதறடிக்கும் ஆற்றல் பெற்றவர் நம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

மக்களுக்காக தவ வாழ்வு வாழ்ந்துவரும் எங்கள் அன்னையின் அரசாட்சி வழங்கியுள்ள இந்த பட்ஜெட், ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றும். தமிழ் மாநிலத்தை இந்தியப் பேரரசின் முன்னோடி மாநிலமாகத் தொடர்ந்து தக்க வைக்கும். உலக அரசியல் அரங்கிலும் எங்கள் இதய தெய்வம், கழகக் காவல் தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் புகழ் நின்று நிலைத்திருக்கும்.

சாதிக்கப் பிறந்தவர், சரித்திரம் படைத்தவர் எங்கள் அம்மா. "சரியான வாய்ப்புகள் வழங்கப்பட்டால் பெண்கள் ஆண்களுக்குச் சமமாக அல்ல, ஆண்களை விடவும் ஒரு படி கூடுதலாகவே சாதிப்பார்கள்" என்ற தந்தைப் பெரியாரின் கருத்துப்படி எண்ணற்ற பல சாதனைகளை, எவரும் எண்ணிப் பார்த்திராத மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வெற்றி கண்டவர் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

அமெரிக்காவின் ஹிலாரி கிளிண்டன் தேடி வந்து பாராட்டிய பெருமைக்குரியவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா, உலகமே கருணைத் தாய் எனப் போற்றும் அன்னை தெரசா, எங்கள் அம்மா அவர்களுக்குப் புகழ் மகுடம் சூட்டிய வரலாறு உலகறியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகம் வணங்கும் தாயே, எங்களை தலைநிமிரச் செய்த தமிழ்த் தாயே, ஏழைகள் நெஞ்சில் நிரந்தரமாகக் குடியிருக்கும் எங்கள் குலசாமியே,

பாமர மக்களின் பசிப்பிணி தீர்த்த பரம்பொருளே, நாங்கள் நித்தம், நித்தம் வணங்கும் எங்கள் குடும்ப தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேளாண்மைத் துறை மற்றும் கால்நடைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது இன்று நடைபெறும் விவாதத்தில் பங்கேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பளித்த கழகக் காவல் தெய்வம், ஒன்றரைக் கோடி கழகத் தொண்டர்களின் குடும்ப தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டின் முதுகெலும்பாக விளங்குவது விவசாயம். "விவசாயி சேற்றிலே கால் வைத்தால்தான் நாம் சோற்றிலே கை வைக்க முடியும்" என்பதற்கேற்றாற்போல், மாண்புமிகு அம்மா அவர்கள் விவசாயிகளின் துயர் துடைக்கின்ற வகையில் சிறு, குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய குறுகிய கால பயிர்க் கடன்கள், நடுத்தரக் கால மற்றும் நீண்ட கால விவசாயக் கடன் மற்றும் வட்டி உள்ளிட்ட மொத்த தொகை ரூ.5,780.92 கோடி தள்ளுபடி செய்ததன்மூலம் 16,94,145 விவசாயிகள் பயன் பெற்றுள்ளார்கள். மேலும், 2016–2017 ஆம் ஆண்டில் கூட்டுறவு வங்கிகள்மூலம் மீண்டும் விவசாயப் பெருமக்களுக்கு ரூ.6,000 கோடி புதிய பயிர்க் கடன்கள் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, விவசாயிகளின் துயர் துடைத்துள்ளார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், தாலிக்கு நான்கு கிராம் தங்கம் வழங்கப்பட்டு வந்ததை 1 சவரன் (8 கிராம்) தங்கமாக உயர்த்தியும், இத்திட்டத்திற்கு ரூ. 703.16 கோடி நிதி ஒதுக்கியும், 1.99 இலட்சம் குடும்பங்களுக்கு 100 யூனிட் வரை கட்டணமில்லா மின்சாரம், கைத்தறி நெசவாளர்களுக்கு 200 யூனிட் வரை கட்டணமில்லா மின்சாரம், விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் வரை கட்டணமில்லா மின்சாரம் என அறிவித்ததோடு, மேலும் 500 டாஸ்மாக் கடைகளை மூடியும், டாஸ்மாக் கடைகளின் நேரம் குறைத்தும் அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்விலும் ஒளியேற்றியவர் நம் மாண்புமிகு அம்மா அவர்கள்.

வேளாண்மைத் துறையின் நவீன தொழில்நுட்பங்களைக் கூடுதல் முனைப்புடன் கொண்டு செல்ல, 2016–2017 ஆம் ஆண்டில் 27.50 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் திருந்திய நெல் சாகுபடி முறையும், 43,688 ஏக்கர் நிலப்பரப்பில் நீடித்த நவீன கரும்புச் சாகுபடி முறையும் விரிவாக்கம் செய்யப்பட்டு, பருத்தி மற்றும் காய்கறிச் சாகுபடியில் துல்லியப் பண்ணைய முறையை ஊக்குவித்த ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–05

பயறு உற்பத்தியில் 9.80 இலட்சம் மெட்ரிக் டன் அளவை அடையும் நோக்கத்துடன், 27.50 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயறு சாகுபடி மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு திட்டமிட்டுள்ளது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

நுண்ணீர்ப் பாசனத்திற்கு மானியம் வழங்கும் கொள்கை தொடர்ந்து 2016–2017 ஆம் ஆண்டில் வேளாண் பயிர்கள் பயிரிடப்படவுள்ள 28,540 ஏக்கர் பரப்பிலும், தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடப்படவுள்ள 86,707 ஏக்கர் பரப்பிலும் நுண்ணீர்ப் பாசன முறை 319 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் இந்தப் பேரவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் விவசாயிகளுக்குப் பாதுகாப்பையும், பேராதரவையும் அளித்து வருகிறது. 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து 2015–2016 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் 3,039 கோடி ரூபாய், 37.667 இலட்சம் பயனாளிகளுக்கு நிதியுதவியாக இத்திட்டத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அளித்துள்ளது. இத்திட்டத்திற்காக 206 கோடி ரூபாயும், வருவாய்த் துறைக்காக மொத்தம் 5,686 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து விவசாய மக்களினுடைய பாதுகாவலராக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்குகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பண்ணை இயந்திரமயமாக்கல் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு அதிகபட்சமாக 50 சதவிகித மானியத்தில் பண்ணை இயந்திரங்கள்

வழங்கிடவும், கிராமப்புற இளைஞர்களுக்கு 40 சதவிகித மானியத்தில் வேளாண் இயந்திரங்களை வழங்கி அவற்றை வாடகைக்கு வழங்கும் மையங்களை அமைக்கும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்திடவும் இதுவரை 20.99 கோடி ரூபாய் செலவில் வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் 212 மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இந்த நிதியாண்டில் 32.45 கோடி ரூபாய் செலவில் 324 மையங்கள் அமைக்க பண்ணை இயந்திரமயமாக்கல் திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். அடுத்த ஐந்தாண்டுகளில் காய்கறிகள் மற்றும் பழங்களுக்கான சாகுபடிப் பரப்பு தற்போதுள்ள 13.85 இலட்சம் ஏக்கரிலிருந்து 16 இலட்சம் ஏக்கராக அதிகரிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

வேளாண் சந்தைகளை மேம்படுத்தி தேசிய அளவில் விளைபொருட்களுக்கான சந்தைகளுடன் ஒருங்கிணைக்கும்வகையில், வேளாண் பொருட்களுக்கான சந்தைகளின் செயல்திறனை மேம்படுத்த, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம், 1987–ல் தேவையான திருத்தங்கள் கொண்டுவரப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்து, விவசாய மற்றும் வியாபாரப் பெருமக்களின் வாழ்வில் விளக்கேற்றியுள்ளார்கள்.

இயற்கைச் சீற்றங்களால் விவசாயத்தில் ஏற்படும் இழப்புகளிலிருந்தும், அதனால் ஏற்படும் நிச்சயமற்ற தன்மையிலிருந்தும் விவசாயிகளைப் பாதுகாக்க, பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டம் என்ற புதிய மேம்படுத்தப்பட்ட பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தும். 2016–2017 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்கு 239.51 கோடி ரூபாய் மாநில அரசின் பங்காக ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விவசாயிகளினுடைய துயரைத் துடைத்துள்ளார்கள்.

நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் வேளாண் துறையின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்துள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த துறைகளின் மேம்பாட்டை மாநிலத்தின் வளர்ச்சிக்கான சிறப்பு நோக்கு பெரும் திட்டங்களுள் ஒன்றாகச் செயல்படுத்த

முடிவு செய்துள்ளது. உற்பத்தியைப் பெருக்கி பண்ணை அளவிலான உற்பத்தித் திறனை அதிகரித்து, விவசாயிகளின் வருவாயினை உயர்த்தி, நீடித்த, நிலையான வேளாண் வளர்ச்சியை ஏற்படுத்துவதே இந்தச் சிறப்பு நோக்கு பெரும் திட்டத்தின் நோக்கமாகும். 2016–2017 ஆம் ஆண்டிற்கான உணவு தானிய உற்பத்தி இலக்கை 147 இலட்சம் மெட்ரிக் டன்னாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நிர்ணயித்துள்ளது. இந்த இலக்கை அடைவதற்காக தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் போன்ற முக்கியத் திட்டங்கள் வாயிலாகத் தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் தொலைநோக்குத் திட்டம் 2023 மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இலட்சியம் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–10

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நேற்றைய நாளில், டெல்டா விவசாயிகள் எந்தவித பாதிப்புக்கும் உள்ளாகக் கூடாது என இந்த மாத இறுதிக்குள் சம்பா பயிருக்குத் தேவையான தண்ணீர் மேட்டூர் அணையில் கிடைக்கப்பெறவில்லையெனில், நேரடி நெல் விதைப்புமூலம் சம்பா சாகுபடி மேற்கொள்வதற்கு. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்கள் உரையை இரண்டே நிமிடங்களில் முடியுங்கள்.

திரு. கோ. லோகநாதன்: ஒரு தொகுப்புத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவித்துள்ளார்கள். சம்பா நேரடி நெல் சாகுடி மேற்கொள்ள 64 கோடியே 30 இலட்சம் ரூபாய் மானியம் வழங்க ஆணையிட்டு, டெல்டா விவசாயிகளைக் காப்பாற்றிய ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் தெரிவித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதங்களில் பணிவான எனது நன்றியினைச் சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தொகுதிக் கோரிக்கைகள் இருந்தால் அதை எழுதிக் கொடுத்துவிடுங்கள், பதிவு செய்துகொள்ளலாம்.

திரு. கோ. லோகநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக முக்கியக் கோரிக்கைகளைத் தங்கள் முன்வைத்து, மீதமுள்ள கோரிக்கைகளை பேரவைக் குறிப்பில் பதிய வைக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்வைத்தினான்குப்பம் சட்டமன்றத் தொகுதி கிராம ஊராட்சிகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதி என்பதாலும், கீழ்வைத்தினான்குப்பம் சட்டமன்றத் தொகுதி ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்ற ஒரு தொகுதியாக இருக்கின்ற காரணத்தினாலும், மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாகவும், நீண்டநாள் கனவாகவும் இருந்துவருகின்ற அரசு கலைக் கல்லூரியினை அமைத்துத் தர மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

கீழ்வைத்தினான்குப்பம் சட்டமன்றத் தொகுதியில், கீழ்வைத்தினான்குப்பத்திற்கும் இலத்தேரிக்கும் இடைப்பட்ட 10 கிலோ மீட்டர் தூரத்தில் வடுகந்தாங்கல் ஊராட்சி அமைந்துள்ளது. இப்பகுதி சுற்றுப்புற கிராம மக்கள் அதிகமாக வந்து செல்கின்ற மையமாக உள்ளதால், அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையான பேருந்து நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

கீழ்வைத்தினான்குப்பம் சட்டமன்றத் தொகுதி 73 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய தொகுதியாகும். இத்தொகுதியில் தேர்வு நிலை பேரூராட்சி எதுவும் இல்லை. கீழ்வைத்தினான்குப்பம் ஊராட்சி, வடுகந்தாங்கல் ஊராட்சி, இலத்தேரி ஊராட்சிகளை தேர்வுநிலை பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்தித் தர 'தாயிற் சிறந்த கோயிலும் இல்லை' என்ற பழமொழிக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு பொற்பாதங்களைப் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

கீழ்வைத்தினான்குப்பம் சட்டமன்றத் தொகுதியில் இலத்தேரி–அன்னங்குடி கிராமத்திற்கு இடையே இரயில்வே கேட் அமைந்துள்ளது. மக்களின் தினசரி போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளது. பொதுமக்களின் நலன் கருதி இரயில்வே மேம்பாலம் அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குப் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

கீழ்வைத்தினான்குப்பம் சட்டமன்றத் தொகுதியில், அக்ராவரம் ஊராட்சி, தட்டப்பாறை ஊராட்சி, மீனூர் கிராமத்தில் சிறப்பு வாய்ந்த, மிகவும் பிரசித்திப்பெற்ற அருள்மிகு வெங்கடேச பெருமாள் திருக்கோயில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் அதிக அளவில் வந்து போகும் இத்திருக்கோயிலின் வழியில் கௌண்டன்ய மகாநதி இருப்பதால் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளதால், நதியின் குறுக்கே தரைப்பாலம் ஒன்றை அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களின் மலர் பாதங்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்வைத்தினான்குப்பம் சட்டமன்றத் தொகுதியில் கவசம்பட்டு அருகே பாலாறு இரண்டாகக் பிரிகிறது. பிரிந்த ஆறு, கொட்டாறு (மலட்டாறு) திரும்பவும் திருமணியில் பாலாற்றில் இணைந்துவிடுகிறது. பாலாற்றில் தண்ணீர் அதிகம் வரும்பொழுது கொட்டாற்றில் வருவது இல்லை. விவசாயிகளின் நலன் கருதி கவசம்பட்டு அருகே 300 மீட்டர் தரை தடுப்புச்சுவர் அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மற்ற கோரிக்கைகளையெல்லாம் கொடுங்கள், எல்லாவற்றையும் பதிவு செய்துகொள்ளலாம். நன்றி சொல்லி உரையை முடியுங்கள். அனைத்துக் கோரிக்கைகளும் பதிவு செய்யப்படும். இப்போது நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

பிற்பகல் 12–15

திரு. கோ. லோகநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களை அரசியலிலிருந்து அழிக்க நினைத்தவர்கள், அழிந்து போனார்கள். வீழ்த்த எண்ணியவர்கள் வீழந்து கிடக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்த்தும் மனங்கள் உள்ள மட்டும் வாகை சூடுவார் நம் வெற்றித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். விண்ணும், முகிலும், வெண்ணிலவும், இந்த மண்ணும், கடலும் மற்றும் மனித இனமும் இங்கு உள்ளளவும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் புகழ் நின்று நிலைத்திருக்கும். அது என்றும் ஓங்கி ஒலித்து நிற்கும் என்று கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) வரும் உள்ளாட்சியிலும்

அம்மா அவர்கள் ஆட்சிதான் என்று கூறி, மாண்புமிகு அம்மா அவர்களின் திருப்பாதங்களில் பணிந்து எனது நெஞ்சார்ந்த கோடானுகோடி நன்றிகளைக் கூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

கீழ்வைத்திணான்குப்பத்தில் அதிநவீன தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்வைத்திணான்குப்பத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்வைத்திணான்குப்பம் தொகுதி, காங்குப்பம் ஊராட்சி, சிவன் கோயில் உள்ள மகாதேவ மலையைச் சுற்றுலாத் தலமாக அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்வைத்திணான்குப்பம், கொத்தகுப்பம் மற்றும் பட்டு ஊராட்சிக்கும் அகரம்சேரி ஊராட்சிக்கும் இடையே செல்லும் பாலாற்றில் தரைப்பாலம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடியாத்தம் தாலுகா, மேல்கொல்லப்பல்லி கொட்டாறு அருகிலுள்ள தனகொண்டபல்லி இடையே தடுப்புச் சுவர் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்வைத்திணான்குப்பம், பனமடங்கி—ஓடைக்கானாறில் செஞ்சி கங்கையம்மன் கோயில் அருகே தடுப்புச் சுவர் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்வைத்திணான்குப்பம், பள்ளத்தூர் அருகே அனுப்புக் குட்டையின் கரையை உயர்த்தி, தடுப்புச் சுவர் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்வைத்திணான்குப்பம், ஆயக்குளம் அருகே சிறு பாலம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.*

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பேரவைத் துணைத் தலைவர் என்று சொல்லுங்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று கால்நடைத் துறை மற்றும் வேளாண்மைத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தில் பேசிட எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக நான் ஓர் இளம் அரசியல்வாதி. சட்டமன்ற உறுப்பினராக அரசியல் களத்துக்கு வந்தபோது, அதிகமாகப் படிக்க வேண்டும், அதிக புள்ளி விவரங்களைத் தொகுக்க வேண்டும், அதிகமாக இங்கு வந்து பேச வேண்டும் என்ற ஆவலில் நான் வந்தேன். ஒன்றும் பாதிப்பில்லை. இருந்தாலும் சிலர் இந்த மாண்புமிகு சட்டமன்றத்தை சண்டை மன்றமாக மாற்றுகின்ற காரணத்தினால், என்னைப் போன்றவர்களுக்கான வாய்ப்புகள் அதிக அளவில் குறைந்து போய்விடுகின்றன. ஒவ்வொரு நாளும் அதிக அளவில் சிந்தித்து, பேசிட வேண்டும் என்று வருகை தரும்போது, சண்டைபோடக்கூடிய சில உறுப்பினர்களின் செயல்பாடு காரணமாக, என்னைப் போன்ற பலர், ஏனெனில் நான் மட்டுமல்ல, என்னைப் போன்ற பல உறுப்பினர்களின் வாய்ப்புகள் குறைந்து போகிறதென்ற ஏக்கம் பல நேரங்களில் ஏற்படுகிறது. இந்தச் சரியான நேரத்தில், எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு வந்தது மட்டுமல்ல, இடம் காலியாக இருக்கின்ற காரணத்தினாலே, நேரமும் ஓரளவிற்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. இந்த மானியக் கோரிக்கைகளின்மீது மட்டுமல்ல, பல்வேறு துறைகளைச் சார்ந்த மானியக் கோரிக்கைகளின்மீது பேசாத சில விஷயங்களைக்கூட பேசலாம் என்று வந்திருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரிய மனதோடு என்மீது அக்கறையும் ஆர்வமும் காட்டினால், பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும் என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக கல்லூரிக் காலங்களில்கூட நான் பேராசிரியர்கள்மீது மிகுந்த மரியாதை காட்டக்கூடியவன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், பெரிய மனம் இருக்கிறது. ஆனால் நேரம்தான் அதிகமாக இல்லை. Subject–ல் பேசுங்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவேகூட எனக்கு ஆறுதலாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் ஈடுபடும் சிறப்பான துறைகளாக இந்த வேளாண்மைத் துறையும், கால்நடைத் துறையும் இருக்கின்றன என்பதை நினைத்துப் பார்க்கின்றபோது, இந்தத் துறைகள் நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் துறைகளாகத் தொடர்ந்து வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்ற என்னுடைய எண்ணத்தையும் ஆவலையும் இங்கே நான் பதிவு செய்கின்றேன். தமிழ்நாட்டில் இரண்டாவது பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் எடுத்துவரும் தொலைநோக்குச் செயல்பாடுகள் தமிழகத்தைப் பசுமைப் புரட்சியில் முன்னோடி மாநிலமாக உயர்த்தி வருகிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த 5 ஆண்டுகளில் உணவு தானிய உற்பத்தியில் உயரிய சாதனைகளைப் படைத்ததற்காக, மத்திய அரசிடம் 3 முறை தமிழ்நாடு அரசு மட்டும்தான் 'Krishi Karman' விருதினைப் பெற்றிருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நினைத்துப் பார்க்கின்றபோது, இதற்குக் காரணமாக இருந்த நமது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களை எத்தனை முறைப் பாராட்டினாலும் அது தகும் என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவின் விவசாயத் துறையைப் பற்றி அதிகக் கட்டுரைகளை எழுதி, விவசாயத் துறை சம்பந்தமான பல்வேறு செய்திகளை நாட்டிற்குப் பகிர்ந்து கொண்டிருக்கக்கூடிய Agriculture Today என்ற முன்னணி விவசாயப் பத்திரிகை 2013 ஆம் ஆண்டிற்கான 'மாநில வேளாண்மைத் தலைமை விருது' மற்றும் 2015 ஆம் ஆண்டிற்கான 'உணவு உற்பத்தித் திட்டத் தலைமை விருது' ஆகிய இரண்டையும் தமிழ்நாட்டிற்குத்தான் தந்திருக்கிறது என்பதை நினைக்கின்றபோது, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், பசுமைப் புரட்சியிலும், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய விவசாயிகள் மற்றும் விவசாயத்தைச் சார்ந்த தொழிலில் ஈடுபடக்கூடியவர்கள் நலன்களின்மீதும் எந்த அளவிற்கு அக்கறை வைத்துத் திட்டங்களைத் தீட்டுகிறார்கள் என்பதை உணர முடிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமல்ல. புகழ்பெற்ற

India Today பத்திரிகையும் தமிழகத்திற்கு விருது கொடுத்திருக்கிறது. India Today பத்திரிகை என்பது, எந்தத் துறையைப் பற்றி ஆய்வு செய்தாலும், அந்தத் துறைகளைப் பற்றி ஒரு பரந்த விரிந்த கண்ணோட்டத்தோடு, அதிக அளவில் ஆய்வாளர்களை இறக்கி, இறுதியாகத்தான் அந்தப் பத்திரிகையில் வெளியிடுவார்கள். அந்தப் பத்திரிகையில் பாராட்டு பெறுவது என்பது சாதாரண விஷயம் அல்ல. India Today பத்திரிகை, வேளாண்மைத் துறையில் சிறந்த, பெரிய மாநிலத்திற்கான விருதை நம்முடைய தமிழ்நாட்டிற்குத்தான் தந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இவை யாவும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பணிகளுக்கு மகுடங்களாக அமைந்திருக்கின்றன.

பிற்பகல் 12–20

நவீன இயந்திரங்களைக் கொண்டு உற்பத்திப் பெருக்கம், பாசனப் பகுதிகளின் பரப்பளவு பெருக்கம் போன்ற சிறப்பான முயற்சிகளையெல்லாம் எண்ணிப் பார்க்கின்றபொழுது, விவசாயத் துறை அழிந்துவிடும் என்று பலர் சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய நிலையிலே, வேறு எந்த மாநிலத்தில் அது அழிந்தாலும், தமிழ்நாட்டிலே விவசாயம் அழியாது; அது மேலும், மேலும் வளரும் என்ற நம்பிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் நமக்கு ஊட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்நிலையிலே ஒரு முக்கியமான கோரிக்கையை இங்கே நான் முன்வைக்க விரும்புகின்றேன். நமது வருங்காலத் தலைமுறையினரின் ஆரோக்கியத்தையும், நிகழ்கால சமுதாயத்தின் ஆரோக்கியத்தையும் பாதுகாக்கும் ஒரு பெரும் சமூகக் கடமை நம் அத்தனைப் பேருக்கும் உண்டு. அதாவது, இரசாயன உரங்களுடைய தாக்கத்தைக் கட்டுப்படுத்துவது காலத்தின் தேவையாக இருந்து கொண்டிருக்கிறது. இது உலகம் முழுக்க மிகப் பெரிய சமூகப் பிரச்சினையாக மாறிக்கொண்டிருக்கிறது. அதிகமான இரசாயன உரங்கள்மூலம் உடல்நலம் பாதிக்கப்படுவதோடு, சுற்றுச்சூழலும், நிலமும் அதைச் சார்ந்த பல்லுயிரினங்களும் பாதிக்கப்படக்கூடிய அபாயம் பெருகிக்கொண்டே இருக்கின்றது.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், எந்த ஒரு துறையைப் பற்றிச் சிந்தித்தாலும் அதிலே கனிவைக் காட்டுகிறார்கள்; மனிதநேயத்தைக் காட்டுகிறார்கள்; பரந்து விரிந்த பார்வையோடு அதைப் பற்றி ஆய்வு செய்கிறார்கள். அப்படிப்பட்ட

சிறந்த முதலமைச்சர் அவர்களை நாம் பெற்றிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற வகையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு எதிர்காலத்திலே இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்து, இயற்கை உரங்களின் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகளின் சார்பிலும், நானும் சுற்றுச்சூழல் ஆர்வலர் என்ற அடிப்படையிலும், காலஞ்சென்ற ஐயா, நம்மாழ்வார் அவர்களோடு நிறைந்த காலத்திலே பணியாற்றியதன் அடிப்படையிலும், இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

மக்களுடைய நலனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்படக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு இன்னொரு கோரிக்கையையும் வைக்க விரும்புகின்றேன். என்னவென்று சொன்னால், தமிழ்நாட்டுக்குச் சிறப்புச் சேர்க்கும் பலவற்றிலே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நாகை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, வேளாண்மைத் துறையில் முதன்மை இடம் பெற்று இன்றைக்கு எத்தனை விருதுகள், எத்தனை பரிசுகள் பெற்றிருக்கிறது என்ற விவரத்தைச் சொன்னதற்காக அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேளாண்மையில் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி, விவசாயத் துறையில் தமிழ்நாட்டை முன்னிலைப்படுத்துவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்துத் திட்டங்களையும் வகுத்து, செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்த விஷயத்தில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது என்பதை இந்த அவையிலே நான் பதிவுசெய்வது மட்டுமல்ல, அதில் மேலும் கூடுதலாகக் கவனம் செலுத்தி இந்திய அளவிலே சாதனை படைப்பதற்கான முன்முயற்சிகளைத் தொடங்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த நேரத்திலே நான் வலியுறுத்த விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறையிலே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பல புதுமைகளையும், பல சிறப்புத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்கள். அது நமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. அதனுடைய விளைவாக, தேசிய அளவிலே தமிழ்நாடு கோழியின எண்ணிக்கையிலே இரண்டாவது இடத்திலும், செம்மறியாட்டின எண்ணிக்கையிலே நான்காவது இடத்திலும், வெள்ளாட்டின எண்ணிக்கையிலே ஏழாவது இடத்திலும், பசுவின எண்ணிக்கையிலே பதின்மூன்றாவது இடத்திலும், எருமையின எண்ணிக்கையிலே பதினாறாவது இடத்திலும் இடம் பெற்றிருப்பது நம் அத்தனை பேருக்கும் மகிழ்ச்சித்தரக்கூடியது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நேரத்திலே மிக முக்கியமான விஷயத்தை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனக்கு அருகிலே காங்கேயத்திலிருந்து ஓர் அரசியல் காளை வந்திருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். அந்தக் காளை இதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்பொழுது, காலை நேரத்திலே காளையைப் பற்றி எனக்கு நினைவூட்டினார். அது காங்கேயம் காளை சம்பந்தப்பட்டது. காங்கேயம் காளை தமிழ்நாட்டினுடைய சிறப்பான அடையாளங்களிலே ஒன்று. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசாங்கம் எதிர்காலத்திலே இந்தக் காளைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு கூடுதலான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12—25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று அன்றாட உணவு வகைகளிலே கோழி மிக முக்கியமான இடம்

பிடித்திருக்கிறது. கோழி சாப்பிடாதவர்களே இல்லை என்ற நிலை பரவலாக இருந்து கொண்டிருக்கிறது. பல உறுப்பினர்களின் முகங்களிலே பெரிய புன்சிரிப்பை நான் பார்க்கின்றேன். அந்த அளவிற்கு கோழி அன்றாட உணவுகளில் இடம் பிடித்திருப்பதை நான் உணர்கிறேன். ஆனால் பிராய்லர் கோழி சம்பந்தமாக, சமூக இணையதளங்களிலும், பத்திரிகைகளிலும் பல்வேறு கட்டுரைகள் வெளிவருவதைப் பார்க்கின்றபோது, அதைப் படிக்கின்றபோது, ஓர் அச்ச உணர்வு ஏற்படுகிறது. என்னவென்று சொன்னால், பிராய்லர் கோழி உணவைத் தொடர்ந்து சாப்பிட்டால், பல்வேறு நோய்கள் வருகின்றன. எனவே, அதைக் குறைக்க வேண்டுமென்கிற கட்டுரைகள் சமூக இணையதளங்களில் வந்துகொண்டிருக்கின்றன. நான் தாய்மார்கள், பெரியோர்கள் என பலரைச் சந்திக்கின்றபொழுது, இந்த விஷயத்தை இப்பொழுது பரவலாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இதனுடைய உண்மைத் தன்மை என்னவென்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்று சொன்னால், பத்திரிகைகளில் வருவதெல்லாம் உண்மையாகிவிட முடியாது. சமூக வலைத்தளங்களில் வருவதெல்லாம் உண்மையாகிவிட முடியாது. ஆனால், இதைப்பற்றி நாம் கூர்ந்து கவனித்து, அந்த உணவில் ஏதேனும் ஆபத்து இருக்குமேயானால், அதைச் சரி செய்து அந்த பிராய்லர் கோழி உற்பத்தியை எப்படி வளர்த்தெடுக்கலாம் என்பது பற்றி மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக நாட்டுக் கோழியின வளர்ப்பு. .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பிராய்லர் கோழி சாப்பிட்டால் ஏதோ பிரச்சினை என்று சொன்னார்கள். ஆனால், இதுவரையில் scientific–ஆக prove ஆகவில்லை. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், கிராமப்புறங்களில் நாட்டுக்கோழி பரம்பரையாக எப்படி வளர்க்கப்படுகிறதோ அதேபோல், நிறைய farm–களில் encourage செய்து, நிறைய farms கொண்டுவந்து மக்கள் கிராமப்புறங்களில் கோழி வளர்ப்பதற்கும், சாப்பிடுவதற்கும் நிறைய வழிவகைகள் செய்துள்ளார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. கூடுதலாக ஒரு கோரிக்கையை வைக்கிறேன். நீங்கள் நாட்டுக்கோழி இனத்தை அபிவிருத்தி செய்வதிலே செலுத்தக்கூடிய கவனத்திற்கு மேலும் ஆதரவு தரும் வகையிலே, எங்களுக்கெல்லாம் நாட்டுக்கோழி விருந்து போட்டால் நன்றாக இருக்கும் என்ற ஒரு கோரிக்கையை நான் வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு) இன்று வெள்ளிக்கிழமையாம்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே என்னைச் சந்தித்து, தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்கத்தின் சார்பிலே, ஒரு மனுவைக் கொடுத்து, இன்றைய மானியக் கோரிக்கையிலே அதுவெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லுங்கள் என்று தெரிவித்தார்கள். அவர்களுடைய எல்லா கோரிக்கைகளையும் இங்கே வாசிப்பதற்கு எனக்கு நேரம் தருவீர்களா என்று தெரியவில்லை. ஓரிரு விஷயங்களை இங்கே பதிவுசெய்ய விரும்புகிறேன். என்னவென்று சொன்னால், கால்நடை பராமரிப்புத் துறையில், களப் பணி நிலையங்களான கால்நடை மருத்துவக் கிளை நிலையங்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கைக்கேற்ப, அதாவது 3,000 கால்நடைகள் அல்லது 3 கி.மீ. சுற்றளவு என்ற அடிப்படையிலே சுமார் 9,000 கால்நடை மருத்துவக் கிளை நிலையங்கள் இருக்க வேண்டிய நிலையிலே, அந்த எண்ணிக்கை 875 கிளை நிலையங்களாக மட்டுமே உள்ளன. எனவே, கால்நடை மருத்துவ வசதி எட்டப்படாத கிராமங்கள் பல உள்ளன. அரசின் திட்டங்கள் ஏழையெளிய கால்நடை வளர்ப்போருக்கும் சென்றடையும் வகையிலே களப்பணி நிலையங்களினுடைய எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையைத் தந்திருக்கிறார்கள். இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன்.

கால்நடை ஆய்வாளர் பயிற்சியை Diploma Course*–ஆக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையையும் எடுத்து வைத்திருக்கிறார்கள். கிளை நிலையங்களில் மருத்துவத்திற்கான நிதி ஒதுக்கீட்டையும் அதிகரித்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள்.*

மேலும், 3,000 கால்நடை ஆய்வாளர் பதவிக்கு பதவி உயர்வு வாய்ப்பாக 164 முதுநிலை கால்நடை மருத்துவ மேற்பார்வையாளர் பணியிடங்கள் மட்டுமே உள்ளன. எனவே, அவர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்பாக, துணை இயக்குநர் அலுவலகங்கள், விடுபட்டுள்ள கால்நடை மருத்துவமனைகள் மற்றும் பன்முக மருத்துவமனைகளில் முதுநிலை கால்நடை மருத்துவ மேற்பார்வையாளர் பணியிடங்களை உருவாக்கித் தர வேண்டுமென்ற இந்தக் கோரிக்கையையும் இங்கே வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, பல மானியக் கோரிக்கைகளிலே பேசிட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் விண்ணப்பித்திருந்தேன். இங்கு நடந்த பல்வேறு சம்பவங்களின் காரணமாக எனக்கான வாய்ப்புகள் பறிபோய்விட்டன. எனவே, இந்தத் துறை சாராத சில விஷயங்களையும் இந்த நேரத்திலே அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தயவு செய்து நேரத்தைத் தாருங்கள். அடிப்படையிலே நான் ஓர் அரசியல்வாதியாக உருவாகவில்லை. நான் ஒரு பத்திரிகையாளனாக. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, ஏற்கெனவே 12 நிமிடங்கள் தாண்டிவிட்டன. மிக சுருக்கமாகச் சொல்லவும்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: பார்த்தீர்களா, பார்த்தீர்களா, இவ்வளவு பெரிய பரந்து விரிந்த அவையிலே, வெற்றிடங்களெல்லாம் இருக்கின்றபொழுது, உங்களுடைய மனது பெரிய மனதாக இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு அமைச்சர்கள் பதிலுரை ஆற்ற வேண்டும். என் மனது பெரிய மனதுதான். நேரத்தைப் பாருங்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: உங்கள் மனதும் பெரியது, இதயமும் பெரியது, உங்களுடைய எண்ணங்களும் பெரியவை என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். இதுபோன்ற தருணங்களிலாவது எங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புகளைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுது நீங்கள் பேசுங்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: அதாவது, நான் ஒரு பத்திரிகையாளன் என்ற அடிப்படையிலே பல்வேறு விஷயங்களைப் பேசுவதற்காக செய்திகளைத் தொகுத்து வைத்திருந்தேன். அதை இந்த நேரத்திலே பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். ஜனநாயகத்தினுடைய செவிகளாகவும், விழிகளாகவும் இருக்கக்கூடிய பத்திரிகையாளர்கள். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேசிய வேளாண்மை ஆணையத்தின் பரிந்துரையின்படி, 5,000 கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருத்துவமனை இருக்க வேண்டும். ஆனால், தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், 4,479 கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருத்துவமனை (மேசையைத் தட்டும் ஒலி) என்ற அளவில், கால்நடை பராமரிப்பில் முதல் மாநிலமாக வெற்றிபெற்றுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், பத்திரிகையாளர்களுடைய நலன்களைப் பேணுவதற்காக ஏராளமான புதிய திட்டங்களையெல்லாம் அறிவித்து, அவற்றையெல்லாம் செயல்படுத்திக் காட்டியிருக்கிறார்கள். பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் பெற, பணிக்கொடை உச்சவரம்பு தகுதி 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக கடந்த 2012 ஆம் ஆண்டிலே உயர்த்தித் தந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் என்பதை நான் நினைத்துப் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நானும் ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் என்னுடைய நன்றியை இங்கே பதிவு செய்கின்றேன்.

மேலும், மறைந்த பத்திரிகையாளரின் குடும்ப நலன்களைக் கருத்தில்கொண்டு, ஓய்வூதியம் பெற்று வந்த பத்திரிகையாளர்கள் மரணம் அடைந்தால், அவர்களது குடும்பத்திற்கும் அந்த ஓய்வூதியம் கிடைக்க வழி செய்து தந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், கடந்த 2011 ஆம் ஆண்டு முதல், கடந்த ஐந்து ஆண்டுகளில் மூன்று முறை பத்திரிகையாளர்கள் குடும்ப ஓய்வூதியத்தை உயர்த்தி, தற்போது 11–1–2016 முதல் அதனை 4,750 ரூபாயாக வழங்க உத்தரவிட்டு, அதைச் செயல்படுத்தி வருவதற்காகவும் எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் நான் ஏற்கெனவே சொன்னதுபோல் ஜனநாயகத்தின் விழிகளாகவும், செவிகளாகவும், பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய பத்திரிகையாளர்கள், சில கோரிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசிற்கு முன் வைக்கவேண்டும் என்று என்னிடம் தந்திருக்கிறார்கள். அவற்றை நான் இங்கே பதிவுசெய்து, விடை பெற விரும்புகின்றேன். இன்றைய வாழ்க்கை முறை, செலவினங்கள் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு, பத்திரிகையாளர்களின் ஓய்வூதியத் தொகையையும், குடும்ப ஓய்வூதியத்தையும், பணியின்போது உயிர் இழக்கும் பத்திரிகையாளர் குடும்பத்திற்கு வழங்கப்படும் நிதி உதவியையும் உயர்த்தித் தரவேண்டும். மேலும், ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் ஆகியவற்றைப் பெறுவதற்கான விதிமுறைகளைத் தளர்த்தி பத்து ஆண்டுகளுக்குமேல் செய்தி நிறுவனங்களில் பணிபுரிந்தவர்களும் பயனடையும் வண்ணம் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை இந்த நேரத்தில் நான் முன்வைக்கின்றேன்.

மேலும், வீட்டு வசதி வாரிய வீடுகளில் வாடகைக்குக் குடியிருப்பவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜூ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே

விலாவாரியாகச் சொன்னார்கள். கடந்த ஐந்தாண்டுகளில் பத்திரிகையாளர்களின் நலன்களைக் காக்கின்ற ஒரே முதலமைச்சராக மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்தார்கள் என்பதைச் சொன்னதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஐந்தாண்டுக்கால ஆட்சியில், மூன்று முறை பத்திரிகையாளர்களின் ஓய்வூதியத்தையும், ஊதியத்தையும் உயர்த்தித் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றியைச் சொன்னார்கள். இப்போது 20 ஆண்டுகள் என்றிருப்பதை 10 ஆண்டுக்காலமாக குறைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார். பத்திரிகையாளர்களின் நலன்களில் அக்கறைக் கொண்டவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு அது எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு மிகுந்த நன்றி. வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளில் 3% அளவில் பத்திரிகையாளர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. ஊடகத் துறைகளின் எண்ணிக்கை இப்போது பெருகியிருக்கிறது. பத்திரிகையாளர்கள் மற்றும் புகைப்படக் கலைஞர்களை உள்ளடக்கி, புதிதாக ஒரு வீட்டுமனைத் திட்டத்தை, பத்திரிகையாளர்களுக்கென்று அரசு ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற கோரிக்கையையும் நான் இந்த நேரத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழக பத்திரிகை புகைப்படக் கலைஞர்களுக்குத் தனியாக ஓர் அலுவலகமும், மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் சேருவதற்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். மிக முக்கியமாக, பிற மாநிலங்களில் இருப்பதுபோல ஊடகத் துறையின் நலன் காக்க அவர்களுக்குத் தனியாக நல வாரியம் தேவை என்ற கோரிக்கையை

நீண்ட காலமாக வைத்து வருகிறார்கள். எனவே, இந்த விஷயத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தாய் உள்ளத்தோடு முயிற்சிகளை எடுக்க வேண்டுமென்று இந்த அவையில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையாளர்களுடைய இந்தக் கோரிக்கைகளையெல்லாம் நீங்கள் நிறைவேற்றித் தருவீர்களேயானால், அவர்களும், அவர்களைச் சார்ந்த குடும்பங்களும், காலம் முழுவதும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டிருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு துறை மட்டுமல்ல பல்வேறு துறைகளிலே பேசுவதற்கான வாய்ப்பையும், நேரத்தையும் தந்தமைக்காக எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்து அமருகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் காங்கேயம் காளைகளின் சிறப்பை இங்கே எடுத்துச் சொன்னார். நான் அதை ஒன்றும் குறை சொல்லவில்லை. ஆனால், காளை என்று சொன்னால் அது உம்பளாச்சேரி காளைதான். தமிழ்நாட்டிலேயே தலைசிறந்த ஓர் இனமாக, தமிழக வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12—35

உம்பளாச்சேரி காளை என்பது சிறந்த அடையாளங்களைக் கொண்டது. மற்ற காளை இனத்திற்கு அதுபோன்ற அடையாளங்கள் கிடையாது. அக்காளையின் நெற்றியில் ஆல இலையைப் பதிவு செய்யப்பட்டது போன்ற அடையாளம் வெண்மை நிறத்தில் இருக்கும்; குளம்புக்கு மேலே நான்கு கால்களும் வெண்மை நிறமாக இருக்கும்; வால் வெண்மை நிறமாக இருக்கும். அப்படிப்பட்ட அடையாளங்களோடு விளங்குவதுதான் உம்பளாச்சேரி காளை. உம்பளாச்சேரி காளை எக்காளமிட்டால், அதன் எக்காளம், 1 கி.மீ. சதுர பரப்பளவிற்கு ஒலிக்கும். அப்படிப்பட்ட உம்பளாச்சேரி காளை இனம் அழிந்துவிடக்கூடாது என்பதற்காகவும், உம்பளாச்சேரி காளை இனத்தில் கலப்பினம் புகுந்துவிடக்கூடாது

என்பதற்காகவும், கொற்கை கால்நடைப் பண்ணையில் உம்பளாச்சேரி காளை இனத்தைக் காப்பாற்றுவதற்காகவே ஒரு திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்தார்கள். இதன்மூலம், உம்பளாச்சேரி காளை இனம் காப்பாற்றப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் போற்றும் தெய்வத் தாயே, பாரதம் பாராட்டும் பாசத் தாயே, சத்தியம் நீயே, தர்மத் தாயே, தெய்வ வடிவம் எங்கள் அன்னையே, தமிழகத்தின் ஒளிவிளக்கே, ஏழைகளின் உயிர் மூச்சே, விவசாயிகளின் நாடித் துடிப்பே, (மேசையைத் தட்டும் ஒலி) தரணி போற்றும் தங்கத் தலைவியே, தாயுள்ளம் கொண்ட தர்மத் தாயே, வரலாறு படைத்த வள்ளலே, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த தலைவியே, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் ஒன்றரைக் கோடி தொண்டர்களின் இதயத் துடிப்பே, ஏழரைக் கோடி தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமே, நூறாண்டு சாதனைகளை நூறு நாட்களில் நிறைவேற்றிடும் வெற்றித் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி, முல்லைப் பெரியாறு தண்ணீரைப் பெற்றுத் தந்து, விவசாயிகளின் துயர் துடைத்த தலைவியே, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக மாற்றிய காவல் தெய்வமே, எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் மனதில் நிரந்தர இடத்தைப் பிடித்து, 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று, ஆறாவது முறையாகத் தமிழ்நாடு முதலமைச்சராகப் பதவியேற்று, கடந்த 32 வருடங்களுக்குப் பிறகு, தொடர்ந்து இரண்டாவது முறையாக தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் முதலமைச்சர் என்ற மகத்தான சாதனை படைத்த சரித்திரத் தாயே. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் ஒன்றியம், ஜீ. மங்கலம் கிராமத்தில் விவசாய ஜீவனக் குடும்பத்தைச் சேர்ந்த பாப்பிரெட்டி, வெங்கட்டம்மா ஆகியோரின் மகனாய் பிறந்த என்னை, தாயன்பு காட்டி, கழகத்தின் சாதாரண தொண்டனான என்மீது தாயினும் மேலாக

பரிவுக் கொண்டு, ஓசூர் ஒன்றிய எம்.ஜி.ஆர். இளைஞரணி இணைச் செயலாளராகவும், இரண்டு முறை ஓசூர் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு கொடுத்து, 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஓசூர் நகர மன்றத் தலைவராக மக்கள் பணியாற்றிட நல்ல வாய்ப்பினைக் கொடுத்து, 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் இதுவரை தேசிய கட்சிகளின் கைகளில் இருந்து வந்த ஓசூர் தொகுதியை மீட்டு, இரட்டை இலைச் சின்னத்தை ஓசூர் தொகுதியில் வெற்றி பெறச் செய்திட வேண்டுமென்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஓசூர் தொகுதி மக்களின் நீண்டநாள் கனவை நிறைவேற்ற, முதன்முறையாகக் கழகத்தின் சார்பாகப் போட்டியிட எனக்கு வாய்ப்பளித்து, ஓய்வு இல்லாத தம் உழைப்பால் என்னை வெற்றி பெறச் செய்து, ஓசூர் சட்டமன்ற உறுப்பினராக்கியதோடு மட்டுமல்லாமல், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சராக்கி, என்னையும், என் குடும்பத்தையும் வாழ வைத்துக் கொண்டிருக்கும் எங்கள் குடும்ப விளக்கே, எங்கள் குல தெய்வமே, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என் பணிவான வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலர்கள், காய்கறிகள், பழங்கள் மற்றும் தொழிற்சாலைகள் எனத் தனியிடம் பிடித்த பெங்களூருவுக்கு இணையாக வளர்ந்து வரும் பெருமை பெற்ற ஓசூர் நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் ஓசூர் மக்களின் தேவையறிந்து ஜூஜூவாடி முதல் பேரண்டபள்ளி வரை 215 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 18.40 கிலோ மீட்டர் நீளத்திற்கு வெளி வட்டச் சாலை அமைக்கப்படுமென்று, விதி 110—ன்கீழ் அறிவித்து, மகத்தான திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) வரப்பிரசாதமாக வழங்கிய வள்ளல் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் ஓசூர் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

அவர்கள் ஆசிபெற்றவன் என்ற ஒரே காரணத்திற்காக பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்து, ஓசூர் தொகுதியில் மிகப்பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி, சட்டமன்ற உறுப்பினராக என்னை இந்தப் பேரவைக்கு அனுப்பிவைத்த ஓசூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்காகப் பாடுபட்ட கழக நிருவாகிகளுக்கும், கழகத் தொண்டர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதங்களுக்கு என் பதிலுரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிகாலத்திலிருந்தே கால்நடைகள் மக்களின் வாழ்வில் முக்கியத்துவம் வகித்து மனிதர்களுக்குத் துணையாகவும், நடமாடும் சொத்தாகவும் விளங்கிவருகின்றன. 'தன்னையே கொடுப்பதில் வாழைக்கு ஈடு, சம்சாரி வாழ்வுக்கு ஒரு பசுமாடு' என்று பாடினார் புரட்சித் தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) கால்நடை வளம் முன்னேற்றம் அடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் கால்நடை பராமரிப்புத் துறை மிகவும் சிறப்புடன் பணியாற்றி வருகிறது. கடைக்கோடியில் கவனிப்பில்லாமல் இருந்த கால்நடைத் துறையை முன்னேற்றி, 'நல்ஆளுமை விருது' பெறும் வகையில் ஏற்றம் பெறச் செய்த தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை இந்தப் பேரவையில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை வளம் பெருகினால் விவசாயிகளின் வாழ்வு வளம் பெறும். கிராமப்புற பொருளாதாரம் வளர்ச்சி பெறும். கிராமப்புற ஏழை மக்களின் வருவாய் உயரும். இதைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், நாடு விடுதலை அடைந்த பிறகு, இந்தியாவில் உள்ள 29 மாநிலங்களில் எந்த முதலமைச்சரும் செய்யாத திட்டமான விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் புரட்சித் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும். இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' (மேசையைத் தட்டும் ஒலி) என்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இலட்சியமாகும். அந்த இலட்சியத்தை நிறைவேற்றிட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் ஏராளம் ஏராளம்.

'ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றார் அறிஞர் அண்ணா. ஏழையெளிய பெண்களுக்கு விலையில்லா கறவைப் பசுக்கள், விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கி, அவர்களது வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படுத்தி, அவர்களது முகத்தில் நிரந்தரமாக சிரிப்பைத் தங்கச் செய்த ஒரே தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற ஏழை மக்களின் வாழ்வாதாரம் நிலை பெறவேண்டுமென்று விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின் வாயிலாக கடந்த ஐந்தாண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் ரூ.211.19 கோடி செலவில், 60 ஆயிரம் விலையில்லா கறவைப் பசுக்கள் 60 ஆயிரம் ஏழைப் பெண்களுக்கு வழங்கி, நாள் ஒன்றுக்கு 2.66 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்து, வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின்மூலம் 75 ஆயிரத்து 796 கன்றுகள் பிறந்துள்ளன. இதன் மதிப்பு ரூ.37.89 கோடி ஆகும். இந்தக் கறவைப் பசுக்களுக்கு காப்பீடும் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்மூலம் 6.71 இலட்சம் மெட்ரிக் டன் தொழு உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு, 1.35 இலட்சம் ஏக்கர் நிலத்திற்கு இயற்கை உரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.108.04 கோடி ஆகும். விலையில்லா கறவைப் பசுக்களுக்கு பயனாளிகள் வசிக்கும் கிராமத்திற்கே சென்று, அனைத்து சிகிச்சைகளும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் இலவசமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், கடந்த ஐந்தாண்டுகளில் விலையில்லா வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின்மூலம் 7 இலட்சம் பயனாளிகளுக்கு ரூ.905.37 கோடி மதிப்பிலான, 28 இலட்சம் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின்மூலம் 44.67 இலட்சம் குட்டிகள் பிறந்துள்ளன. அவற்றின் மதிப்பு சுமார் ரூ.1,114 கோடி ஆகும். மேற்கண்ட இரண்டு திட்டங்களின்மூலம் 40 சதவிகிதத்திற்கு அதிகமாக ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்கள் பயனடைந்துள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை 2016–2017 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்திட, 12 ஆயிரம் பயனாளிகளுக்கு 12 ஆயிரம் கறவைப் பசுக்களும், ஒரு இலட்சம் பயனாளிகளுக்கு 4 இலட்சம் செம்மறி ஆடுகளும், வெள்ளாடுகளும் வழங்கிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், விலையேற்றத்தைக் கருத்தில்கொண்டு விலையில்லா கறவைப் பசுக்கள் கொள்முதல் விலையினை ரூ.30 ஆயிரத்திலிருந்து ரூ.35 ஆயிரமாக உயர்த்திடவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் சிறுதொழில் செய்ய விரும்பும் அனைவரையும் ஊக்கப்படுத்திட வேண்டுமென்ற உயர்ந்த எண்ணத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு, கோழி இன அபிவிருத்தித் திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. தமிழகத்தில் 8 மாவட்டங்களில் கறிக்கோழி வளர்ப்புத் திட்டமும், 18 மாவட்டங்களில் நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டமும், 25 சதவிகிதம் தமிழக அரசு மானியத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் இத்திட்டங்களின்கீழ் ரூ.97.35 கோடி ஒதுக்கீட்டில், 2,362 கறிக்கோழி பண்ணைகளும், 10,358 நாட்டுக்கோழி பண்ணைகளும் நிறுவப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின்மூலம் கறிக்கோழி பண்ணைகளிலிருந்து 3.5 இலட்சம் மெட்ரிக் டன் இறைச்சியும், நாட்டுக்கோழி பண்ணைகளிலிருந்து 0.19 இலட்சம் மெட்ரிக் டன் இறைச்சியும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் மத்திய அரசின் கால்நடை பராமரிப்பு புள்ளிவிவரத்தின்படி, 24.23 இலட்சம் மெட்ரிக் டன் இறைச்சி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியில் 20.74 இலட்சம் மெட்ரிக் டன் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் இறைச்சி உற்பத்தியில் 17 சதவிகித வளர்ச்சி எய்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கறிக்கோழி பண்ணைகளிலிருந்து ரூ.140 கோடியும், நாட்டுக்கோழி பண்ணைகளிலிருந்து ரூ.289 கோடியும், ஆக மொத்தம் ரூ.429 கோடி வருவாயாகப் பெறப்பட்டு, பயனாளிகள் பயனடைந்துள்ளார்கள் என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த ஐந்தாண்டுக்கால ஆட்சியில் 6,990.59 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. ஆனால் கடந்த தி.மு.க. ஆட்சியில் 4,760.83 கோடி முட்டைகள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டன என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியது எனது கடமையாகும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், கடந்த தி.மு.க. ஆட்சியைவிட முட்டை உற்பத்தி 47 சதவிகித வளர்ச்சியை எய்தியுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்களுக்கு என்ன தேவை, எப்போது தேவை என்பதை மற்றவர்கள் சிந்திப்பதற்கு முன்பே சிந்தித்து, பல சீரிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். ‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’ என்பது பழைய தமிழ்ப் பாடல். ஒருவருக்கு உணவு கொடுத்தால், அவருக்கு உயிர் கொடுப்பதற்கு ஒப்பாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இது மனித உயிர்களுக்கு மட்டுமே அல்ல; கால்நடைகளின் பசியினைப் போக்கிட உரிய காலத்தில் அதற்கான தீவனம் கிடைக்க வழி செய்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாநில தீவன அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மட்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் 115 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியில் தீவன

அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ.36 இலட்சம் மட்டுமே என்பதை இந்தப் பேரவையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின்மூலம் 1 இலட்சத்து 62 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் பசுந்தீவன பயிர் சாகுபடி செய்யப்பட்டு, 112 இலட்சம் மெட்ரிக் டன் பசுந்தீவனம் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பதை இந்தப் பேரவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழக விவசாயிகளுக்கு 12,703 தீவன புல் நறுக்கும் மின் கருவிகளும், 10,483 மழை நீர் தெளிப்பான்களும் 75 சதவிகித மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன. மர வகை தீவனத்திற்காக 32 இலட்சம் மரக் கன்றுகளும், 20,958 அசோலா தீவன அலகுகளும், 40,000 ஊறுகாய்ப்புல் பைகளும் விலையில்லாமல் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இந்த ஆண்டும் இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு 25 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேய்க்கால் புறம்போக்கு நிலங்களில் 6.94 கோடி ரூபாய் செலவில் வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 144.5 ஏக்கர் பரப்பளவில் பசுந்தீவன உற்பத்திப் பண்ணைகள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் அந்தப் பகுதிகளிலுள்ள கால்நடைகளுக்கு பசுந்தீவனம் குறைந்த விலையில் தொடர்ந்து கிடைத்து வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சியில் 1,615 புதிய கட்டடங்கள் 422.376 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியில் 11 கோடி ரூபாய் செலவில் 118 கட்டடங்கள் மட்டுமே கட்டப்பட்டுள்ளன. மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் 78.31 கோடி ரூபாய் செலவில் 1,163 கட்டடங்களில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தி.மு.க. ஆட்சியில் கட்டடப் பராமரிப்பிற்காக வெறும் 9 கோடி ரூபாய் மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய வேளாண்மை ஆணையத்தின் பரிந்துரைப்படி 5 ஆயிரம் கால்நடைகளுக்கு ஒரு

கால்நடை மருத்துவமனை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் 4,479 கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருத்துவமனை என்ற அளவில் தமிழகம் கால்நடை பராமரிப்பில் முதல் மாநிலமாக வெற்றி நடைபோட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் 6 கால்நடை பன்முக மருத்துவமனைகள், 22 பெரு மருத்துவமனைகள், 139 கால்நடை மருத்துவமனைகள், 2,481 கால்நடை மருந்தகங்கள், 56 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் மற்றும் 875 கால்நடைக் கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் மட்டுமே 810 கால்நடைக் கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 20 கால்நடை மருந்தகங்கள் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் துவக்கப்பட்ட கால்நடைக் கிளை நிலையங்களின் எண்ணிக்கை 200 ஆகும். ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டவை வெறும் 100 மட்டுமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளுக்கான மருந்துகள் மற்றும் உபகரணங்களுக்கு நிதி ஒதுக்கீடு ரூபாய் 28.37 கோடியாக இருந்தது. ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது ரூ.32.23 கோடியாக உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் கால்நடைகளுக்குத் தரமான நவீன மருந்துகள் தட்டுப்பாடின்றி கிடைத்து வருகின்றன.

கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஆண்டொன்றுக்கு ரூபாய் 2.31 கோடி செலவில் 5,500 கால்நடை பாதுகாப்பு முகாம்கள்வீதம், கடந்த 5 ஆண்டுகளில் 27,500 கால்நடை பாதுகாப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 36.79 இலட்சம் விவசாயிகளின் 3 கோடியே 21 இலட்சம் கால்நடைகள் மற்றும் கோழியினங்கள் பயனடைந்துள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் 7.11 இலட்சம் கால்நடைகளுக்கு ரூபாய் 37 கோடியே 16 இலட்சம் செலவில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் கட்டுப்பாட்டில் 8 கால்நடைப் பண்ணைகளும், 3 ஆட்டுப் பண்ணைகளும் மற்றும் ஒரு கோழிப் பண்ணையும் செயல்பட்டு வருகின்றன. இந்தப் பண்ணைகளில் உயர் இரக மாட்டு இனங்கள்,

வெள்ளாட்டு இனங்கள், செம்மறி ஆட்டு இனங்கள் மற்றும் பன்றிகள் பராமரிக்கப்பட்டு, தேவைப்படும் விவசாயிகளுக்குத் தொடர்ந்து வழங்குவதற்கு வசதியாக இன விருத்திக்கு ஒரு கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் உயர் இரக கால்நடைகள் கொள்முதல் செய்யப்பட்டு, பண்ணைகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதற்காக 13 நவீன கால்நடைக் கொட்டகைகள் ரூ.7.5 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பண்ணைகள் மேம்பாட்டிற்கென ரூ.71.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பல்வேறு வகையான திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியில் ரூ.16.93 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேளாண்மை உற்பத்தியில் கால்நடைகளின் பங்கு 42 சதவிகிதமாக உள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன் 2 கால்நடைக் கல்லூரிகளை மட்டுமே கொண்டு செயல்பட்டு வந்த தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்குக் கடந்த 2012 ஆம் ஆண்டு 2 புதிய கால்நடை மருத்துவக் கல்லூரிகளைத் திருநெல்வேலியிலும், ஒரத்தநாட்டிலும் துவக்கி வைத்துள்ளார்கள். மேலும், பன்னாட்டு தரத்தில் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி ஒன்றை ஓசூரில் தொடங்கி வைத்துள்ளார்கள்.

பிற்பகல் 1–00

கடந்த ஆண்டில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் B.V.Sc. மற்றும் A.H. பட்டப் படிப்பிற்கான மாணவர் சேர்க்கை 280–லிருந்து 320 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க 2016–2017 ஆம் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கைக்கு 13,432 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 272 இடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. முதல் மதிப்பெண்ணாக, 197 cut off மதிப்பெண் பெற்று பட்டப் படிப்பில் சேர்ந்துள்ளனர். B.V.Sc., பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத் தொகை ரூ.3,000/–லிருந்து ரூ.4,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. M.V.Sc., படிக்கும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை

ரூ.500/–லிருந்து ரூ.4,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. Ph.D., படிக்கும் மாணவர்களுக்கு முதன் முறையாக ரூ.5,000/– ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பர்கூரில் மாட்டின ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஹைட்ரோபோனிக்ஸ் முறை தீவன உற்பத்தி மையம் மாதவரத்தில் ரூ.29 இலட்சம் நிதி உதவியுடன் நிறுவப்பட்டுள்ளது. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நானோ தொழில்நுட்ப மையம் ரூ.120 இலட்சம் நிதியுதவியுடன் உருவாக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி, திருச்சி மற்றும் ராஜபாளையத்தில் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களுக்கு நிரந்தரக் கட்டடங்கள் ரூ.1.50 கோடியில் கட்டப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க கால்நடைகளுக்குத் தேவையான தடுப்பு ஊசி மற்றும் நோய் கண்டறிய பயன்படும் வகையில் உலகத் தரம் வாய்ந்த சிறப்பு ஆராய்ச்சி மையம் ரூ.12 கோடியே 25 இலட்சம் செலவில் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே முதல் முறையாக 10 'அம்மா நடமாடும் கால்நடை மருத்துவ அவசர ஊர்திகள்' (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின்மூலம் ரூ.6 கோடியே 34 இலட்சம் அரசு நிதியுதவியுடன் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாமக்கல், மதுரை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூரில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களுக்கு ரூ.6 கோடி செலவில் சுற்றுச் சுவர் அமைக்கும் பணிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வளாகத்தில் அலுவலர்கள் குடியிருப்பு அமைக்கின்ற

பணி ரூ.2 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஓசூர் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் கோழி மற்றும் கால்நடை தீவன உற்பத்திப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைத்திட 130.1 ஏக்கரில் ரூபாய் 53 கோடியே 86 இலட்சத்திலும், தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைத்திட 177.92 ஏக்கரில் ரூபாய் 49 கோடியே 85 இலட்சத்திலும், ஓசூர் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி அமைத்திட 80 ஏக்கரில் ரூபாய் 23 கோடியே 75 இலட்சத்திலும் கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் என பல்வேறு பணிகள் மாணவர்களின் நலன் கருதி மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காணொலிக் காட்சிமூலம் 5–7–2015 அன்று திறந்து வைத்துள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு அளித்திட்ட ஆதரவுமூலம் இந்தியாவில் உள்ள 12 கால்நடை மருத்துவ பல்கலைக்கழகங்களில், தமிழ்நாடு கால்நடை மருத்துவப் அறிவியல் பல்கலைக்கழகம் முதலிடத்தைப் பெற்று தமிழகத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) இத்துறைக்குப் பெருமைச் சேர்த்துள்ளது என்பதை இந்தப் பேரவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்" என்பதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) மாறாக, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், கேட்காமலேயே அனைத்து நலத் திட்டங்களையும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களுக்கு வாரி வழங்கி, வாய் இல்லா ஜீவன்களையும் வாழ வைத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு, கால்நடை பராமரிப்புத் துறையின் புதிய அறிவிப்புகளைத் தற்போது வெளியிடுகிறேன்.

1. திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில் தீவன ஆய்வுக் கூடம் அமைத்தல்

தமிழகத்தில் கலப்பினக் கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதன் காரணமாக கால்நடை தீவனத்திற்கான தேவை அதிகரித்துள்ளது. தீவனத்திற்கான செலவு அதிகரிக்கும் காரணத்தால் வழக்கத்தில் இல்லாத தீவனப் பொருட்களைக் கொண்டு கால்நடைத் தீவனங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இத்தீவனப் பொருட்கள் கால்நடைகளுக்கு உகந்ததாக உள்ளதை உறுதி செய்வது மிகவும் இன்றியமையாததாகிறது. இதன்பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, நடப்பு நிதியாண்டில் 2 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவில் திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) தீவன ஆய்வுக் கூடம் அமைக்கப்படும்.

2. காஞ்சிபுரம் மாவட்டத்தில் மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்டுதல்

பல முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வரும் இத்துறையின் சில இடங்களில் உள்ள கண்காணிப்பு அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலும், போதிய இடவசதி இல்லாத கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. கண்காணிப்பு அலுவலகங்களுக்குப் போதிய வசதியுடன்கூடிய நவீன கட்டடங்கள் வழங்கும்பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி, நடப்பு நிதியாண்டில் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் காஞ்சிபுரம் மாவட்ட மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. தமிழகத்தில் புதிதாக 2 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் தோற்றுவித்தல்

கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களினால் விவசாயிகளுக்கு உண்டாகும் இழப்பினைத் தவிர்க்கவும், நவீன நோய் கண்டறியும் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி கால்நடைகளின் நலனைத் தொடர்ந்து பாதுகாக்கவும், அண்டை மாநிலங்களில் அவ்வப்போது ஏற்படும் பறவைக் காய்ச்சல் போன்ற நோய்களின் தாக்கம் தமிழகத்தில் ஏற்படாவண்ணம் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா

அவர்களின் ஆணையின்படி, 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில், 2 புதிய கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள், திருவள்ளூர் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் தோற்றுவிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–10

4. சென்னையில் கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு (Veterinary Epidemiology Centre) அமைத்தல்

கால்நடை நோய்கள் குறித்த முன்னறிவிப்புச் செய்யும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் ஒத்துழைப்புடன் சென்னையில் ஒரு புதிய கால்நடை நோய் நிகழ்வியல் பிரிவு 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் நடப்பு நிதியாண்டில் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 11 புதிய வாகனங்கள் கொள்முதல் செய்தல்

கால்நடை பராமரிப்புத் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் தொலைநோக்குத் திட்டங்களைக் கண்காணிக்கும் வகையில், இந்தத் துறையின் கள அலுவலர்களுக்கு 11 புதிய வாகனங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி நடப்பு நிதியாண்டில் 67 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் உள்ளவரை, நீர் உள்ளவரை, காற்று உள்ளவரை, கடல் உள்ளவரை, வானம் உள்ளவரை அம்மா அவர்களின் புகழும், அம்மா அவர்களின் வெற்றியும் உறுதி என்பதைத் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வெற்றி எதிர்வரும் உள்ளாட்சி மன்றத் தேர்தலில் தொடரும் என்று கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, இந்த நல்ல வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் பணிந்து வணங்கி எனது உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களின் மேலான கருத்துகளையும், நல்ல ஆலோசனைகளையும் அவைமுன் எடுத்து வைத்திருக்கின்றார்கள். மேலும், கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்கள் அனைத்திற்கும் நான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் சார்பாக அளித்த பதில் அவர்களுக்குத் திருப்தியாக இருக்குமென நம்புகிறேன். எனது பதிலுரையை ஏற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாறு காணாத வெற்றியைப் பெற்று தமிழகத்தில் வரலாறு படைத்திட்ட வரலாற்று நாயகி, (மேசையைத் தட்டும் ஒலி) ஆறாவது முறையாக தமிழகத்தில் முதல்வராகப் பொறுப்பேற்று, தொடர்ந்து இரண்டாவது முறையாக வரலாற்றில் இடம் பிடித்து, தமிழகத்தின் முதல்வராக அமர்ந்திட்ட (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களை வணங்குகிறேன்.

விவசாயி, விவசாயி,
கடவுள் எனும் முதலாளி,
கண்டெடுத்த தொழிலாளி,
விவசாயி, விவசாயி,
முன்னேற்றப் பாதையிலே மனச வெச்சு,
முழுமூச்சாய் அதற்காகத் தினம் உழைத்து,
மண்ணிலே முத்தெடுத்து பிறர் வாழ,
வழங்கும் குணமுடையோன் விவசாயி,
விவசாயி, விவசாயி (மேசையைத் தட்டும் ஒலி)

என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடலுக்கேற்ப, தன்னை ஒரு விவசாயி என்று பெருமையுடன் கூறி, விவசாயிகளுக்கே பெருமை தேடித் தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களை மீண்டும் வணங்குகிறேன்.

பிற்பகல் 1–15

நவ இரத்தினமும், திசைகள் எட்டும், ஸ்வரங்கள் ஏழும், அறிவு ஆறும், பூதங்கள் ஐந்தும், வேதங்கள் நான்கும், முக்காலமும், பகல் இரண்டும், ஆனால், தமிழக மக்கள் நலன் ஒன்றே வாழ்க்கை என தவ வாழ்க்கை வாழ்ந்துவரும் (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, 6–வது முறையாக சிம்மாசனம் கண்ட அவதாரமே, எங்கள் அன்னையே, பணிகிறேன் பணிவுடன்.

நாங்கள் தவமாய்த் தவமிருந்து, வரமாய்ப் பெற்ற தர்மத் தாயே, வெற்றித் தாயே, ஏழைகளின் ஒளி விளக்கே, இளைஞர்களின் எதிர்காலமே, தமிழகத்தின் விடிவெள்ளியே, பாசத் தாயே, கருணைத் தெய்வமே, காவியத் தாயின் தியாகத் திருவுருவமே, எங்கள் ஆதியும் அம்மா, வாழ்வும் அம்மா, வளமும் அம்மா, வெற்றியும் அம்மா, உயிர் மூச்சும் அம்மா, அம்மா, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

எங்கள் குடும்ப குல விளக்கே, எங்கள் ஆராதனைக்குரிய தெய்வமே, மாதர் குல மாணிக்கமே, தமிழ்த் தாயின் தலைமகளே, வாகைத் தாய் எங்கள் அம்மா, பெண்ணினத்தின் பேரொளியே, அகிலமே அண்ணாந்து பார்க்க வைத்த அதிசய சக்தியே, மகா சக்தியே, 6–வது முறையாக தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்று, நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த ஓய்வறியாமல் உழைத்து, தன்னுடைய தொலைநோக்குப் பார்வையால், மதிநுட்பத்தால் நாட்டு மக்கள் போற்றிப் பாராட்டும் நல்ல பல திட்டங்களுக்குச் செயல்வடிவம் தந்து, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று தவ வாழ்வு வாழ்ந்துவரும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்களின் கண்கண்ட தெய்வமாக விளங்கி வருகிறார்கள்.

'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்'

என்பது வள்ளுவர் வாக்கு. எண்ணியது, எண்ணியபடியே செயல்பட்டு வேளாண்மை தழைக்க, விவசாயிகள் வாழ்வு சிறக்க, அல்லும், பகலும் அயராது உழைத்து, தனது சிந்தனையில் உதித்த சீர்மிகு எண்ணங்களைத் திட்டங்களாக்கி, செயல்படுத்தி, உழவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதில் உறுதியாகச் செயல்பட்டு, வளம், வாய்ப்பு, தகவல் பரிமாற்றம் ஆகியவற்றை

மேம்படுத்தி, தமிழக மக்களின் ஜீவாதார உரிமைகளை நிலைநாட்டி, இந்திய அரசியலில் அசைக்க முடியாத மாபெரும் சக்தியாக விவசாயிகளின் நலன் காக்க, பதவியேற்ற அன்றே சிறு, குறு விவசாயிகளின் பயிர்க் கடனைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்ட கருணைக் கடலே, தமிழக விவசாயிகளின் நலன் காக்க காவேரியை மீட்டுத் தந்த தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) காலம் மாறி, மாறி பொழியும் மழை; ஆனால் காலம் மாறாமல் கருணை மழை பொழியும் எங்கள் அம்மா நீங்கள்தான் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

உற்பத்தி, சந்தைப்படுத்துதல், வருமானம் உள்ளிட்ட விவசாயிகளின் வாழ்வாதார உயர்விற்கு வழிவகுத்த எங்கள் தாயே, விவசாய விஞ்ஞானியே, சமயோஜித மெய்ஞ்ஞானியே, அம்மா, உங்கள் மலர்ப் பாதம் பணிந்து வணங்குகிறேன், அம்மா.

கல்லூரி மாணவர் செயலாளராக, கிளைக் கழக அமைப்பாளராக, கிளைக் கழகச் செயலாளராக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா, உங்களுடைய நல்லாசியுடன், உங்களுடைய வாழ்த்துகளுடன், உங்கள் கருணைப் பார்வையுடன், மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணி துணைத் தலைவராக, 21 வருடங்களாக பாபநாசம் ஒன்றியக் கழகச் செயலாளராக, தஞ்சாவூர் மாவட்ட வேளாண்மை விற்பனைக் குழுத் தலைவராகப் பணியாற்றிட வாய்ப்பு வழங்கினீர்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா, தாங்கள் கடும் வெயிலையும் பொருட்படுத்தாது, கடுமையாகப் பிரச்சாரம் செய்து ஒரு குக்கிராமத்தில், ஏழையெளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, சாதாரண கழகத் தொண்டனான என்னை, 2006, 2011 மற்றும் 2016–ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில், மூன்று முறை தொடர்ந்து சட்டமன்றப் பேரவை உறுப்பினராக வெற்றி பெறச் செய்து, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் வேளாண்மைத் துறைக்கு அமைச்சராக்கி, வேளாண் பெருமக்களுக்கு சேவைபுரிய வாய்ப்பளித்து அழகு பார்க்கின்ற எங்கள் குல தெய்வம் அம்மா, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நானும், என் குடும்பத்தாரும், என் சந்ததியினரும் நிலம் உள்ளவரை, வானம் உள்ளவரை, நீர் உள்ளவரை, காற்று உள்ளவரை, (மேசையைத் தட்டும் ஒலி) ஒளி உள்ளவரை, கடல் உள்ளவரை, இந்த உலகம் உள்ளவரை, எங்கள் உயிர் உள்ளவரை நன்றிக் கடன்பட்டவர்களாக என்றென்றும் இருப்போம் அம்மா. மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை மீண்டும் வணங்கி, என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை தமிழகத்தின் நிரந்தர முதல்வராக்கவும், என்னை வெற்றி பெறச் செய்ய இரவு பகல் பாராது உழைத்திட்ட கழக நிருவாகிகளுக்கும், கழகத் தொண்டர்களுக்கும், வாக்களித்த பாபநாசம் சட்டமன்றப் பேரவைத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றி கலந்த வணக்கத்தைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—20

காவேரி டெல்டா மக்களின் ஜீவாதார உரிமையைப் பெற்று, காவேரி நதிநீர் கிடைத்திட 84 மணிநேரம் உண்ணாவிரதம் இருந்து, உயிரையும் துச்சமெனக் கருதி போராடி, வாதாடி, உச்ச நீதிமன்றத்தில் காவேரி நதிநீர் உரிமையை மீட்டுத் தந்த வரலாற்று நாயகி, காவேரி தாய், வெற்றி நாயகி, தர்ம தேவதை, இந்தியத் திருநாட்டின் எதிர்காலம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப்பாதம் வணங்கி, என்னுடைய பதிலுரையைத் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இரு மடங்கு உற்பத்தி, மூன்று மடங்கு வருமானம் என்ற தாரக மந்திரத்துடன், இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன்மை மாநிலமாகத் தமிழகம் திகழ்ந்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பொருளாதாரத்திற்கு அடிப்படையாக விளங்கும் வேளாண்மைப் பிரிவைப் பொறுத்தே, இதர பிரிவுகளின் செயல்பாடுகளும் அமைகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தங்களுடைய தீர்க்க தரிசனத்தால், வேளாண்மைத் துறைக்கு அதிமுக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். அகில இந்திய அளவில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி, விவசாயிகளின் தேவைகளுக்கேற்ப, நவீன வேளாண் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதிலும், பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் மாண்புமிகு

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசால், அகில இந்திய அளவில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

நூறு இலட்சம் மெட்ரிக் டன்னுக்கு மேல் நான்கு முறை உணவு தானிய உற்பத்தியடைந்து, அகில இந்திய அளவில் மேலும் சாதனை படைக்க பல தொலைநோக்குத் திட்டங்களைத் தந்த சாதனையே, சரித்திரமே. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த பல்வேறு சீரிய முயற்சிகளின் விளைவாக, பயிர் சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தித் திறன் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்ததோடு, கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டில் உணவு தானிய உற்பத்தி அதிகளவில் உயர்ந்துள்ளது. 2011–2012 முதல் 2015–2016 வரையிலான ஐந்தாண்டுகளில் நான்கு முறை 100 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக உணவு தானியம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. சாதனை படைத்த பெருமை, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையேச் சேரும். (மேசையைத் தட்டும் ஒலி)

2015–2016 ஆம் ஆண்டில் 1 கோடியே 30 இலட்சத்து 63 ஆயிரம் மெட்ரிக் டன் என்ற மிக உயரிய உணவு தானிய உற்பத்தி எட்டப்பட்டது. தமிழக வரலாற்றின் சாதனைச் செம்மல், காவியத் தலைவி, சரித்திர நாயகி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அடையப்பெற்ற உச்சபட்ச சாதனையாகும். சிந்தனைச் சிற்பியே, செம்மையின் சிகரமே, சிறந்த நிருவாகமே, சீர்மிதிச் செயல்பாடே, ஆற்றலே, அதிசயமே, அபூர்வமே, அனைத்துலகமே, ஏழாம் அறிவே, எட்டாம் அதிசயமே அம்மா. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலான அரசு, 2011–2012 ஆம் ஆண்டில் மொத்த உணவு தானிய உற்பத்திக்கும், 2013–2014 ஆம் ஆண்டில் பயறு வகை உற்பத்திக்கும் மற்றும் 2014–2015 ஆம் ஆண்டில் சிறுதானிய உற்பத்திக்கும் மத்திய அரசின் 'Krishi Karman' விருதை மூன்று முறை பெற்றுள்ளது என்ற பெருமையை (மேசையைத் தட்டும் ஒலி) அடைந்துள்ளது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

'Agriculture Today' எனும் முன்னிலைப் பத்திரிகையின் 2013 ஆம் ஆண்டிற்கான மாநில மேலாண்மைத் தலைமை விருதையும், 2015 ஆம் ஆண்டிற்கான உணவு உற்பத்தித் திட்ட தலைமை

விருதையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு பெற்றுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

'India Today' எனும் பத்திரிகை, வேளாண்மையில் சிறந்த, பெரிய மாநிலத்திற்கான விருதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான மாநிலத்திற்கு வழங்கியுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

2015–2016 ஆம் ஆண்டிற்கான சிறந்த 'மின் ஆளுமைக்கான தேசிய தங்க விருதை' மத்திய அரசிடமிருந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு பெற்றுள்ளது.

மாறிவரும் பருவநிலை, மேட்டூர் அணை திறப்பு மற்றும் ஏனைய காரணிகளுக்கேற்ப பயிர்ச் சாகுபடிப் பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க ஐந்தாண்டுகளில் பல்வேறு சிறப்புத் தொகுப்புத் திட்டங்களையும், புதிய உத்திகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ளார்கள்.

2011–2012 ஆம் ஆண்டில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் போதுமான அளவு இருந்ததால், வழக்கமாக, குறுவை சாகுபடிக்காக நீர் திறந்துவிடப்படும் நாளான ஜூன் 12 ஆம் தேதிக்கு முன்னதாகவே 6 ஆம் தேதியே அணையிலிருந்து குறுவைப் பாசனத்திற்கு நீர் திறந்துவிட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டது இந்திய சுதந்திர வரலாற்றிலே முதன்முறையாகும்.

'வான் பொய்த்தாலும், தான் பொய்க்காத காவேரி, காவேரி பொய்த்தாலும் கை கொடுக்கும் தர்ம தேவதை' மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* சத்தியமாக்கும் சரித்திரச் சாதனை, தொடர்ந்து ஐந்தாண்டுகளாக டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலனைக் காக்க, குறுவை சிறப்புத் தொகுப்பு திட்டத்தின்கீழ் நிதி வழங்கிய டெல்டா விவசாயிகளின் காவேரி தெய்வமே அம்மா.

மேட்டூர் அணையில் போதிய நீர் இல்லாத காலங்களில், காவேரி டெல்டா மாவட்ட விவசாயிகள் நெல் சாகுபடியைத் தங்குதடையின்றி மேற்கொள்ளும்பொருட்டு, 2012–2013 முதல் 2015–2016 ஆம் ஆண்டு வரை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தினை,

ரூ.229 கோடியே 91 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தி, டெல்டா விவசாயிகளின் வாழ்வில் நீங்காத இடம் பெற்றவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–25

2016–2017 ஆம் ஆண்டில் டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலனுக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.54 கோடியே 65 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் சிறப்பு தொகுப்புத் திட்டத்தை அறிவித்தார்கள். 12 மணி நேரமும் மும்முனை மின்சாரம், 100 சதவிகித மானியத்தில் ஏக்கருக்கு ரூ.4,000/– வீதம் இயந்திர நெல் நடவு, நுண்ணூட்டக் கலவை, துத்தநாக சல்பேட் போன்ற இடுபொருட்கள் விநியோகம், அதிக அடர்திறன்கொண்ட விலையில்லா நீர் கொண்டுசெல்லும் பாலி எத்திலீன் குழாய்கள் விநியோகம், ஏக்கருக்கு ரூ.500/– உழவு மானியம், காவேரி பாசனப் பகுதியில் விலையில்லா பயறு வகை மற்றும் பசுந்தாள் உரப் பயிர்களின் விதைகளின் விநியோகம் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, இதன்மூலம் வடிமுனைக் குழாய்ப் பாசனப் பகுதிகளில் 1,34,517 விவசாயிகள் பயனடைந்து 3,16,000 ஏக்கர் நிலம் நெல் பயிர்ச் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேட்டூர் நீர்தேக்கத்திலிருந்து பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்துவிடப்படாத ஆண்டுகளில் சாகுபடி செய்யப்பட்ட குறுவை சாகுபடிப் பரப்பளவில் இதுவே மிக அதிகமாகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேளாண்மைக்கு அளித்துவரும் அதிக முக்கியத்துவத்தை இது உணர்த்துகிறது என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், சம்பா பயிருக்குத் தேவையான தண்ணீர் மேட்டூர் அணையில் கிடைக்கப்பெறாத நிலையில் நேரடி நெல் விதைப்புமூலம் சம்பா சாகுபடி மேற்கொள்வதற்கு சிறப்புத் தொகுப்புத் திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் ரூ.64 கோடியே 30 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் அறிவித்து, டெல்டா விவசாயிகளின் (மேசையைத் தட்டும் ஒலி) சம்பா சாகுபடியைக் காப்பாற்றியுள்ளார்கள். உழவுப் பணிகளுக்கு ரூ.25 கோடி, விதை விநியோக மையத்திற்கு ரூ.4 கோடியே 50 இலட்சம், இயந்திரம்மூலம் நேரடி நெல் விதைப்புக்கு

ரூ.3 கோடி, களை கட்டுப்பாட்டுக்கு ரூ.9 கோடியே 8 இலட்சம், இயந்திர நடவுக்கு ரூ.20 கோடி, Zinc Sulphate விநியோகத்திற்கு ரூ.2 கோடி அறிவித்து விவசாய மக்களின் வாழ்வாதாரத்திற்கு வாரி வழங்கிய வள்ளலுக்கெல்லாம் வள்ளலே! விவசாயிகளின் விடியலே! விவசாயிகளின் அட்சயப் பாத்திரமே! விவசாயம் தழைக்கவும், காவேரி டெல்டா விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றிய எங்கள் அம்மா உங்கள் மலர்ப்பாதம் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி இதுபோன்ற திட்டங்கள் எதுவும் செயல்படுத்தப்படவில்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். நவீன தொழில்நுட்ப வசதிகளை விவசாயிகள் அறிந்துகொள்ளும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உழவர் பெருவிழா என்ற பல்துறை விழிப்புணர்வு முகாம் 2012–2013 மற்றும் 2013–2014 ஆகிய ஆண்டுகளில் 385 வட்டாரங்களில் உள்ள அனைத்து வருவாய்க் கிராமங்களிலும் நடத்தப்பட்டு, ரூ.42 கோடியே 78 இலட்சம் மதிப்புள்ள வேளாண் இடுபொருட்களை வழங்க இவ்விழா வழிவகுத்தது. இதில் சுமார் 80,86,000 விவசாயிகள் பங்கேற்று, பயனடைந்துள்ளனர்.

தமிழகத்திலுள்ள 81,18,000 பண்ணை நில உடைமைகளின் மண் வளத்தினைப் பாதுகாத்திடும் நோக்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மண் வளம் குறித்த விவரங்கள் அடங்கிய 3 வருட தகவல் தொகுப்பான விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடு வழங்கும் திட்டத்தை 2011–2012 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தி, 67,45,000 கையேடுகள் வழங்கப்பட்டன. இந்த முயற்சி அகில இந்திய அளவில் அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக இருந்ததால், 2015–2016 ஆம் ஆண்டில் (மேசையைத் தட்டும் ஒலி) மண் வள அட்டை இயக்கம் என்ற பெயரிலான திட்டத்தை மத்திய அரசு துவக்கியுள்ளதால் மத்திய அரசுக்கே வழிகாட்டியாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்குகிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பது தமிழ்நாட்டிற்கே கிடைத்த மிகப் பெரிய பெருமையாகும்.

2016 ஆகஸ்ட் 19] [திரு. இரா. துரைக்கண்ணு]

வித்தே, விவசாயமே, விளைச்சலே, வெற்றியே, உயிரே, உருவே, உழைப்பே, உன்னதமே, அகர முதலே, ஆக்கமே, அனைத்துமே, அனுதினமே, ஆற்றலே, அதிசயமே, தன்னிறைவே தைரியமே, விண்ணினும் உயர்வே அம்மா, வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் முக்கியமான இடுபொருளாகத் திகழ்வது தரமான விதையாகும். 2015–2016 ஆம் ஆண்டில் ரூ.50 கோடி நிதியுடன் TANSEDA என்கிற தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவங்கப்பட்டது. இந்த முகமைமூலம் மேம்படுத்தப்பட்ட இரகங்கள், நியாயமான விலையில் 'Amma Seeds' என்ற பெயரில் அம்மா சேவை மையங்கள் வாயிலாகக் காலத்தே வழங்கப்பட்டு வருகின்றன. 21,158 மெட்ரிக் டன் விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு, 880 அம்மா சேவை மையங்கள் வாயிலாக 4,73,000 விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 41,571 மெட்ரிக் டன் விதைகள் கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டு, 8,39,000 விவசாயிகளுக்கு விநியோகம் செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. மண்ணின் வளம் காத்து, Amma Seeds தந்து, நியாயமான விலையில் தரமான இடுபொருட்கள் தந்து, எப்போதும் கிடைக்க அம்மா சேவை மையம் தந்த தரணி போற்றும் தாயே, எங்கள் அம்மா.

பிற்பகல் 1–30

விரிவாக்கச் சேவைகளை விரைவாக்கி, விவசாயி வாழ்வு செழிக்க வழிவகுத்த விந்தையே, வேளாண்மைக் காவலரே, வாழ்வாதாரமே அம்மா, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உரங்கள் மீதான 4 சதவிகித மதிப்புக் கூட்டு வரியிலிருந்தும், naphtha அடிப்படையிலான யூரியாவின் மானியத்தைத் தொடர்ந்து வழங்கி விவசாயி நலன் காத்திடவும், M.F.L. மற்றும் SPIC உர நிறுவனங்கள் கொள்முதல் செய்யும் naphtha மீதான 5 சதவிகித மதிப்புக் கூட்டு வரியிலிருந்தும் விலக்களித்தார்கள்.

குறு, சிறு விவசாயிகள் தாங்கள் பெற்றிருந்த கூட்டுறவுக் கடன் சுமையிலிருந்து விடுபட, ரூ.5,750 கோடி அளவுக்குக் கடன் தள்ளுபடி செய்ததோடு, மீண்டும் தங்குதடையின்றி விவசாயம் மேற்கொள்ளும் பொருட்டு, சுமார் ரூ.6,000 கோடி அளவிற்குப் புதிய கடனுதவி வழங்கி, விவசாயிகள் வாழ்வு உயர மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிவகுத்துள்ளார்கள்.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு வட்டியில்லா கடன் வழங்கி, ஆண்டுதோறும் போதிய அளவில், உரிய நேரத்தில், நியாயமான விலையில், தரமான உரங்கள் விவசாயிகளுக்குக் கிடைப்பதை உறுதி செய்ய, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு ரூ.719 கோடியே 38 இலட்சம் வழங்கியுள்ளார்கள். நடப்பாண்டில், உரங்கள் முன்கூட்டியே கொள்முதல் செய்து இருப்பு வைத்திட ரூ.150 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, கடந்த ஐந்தாண்டுகளில் சுமார் 11,880 கிராமங்களில் திருந்திய நெல் சாகுபடி முறை, முழு கிராம அணுகுமுறையில் 27,20,750 ஏக்கரில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொழில்நுட்பத்தால், நெற்பயிரின் உற்பத்தித் திறன் கடந்த ஆண்டின் உயரிய சாதனையாக ஹெக்டேருக்கு 4,429 கிலோ அரிசி மகசூல் பெறப்பட்டுள்ளது என்றால், வெற்றி நாயகி, தங்கத் தாரகை, வாகைசூடிய வள்ளல் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீர்மிகு சிந்தனையில் உதித்த திறன்மிகு செயல்பாட்டிற்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும். நடப்பாண்டில், 3,000 கிராமங்களில் திருந்திய நெல் சாகுபடி முறை முழு கிராம அணுகுமுறையில் 6,25,000 ஏக்கரிலும், பயறு சாகுபடி முறை 3,12,500 ஏக்கரிலும் அமைக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைவருக்கும் ஊட்டச்சத்து கிடைப்பதை உறுதி செய்யும்பொருட்டு, பயறு வகைகள் உற்பத்தி மற்றும் தேவைக்கிடையே நிலவும் இடைவெளியைக் குறைக்க 6,327 பயறு கிராமங்களில் 7,50,000 ஏக்கர் பரப்பில் 'பயறு அதிசயம்' என்ற நுண்ணூட்டச் சத்துக் கலவையைத் தெளிப்பதற்கு அதிக முக்கியத்துவம் அளித்து, மேம்படுத்தப்பட்ட பயறு வகை உற்பத்தித் தொழில்நுட்பங்களை மேற்கொள்ள ஆணையிட்டார்கள்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு 2016 ஆம் ஆண்டை சர்வதேச பயறு ஆண்டாக அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, 2016–2017 ஆம் ஆண்டில் 27,50,000 ஏக்கர் பரப்பளவில் பயறு வகை பயிர்களைச்

சாகுபடி செய்து, மொத்த பயறு வகை உற்பத்தி 9,80,000 மெட்ரிக் டன் என்ற அளவில் சாதனை அடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதற்காக, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் ரூ.84 கோடியே 14 இலட்சம் மாண்புமிகு அம்மா அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பண்ணைச் செயல்பாடுகளை உரிய நேரத்தில் மேற்கொள்ள, பண்ணை இயந்திரமயமாக்குதல் திட்டத்தின்கீழ் இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, 385 வட்டாரங்களில் ரூ.4 கோடியே 29 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகள் குழுக்களுக்கு விலையில்லா பண்ணை இயந்திரங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

2014–2015 ஆம் ஆண்டு முதல் இயந்திர நெல் நடவு மேற்கொள்வதை ஊக்குவிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மானியம் வழங்கி வருகிறார்கள். ரூ.65 கோடியே 94 இலட்சம் செலவில் 5,75,500 ஏக்கர் பரப்பளவில் இயந்திர நெல் நடவு மேற்கொள்ளப்பட்டது. நடப்பாண்டில், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 6,62,500 ஏக்கர் பரப்பளவில் இயந்திர நெல் நடவு முறையை மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ரூ.152 கோடியே 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அருமையே, ஆனந்தமே, இமயமே, இன்முகமே, இன்செயலே, கருணையே, கலங்கரை விளக்கமே, எண்ணே, எழுத்தே, எண்ணமே, இனி, எல்லாமே எங்கள் அம்மாதான், எங்குமே எங்கள் அம்மாதான், எதிலுமே அம்மா, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம்-உழவர் விளைபொருள் குழுக்கள் அமைத்து, விற்பனை வாய்ப்புகளை உருவாக்கித் தந்திட்ட தரணி போற்றும் தாயே, எங்கள் அம்மா. விளைவித்த விளைபொருட்களைப் பத்திரப்படுத்தி, வருவாய் ஈட்டிட, உலர வைத்து, குளிரூட்டி, பாதுகாப்பாகச் சேமித்துக் காத்திட உலர் களங்கள், குளிர்பதன வசதி, சேமிப்புக் கிடங்குகள்

ஏற்படுத்தித் தந்த, உழவர் உள்ளங்களைக் குளிர்வித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், காய்கறிகள் மற்றும் பழங்களுக்கான விநியோகச் சங்கிலித் தொடர் வேளாண்மைக்காக ஒரு சிறப்புத் திட்டத்தை 10 மாவட்டங்களில் நபார்டு வங்கியின் கிடங்கு உட்கட்டமைப்பு நிதியுதவியுடன் ரூ.398 கோடியே 75 இலட்சம் மதிப்பில் ஏற்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

வேளாண் விளைபொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தி, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் நோக்கில், முதற்கட்டமாக 100 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் மின்னணு ஏல முறை வசதியை ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பிற்பகல் 1–35

சிறு விவசாயிகள் பயன்பெறும்வகையில், 28 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ரூபாய் 12 கோடியே 26 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 14 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ரூபாய் 6 கோடியே 5 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படவுள்ளன. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை மேம்படுத்திட, சேமிப்புக் கிடங்குகள், பரிவர்த்தனைக் கூடங்கள் உள்ளிட்ட 100 உட்கட்டமைப்பு வசதிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க ரூபாய் 83 கோடியே 35 இலட்சம் மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் கிடங்கு உட்கட்டமைப்பு நிதியின் மூலமாக உருவாக்கப்பட்டு வருகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டம், கள்ளிக்குடியில் காய்கறி, பழங்கள் மற்றும் மலர்களுக்கான மத்திய சந்தையில் நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்மூலம் ரூபாய் 65 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு கட்டுமானப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகளுக்கான பொருளீட்டுக் கடன் தொகை ரூபாய் 1 இலட்சத்திலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்கள். விண்ணைத் தொடும் சாதனைகளைச் செய்துள்ள சாதனைச் செம்மல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 2 சேமிப்புக்

கிடங்குகள், 30 உலர்களங்கள், 24 பரிவர்த்தனைக் கூடங்கள், ஓர் இடத்தில் வாழைப் பழத்தைப் பழுக்க வைக்கும் கூடம், 11 குளிர்பதனக் கிடங்குகள், 7 குளிர்பதன வசதிகளுடன்கூடிய சிறப்பு வணிக வளாகங்கள், 3 சிறப்பு வணிக வளாகங்கள், 85 வணிகக் கடைகள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் ரூபாய் 73 கோடியே 16 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்மூலம் ரூபாய் 155 கோடியே 94 இலட்சம் மதிப்பீட்டில் 70 குளிர்பதனக் கிடங்குகள், 88 சேமிப்புக் கிடங்குகள், ஒரு சிறப்பு வணிக வளாகம், 10 சேகரிப்பு மையங்கள், 2 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ஆகிய ஒருங்கிணைந்த விளைப்பொருள் வேளாண்மைக்கான உட்கட்டமைப்புகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி உலக வங்கியின் நிதியுதவியுடன் முதற்கட்டமாக 61 உபவடிப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின்மூலம் திருந்திய நெல் சாகுபடி, மாற்றுப் பயிர்ச் சாகுபடி மற்றும் நவீன தொழில்நுட்பங்களைச் செயல்படுத்தியதால் சராசரியாக உற்பத்தித் திறன் நெற்பயிரில் 44 சதவிகிதமும், மக்காச்சோளத்தில் 42 சதவிகிதமும், பயறு வகைப் பயிர்களில் 45 சதவிகிதமும் அதிகரிக்கப்பட்டதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசை உலக வங்கியே பாராட்டியுள்ளது என்பதைப் பெருமையுடன் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள 66 உபவடிப் பகுதிகளை மேம்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திட்டம் வகுக்கப்பட்டு, கொள்கை அளவில் உலக வங்கி இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இத்திட்டம் 18 தெரிவு செய்யப்பட்ட உபவடிப் பகுதிகளில் செயல்படுத்தப்படும். தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஐந்தாண்டுகளில் ரூபாய் 674 கோடியே 30 இலட்சம் மேம்பாட்டுப் பணிகளுக்காகச் செலவிடப்பட்டு, 14 இலட்சத்து 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு மேம்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கசிவுநீர்க் குட்டைகள், பண்ணைக் குட்டைகள், தடுப்பணைகள் போன்ற 33,661 மழைநீர் சேமிப்பு அமைப்புகள்

உருவாக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக 2 இலட்சத்து 14 ஆயிரம் ஏக்கர் கூடுதலாகப் பாசனப் பரப்பின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இந்தத் திட்டத்தின்கீழ் ரூபாய் 182 கோடியே 18 இலட்சம் நிதியொதுக்கீட்டில் 3 இலட்சத்து 75 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு மேம்படுத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசின் சமூக நல ஈடுபாட்டினை வெளிப்படுத்துவதாக இத்திட்டம் அமைந்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் 2014–2015 ஆம் ஆண்டு மொத்த சாகுபடிப் பரப்பு 59 இலட்சத்து 94 ஆயிரத்து 501 ஹெக்டேர் ஆகும். ஆனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 2010–2011 ஆம் ஆண்டிலிருந்த மொத்த சாகுபடிப் பரப்பு 57 இலட்சத்து 52 ஆயிரத்து 664 ஹெக்டேர் ஆக இருந்தது என்பதை இம்மாமன்றத்தில் சுட்டிக்காட்ட விழைகிறேன். முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 116 ஆக இருந்த பயிர் சாகுபடித் திறன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் 124 ஆக உயர்ந்துள்ளது என்பது நிலப் பயன்பாட்டுத் திறன் அதிகரித்துள்ளது என்பதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்தியதால் தமிழக மக்களின் மனங்களில் நிலைத்து நிற்கின்றார். அதேபோல மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாலிக்குத் தங்கம், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி, மிதிவண்டி, மாற்றுத் திறனாளிகளுக்கு ஊக்கத் தொகை, அம்மா உணவகம், மழைநீர் சேகரிப்பு, விலையில்லா ஆடுகள், மாடுகள் வழங்கும் திட்டம் போன்ற வெற்றிகரமான திட்டங்களைத் தனது தொலைநோக்குச் சிந்தனையால் வகுத்து, தொகுத்துச் செயல்படுத்தி வருகிறார்கள். அதேபோல விவசாயத்திலும், குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டம், பாதுகாக்கப்பட்ட பயிர்ச் சாகுபடி, நுண்ணீர்ப் பாசனம், சம்பா தொகுப்புத் திட்டம், புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டம், பண்ணை இயந்திரமாக்குதல், திருந்திய நெல் சாகுபடி, பெருநகர காய்கறித் தொகுப்புத் திட்டம், வேளாண்மைத் தகவல் பரிமாற்றம், விலை முன்னறிவிப்பு மற்றும் சந்தை நுண்ணறிவுச் சேவை மற்றும் அனைத்துவிதமான இடுபொருட்களையும் மானிய விலையில்

விநியோகம் செய்து 'செயற்கரிய செய்வர் பெரியோர்' என்ற சான்றோர் வாக்கிற்கேற்ப, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த அல்லும் பகலும் அயராது பாடுபட்டு, தனது சிந்தனையால், செயலால் இந்தியாவில் உயர்ந்து நிற்கின்றார்கள். விவசாயத்தையும், விவசாயப் பெருமக்களையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனது இரண்டு கண்களாகப் பாவித்து, இரு மடங்கு உற்பத்தி, மும்மடங்கு வருமானம் என்ற தாரக மந்திரம் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்து செயல்படுத்தி வருகின்றார்கள்.

பிற்பகல் 1–40

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் உணவு தானிய உற்பத்தி, வரலாற்றுச் சாதனையாக 5 கோடியே 26 இலட்சத்து 3 ஆயிரம் மெட்ரிக் டன் என்ற உயரிய அளவை எட்டியுள்ளது. ஆனால் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 2006 முதல் 2011 வரையிலான காலகட்டத்தில் உணவு தானிய உற்பத்தி வெறும் 3 கோடியே 70 இலட்சத்து 44 ஆயிரம் மெட்ரிக் டன்னாக மட்டுமே இருந்தது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடந்த நல்லாட்சியில், தொலைநோக்குத் திட்டச் செயல்பாட்டினால் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இருந்த உற்பத்தியைவிட, 1 கோடியே 55 இலட்சத்து 59 ஆயிரம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது என்பதை இம்மாமன்றத்தில் பதிவு செய்வதில் பெருமிதம் அடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறாக உணவு தானிய உற்பத்திக்காக செயற்கரிய பல திட்டங்களை வகுத்து, விஞ்ஞானபூர்வமாகச் செயலாற்றியதன் விளைவாக மொத்த உணவு தானிய உற்பத்தி, பயறு வகை உற்பத்தி மற்றும் சிறு தானிய உற்பத்திக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு 3 முறை மத்திய அரசின் 'கிரிஷி கர்மான்' விருதைப் பெற்றுள்ளது என்பதை நான் இந்த மாமன்றத்தில் பதிவுசெய்ய பெருமிதம் அடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 5 ஆண்டுகளில் வேளாண்மைக்கான நிதி ஒதுக்கீடு ரூ.7,434 கோடி மட்டும். ஆனால்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஐந்தாண்டுக் கால ஆட்சியில் வேளாண்மைத் துறைக்கு 23,655 கோடியே 52 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தொகை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியைவிட 3 மடங்கு அதிகமாகும். இவ்வகையில் வேளாண்மைக்குப் புத்துயிர் ஊட்டி, மறுமலர்ச்சி ஏற்படுத்தி, இந்தியாவுக்கே வழிகாட்டியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்குகின்றார்கள். அந்த வகையில், மாண்புமிகு அம்மா அவர்களின் செயல்பாடுகளை மறைத்திடவோ, மறுத்திடவோ முடியாது என்பதை இந்த மாமன்றத்தில் உறுதிபடக் கூறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, நவீன உழவியல் முறைகளை உள்ளடக்கிய நீடித்த நவீன கரும்பு உற்பத்தித் திட்டத்தின்மூலம் கரும்பு உற்பத்தித் திறன் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் இந்தத் திட்டம் 59 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவில் 78,448 ஹெக்டேர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் கரும்பு உற்பத்தியில் அதிகபட்சமாக ஏக்கருக்கு 73 மெட்ரிக் டன் வரை மகசூல் கிடைக்கப்பெற்றுள்ளது. நடப்பு ஆண்டில், இத்திட்டம் 13 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் 43,688 ஏக்கரில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி செயல்படுத்தப்படும். மண் வளத்தை அதிகரிக்கும் கரும்புச்சோகை நிலப்பரப்புத் திட்டம் 74,100 ஏக்கர் பரப்பில் 7 கோடியே 11 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி செயல்படுத்தப்பட்டது.

மாநிலத்தில் பருத்தி சாகுபடியின் பரப்பளவு 3 இலட்சத்து 35 ஆயிரம் ஏக்கரிலிருந்து 6 இலட்சத்து 25 ஆயிரம் ஏக்கர் வரை அதிகரிக்கும் வகையிலும், ஹெக்டேருக்கு 493 கிலோ என்ற பஞ்சு உற்பத்தித் திறனை 870 கிலோவாக அதிகரிக்கும்பொருட்டும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம் என்ற ஒரு திட்டம் துவங்கப்பட்டது. இத்திட்டம் நடப்பாண்டில் 4 கோடியே 17 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2016 ஆகஸ்ட் 19][திரு. இரா. துரைக்கண்ணு]

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி நீடித்த, நிலையான வேளாண்மை தேசிய இயக்கத்தின்கீழ் 2015–2016 ஆம் ஆண்டில் மானாவாரிப் பகுதி மேம்பாட்டுத் திட்ட ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டத்தின்மூலம் 35 கோடியே 85 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 35 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிர் சார்ந்த செயல் விளக்கங்களோடு 6,885 கறவை மாடுகளும், 63,370 ஆடுகளும் விநியோகிக்கப்பட்டு, 13,212 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். நடப்பாண்டில் 20 ஆயிரத்து 550 ஏக்கர் பரப்பளவில் 21 கோடியே 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி செயல்படுத்தப்படும்.

மகளிர் திறன் மேம்பாட்டில் அதிக அக்கறைகொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, அம்மா பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 770 பண்ணை மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்படத் துவங்கியுள்ளன.

பிற்பகல் 1–45

தமிழகத்தின் தவப் பயனே, விவசாயத்தின் தொலைநோக்கியே, இன்னா செய்தார்க்கு இன்முகம் காட்டும் இமயமே, விவசாயிகளின் நம்பிக்கையே, கருணையின் உருவமே, வந்தாரை வாழ வைக்கும் தமிழகம் (மேசையைத் தட்டும் ஒலி) வந்தாரை வாழவைக்கும் தமிழகம் என்ற சொல்லை மாற்றி, தமிழகத்தையே வாழ வைத்த தன்னிகரில்லா தெய்வமே, மாண்புமிகு புரட்சித் தலைவியே, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் எடுக்கப்பட்டுவரும் முன்னோக்கு நடவடிக்கைகளால், தமிழ்நாடு அனைத்துச் செயல்பாடுகளிலும் சிறந்து விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சுற்றுச்சூழலுக்கு உகந்த நீடித்த நிலையான வேளாண்மைச் செயல்பாடுகளை ஊக்குவிக்கும்பொருட்டு, ரூ.22 கோடியே 47 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மண் வளத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அங்ககப் பண்ணையத்தைப் பிரபலப்படுத்துவதில் அதிக முனைப்போடு செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு 10 மாவட்டங்களில்

2,100 ஏக்கர் பரப்பளவில் அங்ககப் பண்ணை கிராமங்களை ஏற்படுத்தி வருகிறது. இதனால் மாநிலத்தால் சான்றளிக்கப்பட்ட அங்ககப் பண்ணையத்தை வணிகரீதியாகச் செயல்படுத்த அதிக வாய்ப்புகள் உருவாகும். நடப்பாண்டில் 42 குழுக்கள் அமைக்கப்பட்டு, ரூ.2 கோடியே 96 இலட்சம் செலவில் பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அங்ககப் பண்ணையம் ஊக்குவிக்கப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பும், மாதிரிக் கிராமங்களும் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 20 மாவட்டங்களிலுள்ள 49 பின்தங்கிய வட்டாரங்களில் 100 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு ரூ.1 கோடி செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, சிறப்பான விரிவாக்கச் சேவை புரியும் வேளாண்மை விரிவாக்கப் பணியாளர்கள் மற்றும் பசுமைப் புரட்சி விவசாயிகளுக்கு விருது வழங்கி அங்கீகரிக்க ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கடந்த 5 ஆண்டுகளில் ரூ.217 கோடியே 40 இலட்சம் காப்பீட்டு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பயிர் பாதிக்கப்பட்ட 10 இலட்சத்து 12,000 விவசாயிகளுக்கு மாநில அரசின் இழப்பீட்டுத் தொகையாக ரூ.655 கோடியே 7 இலட்சம் வழங்கியுள்ளார்கள். என்ன கொடுப்பார், எதைக் கொடுப்பார் என்று உழவன் எண்ணும் முன்னே, திட்டம் கொடுப்பார், நிதி கொடுப்பார், போதாது போதாதென்றால், இன்னும் கொடுப்பார், வாரி வாரி வழங்குவார் (மேசையைத் தட்டும் ஒலி) வள்ளலாய் இருக்கின்ற எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2014 ஆம் ஆண்டு குறுவைப் பருவம் முதல் புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தினை ரூ.487 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்திட ஆணையிட்டுள்ளார்கள். குறு வட்ட

அளவில் செயல்பட்டுவந்த பயிர்க் காப்பீட்டுத் திட்டம், வருவாய்க் கிராம அளவில் செயல்படவுள்ளதால் இழப்பினைத் துல்லியமாகக் கணக்கிட்டு, அதற்குரிய காப்பீட்டு இழப்பீட்டினை விவசாயிகள் பெற இத்திட்டம் வழிவகை செய்கிறது. பயிர்க் கடன் பெறும் மற்றும் பயிர்க் கடன் பெறாத விவசாயிகள் பதிவு செய்ய ஒரே காலக்கெடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மகசூல் இழப்பு அடிப்படையில் மட்டுமல்லாமல் விதைப்புப் பொய்த்தாலும், நடவு செய்ய இயலாத நிலை ஏற்பட்டாலும், விதைப்பு முதல் அறுவடை வரையிலான காலத்தில் ஏற்படும் இயற்கை இடர்பாடுகளினால் பாதிப்பு ஏற்பட்டாலும் இழப்பீடு வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதேபோல் பண்ணை அளவில் ஏற்படும் பயிர் பாதிப்பு மற்றும் அறுவடைக்குப்பின் வயல் அளவில் ஏற்படும் இழப்பு உள்ளிட்ட அனைத்திற்கும் இழப்பீடு வழங்க இப்புதிய திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒருங்கிணைக்கப்பட்ட தொகுப்புக் காப்பீட்டுத் திட்டம் என்ற புதிய திட்டத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தியுள்ளார்கள். இத்திட்டத்தில் பயிர்களுக்குக் காப்பீடு வழங்குவதோடு, இயந்திரங்கள், ஆயுள் காப்பீடு, விபத்து, வீடு மற்றும் மாணவர்கள் பாதுகாப்பு போன்றவற்றிற்கும் காப்பீடு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் ஊரக மேம்பாட்டு நிதியைக் கொண்டு 100 வட்டாரங்களில் ரூ.155 கோடி செலவிலும், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ரூ.69 கோடி செலவிலும் 46 கிடங்கு வசதிகளுடன்கூடிய ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. விவசாயிகளிடையே அதிக வரவேற்புள்ள குட்டை மற்றும் நெட்டை வீரிய ஒட்டுத் தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்ய, திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டாரம், வடுவூர் தென்பாதி கிராமத்தில் 15 ஏக்கர் நிலப்பரப்பில் புதியதாக வீரிய ஒட்டுத் தென்னை மற்றும் நாற்றுப் பண்ணை உருவாக்க 69 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

கழனிகளைக் கணினிகளுடன் இணைத்து, குறுஞ்செய்தி வழி தகவல் புரட்சி செய்து, 30 கோடிக்குமேல் தகவல் பரிமாற்றம் செய்து, அகில இந்திய அளவில் முன்னோடி மாநிலமாகத் தமிழகத்தை உயர்த்தி, வேளாண்மையைக் கணினிமயமாக்கிய மாண்புமிகு புரட்சித் தலைவியே, அம்மா. மின் ஆளுமையினைக் கருத்திற்கொண்டு, மின் ஆளுமை உத்திகளின்கீழ் வேளாண்மையில் தகவல் தொழில்நுட்பத்தினை முழுவதுமாகப் பயன்படுத்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பண்ணைப் பயிர் மேலாண்மைத் திட்டம், விவசாயிகளின் ஒருங்கிணைந்த கையேடு, தொடுதிரை கணினி மையங்கள் போன்ற பல்வேறு புதிய உத்திகளையும், அனைத்துத் தகவல்களையும் ஒரே இடத்தில் அளிக்கும் AGRISNET என்ற வேளாண் வலைதளத்தையும் துவக்கி வைத்து, அகில இந்திய அளவில் மின் ஆளுமையில் தமிழகம் முன்னோடியாகத் திகழ நடவடிக்கை எடுத்துள்ளார்கள். விவசாயிகளுக்கு விரிவாக்கச் சேவையை விரைவாக வழங்கிட உரக் கட்டுப்பாடு, மேலாண்மை தகவல் முறை, நுண்ணீர்ப் பாசனம் மேலாண்மை மற்றும் தகவல் முறை, விதை உற்பத்தி, அமலாக்கம் மற்றும் சான்றளிப்பு முறை, பண்ணை மேலாண்மை தகவல் முறை ஆகியவற்றிற்கு தனித்தனியே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி உருவாக்கப்பட்ட புதிய மென்பொருள் விரைவில் விவசாயிகள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

பிற்பகல் 1–50

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வழங்கப்பட்ட கையடக்கக் கருவிகள்மூலம் களப் பணியாளர்கள் விவசாயிகளின் சாகுபடி நிலங்களைக் கண்காணித்து வருகின்றனர். இணையதளத்தில் பதிவு செய்துள்ள விவசாயிகள் தங்கள் அலைபேசி வாயிலாக, தகவல்களை இலவசமாக அறிந்துகொள்ளலாம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, சீனா, பிலிப்பைன்ஸ், இஸ்ரேல் மற்றும் தாய்லாந்து போன்ற அயல்நாடுகளில் கடைபிடிக்கப்படும் உயரிய வேளாண் அறிவியல் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்ச்சியை தமிழ்நாட்டு விவசாயிகளும் அறிந்துகொள்ளும் வகையில், ரூபாய் 3 கோடியே 52 இலட்சம்

செலவில் 100 விவசாயிகள் வெளிநாடுகளுக்கு விவசாயக் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர். மேலும், ரூபாய் 4 கோடியே 90 இலட்சம் செலவில் 10,000 விவசாயிகள் குஜராத், மஹாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கர்நாடகா, கேரளா, ஒடிசா மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு உள்நாட்டு விவசாயக் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர். சிறந்த வேளாண்மைச் சாகுபடி முறைகளை விவசாயிகள் முழு ஈடுபாட்டுடன் கடைபிடிக்க, அவர்களை ஊக்கவிக்க வேண்டுமென்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, ஒவ்வோர் ஆண்டும் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாநில அளவில் 9 போட்டிகளும், மாவட்ட அளவில் 88 போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, திருந்திய நெல் சாகுபடித் தொழில்நுட்பத்தைக் கடைபிடித்து மாநில அளவில் நெற்பயிரில் அதிக மகசூல் பெறும் விவசாயிக்கு ரூ.5,00,000/– பரிசுத் தொகையும், ரூ.3,500/– மதிப்பிலான பதக்கமும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் குடியரசு தின விழாவில் வழங்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

தோட்டக்கலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசுமைக் குடில்கள் மற்றும் நிழல் வலைகள் என பாங்கான, பாதுகாப்பான சாகுபடிக்குப் பொருத்தமான திட்டம் தந்தவர், எங்கள் பாசமிகு தாய், மாண்புமிகு அம்மா அவர்கள். தமிழ்நாட்டில் தோட்டக்கலைத் துறையில் முழுமையான வளர்ச்சியை மேற்கொள்ளும் முக்கிய நோக்கத்துடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, தேசிய தோட்டக்கலை இயக்கம் 22 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் ரூபாய் 439 கோடியே 8 இலட்சம் செலவில் 2,08,235 ஏக்கர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம் மற்றும் 15,14,000 சதுர மீட்டர் பரப்பளவில் நிழல் வலை குடில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் விவசாயிகள் உயர் மதிப்புத் தோட்டக்கலைப் பயிர்களான குடை மிளகாய், வெள்ளரி, ஜெர்பரா, ரோஜா மற்றும் கார்னேஷன் போன்ற பயிர்களைச்

சாகுபடி செய்து வருகின்றனர். நடப்பாண்டில் இத்திட்டம் ரூபாய் 91 கோடியே 72 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் புதிய பரப்பு விரிவாக்கம், பழைய தோட்டங்களைப் புதுப்பித்தல், பாதுகாக்கப்பட்ட பயிர்ச் சாகுபடி, மகரந்தச் சேர்க்கையை ஊக்குவித்தல் உள்ளிட்ட சிறப்புத் திட்டங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி செயல்படுத்தப்படவுள்ளன. நடப்பாண்டில் ரூபாய் 96 இலட்சம் செலவில் 2,000 ஏக்கர் பரப்பில் தென்னையில் ஊடுபயிராக கோகோ சாகுபடி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழக மக்களின் உடல் நலனில் மிகுந்த அக்கறைக் கொண்டும், மருத்துவப் பயிர்களின் மகிமையைக் கருத்தில் கொண்டும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மருத்துவப் பயிர்கள் திட்டத்தின்கீழ், மருந்து கூர்க்கன், கண்வலிக் கிழங்கு, அவுரி, நித்திய கல்யாணி, நெல்லி, மணத்தக்காளி, திப்பிலி மற்றும் துளசி சாகுபடியை ஊக்குவிக்க முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். இத்திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டிலும் ரூபாய் 4 கோடியே 10 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 1,831 ஏக்கர் பரப்பில் மருத்துவப் பயிர்களைச் சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மூங்கில் பயன்பாட்டினைக் கருத்தில் கொண்டு, வனமில்லா பகுதிகளில் மூங்கில் சாகுபடியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேசிய வேளாண் காடுகள் மற்றும் மூங்கில் இயக்கத்தின்கீழ், சாகுபடி செலவினத்தில் 35 சதவிகிதமும், ஹெக்டேருக்கு அதிகபட்சமாக ரூ.10,500/– வரை மானியம் வழங்க ஆணையிட்டுள்ளார்கள். நடப்பாண்டில் இத்திட்டம் ரூ.51 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 288 ஏக்கர் பரப்பில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழக மக்களின் உணவுப் பழக்கவழக்கங்களில் காய்கறிகளின் பங்கு இன்றியமையாதது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெருநகரங்களில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான, சத்தான, தரமான காய்கறிகள் கிடைப்பதை உறுதி செய்ய, பெருநகர காய்கறி தொகுப்பு அபிவிருத்தித் திட்டத்தைத் துவக்கியுள்ளார்கள்.

இத்திட்டம், 22,215 ஏக்கர் பரப்பளவில் காய்கறிச் சாகுபடி மற்றும் 60,600 சதுர மீட்டர் பரப்பளவில் பாதுகாக்கப்பட்ட சூழலில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, காய்கறிகளைச் சந்தைப்படுத்த 20 காய்கறி சேமிப்பு சேகரிப்பு மையங்கள், 5 சிப்பம் கட்டும் அறைகள், 130 காய்கறி சில்லறை விற்பனை மையங்கள் மற்றும் 23 குளிர்சாதன சரக்கு வண்டிகள் மானிய விலையில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய அரசு குறு, சிறு விவசாயிகளுக்கும் மற்றும் இதர விவசாயிகளுக்கும் நுண்ணீர்ப் பாசனத்திற்கு வழங்கி வந்த மானியத்தைக் குறைத்துள்ளது. எல்லா கடவுள்களும் வேண்டினால்தான் வரம் கொடுப்பார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எவருக்கும் எப்போதும் எல்லா வகையிலும் கேட்காமலேயே கொடுப்பதால் (மேசையைத் தட்டும் ஒலி) ஆதிலட்சுமியாக, தனலட்சுமியாக, தானியலட்சுமியாக, கஜலட்சுமியாக, சந்தானலட்சுமியாக, வீரலட்சுமியாக, வித்யாலட்சுமியாக, விஜயலட்சுமியாக மொத்தத்தில், மாண்புமிகு அம்மா அவர்கள் மகாலட்சுமியாக வாழும் தெய்வமாக நம் கண்முன்னே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1–55

பாசன நீரின் பயன்பாட்டுத் திறனை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அகில இந்திய அளவில் வேறு எந்த மாநிலமும் நினைத்துக்கூட பார்க்காத அளவிற்கு குறு, சிறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியத்திலும் நுண்ணீர்ப் பாசனத் திட்டத்தினை வழங்கி, சிக்கன நீர்ப் பாசனத்திற்கு உன்னத நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். ‘உயிர் நீராம் பாசன நீரின்’ அருமை அறிந்து, அதனைச் சிக்கனமாகப் பயன்படுத்திட குறு, சிறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியத்தில் சொட்டு நீர்ப் பாசனத் திட்டம் வகுத்து, இந்தியாவில் எந்தவொரு மாநிலமும் செய்திடாத சாதனை செய்த சாதனைச் செம்மலே, விண்ணே, சிகரமே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம்

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், நுண்ணீர்ப் பாசனத் திட்டம் 3,42,525 ஏக்கரில் ரூ.873 கோடியே 2 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. இந்தச் சாதனை இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் அடையப்பெறாத உன்னதச் சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நுண்ணீர்ப் பாசனத் திட்டத்திற்காக வெறும் ரூ.178 கோடியே 57 இலட்சம் மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1 இலட்சத்து 57 ஆயிரத்து 43 ஏக்கரில் மட்டுமே செயல்படுத்தப்பட்டது என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்கிறேன்.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 2 இலட்சத்து 60 ஆயிரம் ஏக்கர் பரப்பில் ரூ.228 கோடியே 76 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தோட்டக்கலைப் பயிர்களுக்கான உயிர் தொழில்நுட்ப உற்பத்தித் திறன் பெருக்கம், துல்லியப் பண்ணையம், பாதுகாக்கப்பட்ட சாகுபடி முறை, பந்தல் சாகுபடி மற்றும் மானாவாரி பகுதி மேம்பாடு முதலிய திட்டங்களை அகில இந்திய அளவில் வேறு எந்த மாநிலத்திலும் முனைப்புடன் செயல்படுத்த முன்வராத நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தியுள்ளார்கள். நடப்பாண்டில், ரூபாய் 80 கோடியே 70 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இந்திய அரசின் தேசிய தோட்டக்கலை வாரியம், 34 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில், தரமான நடவுப் பொருட்கள் உற்பத்திக்கான தரச்சான்றினை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசிற்கு அளித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, கிருஷ்ணகிரி மாவட்டம், தளியில் ரூ.3 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டில் தோட்டக்கலைப் பயிற்சி மையம் மற்றும் விவசாயிகள் தங்கும் விடுதி, ரூ.8 கோடியே 80 இலட்சம் மதிப்பில் கொய்மலருக்கான மகத்துவ மையம், கன்னியாகுமரி அரசு தோட்டக்கலைப் பண்ணையில் 15 ஏக்கரில் உருவான ரூ.4 கோடி மதிப்பில் சுற்றுச்சூழல் பூங்கா, கொடைக்கானல் அரசு தோட்டக்கலைப் பண்ணையில் 11 ஏக்கர் பரப்பில் ரூ.3 கோடியே 80 இலட்சம் மதிப்பில் ரோஜா தோட்டம் மற்றும் கொய்மலர் மாதிரி செயல் விளக்கக் கூடம், ரெட்டியார்

சத்திரத்தில் ரூ.10 கோடியே 18 இலட்சம் மதிப்பீட்டில் காய்கறிகளுக்கான மகத்துவ மையம், மாதவரம் அரசு தோட்டக்கலைப் பண்ணையில், ரூ.5 கோடியே 23 இலட்சம் மதிப்பீட்டில் அலங்காரம் மற்றும் செயல் விளக்கத் தோட்டம், உதகை, அரசு தாவரவியல் பூங்கா ரூ.5 கோடியே 50 இலட்சம் செலவில் புதுப் பொலிவூட்டல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

81 இலட்சம் பண்ணைக் குடும்பங்களின் அரணே, காண்போருக்கு அமைதியின் உருவே, அறிந்தவருக்கு அதிசயமே, அற்புதமே, எதிரிகளுக்கு சிம்ம சொப்பனமே, தீர்க்கத் தரிசனமே, நம்பிக்கை நட்சத்திரமே, அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளுக்குத் தரமான சான்றளிக்கப்பட்ட விதைகள் தடையின்றி உரிய நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்ய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. 5 ஆண்டுகளில், 6 இலட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் பரப்பில் விதைப் பண்ணைகள் பதிவு செய்யப்பட்டு 4 இலட்சத்து 50 ஆயிரத்து 360 மெட்ரிக் டன் விதைகள் சான்றளிக்கப்பட்டு தரமான விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. கோயம்புத்தூர் விதைப் பரிசோதனை நிலையம், பன்னாட்டு விதைப் பரிசோதனைக் குழுமத்தில் உறுப்பினராக அறிவிக்கைச் செய்திருப்பது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசுக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும். அகில இந்திய அளவில் அரசுத் துறையில் பன்னாட்டு விதைப் பரிசோதனைக் குழுமத்தின் அங்கீகாரம் பெற்ற முதல் விதைப் பரிசோதனை நிலையம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. மத்திய அரசின் வேளாண் அமைச்சகத்தால், இந்திய நாட்டின் மிகச் சிறந்த விதைப் பரிசோதனை நிலையத்திற்கான விருது கோவை விதைப் பரிசோதனை நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் பதிவு செய்ய விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, அங்ககச் சான்றளிப்பு அவசியத்தைப் பிரபலப்படுத்தும் வகையில், 5 ஆண்டுகளில், 1 இலட்சத்து 31 ஆயிரத்து 356 ஏக்கர் பரப்பு அங்ககச் சான்றளிப்புத் துறையின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண்மைப் பொறியியல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு தொலைநோக்குப் பார்வையுடன் வேளாண்மையினை இயந்திரமயமாக்குதல், சூரியசக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளை வழங்குதல் மற்றும் நீர் மேலாண்மைத் திட்டம் ஆகிய திட்டங்களை மிகப் பெரிய அளவில் செயல்படுத்தி வருகிறது. விவசாயிகள் மட்டும் விவசாயக் குழுக்கள்மூலம் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்களை நிறுவுதல், சர்க்கரை ஆலைகள்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்முனைவோர்களுக்குக் கரும்புச் சாகுபடிக்குத் தேவையான கருவிகளை மானியத்தில் வழங்குதல், கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்தல், அறுவடைக்குப் பின் தொழில்நுட்பம் போன்ற பல முன்னோடியான அணுகுமுறைத் திட்டங்களை வடிவமைத்து, செயல்படுத்துவதன்மூலம் பண்ணை சக்தி எளிதாகக் கிடைத்திட வழி வகை செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி ஐந்தாண்டுகளில், 69,621 விவசாயிகளுக்கு ரூபாய் 238 கோடியே 4 இலட்சம் மானியத்துடன் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.*

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாடகைக்கு வழங்கும் 212 மையங்களும் மற்றும் கரும்புச் சாகுபடிக்கான இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாடகைக்கு வழங்கும் நான்கு மையங்களும் ரூபாய் 23 கோடியே 4 இலட்சம் மானிய உதவியுடன் நிறுவப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் மேலும் கரும்புச் சாகுபடிக்கான இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வாடகைக்கு வழங்கும் மையம் ஒன்று, ரூபாய் 55 இலட்சத்து 44 ஆயிரம் மானிய உதவி வழங்கி அமைக்கப்படவுள்ளது. மேலும் 324 வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் ரூபாய் 32 கோடியே 44 இலட்சம் மானிய உதவியுடன் அமைக்கப்படவுள்ளன.*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விவசாயிகள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் 2013–2014 ஆம் ஆண்டு முதல் 2015–2016 வரை 2 ஆயிரத்து 130 சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் நிறுவுவதற்கு ரூபாய் 75 கோடியே 62 இலட்சம் மானியம் வழங்கியுள்ளார்கள்.

தமிழகத்தில் 16 கால்வாய் பாசனப் பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கத் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஐந்தாண்டுகளில் ரூபாய் 198 கோடியே 22 இலட்சம் செலவில் 1 இலட்சத்து 90 ஆயிரத்து 503 ஏக்கர் பரப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 14 ஆயிரத்து 965 ஏக்கர் பரப்பில் ரூபாய் 85 கோடியே 15 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

வேளாண்மைக் கல்வி: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் 14 உறுப்புக் கல்லூரிகள் மற்றும் 22 இணைப்புக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இளம் அறிவியல் பட்டப் படிப்புகளைப் பொறுத்தவரையில் நடப்பாண்டில் மொத்தம் 13 பட்டப் படிப்புகளில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த 14 அரசுக் கல்லூரிகளில் 1,280 மாணவ, மாணவியரைச் சேர்க்கவும், 22 தனியார் இணைப்புக் கல்லூரிகளில் 2 பட்டப் படிப்புகளில் 1,660 மாணவ, மாணவியரைச் சேர்க்கவும், மொத்தம் 2,940 இடங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டு மாணவர் சேர்க்கை நடைபெற்றுள்ளது. மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கோயம்புத்தூர் வளாகம் உட்பட 7 இடங்களில் இயங்கிவரும் 11 கல்லூரிகளில் மூதறிவியல் பட்டப் படிப்பில் 455 மாணவர்கள் மற்றும் முனைவர் பட்டப் படிப்பில் 194 மாணவர்களையும் சேர்க்க ஒப்புதல் அளிக்கப்பட்டு. மாணவர் சேர்க்கைக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வேளாண்மை ஆராய்ச்சி: வேளாண்மை ஆராய்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, 2012–2013 ஆம் ஆண்டில் தேனி மாவட்டம், ஆனைமலையான்பட்டி என்கிற மல்லிங்காபுரத்தில் திராட்சை ஆராய்ச்சி நிலையமும், 2013 ஆம் ஆண்டு திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலையில்

சிறுதானியங்களுக்கான மகத்துவ மையமும், 2014 ஆம் ஆண்டு சிவகங்கை மாவட்டம், செட்டிநாட்டில் உணவு பதனிடும் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையமும், 2014–2015 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவிலில் எலுமிச்சை ஆராய்ச்சி நிலையமும் புதிதாகத் துவங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பல்வேறு பயிர்களில் மொத்தம் 44 இரகங்களும், 9 பண்ணைக் கருவிகளும் வெளியிடப்பட்டன. இதில் நெற்பயிரில் 6 இரகங்களும், தோட்டக்கலைப் பயிர்களில் 15 இரகங்களும், இதரப் பயிர்களில் 23 இரகங்களும் விவசாயப் பெருங்குடி மக்களின் பயன்பாட்டுக்காக வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின்மூலம் நடத்தப்படும் மூன்றாண்டுகள் இளநிலை வேளாண் தொழில்நுட்பப் பட்டப் படிப்புமூலம் 5 ஆண்டுகளில் 332 பேர் பயனடைந்துள்ளனர். மேலும், இந்த இயக்ககம் நடத்தும் 5 பட்டயப் படிப்புகள் மற்றும் 16 சான்றிதழ் படிப்புகள்மூலம் மொத்தம் 2,137 பேர் 5 ஆண்டுகளில் பயனடைந்துள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையில் செயல்படும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும், எந்த பல்கலைக்கழகமும் பெற்றிடாத வகையில் 5 ஆண்டுகளில் 18 விருதுகளைப் பெற்று, தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

திறன் மேம்பாட்டு மையம்: மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், குமுளூரில் வேளாண்மை இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கும் பயிற்சி அளிக்க ஒரு திறன் மேம்பாட்டு மையம் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் 2015–2016 ஆம் ஆண்டு துவங்கப்பட்டுள்ளது.

சந்தை மற்றும் விலை முன்னறிவிப்பு சேவைகள்: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் விவசாயிகளுக்கு விலை முன்னறிவிப்பு மற்றும் சந்தை நுண்ணறிவுச் சேவைகளைத் தனது உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையத்தின்மூலம்

அளித்து வருகிறது. விதைப்பிற்கு முன்பும் அறுவடைக்கு முன்பும் ஆக இரண்டு முறை முன்னறிவிப்புச் செய்கிறது. இந்த மையம், 24 வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களின் விலை முன்னறிவிப்புகளைச் செய்து வருகிறது. இந்தச் சேவை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இரண்டு மடங்கு உற்பத்தி மும்மடங்கு வருமானம் என்ற இலக்கினை அடைவதற்கு விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாகவுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியஆம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்ற திருவள்ளுவரின் குறளுக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களின் செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சொல்வது எவருக்கும் எளியவாம். சொல்லியபடி செய்து முடித்தல் அரியனவாம் என்பதற்கேற்ப செயல்பட்டு பற்பல வெற்றிகளைப் பெற்றவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–05

வேளாண்மைக்கு வித்திட்ட சமூக விஞ்ஞானி, விவசாய விஞ்ஞானி, அரசியல் ஞானி, காவேரித் தாய், விவசாயிகளின் பாதுகாவலர், எதிரிகளே இல்லை என்று (மேசையைத் தட்டும் ஒலி) எதிலும் வெற்றி, எங்கும் வெற்றி என்று வெற்றிப் பாதையில் வீறு நடைபோடும் சிங்கமே, எங்கள் தலைவியே, மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் எங்கள் அம்மா. தமிழக மக்களின் நலன் ஒன்றினையே தன் வாழ்க்கையாகக் கொண்டு தவ வாழ்க்கை வாழ்ந்து வரும் கலியுகத்தின் கண்கண்ட தெய்வமே, காவியத் தலைவியே, பத்து கோடி தமிழ் மக்களின் தலைவியே எங்கள் அம்மா, பாரதியார் சித்தரித்த பாரதம் போற்றும் வீரத்தின் உறைவிடமே, வீர மங்கையே, மணிமகுடமே, மாமனிதர்கள் போற்றும் நவரத்தினமே, விவசாயிகளின் விடிவெள்ளியே, நம்பிக்கை நட்சத்திரமே, தாயே, எங்கள் அம்மா. பரந்து, விரிந்த பாரத நாட்டில், "இரண்டு மடங்கு உற்பத்தி, மூன்று மடங்கு வருமானம்" என்ற தாரக மந்திரத்தைத் தமிழகத்திற்குத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) உணவு தானிய உற்பத்தியில் பாரதம் போற்றும் வெற்றியைத் தனதாக்கிக் கொண்ட வெற்றி நாயகி, உலக நாயகி, இலட்சிய நாயகி, புரட்சித் தலைவி இதய தெய்வம் எங்கள் மாண்புமிகு அம்மா.

பொய்யும், புரட்டும் துணையாய்க் கொண்டு
பிழைத்தவரெல்லாம் போனாங்க,
மூலைக்கு மூலை தூக்கி எறிஞ்சோம்,
தலைக்குனிவாக ஆனாங்க,
அறிவில் தெளிவிருக்கு,
நம் உடம்பில் வலுவிருக்கு,
மனதில் துணிவிருக்கு,
தன்மானம் துணையிருக்கு (மேசையைத் தட்டும் ஒலி)

என்பதற்கேற்ப, *234* தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட்டு, *(மேசையைத் தட்டும் ஒலி)* வெற்றி வாகை சூடி, நல்லாட்சிப் புரிந்து வரும் வீரத்தின் விளை நிலமாம், வெற்றியின் பிறப்பிடமாம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எல்லா வளமும், நலமும் பெற்று, பல்லாண்டு, பல்லாண்டு, பலகோடி நூற்றாண்டுக் காலம் வாழ்ந்து, *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழக மக்களின் நலனைக் காத்திட வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

விவசாயத் தோட்டத்தில் பூக்கின்ற மலர்களெல்லாம் அம்மா அவர்களின் தாயுள்ளம் நினைத்துத் தலையாட்டிச் சிரிக்கும்; தலையாட்டும் நெற்கதிர்கள், தவழ்ந்து வரும் தென்றலிடம் அழகாய்ச் சொல்லி அகம் மகிழும், 'அம்மா அவர்களின் புகழ் ஓங்குக' என்று. ஏர் பூட்டும் விவசாயி ஏறுமுகம் காண்கிறார்; சோறுடைத்த பெருநாட்டில் சோகமின்றி வாழ்கின்றார்; விதைக்கின்ற பொருட்கள் யாவும் மாண்புமிகு அம்மா அவர்களின் தயவில் மானியத்தில் கிடைக்கின்றன; வாழுகின்றார், வளருகின்றார் விவசாயி.

பூமி உள்ள வரை எங்கம்மா புகழே நிலைத்திருக்கும்;
(மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவி பெயர் மக்களின் நெஞ்சில் நிறைந்திருக்கும்.
பூமி உள்ள வரை எங்கம்மா புகழே நிலைத்திருக்கும்;
புரட்சித் தலைவி பெயர் மக்களின் நெஞ்சில் நிறைந்திருக்கும்.
அன்னமிட்டு அன்பு காட்டி, அரவணைத்துச் செல்வதில்,
அம்மாவுக்கு நிகர் எங்க அம்மாதான்
பாசத்தோடு மக்களையும் நேசிப்பதில்
அம்மாவுக்கு நிகர் எங்க அம்மாதான்.
அம்மாவுக்கு நிகர் எங்க அம்மாதான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் புகழே தமிழகத்தில் நிலைத்திருக்கும் என்று கூறி, மாண்புமிகு அம்மா அவர்களின் மலர்ப் பாதங்கள் பணிந்து வணங்குகிறேன். இறைவா! தமிழகத்தை ஆண்டு, தமிழக மக்களையும், தமிழினத்தையும் காக்க, எங்களுடைய அம்மா அவர்களுக்கு நீண்ட ஆயுளையும், நிறைந்த வாழ்வையும், நலத்தையும், வளத்தையும் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை வாழ்விக்க வேண்டுமென்று வேண்டுகிறேன். இறைவா! எங்களுடைய தாய், எங்களுடைய தங்கம், எங்களுடைய தாரக மந்திரம், எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீடூழி, நீடூழி வாழ, நெடுங்காலம் வாழ, (மேசையைத் தட்டும் ஒலி) பல்லாண்டு வாழ, பலகோடி நூற்றாண்டு வாழ, எல்லா வளமும், நலமும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் மலர்ப் பாதங்கள் வணங்கி, வேளாண்மைத் துறைக்கான புதிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

1. நெல் வயல்களில் பாசன நீர் தேவையினைக் கண்காணிக்க புதிய முறை

நெற்பயிரில் பாசன நீர் பயன்பாட்டு அளவைக் குறைக்கவும், தேவைக்கேற்ப நீர்ப் பாசனம் மேற்கொள்ளவும், "நீர் குழாய் முறை" என்னும் புதிய உத்தியினை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, முன்னோடித் திட்டமாக, கடலூர் மாவட்டத்தில் உள்ள டெல்டா பகுதி அல்லாத 8 வட்டாரங்களில், 61,140 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 1 கோடியே 58 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்.

2. ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மாதிரி கிராமங்களை அமைத்து விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல்

சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, நஞ்சில்லா உணவு கிடைப்பதை உறுதி செய்யும் உத்திகளை ஊக்குவிக்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். விவசாயக் குழுக்கள்மூலம் பண்ணையளவில் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகளை உற்பத்தி செய்யும் முன்னோடித் திட்டம் 150 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு, விவசாயிகளிடையே பெரும் வரவேற்பைப்

பெற்றது. 2016–2017 ஆம் ஆண்டில், ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 20 மாவட்டங்களில் மேலும் 100 ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மாதிரி கிராமங்கள் அமைக்கப்படும்.

3. வளம் குறைந்த தரிசு நிலங்களில் மரவகை எண்ணெய் வித்துப் பயிர் சாகுபடி மற்றும் விவசாயிகளுக்குத் தரமான மரக்கன்றுகள் விநியோகம்

வளம் குறைந்த தரிசு நிலங்களில் வேம்பு, புங்கம் போன்ற மரவகை எண்ணெய் வித்துப் பயிர்களைச் சாகுபடி செய்து விவசாயிகள் வருமானம் ஈட்டவும், ஊடுபயிர் சாகுபடி செய்து கூடுதல் வருமானம் பெறவும் உரிய நடவடிக்கை எடுக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதற்கிணங்க, மரவகைகள் மற்றும் ஊடுபயிர் சாகுபடி செய்யவும், பராமரிக்கவும் மானியம் அளித்து, விவசாயிகளை ஊக்குவிக்கத் தேவையான, தரமான மரக்கன்றுகளை அரசே உற்பத்தி செய்து விநியோகிக்கவும், 2016–2017 ஆம் ஆண்டில் ரூபாய் 1 கோடியே 87 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்.

பிற்பகல் 2–10

4. அடர் நடவு முறையில் மா சாகுபடியை ஊக்குவித்தல்

அகில இந்திய அளவில், மாம்பழ உற்பத்தியில் தமிழகம் முக்கிய மாநிலமாக விளங்குகிறது. குறைந்த பரப்பில் மாம்பழ உற்பத்தியினை அதிகரிக்க, "அடர் நடவு முறை", நீர்வழி உரமிடுதல் ஆகிய நவீன தொழில்நுட்பங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாம்பழ உற்பத்தியை அதிகரிக்க, 2,750 ஏக்கர் பரப்பளவில், அடர் நடவு முறையில் மா சாகுபடியை மேற்கொள்ள நடவுச்செடிகள், ஒருங்கிணைந்த உர மேலாண்மை மற்றும் பயிர்ப் பாதுகாப்பிற்கான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்க நடப்பாண்டில் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவினை நவீனப்படுத்துதல்

கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவிற்கு, ஆண்டுதோறும் ஏறத்தாழ ஆறு இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகைப் புரிகின்றனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,

2016 ஆகஸ்ட் 19] [திரு. இரா. துரைக்கண்ணு]

சிறுவர் பூங்காவை மேம்படுத்துதல், சுற்றுலா பயணிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், கணினிமயமாக்கப்பட்ட நுழைவுச்சீட்டு வாயில்கள் அமைத்தல், கண்காணிப்பு கேமரா பொருத்துதல், விருந்தினர் இல்லம் மற்றும் நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல், வாகனங்கள் நிறுத்துமிடம் அமைத்தல் ஆகிய பணிகள் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

6. உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு வணிக வளாகங்களில் வேளாண் விற்பனை மையங்கள் ஏற்படுத்துதல்

விவசாயிகளுக்கு நல்ல இலாபகரமான விலை கிடைக்கச் செய்ய, விளைபொருள் வாரியாக உள்ள விவசாயக் குழுக்களை ஒருங்கிணைத்து, உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை உருவாக்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். உற்பத்தி செய்த விளைபொருட்களை, இந்த அமைப்புகள் மதிப்புக்கூட்டி, விளம்பரப்படுத்தி விற்பனை செய்திட, 10 விற்பனை மையங்கள், வேளாண் விற்பனைத் துறையின் சிறப்பு வணிக வளாகங்களில் அமைக்க, நடப்பாண்டில் ரூபாய் 20 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

7. வேளாண்மைப் பொறியியல் துறை பணிமனைகள் மற்றும் மத்திய பண்டகசாலையினை வலுப்படுத்துதல்

வேளாண்மையைப் பெருமளவில் இயந்திரமயமாக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டதற்கிணங்க, பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வரும் வேளாண் பொறியியல் துறையின் வேலூர், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள பணிமனைகள் மற்றும் இயந்திரங்களுக்குத் தேவையான உதிரிப் பாகங்களை மொத்தமாகக் கொள்முதல் செய்துவரும் மத்திய பண்டகசாலை ஆகியவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, புதிய உபகரணங்கள் மற்றும் நவீனக் கருவிகள் வாங்கி வலுப்படுத்த நடப்பாண்டில் ரூபாய் 2 கோடியே 77 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

8. வேளாண் பொறியியல் துறை அலுவலர்களுக்கு 85 புதிய ஊர்திகள் வழங்குதல்

வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் பல்வேறு திட்டங்களுக்கான மதிப்பீடு தயாரிக்கவும், திட்டத்தினைச் செயல்படுத்தவும், கண்காணிக்கவும் மதிப்பாய்வு செய்யவும்,

அதிக எண்ணிக்கையில் கள ஆய்வு மேற்கொள்ள வேண்டியுள்ளது. துறையில் உள்ள பழைய ஊர்திகளைக்கொண்டு களப் பணிகளை மேற்கொள்வது சிரமமாக உள்ளதால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, பழைய ஊர்திகளுக்குப் பதிலாக 85 புதிய ஊர்திகள் வாங்க நடப்பாண்டில் ரூபாய் 5 கோடியே 53 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. மண் வள மேம்பாட்டிற்காக மண் ஆய்வுக் கூடம் மற்றும் உரக் கட்டுப்பாட்டு ஆய்வகத்துக்குப் புதிய கட்டடம் கட்டுதல் மற்றும் நடமாடும் மண் ஆய்வுக் கூடத்தை வலுப்படுத்துதல்

மண்ணின் வளத்தையும், உரங்களின் தரத்தையும் உறுதி செய்ய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தற்பொழுது வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் விருதுநகர் மண் ஆய்வுக் கூடம் மற்றும் காஞ்சிபுரம் உரக் கட்டுப்பாட்டு ஆய்வகத்திற்குச் சொந்தமாக அரசுக் கட்டடங்கள் கட்டவும், அருப்புக்கோட்டையில் உள்ள நடமாடும் மண் ஆய்வுக் கூடத்தை வலுப்படுத்தவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, நடப்பாண்டில் ரூபாய் ஒரு கோடியே 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

10. உயிர் உரங்கள் தரத்தை உறுதி செய்ய திருச்சியில் இயங்கும் உயிர் உர தரக்கட்டுப்பாட்டு ஆய்வகத்துக்குப் புதிய கட்டடம் கட்டுதல்

மண் வளத்தை மேம்படுத்தி, உற்பத்தியை உயர்த்துவதில் உயிர் உரங்களின் பங்கு மிக முக்கியமாகும். உற்பத்தி செய்யப்படும் உயிர் உரங்களின் தரத்தினைப் பரிசோதிக்க உயிர் உர தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் திருச்சிராப்பள்ளியில் இயங்கி வருகிறது. இந்த ஆய்வகம் அனைத்து வசதிகளுடன் இயங்க, புதிய கட்டடம் ஒன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, 2016–2017 ஆம் ஆண்டில் ரூபாய் 2 கோடியே 77 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் முன்வைத்த கருத்துகளுக்கெல்லாம் வரலாற்றுச்

சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் எனது பதிலுரையில் உரிய விளக்கம் அளித்துள்ளேன். எனவே இம்மாமன்ற உறுப்பினர்கள் எனது விளக்கத்தினை ஏற்றுக்கொண்டு, அரசுக்குக் கோரிய நிதியை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை.

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.6,434,20,72,000/–, மூலதனக் கணக்கில் ரூ.356,55,68,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.150,50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பிற்பகல் 2–15

(ஆ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை).

"கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,095,18,60,000/–, மூலதனக்

கணக்கில் ரூ.93,78,03,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

5. அரசினர் தீர்மானம்

விதி 32–ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 22–8–2016 திங்கட்கிழமை அன்று வினாக்கள்–விடைகள் நேரம் ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ, 22–8–2016 திங்கட்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

2016 ஆகஸ்ட் 19] [பேரவைத் தலைவர்]

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

22–8–2016 திங்கட்கிழமை அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 22–8–2016 (திங்கட்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–16 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

–ஏதுமில்லை–

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

98. மானியக் கோரிக்கை எண் 5–வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017. (தமிழ், ஆங்கிலம்)

99. வேளாண்மைத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2016. (தமிழ், ஆங்கிலம்)

100. மானியக் கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017. (தமிழ், ஆங்கிலம்)

101. கால்நடை பராமரிப்புத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2016–2017. (தமிழ்)

102. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் மக்கள் சாசனம், 2016. (தமிழ்)

103. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் "முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்" என்கிற நூல். (தமிழ்)

[2016 ஆகஸ்ட் 19

104. தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2016–2017.* (தமிழ்)

105. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2016–2017.* (தமிழ்)

106. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2016–2017.* (தமிழ்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I

(480 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 5—வேளாண்மைத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2016—2017

முன்னுரை

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை."

(திருக்குறள் : 1031)

"எனது அரசு முதன்மைப் பிரிவிற்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. வேளாண் பிரிவுக்கு புத்துயிரூட்ட நவீன உழவியல் முறைகளை மேற்கொண்டு பயிர் உற்பத்தித் திறனை அதிகரித்தல், பாசன நீர் பயன்பாட்டுத் திறனை அதிகரிப்பதை பரவலாக்குதல், பண்ணை இயந்திரமயமாக்குதல் மற்றும் அறுவடை பின் செய் நேர்த்திக்கான உட்கட்டமைப்பு மற்றும் வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளை வலுப்படுத்துதல் போன்ற செயல்பாடுகளில் கவனம் செலுத்தி வருகிறது. இப்பிரிவிற்காக அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளாலும் தமிழகத்தில் இரண்டாம் பசுமை புரட்சி ஏற்படுவது உறுதி."

-மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்

மாநில பொருளாதாரத்தின் அடிப்படையாக விளங்கும் வேளாண்மைப் பிரிவை பொறுத்தே இதரப் பிரிவுகளின் செயல்பாடுகள் அமைகின்றன. பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாடு, தொழிற்சாலைகளுக்கு தேவையான மூலப்பொருட்கள் வழங்குதல், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்தல், அந்நிய செலாவணியை ஈட்டித் தருதல், விவசாயிகளின் தனிநபர் வருமானத்தை உயர்த்துதல், வேலை வாய்ப்பு மற்றும் தேசிய வருமானத்தை உயர்த்துதல், வறுமையை அகற்றுதல் போன்ற செயல்பாடுகளில் வேளாண்மை உறுதுணையாக உள்ளது.

[2016 ஆகஸ்ட் 19

வேளாண்மை வளரும்போது, ஊரக மற்றும் நகர்ப்புற வறுமை குறைந்து பொருளாதாரம் வளரும். எனவே ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு, வலுவான வேளாண் அமைப்பே தூணாக விளங்குகிறது. மாறிவரும் பருவநிலை, பருவம் தவறிய மழை, குறைந்து வரும் சாகுபடி பரப்பு மற்றும் நீர்வள ஆதாரங்கள், மண்வளப் பாதிப்பு, கட்டுப்படுத்த இயலாத பூச்சி மற்றும் நோய்கள், இடுபொருள் செலவினம் அதிகரித்தல், இரசாயன மருந்துகளால் மண் மாசுபடுதல், வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறை, நிலையற்ற சந்தை விலை போன்ற பல்வேறு காரணிகள் வேளாண்மை துறையை எதிர்நோக்கியுள்ள சவால்களாகும். இவற்றை முறியடிக்க தமிழக அரசு பல முனைப்பான முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது.

தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஒப்பற்ற தலைமையின்கீழ் வேளாண்மையில் நியாயமான, ஈடு இணையற்ற, நிலையான ஒட்டுமொத்த வளர்ச்சியை அடைய பல்வேறு கொள்கைகள் மற்றும் உத்திகளை வகுத்துள்ளது. பன்னிரண்டாவது திட்ட காலத்தில் பயிர் உற்பத்தித் திறன் மற்றும் விவசாயிகள் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடன், மண் மற்றும் நீர்வள மேலாண்மைக்கான முழுமையான அணுகுமுறை, பயிர் சார்ந்த நவீன தொழில்நுட்பங்களை மேற்கொண்ட வேளாண்மை, தரமான இடுபொருட்கள் விநியோக மேலாண்மை முறை, பண்ணை இயந்திரமயமாக்குதல், ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பு மேம்பாடு, விவசாயிகள் - விரிவாக்க அலுவலர்களுக்கிடையே உள்ள தொடர்பை வலுப்படுத்துதல், சந்தைசார் வேளாண்மை மற்றும் மதிப்பு கூட்டுதல் மேலாண்மை, செய்தி மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப சாதனங்களை அதிகளவில் பயன்படுத்துதல், சிறந்த வேளாண் அறிவு பெற திறன் மேம்பாடு போன்ற தொடர் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வேளாண்மைத் துறையில் உள்ள இடர்பாடுகளை களைய தமிழக அரசு எடுத்த முயற்சிகளால் வேளாண் உற்பத்தி அதிகரித்து வேளாண்மையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வேளாண்மையில் புகுத்தப்பட்ட நவீன உத்திகள் இம்மாநிலத்திற்கு பெருமை சேர்த்ததுடன், பிற மாநிலங்களுக்கும் முன்னோடியாக விளங்குகிறது. அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்களால், மாநிலத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை வித்திட நிலையான முன்னேற்ற பாதை ஏற்படுத்தப்பட்டதுடன், 2011-2012, 2013-2014 மற்றும் 2014-2015 ஆம் ஆண்டுகளில், உணவு தானிய உற்பத்தியில்

2016 ஆகஸ்ட் 19]

100 இல.மெ.டன்னுக்கும் அதிகமாக சாதனை அடையப் பெற்றுள்ளது. நான்காம் முன்மதிப்பீட்டின்படி, 2015-2016 ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தியில் 130.63 இல.மெ.டன் என்ற இதுவரையில்லாத புதிய உயர் அளவை அடைந்துள்ளோம்.

நவீன மற்றும் உயர் மகசூல் தொழில்நுட்பங்களை புகுத்தி, உணவு தானிய உற்பத்தியில் அதிக சாதனை அடைந்தமைக்காக தமிழக அரசு பல்வேறு விருதுகளை பெற்றுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில், உணவு தானிய உற்பத்தியில் உயரிய சாதனை அடைந்ததற்காகவும் (2011-2012), பயறுவகை உற்பத்தியில் அதிக சாதனை அடைந்ததற்காகவும் (2013-2014), சிறுதானியங்கள் உற்பத்தியில் உயரிய சாதனை அடைந்ததற்காகவும் (2014-2015), மூன்று முறை மத்திய அரசிடமிருந்து "கிருஷி கர்மான் விருதினை" தமிழக அரசு பெற்றுள்ளது. பல்வேறு புதிய உத்திகளை இவ்வரசு எடுத்ததன் காரணமாக, "அக்ரிகல்சர் டுடே" என்ற முன்னணி பத்திரிக்கை, "2013ஆம் ஆண்டிற்கான "மாநில வேளாண்மை தலைமை விருதையும்" 2015 ஆம் ஆண்டிற்கான "உணவு உற்பத்தித் திட்ட தலைமை விருதையும்" பெற்றுள்ளது. மேலும், "இந்தியா டுடே" என்னும் புகழ் பெற்ற பத்திரிக்கை, "வேளாண்மையில் சிறந்த பெரிய மாநிலத்திற்கான விருதையும்" இம்மாநிலத்திற்கு வழங்கியுள்ளது. இத்துடன் 2014-2015 ஆம் ஆண்டின் "சிறந்த மின் ஆளுமைக்கான தேசிய தங்க விருதையும்" மத்திய அரசிடமிருந்து தமிழக அரசு பெற்றுள்ளது. ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டத்தின்கீழ் இணை மேலாண்மை தகவல் அமைப்பினை ஏற்படுத்தி, சிறந்த முறையில் திட்டப்பணிகளை பதிவு செய்தமைக்காக தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைக்கு புதுமையான செயலாக்கத்திற்கான சிறப்பு விருது 19-2-2015 அன்று புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

துறையின் தோற்றம்

1880 ஆம் ஆண்டு, இந்தியாவில் பஞ்சம் நிலவியபோது அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைப்படி, 1882 ஆம் ஆண்டு வேளாண்மைக்கென ஒரு புதிய துறை உருவாக்கப்பட்டது. வேளாண்மை இயக்குநரைத் தலைவராகக் கொண்டு தேவையான பணியாளர்களுடன் வேளாண் துறை தனித்து இயங்கும் வகையில் 1904 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. பொது கல்வித் துறையின்கீழ் இருந்த வேளாண் கல்லூரி 1905 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறையில் சேர்க்கப்பட்டு இன்று பல்கலைக்கழகமாகத் திகழ்கின்றது. மாநிலம், மாவட்டம், தாலுகாக்கள் பிரிக்கப்பட்டதைத்

[2016 ஆகஸ்ட் 19

தொடர்ந்து, துறையின் நிர்வாக அமைப்பில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

தமிழக வேளாண்மை – ஒரு கண்ணோட்டம்

தமிழ்நாட்டின் மொத்த நிலப் பரப்பளவு 130.33 இல.எக்டர் (நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 4 சதவீதம்) மற்றும் கடற்கரை நீளம் 922 கி.மீட்டர் ஆகும். நம் நாட்டின் மக்கள் தொகையில் 6 சதவீதமும் (2011 ஆம் மக்கள் தொகை கணக்கெடுப்பு), நீர் ஆதாரங்களில் 3 சதவீதமும் தமிழகம் பெற்றுள்ளது.

சமீபத்திய புள்ளியியல் அறிக்கையின்படி (2014-2015), மாநிலத்தின் நிலப் பயன்பாட்டு விவரம் பின்வருமாறு:

அட்டவணை 1.1 : நிலப்பயன்பாடு

வ. எண்	விவரம்	பரப்பு (இல.எக்)	% மொத்த நிலப்பரப்பிற்கு
1.	காடுகள்	21.25	16.3
2.	நிகர பயிரிடும் பரப்பு (*)	48.19	37.0
3.	இதர மரப்பயிர்கள் சாகுபடி நிலங்கள்	2.36	1.8
4.	நிரந்தர மேய்ச்சல் நிலங்கள்	1.08	0.8
5.	தரிசு நிலங்கள்	9.98	7.7
6.	இதர தரிசு நிலங்கள்	17.34	13.3
7.	பயிரிடுவதற்கேற்ற தரிசு நிலங்கள்	3.25	2.5
8.	வேளாண்மை தவிர இதர உபயோகத்திலுள்ள நிலங்கள்	21.99	16.9
9.	சாகுபடிக்கு இலாயக்கற்ற நிலங்கள்	4.89	3.7
	மொத்த நிலப்பரப்பு	**130.33**	**100**
	பயிரிடுதிறன்(%)	124	–

()[மொத்த பயிரிடும் பரப்பு (59.95 இல. எக்டர்)] - [ஒருமுறைக்கு மேல் சாகுபடி செய்யப்பட்ட பரப்பு (11.75 இல.எக்டர்)]*

2016 ஆகஸ்ட் 19]

மாறிவரும் பருவநிலை மற்றும் மழையளவு வேளாண்மையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. வடகிழக்கு பருவமழை தமிழ்நாட்டிற்கு பெருமளவு மழைபொழிவை தருகின்றது (48%). பெருமளவு மத்திய பகுதிகள் மேற்குத் தொடர்ச்சி மலையின் மழைமறைவு பிரதேசமாக இருப்பதால் தென்மேற்கு பருவ காலத்தில் தமிழகத்தின் வடக்கு மற்றும் தென் கடைக்கோடி பகுதிகள் மட்டும் சாரல் மழை பெறுகின்றன (35%). வடகிழக்கு பருவம், தென்மேற்கு பருவம், கோடை மற்றும் குளிர் காலங்களில் முறையே 48%, 35%, 14% மற்றும் 3% மழை பெறப்படுகிறது.

நீர் பற்றாக்குறை மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். தமிழகத்தின் ஆண்டு சராசரி மழையளவான 921 மி.மீட்டர், நாட்டின் சராசரி மழையளவான 1,200 மி.மீட்டரைவிட குறைவானது. மாநிலத்தில் தனி நபருக்கு கிடைக்கும் ஆண்டு சராசரி நீர் அளவு, அகில இந்திய அளவான 2,200 கன மீட்டருடன் ஒப்பிடுகையில் 750 கன மீட்டராகவே உள்ளது.

மாநிலத்தின் மொத்தப் பாசனப் பரப்பளவான 33.94 இல.எக்டரில் 79% உணவுப் பயிர்களும், 21% இதர பயிர்களும் ஆகும்.

தமிழகத்தின் பல்வேறு பாசன நீர் ஆதாரங்கள் மூலம் பயன்பெறும் நிகர பாசன பரப்பளவு விவரம் பின்வருமாறு:

அட்டவணை 1.2 : நீர் ஆதாரங்கள் வாரியான நிகர பாசனப் பரப்பு

ஆதாரம்	எண்ணிக்கை (எண்கள்)	நிகர பாசன பரப்பு (இல. எக்டர்)	நிகர பாசன பரப்புக்கு சதவீதம்
வாய்க்கால்	2,239	6.69	24.5
ஏரிகள்	41,127	3.68	13.5
கிணறுகள்	18,62,055	16.85	61.8
இதர பாசன ஆதாரங்கள்		0.04	0.2
மொத்தம்	27.26	100	

தமிழகத்தில் சராசரி நில உடைமை 0.80 எக்டராகும். இது அகில இந்திய சராசரி நில உடைமையை (1.15 எக்டர்) விட 44% குறைவாகும்.

[2016 ஆகஸ்ட் 19

1. வேளாண்மை

1.1. துறையின் நோக்கம் மற்றும் சாதனை

மக்களின் வாழ்வாதாரம், வலுவான பொருளாதாரம் மற்றும் சமுதாய மாற்றங்களுக்கான திறன்மிக்க பெட்டகமாக தொடர்ந்து வேளாண்மை துறை இயங்கி வருகிறது. முழுமையான வளர்ச்சி அடைவதற்கு வேளாண் பிரிவின் வளர்ச்சி முக்கிய காரணமாக கருதப்படுகிறது. விஞ்ஞானம் மற்றும் நவீன தொழில்நுட்ப உத்திகள் வேளாண்மையில் ஏற்படுத்திய பெரும் மாற்றத்தால், பயிர் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

நாட்டின் முன்னோடி மாநிலங்களுள் ஒன்றான தமிழ்நாடு, உழவர் நலனை மையமாகக் கொண்டு முக்கிய பயிர்களின் உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்தியை அதிகரிக்க, வேளாண்மையில் பல்வேறு புரட்சிகர உத்திகளை புகுத்தியுள்ளது. வாழ்வாதாரத்திற்காக மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வந்த வேளாண்மைத் தொழிலை, வணிக கோணத்திலும் இலாபகரமான தொழிலாக மாற்ற, மாநில அரசு நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு அதிக முக்கியத்துவம் அளித்து பயிர் உற்பத்தித் திறன் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த நடைமுறைக்கு உகந்த அணுகுமுறைகளை செயல்படுத்த அரசு பல்வேறு கொள்கைகளை வகுத்துள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழக அரசு வகுத்த வலுவான கொள்கைகள் மற்றும் புதுமையான உத்திகளை அறிமுகப்படுத்தி, தரிசு நிலங்களை சாகுபடிக்கு உகந்த நிலங்களாக மாற்றுதல், கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வளர்ப்புடன் கூடிய ஒருங்கிணைந்த பண்ணைய முறையை அமைத்தல், சாகுபடி பரப்பு தன்னிறைவு அணுகுமுறைமூலம் பகுக்கப்பட்ட நிலங்களை ஒருங்கிணைத்தல், நீர் ஆதாரங்களை வளப்படுத்துதல், ஒருங்கிணைந்த இடுபொருள் விநியோக மேலாண்மை முறை (தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (TANSEDA) அமைப்பதன்மூலம் உரிய நேரத்தில் பல்வேறு பயிர்களின் தரமான விதைகள் விநியோகிப்பதை உறுதிபடுத்துதல்), உணவு

தானிய பயிர்களின் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியை விரைவு இயக்க அணுகுமுறைமூலம் அதிகரித்தல் (உணவு தானிய இயக்கம், திருந்திய நெல் சாகுபடி, மேம்படுத்தப்பட்ட பயறு வகை உற்பத்தி தொழில்நுட்பங்கள், நடவுத் துவரை சாகுபடி) நீடித்த நவீன கரும்பு உற்பத்தி திட்டம், துல்லிய பண்ணையம், பாரம்பரிய வேளாண் விளைபொருட்களை பிரபலப்படுத்துதல், சுற்றுச்சூழலுக்கு உகந்த நீடித்த நிலையான வேளாண் செயல்பாடுகள் (மாதிரி அங்கக கிராமங்கள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு கிராமங்கள், புதிய உயிர் உர உற்பத்தி மையங்கள் மற்றும் அங்கக உரப் பரிசோதனை ஆய்வகங்கள்), கிராம அளவிலான பல்துறை தீவிர விழிப்புணர்வு முகாம் மற்றும் வரையறுக்கப்பட்ட கிராமப் பயணத் திட்டத்தின்மூலம் மேற்கொண்டு விவசாய உற்பத்தியாளர்கள் அமைப்புகளை விரிவாக்க பணியாளர்கள் சந்திப்பதன்மூலம் விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க முறையை வலுப்படுத்துதல், அனைத்து வேளாண் செயல்பாடுகளிலும் பெண்களின் பங்கை வலுப்படுத்தி தொழில் முனைவோராக்குதல் (770 அம்மா பண்ணை மகளிர் குழுக்களை வேளாண் செயல்பாடுகளில் ஈடுபடுத்துதல்) இயற்கை இடர்பாடுகளிலிருந்து விவசாயிகளை பாதுகாக்க நிவாரண தொகுப்பு, தகவல் தொடர்பு தொழில்நுட்பம் சார்ந்த விரிவாக்கம், பண்ணை இயந்திரமயமாக்குதல், ஒருங்கிணைந்த கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், சந்தை சார்ந்த வேளாண்மை மற்றும் விநியோக தொடர்பு மேலாண்மையை பரவலாக்குதல் போன்ற பல்வேறு வேளாண் சீர்திருத்தங்களை ஏற்படுத்தி வேளாண்மையை ஊக்குவித்து வருகிறது.

[2016 ஆகஸ்ட் 19

அட்டவணை 1.3 : தேசிய அளவில் தமிழகத்தின் நிலை

பயிர்	தேசிய அளவில் தமிழகத்தில் நிலை	தமிழகத்தின் உற்பத்தித் திறன் (கிலோ / எக்டர்)	தேசிய அளவில் சராசரி உற்பத்தித் திறன் (கிலோ/எக்டர்)
மக்காச்சோளம்	1	5,450	2,583
நிலக்கடலை	1	2,812	1,750
மொத்த எண்ணெய் வித்துக்கள்	1	2,382	1,153
கரும்பு (மெ.டன்)	2	97	70
நெல்	3	3,100	2,424
சூரியகாந்தி	3	1,506	791
கம்பு	4	1,780	1,164
சோளம்	4	1,128	926
சிறுதானியங்கள்	4	2,869	1,677
பருத்தி	4	612	532
உணவு தானியங்கள்	6	2,396	2,101
மொத்த பயறு வகைகள்	14(*)	500	764

() முன்பிருந்த 21 ஆம் இடத்திலிருந்து முன்னேறியுள்ளது*

(ஆதாரம்:வேளாண்மை புள்ளியியல் ஒரு பார்வை, 2013-2014)

2016 ஆகஸ்ட் 19]

பெருவாரியான மக்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக விளங்கும் முதன்மை பிரிவு தொழில்களில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகள் மற்றும் தொய்வினை அகற்றிட அயராது பணியாற்றி வரும் தமிழக அரசு, வேளாண்மையில் பல்வேறு சீர்திருத்தங்களை கொண்டு வந்ததன் விளைவாக, கடந்த ஐந்து ஆண்டுகளில் கடும் வறட்சி ஆண்டான 2012-2013 தவிர, பிற ஆண்டுகளில் உணவு தானிய உற்பத்தியில் அதிக சாதனை அடைந்துள்ளது. அதன் விவரம் பின் வருமாறு:

அட்டவணை 1.4 : கடந்த ஐந்தாண்டுகளில் உணவு தானிய உற்பத்தி

பயிர்	உணவு தானிய உற்பத்தி (இல.மெ.டன்)				
	2011–2012	2012–2013	2013–2014	2014–2015	2015–2016(*)
அரிசி	74.59	40.50	71.15	79.49	86.98
சிறு தானியங்கள்	23.24	13.42	32.73	40.79	37.92
பயறு வகைகள்	3.69	2.13	6.14	7.67	5.73
மொத்த உணவு தானியங்கள்	101.52	56.05	110.02	127.95	130.63

(*) நான்காம் முன் மதிப்பீடு

1.2. பருவநிலை—மழையளவு

தமிழகத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டில், குளிர்காலத்தில் (ஜனவரி-பிப்ரவரி) குறைவான மழை பெறப்பட்டது. கோடை காலத்தில் (மார்ச்-மே) அதிக மழையும், தென்மேற்குப் பருவத்தில் (ஜுன்-செப்டம்பர்) இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்தால் இயல்பான மழை என வகைப்படுத்தப்பட்டிருந்தாலும், குறைவான மழையே பெறப்பட்டது. வடகிழக்கு பருவ காலத்தில் (அக்டோபர் - டிசம்பர்) குறிப்பாக நவம்பர், டிசம்பர் மாதங்களில் கடந்த 100 ஆண்டுகளில் பெறப்படாத, வரலாறு காணாத அளவு மிக அதிகமான மழை பெறப்பட்டது.

1.2.1. பயிர் நிலை

தமிழக வேளாண்மையானது, தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழை, மேட்டூர் அணையிலிருந்து நீர் திறப்பு மற்றும் முக்கிய அணைகளில் போதுமான நீர் இருப்பு போன்ற காரணிகளைச் சார்ந்துள்ளது.

கடந்த 2015-2016 ஆம் ஆண்டில், தென்மேற்கு பருவ மழை உரிய காலத்தில் பெறப்படாததாலும், மேட்டூர் அணை தாமதமாக (09.08.2015) திறக்கப்பட்டதாலும், காரீப் பருவ பயிர் சாகுபடியில் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் நெல், சிறுதானியங்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் கரும்பு பயிர்களின் சாகுபடிப்பரப்பில் குறைவு ஏற்பட்டது. எனினும் கோடை பருவத்தில் பெறப்பட்ட அதிக மழையின் காரணமாக டெல்டா மாவட்டங்களில் குறிப்பாக வடிமுனைக் குழாய் பாசனப் பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் போதுமான அளவு அதிகரித்ததால் அதிக பரப்பளவில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. வடகிழக்கு பருவ மழை துவங்கிய போது, சம்பா நெல் மற்றும் ராபி பருவ சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் பருத்தி பயிர் சாகுபடியை அதிக பரப்பளவில் மேற்கொள்ள வாய்ப்புகள் இருந்தபோதும், 2015 டிசம்பர் மாதம் பெறப்பட்ட மிக அதிகமான மழையால், ஆகஸ்ட் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை சாகுபடி செய்யப்பட்ட முக்கியப் பயிர்களில் பெரும்பான்மையான பரப்பளவு வெள்ளத்தால் பாதிப்படைந்தது. எனினும் உரிய காலத்தில் தமிழக அரசு பல்வேறு தொழில்நுட்ப உத்திகளை செயல்படுத்தியதால் பயிர் பாதிப்பு பெருமளவில் குறைந்ததோடு, உணவு தானியங்கள் மற்றும் இதர பயிர்களின் உற்பத்தித் திறனையும் நிலைப்படுத்தி மொத்த உற்பத்தியை அதிகரிக்க உதவியது.

1.2.2. குறுவை நெல் சாகுபடி

கடந்த 2015-2016 ஆம் ஆண்டில், டெல்டா மாவட்ட விவசாயிகளின் துயர் துடைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், ரூ.40.98 கோடி நிதி ஒதுக்கீட்டில் குறுவை சாகுபடிக்கான சிறப்புத் திட்டத்தை அறிவித்தார்கள். மும்முனை மின்சாரம் 12 மணி நேரம் வழங்கியதோடு, இயந்திரங்கள் மூலம் நெல் நடவுப் பணி, உற்பத்தித் திறனை உயர்த்தும் இடுபொருட்கள் விநியோகம் (நெல் நுண்ணூட்டக்கலவை மற்றும் உயிர் உரம்), ஜிப்சம் விநியோகம், உழவு மானியம், பசுந்தாளுரப் பயிர் மற்றும் பயறு வகை விதைகள் விநியோகம் விலையில்லாமல் மேற்கொள்ளப்பட்டன. இதனால் வடிமுனைக் குழாய் பாசனப் பகுதிகளில் பயிரிடப்படும் இயல்பு

2016 ஆகஸ்ட் 19]

பரப்பான ஒரு இலட்சம் ஏக்கருக்குப் பதிலாக, 3.05 இல.ஏக்கரில் குறுவை நெற்பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு 1,67,670 விவசாயிகள் பயன் அடைந்தனர்.

2016-2017 ஆம் ஆண்டிலும், டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலனுக்காக ரூ.54.65 கோடி நிதி ஒதுக்கீட்டில் குறுவை சிறப்பு தொகுப்புத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மும்முனை மின்சாரம் 12 மணி நேரம், 100 சதவீத மானியத்தில் இயந்திர நெல் நடவு, நுண்ணூட்ட கலவை, துத்தநாக சல்பேட், அதிக அடர்திறன் கொண்ட பாலி எத்திலீன் (HDPE) குழாய்கள் போன்ற இடுபொருட்கள் விநியோகம் காவிரி பாசனப் பகுதிகளில் உழவு மானியம், பயறுவகை விதைகள் மற்றும் வெண்ணாறு பகுதிகளில் உழவுப்பணி மற்றும் பசுந்தாள் உரப் பயிர்களின் விதைகள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம், வடிமுனைக் குழாய் பாசனப் பகுதிகளில், இயல்பு பரப்பளவான ஒரு இலட்சம் ஏக்கருக்கு பதிலாக 3.25 இலட்சம் ஏக்கரில் குறுவை நெற்பயிர் சாகுபடி மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1.3. சிறப்பு உத்திகள்-2015-2016

நாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக திகழும் தமிழகம், முக்கிய பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காக பல்வேறு உத்திகளை அறிமுகப்படுத்தியது. பயிர் உற்பத்தித் திறன் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதில், அரசு காட்டும் அக்கறையை உணர்த்தும் விதமாகவே கீழ்க்கண்ட அனைத்து உத்திகளும் அமைந்துள்ளன:

1. விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் 12,628 ஏக்கர் தரிசு நிலங்களில் நிலம் மற்றும் நீராதாரங்களை மேம்படுத்தி 9,133 விவசாயிகள் பயனடையும் வகையில், சாகுபடிக்கு கொண்டு வரும் முன்னோடி திட்டம் செயல்படுத்தப்பட்டது.

2. முழு கிராம அணுகுமுறையில், 6.50 இல.ஏக்கர் (2.60 இல.எக்டர்) பரப்பளவில் 3,000 கிராமங்களில் திருந்திய நெல் சாகுபடி முறையும், 3.13 இல.ஏக்கர் (1.25 இல.எக்டர்) பரப்பளவில் 2,000 கிராமங்களில் திருந்திய பயறு சாகுபடி முறையும் அமைக்கப்பட்டன.

3. பண்ணை இயந்திரமயமாக்குதலுக்கு ஏதுவாக விளங்கும், இயந்திர நெல் நடவு முறையினால் சீரான இடைவெளியில், சரியான பயிர் எண்ணிக்கையை பராமரிப்பதோடு, குறைந்த வயதுடைய நாற்றுக்களை நடவு செய்யவும் வேளாண் பணியாளர்கள் பற்றாக்குறையை எதிர்கொள்ளவும் இயலும். கடினமான பண்ணை பணிகளை எளிதாக மேற்கொள்ளும் பொருட்டு, 2014-2015 ஆம் ஆண்டு முதல், "இயந்திர நெல் நடவு" மேற்கொள்வதை ஊக்குவிக்க அரசு, மானியம் வழங்கி வருகிறது. 2014-2015 மற்றும் 2015-2016 ஆம் ஆண்டுகளில், ரூ.65.94 கோடி செலவில் 5.76 இல.ஏக்கர் (2.30 இல.எக்) பரப்பளவில் இயந்திர நெல் நடவு மேற்கொள்ளப்பட்டது.

4. பயிர் உற்பத்தித் திறன் மற்றும் விவசாயிகளின் வருமானம் உயர வழிவகை செய்யும் நவீன தொழில்நுட்பங்களை பரவலாக்கம் செய்ய, ரூ.92.45 கோடி செலவில் 3.32 இல.ஏக்கர் பரப்பளவில் செயல் விளக்கங்கள் அமைக்கப்பட்டன.

5. "ஒருங்கிணைந்த விதைத் திட்டம்" வகுத்து, தரமான விதைகளை போதுமான அளவு உற்பத்தி செய்து காலத்தே விநியோகம் செய்வதற்காக, தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமைக்கு ரூ.50 கோடி நிதி வழங்கப்பட்டதுடன்; நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் போன்ற பயிர்களுக்கு விதை உற்பத்தி மற்றும் விநியோக மானியம் வழங்குவதற்காக ரூ.29.67 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டது.

6. அரசு விதைப் பண்ணைகளை படிப்படியாக மாதிரிப் பண்ணைகளாக மாற்ற, 41 அரசு விதைப் பண்ணைகளில் நீர் ஆதாரங்களை பெருக்கி, நவீன இயந்திரங்களை அதிக அளவில் பயன்படுத்தி, தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்கி, தரமான விதை/நடவுச் செடி உற்பத்தியினை மேலும் அதிகரிக்கவும், அந்தந்த பகுதிகளுக்கு ஏற்ற தொழில்நுட்பங்களை விளக்கவும், ரூ.15 கோடி நிதி ஒதுக்கீட்டில் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன.

2016 ஆகஸ்ட் 19]

7. விவசாயிகளிடையே அதிக வரவேற்புள்ள குட்டை X நெட்டை வீரிய ஒட்டு தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்ய, திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டாரம், வடுவூர் தென்பாதி கிராமத்தில், 15 ஏக்கர் நிலப்பரப்பில் புதியதாக வீரிய ஒட்டு தென்னை நாற்றுப் பண்ணை உருவாக்க ரூ.86.32 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

8. புதிய மண் ஆய்வுக் கூடங்களும் உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களும் அமைப்பதோடு, விவசாயிகளுக்கு தரமான உரங்கள் வழங்குவதை உறுதி செய்யவும், அனைத்து பண்ணைகளிலும் மண் ஆய்வின் அடிப்படையில் ஊட்டச்சத்து மேலாண்மையை ஊக்குவிக்கவும், மண் ஆய்வினை திறம்பட மேற்கொள்ள நவீன ஆய்வு உபகரணங்கள் நிறுவும் பணிகள் ரூ.12.28 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

9. தருமபுரி, புதுக்கோட்டை, சிவகங்கை, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில், 12,500 ஏக்கர் அமிலத்தன்மை வாய்ந்த நிலங்கள் கண்டறியப்பட்டு, அந்நிலங்களில் உற்பத்தியை அதிகரிப்பதற்காக ரூ.1.50 கோடி செலவில் சீர்திருத்தம் செய்யப்பட்டன.

10. நீடித்த நிலையான வாழ்வாதாரத்திற்காக பண்ணைக் குட்டைகள் உள்ள பகுதிகளில் ஒருங்கிணைந்த தொழில்களை மேம்படுத்துதல், அங்கக பண்ணையத்தை ஊக்குவிக்க உயிரியல் பூச்சிக் கொல்லிகள் உற்பத்தியை அதிகரித்தல், கரும்பு சாகுபடி செய்யும் நிலங்களில் பயோ-மினரலைசர் என்னும் நுண்ணுயிரியை பயன்படுத்தி மண்வளத்தை அதிகரித்தல் மற்றும் நெல் வயல்களில் பசுந்தாளுரப் பயிர்களை ஊடுபயிர்களாக சாகுபடி செய்து மண்வளத்தை அதிகரித்தல் போன்ற திட்டங்கள் தமிழ்நாடு புதிய உத்திகள் திட்டத்தின் (TANII) கீழ் ரூ.1.39 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டன.

11. பயறு வகைகளில் உற்பத்தியை பெருக்க, துவரையில் நடவுமுறை சாகுபடி, இலைவழி டிஏபி உரம் மற்றும் பயறு வளர்ச்சி ஊக்கியை தெளித்தல், தரமான விதை உற்பத்தி மற்றும் வரப்புகளில் பயறு சாகுபடியினை ஊக்குவித்தல் போன்ற பணிகள் ரூ.15.07 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டன.

12. ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதிப்படுத்த, சோளம், கம்பு, கேழ்வரகு, சாமை மற்றும் குதிரைவாலி போன்ற ஊட்டமிகு சிறுதானியங்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க ரூ.2.30 கோடி நிதி ஒதுக்கீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

13. இயற்கை இடர்பாடுகளிலிருந்து விவசாயிகளை காத்து அவர்கள் வருமானத்தை பெருக்கவும், மானாவாரி நிலங்களில் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், கறவை மாடுகள்/ஆடுகள் வளர்ப்புடன் இணைந்த ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டம் ரூ.48.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது.

14. பண்ணைக் குடும்பங்களின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கில், குழு அணுகுமுறையிலான செயல்பாடுகளில் பண்ணை மகளிர் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். 770 அம்மா பண்ணை மகளிர் குழுக்கள் (வேளாண்மை துறையின் மூலம் 550 குழுக்களும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் 220 குழுக்களும்) அமைக்கப்பட்டுள்ளன. துறையால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின்கீழ் வழங்கப்பட்ட ரூ.113.26 கோடி நிதியை பயன்படுத்தி நடவு துவரை சாகுபடி, துல்லிய பண்ணையம், நீடித்த நவீன கரும்பு உற்பத்தி போன்ற நவீன தொழில்நுட்பங்களுக்கான செயல்விளக்கங்கள் அமைத்தல், தரமான விதைகள் மற்றும் இதர இடுபொருட்கள் உற்பத்தி மற்றும் விநியோகம் போன்ற வேளாண் சார்ந்த தொழில்கள் இக்குழுக்களால் மேற்கொள்ளப்பட்டன.

15. சீனா, பிலிப்பைன்ஸ், இஸ்ரேல் மற்றும் தாய்லாந்து போன்ற அயல் நாடுகளில் பயன்பாட்டில் உள்ள உயரிய அறிவியல் தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த ரூ.3.23 கோடி நிதி செலவில், தமிழகத்தில் உள்ள 100 முன்னோடி விவசாயிகள் வெளிநாடுகளில் விவசாயக் கல்விச்சுற்றுலா மேற்கொள்ளவும், ரூ.4.90 கோடி செலவில் குஜராத், மஹாராஷ்டிரா, ஆந்திரப்பிரதேசம், தெலுங்கானா, கர்நாடகா, கேரளா, ஒடிசா மற்றும் உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு உள்நாட்டு விவசாயக் கல்விச் சுற்றுலாவுக்கு 10,000 விவசாயிகளை அழைத்துச் செல்லவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2016 ஆகஸ்ட் 19]

16. 2015 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில், முன் எப்போதும் இல்லாத அளவிற்கு பெறப்பட்ட மிக அதிகமான மழையால், சுமார் 3.51 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிர் பாதிப்பு ஏற்பட்ட 7.62 இலட்சம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க ரூ.407.57 கோடி பயிர் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டது.

அரசு வகுத்த கொள்கைகளாலும், திட்டங்களாலும், 2015-2016 ஆம் ஆண்டிலும், மாநிலம் சிறப்புறும் வகையில், உணவு தானியங்களில் உற்பத்தி அடையப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2015-2016 ஆம் ஆண்டில், எதிர்பார்க்கப்படும் சாகுபடி பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் பின்வருமாறு:

அட்டவணை 1.5 : 2015-2016 ஆம் ஆண்டில் சாதனை
(நான்காம் முன் மதிப்பீடு)

பயிர்	பரப்பு (இல.எக்டர்)	உற்பத்தி (இல.மெ.டன்)	உற்பத்தித்திறன் (கிலோ/எக்டர்)
அரிசி	20.37	86.98	4,269
சிறுதானியங்கள்	9.01	37.92	4,209
பயறு வகைகள்	9.27	5.73	618
மொத்த உணவு தானியங்கள்	38.65	130.63	
எண்ணெய்வித்துக்கள்	4.12	9.19	2,231
பருத்தி (*)	1.43	3.69	439
கரும்பு (**)	2.57	264.97	103

(*)உற்பத்தி (இல. பொதிகள்) ; (**)உற்பத்தித் திறன் (மெ.டன்/ எக்டர்)

1.4. 2016–2017 ஆம் ஆண்டிற்கான பயிர் சாகுபடி பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் இலக்கு

2016-2017 ஆம் ஆண்டில், பல்வேறு வேளாண் பயிர்களில் திட்டமிடப்பட்டுள்ள சாகுபடிப் பரப்பளவு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் பின்வருமாறு:

அட்டவணை 1.6 : 2016–2017 ஆம் ஆண்டுத் திட்டம்

பயிர்	பரப்பு (இல.எக்டர்)	உற்பத்தி (இல.மெ.டன்)	உற்பத்தித் திறன் (கிலோ/எக்டர்)
அரிசி	20.00	93.00	4650
சிறுதானியங்கள்	10.00	45.00	4500
பயறு வகைகள்	11.00	9.80	891
மொத்த உணவு தானியங்கள்	41.00	147.80	
எண்ணெய் வித்துக்கள்	6.20	15.76	2542
பருத்தி (*)	1.80	6.09	575
கரும்பு (**)	3.25	350.00	108
மொத்தம்	52.25		

(*)உற்பத்தி (இல. பொதிகள்) ; (**)உற்பத்தித் திறன் (மெ.டன்/எக்டர்)

1.5. முன்னேற்ற பாதையில் வேளாண்மை

பலவகைப்பட்ட நில உடைமைகள், பருவ நிலை, மண்வகை, பாசன நீர் மற்றும் அந்தந்த பகுதி சார்ந்த காரணிகளால், இலாபகரமான வேளாண்மை மேற்கொள்ள ஒவ்வொரு பண்ணைக்குமான பயிர்த் திட்டம் வகுப்பது அவசியமாகிறது.

2016 ஆகஸ்ட் 19]

2016-2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள சிறப்பு உத்திகள் பின்வருமாறு:

1. *வேளாண் துறை, விவசாயிகள், நுகர்வோர் மற்றும் முக்கிய தொழில்களிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்திட வேளாண் விரிவாக்கத் திட்டத்தை வலுப்படுத்துதல்.*

2. *கிராம அளவில் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தி தொழில்நுட்ப பரவலாக்கத்தை திறன்பட மேற்கொள்ளுதல்.*

3. *தரிசு நிலங்களை கண்டறிந்து மேம்படுத்தி சாகுபடி பரப்பளவை அதிகரித்தல்.*

4. *சுற்றுச் சூழலுக்குகந்த கொள்கைகள் மற்றும் பண்ணை பணி மேற்கொண்டு மண் வளத்தை அதிகரித்தல், பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்துதல் மற்றும் உயரிய வருவாய் தரும் அதிக மதிப்புள்ள விளைபொருட்களை உற்பத்தி செய்தல்.*

5. *திறன்மிகு முறையில் நீரினை பயன்படுத்தவும் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும், நீர் ஆதார மேலாண்மைக்கான அமைப்புகளை நிறுவுதல்.*

6. *தரமான விதைகள், உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், அங்ககப் பொருட்கள் முதலிய முக்கிய இடுபொருட்கள் கிடைப்பதை திட்டமிட்டு, உற்பத்தி செய்து விநியோகம் செய்வதற்காக வரையறுக்கப்பட்ட இடுபொருள் மேலாண்மை முறை.*

7. *உணவு தானியங்கள் குறிப்பாக பயறு வகைகளில் தன்னிறைவு அடைந்து உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்தல்.*

8. *சாகுபடி செலவினத்தைக் குறைத்து உற்பத்தித் திறனை அதிகரிக்கும் திருந்திய நெல் சாகுபடி, தீவிர சிறுதானிய மற்றும் பயறு வகைகள் சாகுபடி, நீடித்த நவீன கரும்பு உற்பத்தித் திட்டம், துல்லிய பண்ணையம், நுண்ணீர்ப் பாசனத் திட்டம் மற்றும் அங்கக பண்ணையம் போன்ற தொழில்நுட்பங்களை அதிக பரப்பளவில் மேற்கொள்ளுதல்.*

[2016 ஆகஸ்ட் 19

9. மாறிவரும் பருவநிலை, இடுபொருட்கள் விலை உயர்வு, விளைபொருட்களுக்கான விலை வீழ்ச்சி, நிலையில்லா சந்தை போன்ற பல்வேறு காரணங்களால் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகளிலிருந்து விவசாயிகளைக் காத்து, அவர்கள் வருமானத்தை உயரச் செய்ய மானாவாரி பகுதிகளில் மாறுபட்ட வேளாண்மை முறையாக ஒருங்கிணைந்த பண்ணையத்தை ஊக்குவித்தல்.

10. விவசாயிகளின் வேலைப்பளுவை குறைப்பதோடு அவர்கள் நேரம் மற்றும் நிலத்தை திறன்பட பயன்படுத்த பண்ணை இயந்திரமயமாக்குதலை ஊக்குவித்தல்.

11. விவசாயிகளிடையே உள்ள தொடர்பை மேம்படுத்தி இடுபொருள் கொள்முதல், வேளாண் செய்திகள், தொழில்நுட்பங்கள் மற்றும் கடனுதவிக்கான சேவைகளைப்பெறுதல், உற்பத்தி மற்றும் விற்பனையில் குழு அணுகு முறை பண்ணையத்தை ஊக்குவித்து, அனைத்து வேளாண் தொழில்களிலும் விவசாயிகளை குறிப்பாக, பண்ணை மகளிரை ஈடுபடுத்துதல்.

12. வேளாண்மையை வணிகத் தொழிலாக மாற்றி, இளைஞர்களை வேளாண்மையில் ஈடுபடுத்தி தொழில்முனைவோராக்கி வேலைவாய்ப்புகளை அதிகரித்தல்.

13. அரசு மற்றும் தனியார் முதலீடுகளை அதிகரித்து, சேமிப்பு கிடங்குகள், நீர்ப்பாசனம், சந்தைப்படுத்துதல் மற்றும் கடன் வசதிகளுக்கான வேளாண் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல்.

14. சிறு விவசாயிகளும் விளைபொருள் விற்பனையில் பங்குபெற வலுவான சந்தை முறையை ஏற்படுத்துதல்.

15. பயிர் காப்பீடு செய்து பயிர் இழப்பை ஈடு செய்வதோடு, அனைத்து இயற்கை இடர்பாடுகளையும் எதிர்கொள்வதற்கான அமைப்புகளை ஏற்படுத்துதல்.

16. அனைத்து தொழில்நுட்பங்களையும் பரவலாக்கம் செய்யவும், திட்டமிடவும், திறன்மிகு வள ஆதார மேலாண்மைக்காகவும் விரிவாக்கப் பணியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல்.

2016 ஆகஸ்ட் 19]

1.6. வேளாண் துறையில் இயங்கும் பல்வேறு சேவை மையங்கள்

விவசாயிகளின் நிலையான வாழ்வாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் பல்வேறு சேவை மையங்கள், வேளாண் தகவல் பரிமாற்றம், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் மாற்று அணுகுமுறைகள்மூலம் விவசாயிகளின் நலனை காத்து வருகின்றன. உணவு பாதுகாப்பு மற்றும் சிறு, குறு விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் பயிர் உற்பத்தி, உற்பத்தித் திறன் மற்றும் இடுபொருள் பயன்பாட்டுத் திறனை அதிகரிக்க இம்மையங்கள் உதவுகின்றன. விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்ய மண் ஆய்வு கூடங்கள், உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், விதை சுத்திகரிப்பு நிலையங்கள், விதை சேமிப்புக் கிடங்குகள், அரசு விதைப் பண்ணைகள், உயிர் உர உற்பத்தி மையங்கள், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், ஒட்டுண்ணி உற்பத்தி மையங்கள், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மையங்கள், அங்கக உர பரிசோதனைஆய்வகங்கள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையங்கள், நுண்ணூட்டக் கலவை உற்பத்தி மையம், உழவர் மையங்கள், உழவர் பயிற்சி நிலையங்கள், நீர் மேலாண்மை பயிற்சி நிலையம், மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம் மற்றும் வேளாண் விரிவாக்க மையங்கள் போன்ற வசதிகளை துறை ஏற்படுத்தியுள்ளது.

1.6.1. தரக்கட்டுப்பாடு

அத்தியாவசியப் பொருள் சட்டம், 1955 இன்கீழ் இயற்றப்பட்ட உரக்கட்டுப்பாட்டு ஆணை, 1985 மற்றும் பூச்சிக்கொல்லி சட்டம், 1968 ஆகியவற்றுக்கு உட்பட்டு, அவற்றில் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளை தீவிரமாக செயல்படுத்தி விவசாயிகளுக்கு தரமான உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை வழங்குவதே வேளாண்மைத் துறையின் தலையாய நோக்கமாகும். தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்களால் சேகரிக்கப்படும் உரமாதிரிகளை ஆய்வு செய்ய, மாநிலத்தில் 14 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் இயங்கி வருகின்றன. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ், 6 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

[2016 ஆகஸ்ட் 19

கடந்த 2015-2016 ஆம் ஆண்டில், 17,500 உர மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, அதில் 608 எண்கள் தரம் குறைந்தவை எனக் கண்டறியப்பட்டு, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2016-2017 ஆம் ஆண்டில், 17,500 உர மாதிரிகளை ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மாநிலத்தில் இயங்கி வரும் 14 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களின் விவரம் பின்வருமாறு:

அட்டவணை 1.7 : உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்

வ.எண்.	மாவட்டம்	அமைவிடம்
1.	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்
2.	விழுப்புரம்	விழுப்புரம்
3.	சேலம்	சேலம்
4.	தருமபுரி	தருமபுரி
5.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்
6.	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி
7.	தஞ்சாவூர்	கும்பகோணம்
8.	திருவாரூர்	திருவாரூர்
9.	மதுரை	மதுரை
10.	திண்டுக்கல்	திண்டுக்கல்
11.	இராமநாதபுரம்	பரமக்குடி
12.	தூத்துக்குடி	கோவில்பட்டி
13.	கன்னியாகுமரி	நாகர்கோவில்
14.	நீலகிரி	ஊட்டி

2016 ஆகஸ்ட் 19]

உரக்கட்டுப்பாட்டு ஆணை, 1985—இல், புதிதாக சேர்க்கப்பட்டுள்ள அங்கக உரங்களான மண்புழு உரம், மக்கிய நகரக்கழிவு உரம் மற்றும் எண்ணெய் நீக்கப்பட்ட பிண்ணாக்குகளை ஆய்வு செய்ய, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ரூ.2.84 கோடி நிதி ஒதுக்கீட்டில் திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரில் இரண்டு புதிய அங்கக உர ஆய்வகங்களை தமிழக அரசு அமைத்துள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் அமைந்துள்ள மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம், ஆய்வகப் பணியாளர்களுக்கு பயிற்சிகள் அளித்து, ஆய்வு உபகரணங்களின் நம்பகத் தன்மையையும் ஆய்வு முடிவுகளின் துல்லியத்தையும் உறுதி செய்வதற்கு உதவுகிறது.

மேலும், ஆண்டுதோறும் 11.26 இலட்சம் மண் மாதிரிகளை ஆய்வு செய்யும் திறன் கொண்ட 30 மண் ஆய்வுக் கூடங்கள் மற்றும் 16 நடமாடும் மண் ஆய்வு கூடங்கள் மாநிலத்தில் இயங்கி வருகின்றன. மண்ணில் உள்ள நுண்ணூட்டச்சத்துக்களை ஆய்வு செய்ய, அனைத்து மண் ஆய்வுக் கூடங்களுக்கும் அணுக்கதிர் ஈர்ப்பு ஒளி அலைக்கற்றைமானிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாநிலத்தில் இயங்கி வரும் மண் ஆய்வுக் கூடங்கள் மற்றும் நடமாடும் மண் ஆய்வுக் கூடங்களின் விவரம் பின்வருமாறு:

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 19

அட்டவணை 1.8 : மண் ஆய்வுக் கூடங்கள் மற்றும் நடமாடும் மண் ஆய்வுக் கூடங்கள்

வ. எண்	மாவட்டம்	மண் ஆய்வு கூடங்கள்		நடமாடும் மண் ஆய்வு கூடங்கள்	
1.	காஞ்சிபுரம்	1	காஞ்சிபுரம்		
2.	திருவள்ளூர்	2	திருவள்ளூர்	1	திருவள்ளூர்
3.	கடலூர்	3	கடலூர்		
4.	விழுப்புரம்	4	விழுப்புரம்	2	விழுப்புரம்
5.	வேலூர்	5	மேலாலத்தூர்		
6.	திருவண்ணாமலை	6	திருவண்ணாமலை	3	திருவண்ணாமலை
7.	சேலம்	7	சேலம்		
8.	நாமக்கல்	8	நாமக்கல்	4	திருச்செங்கோடு
9.	தருமபுரி	9	தருமபுரி		
10.	கிருஷ்ணகிரி	10	கிருஷ்ணகிரி	5	கிருஷ்ணகிரி
11.	கோயம்புத்தூர்	11	கோயம்புத்தூர்		
12.	திருப்பூர்			6	திருப்பூர்
13.	ஈரோடு	12	ஈரோடு	7	ஈரோடு
14.	திருச்சிராப்பள்ளி	13	திருச்சிராப்பள்ளி		
15.	பெரம்பலூர்	14	பெரம்பலூர்	8	பெரம்பலூர்
16.	அரியலூர்	15	அரியலூர்		
17.	கரூர்	16	கரூர்	9	கரூர்
18.	புதுக்கோட்டை	17	குடுமியான்மலை		
19.	தஞ்சாவூர்	18	ஆடுதுறை		
20.	நாகப்பட்டினம்	19	நாகப்பட்டினம்	10	நாகப்பட்டினம்
21.	திருவாரூர்	20	திருவாரூர்	11	திருவாரூர்
22.	மதுரை	21	மதுரை	12	மதுரை
23.	தேனி	22	தேனி		
24.	திண்டுக்கல்	23	திண்டுக்கல்		
25.	இராமநாதபுரம்	24	பரமக்குடி	13	பரமக்குடி
26.	சிவகங்கை	25	சிவகங்கை		
27.	விருதுநகர்	26	விருதுநகர்	14	அருப்புக்கோட்டை
28.	திருநெல்வேலி	27	திருநெல்வேலி		
29.	தூத்துக்குடி	28	கோவில்பட்டி	15	கோவில்பட்டி
30.	கன்னியாகுமரி	29	நாகர்கோவில்	16	நாகர்கோவில்
31.	நீலகிரி	30	ஊட்டி		

2016 ஆகஸ்ட் 19]

விவசாயிகள் தரமான பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துவதை உறுதி செய்ய, அறிவிக்கை செய்யப்பட்ட 15 பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள் செயல்படுகின்றன. பூச்சிக்கொல்லி சட்டம், 1968 மற்றும் பூச்சிக்கொல்லி விதிகள், 1971 ஆகியவற்றுக்கு உட்பட்டு, 147 பூச்சிக்கொல்லி தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் 13,321 தனியார் விநியோக மையங்களிலிருந்து தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்களால் சேகரிக்கப்பட்ட பூச்சிக்கொல்லி மாதிரிகளின் தரத்தை, இந்த ஆய்வகங்கள் ஆய்வு செய்கின்றன.

கடந்த 2015-2016 ஆம் ஆண்டில், 21,575 பூச்சி மருந்து மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, அதில் 215 எண்கள் தரம் குறைந்தவை எனக் கண்டறியப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2016-2017 ஆம் ஆண்டில், 21,850 பூச்சிக்கொல்லி மாதிரிகளை ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், 2 மாநில பூச்சிக்கொல்லி ஆய்வகங்களுக்கு, ஆய்வு மற்றும் அளவீட்டு ஆய்வகங்களுக்கான அங்கீகாரம் வழங்கும் தேசிய நிறுவனத்தின் (NABL) தர நிர்ணயச் சான்றினை பெற, அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

அட்டவணை 1.9 :மாநிலத்தில் இயங்கி வரும் பூச்சிக்கொல்லி ஆய்வகங்கள்

வ. எண்	மாவட்டம்	அமைவிடம்
1.	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்
2.	கடலூர்	கடலூர்
3.	வேலூர்	வேலூர்
4.	சேலம்	சேலம்
5.	தருமபுரி	தருமபுரி
6.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்
7.	ஈரோடு	ஈரோடு
8.	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி
9.	தஞ்சாவூர்	ஆடுதுறை
10.	நாகப்பட்டினம்	நாகப்பட்டினம்
11.	மதுரை	மதுரை
12.	தேனி	வைகை அணை
13.	சிவகங்கை	சிவகங்கை
14.	திருநெல்வேலி	திருநெல்வேலி
15.	தூத்துக்குடி	கோவில்பட்டி

[2016 ஆகஸ்ட் 19

1.6.2. வேளாண் இடுபொருட்களுக்கான உற்பத்தி மையங்கள்

விவசாயிகளின் வயல்களில் தரமான சான்று விதை உற்பத்தி மேற்கொள்வதற்குத் தேவையான ஆதார விதைகளை உற்பத்தி செய்வதில், 41 மாநில அரசு விதைப் பண்ணைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. விவசாயிகளிடையே நவீன தொழில்நுட்பங்களை பரவலாக்கும் மையங்களாகவும் இந்த விதைப் பண்ணைகள் விளங்குகின்றன.

அட்டவணை 1.10 : விதை உற்பத்தி மையங்கள்

அட்டவணை 1.10(அ) : மாநில அரசு விதைப் பண்ணைகள்

(ஏக்கரில்)

வ. எண்	மாவட்டம்	அரசு விதைப்பண்ணை	மொத்த பரப்பளவு
1.	காஞ்சிபுரம்	பஞ்சுபேட்டை	58.76
2.	திருவள்ளூர்	கொளந்தலூர்	50.72
3.	கடலூர்	மிராலூர்	46.98
4.		வண்டுராயன்பட்டு	50.99
5.	விழுப்புரம்	காகுப்பம்	31.60
6.		இருவேல்பட்டு	50.72
7.		வடக்கனேந்தல்	47.06
8.		வானூர்	60.36
9.	திருவண்ணாமலை	அத்தியேந்தல்	14.11
10.		வாழவச்சனூர்	36.00
11.	சேலம்	டேனிஷ்பேட்	96.40
12.		மேட்டூர்	57.90
13.	ஈரோடு	பவானி	73.61
14.		சத்தியமங்கலம்	41.89
15.	தருமபுரி	பாப்பாரப்பட்டி	14.80
16.	திருப்பூர்	பாப்பான்குளம்	26.88
17.		பொங்களூர்	39.05
18.	புதுக்கோட்டை	அண்ணாபண்ணை	601.95
19.	திருச்சி	புதூர்பாளையம்	75.97
20.		நெய்குப்பைப்புதூர்	38.57
21.	கரூர்	இனுங்கூர்	205.44
22.	தஞ்சாவூர்	சாக்கோட்டை	72.18

2016 ஆகஸ்ட் 19]

வ. எண்	மாவட்டம்	அரசு விதைப்பண்ணை	மொத்த பரப்பளவு
23.	நாகப்பட்டினம்	நாகமங்கலம்	63.91
24.		திருக்கடையூர்	45.74
25.	திருவாரூர்	கீரந்தி	55.70
26.		காஞ்சிகுடிகாடு	53.02
27.		தேவாம்பாள்பட்டினம்	92.72
28.		நெடும்பலம்	63.73
29.		மூங்கில்குடி	47.63
30.	மதுரை	விநாயகபுரம்	45.52
31.	தேனி	கீழக்கூடலூர்	47.86
32.	விருதுநகர்	தேவதானம்	52.07
33.	திருநெல்வேலி	கரையிருப்பு	83.59
34.	கன்னியாகுமரி	திருப்பதிசாரம்	37.20
	மொத்தம்		**2,480.63**

அட்டவணை 1.10 (ஆ) : மாநில எண்ணெய்வித்து விதைப்பண்ணைகள்

(ஏக்கரில்)

வ. எண்	மாவட்டம்	அரசு விதைப்பண்ணை விவரம்	மொத்த பரப்பளவு
35.	காஞ்சிபுரம்	முசரவாக்கம்	**154.95**
36.	கிருஷ்ணகிரி	அகசிபள்ளி	**24.50**
37.	புதுக்கோட்டை	வெள்ளாளவிடுதி	**657.35**
38.	வேலூர்	நவ்லாக்	**66.16**
39.	ஈரோடு	பவானிசாகர்	**28.39**
40.	கடலூர்	நெய்வேலி (டான்காப்)	**301.01**
		மொத்தம்	**1,232.36**

[2016 ஆகஸ்ட் 19

அட்டவணை 1.10(இ) : மாநில பயறு வகை விதைப் பெருக்கு பண்ணை

(ஏக்கரில்)

வ. எண்	மாவட்டம்	அரசு விதைப்பண்ணை விவரம்	மொத்த பரப்பளவு
41.	புதுக்கோட்டை	வம்பன்	475.00
	மொத்த பரப்பளவு (41 மா.வி.ப.)		4,187.99

அரசு விதைப் பண்ணைகள் மற்றும் விவசாயிகளின் வயல்களில் அமைக்கப்படும் விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் விதைகள், ஆண்டுக்கு 30,000 மெ.டன் சுத்திகரிப்புத் திறன் கொண்ட 16 பெரிய, 37 நடுத்தர மற்றும் 63 சிறிய நிலையங்களில் சுத்திகரிப்பு செய்யப் படுகின்றன.

அட்டவணை 1.11 : விதை சுத்திகரிப்பு நிலையங்கள்

வ. எண்	மாவட்டம்	நிலையங்களின் எண்ணிக்கை			மொத்த எண்ணிக்கை
		பெரியது	நடுத்தரம்	சிறியது	
1.	காஞ்சிபுரம்	1	1	4	6
2.	திருவள்ளூர்	1	1	3	5
3.	கடலூர்	–	–	3	3
4.	விழுப்புரம்	2	3	4	9
5.	வேலூர்	–	1	3	4
6.	திருவண்ணாமலை	2	1	5	8
7.	சேலம்	1	1	1	3

2016 ஆகஸ்ட் 19]

வ. எண்	மாவட்டம்	நிலையங்களின் எண்ணிக்கை			மொத்த எண்ணிக்கை
		பெரியது	நடுத்தரம்	சிறியது	
8.	நாமக்கல்	–	1	2	3
9.	தருமபுரி	–	1	2	3
10.	கிருஷ்ணகிரி	–	2	1	3
11.	கோயம்புத்தூர்	–	1	1	2
12.	திருப்பூர்	–	1	2	3
13.	ஈரோடு	1	1	1	3
14.	திருச்சிராப்பள்ளி	–	2	3	5
15.	பெரம்பலூர்	–	–	1	1
16.	அரியலூர்	–	2	1	3
17.	கரூர்	1	1	–	2
18.	புதுக்கோட்டை	1	1	1	3
19.	தஞ்சாவூர்	2	4	1	7
20.	நாகப்பட்டினம்	–	2	5	7
21.	திருவாரூர்	1	2	3	6
22.	மதுரை	1	1	1	3
23.	தேனி	–	–	2	2
24.	திண்டுக்கல்	1	–	–	1
25.	இராமநாதபுரம்	–	2	1	3
26.	சிவகங்கை	–	1	2	3
27.	விருதுநகர்	–	1	4	5
28.	திருநெல்வேலி	–	1	4	5
29.	தூத்துக்குடி	1	1	1	3
30.	கன்னியாகுமரி	–	1	1	2
	மொத்தம்	**16**	**37**	**63**	**116**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 19

மேலும், தரமான தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்காக, 22 அரசு தென்னை நாற்றுப் பண்ணைகளும் 16 தென்னை ஒட்டு மையங்களும் இயங்கி வருகின்றன.

அட்டவணை 1.12 : அரசு தென்னை நாற்றுப் பண்ணைகள் மற்றும் தென்னை ஒட்டு மையங்கள்

வ. எண்	மாவட்டம்	தென்னை நாற்றுப் பண்ணைகள்		தென்னை ஒட்டு மையங்கள்	
1.	காஞ்சிபுரம்	1.	பிச்சிவாக்கம்		
2.	திருவள்ளூர்	2.	மாதவரம்	1.	மாதவரம்
3.	கடலூர்	3.	நெய்வேலி		
4.	விழுப்புரம்			2.	மரக்காணம்
5.	வேலூர்	4.	நவ்லாக்	3.	நவ்லாக்
6.	திருவண்ணாமலை	5.	வாழவச்சனூர்		
7.	சேலம்	6.	டேனிஷ் பேட்டை	4.	சுக்கம்பட்டி
8.	கிருஷ்ணகிரி	7.	பி.ஜி.புதூர்	5.	காவேரிபட்டினம்
9.	கோயம்புத்தூர்	8.	ஆழியார் நகர்	6.	எஸ்.ஜி.பாளையம்
10.	ஈரோடு	9.	பவானிசாகர்	7.	அய்யம்பாளையம்
11.	திருச்சி	10.	திருவரங்கம்	8.	திருவரங்கம்
12.	புதுக்கோட்டை	11.	வெள்ளாளவிடுதி		
13.	தஞ்சாவூர்	12.	பட்டுக்கோட்டை	9.	பட்டுக்கோட்டை
14.	நாகப்பட்டினம்	13.	மல்லியம்		
15.	தேனி	14.	வைகை அணை	10.	போடிநாயக்கனூர்
16.	இராமநாதபுரம்	15.	உச்சிப்புளி	11.	உச்சிப்புளி
		16.	தேவிபட்டினம்		
17.	சிவகங்கை	17.	சதுர்வேதிமங்கலம்	12.	லாடநேந்தல்
18.	விருதுநகர்	18.	தேவதானம்	13.	தேவதானம்
19.	திருநெல்வேலி	19.	செங்கோட்டை	14.	வடகரை
		20.	வடகரை		
20.	தூத்துக்குடி	21.	கிள்ளிகுளம்	15.	உடன்குடி
21.	கன்னியாகுமரி	22.	புத்தளம்	16.	அகஸ்தீஸ்வரம்

2016 ஆகஸ்ட் 19]

பயிர் வளர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியமான நுண்ணூட்டச்சத்து, சமச்சீர் பயிர் ஊட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில், ஆண்டுதோறும் 14 வகையான அறிவிக்கை செய்யப்பட்ட நுண்ணூட்டச்சத்துக் கலவைகள் உற்பத்தி செய்யும், 1,600 மெ.டன் உற்பத்தித்திறன் கொண்ட அரசு நுண்ணூட்டக் கலவை உற்பத்தி மையம் இயங்கி வருகிறது. 2015-2016 ஆம் ஆண்டில், 2,607 மெ.டன் நுண்ணூட்டக்கலவை உற்பத்தி செய்யப்பட்டு, அம்மா சேவை மையங்கள்மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது. 2016-2017 ஆம் ஆண்டில், 2,400 மெ.டன் நுண்ணூட்டக்கலவை தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அசோஸ்பைரில்லம், ரைசோபியம் மற்றும் பாஸ்போபாக்டீரியா போன்ற மூன்று வகையான உயிர் உரங்கள், துறையின் 15 உயிர் உர உற்பத்தி மையங்கள்மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. இம்மையங்கள் ஆண்டுக்கு 3,000 மெ.டன் திட உயிர் உரங்கள் உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை. 200 கிராம் உயிர்உர பொட்டலம் ஒன்று ரூ.6/- வீதம் விநியோகிக்கப்படுகிறது. ஆண்டுக்கு 2.5 இலட்சம் லிட்டர் திரவ உயிர் உர உற்பத்தி மேற்கொள்ள 2014-2015 ஆம் ஆண்டில், 5 உயிர்உர உற்பத்தி மையங்களில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திரவ உயிர் உர உற்பத்தியை மேலும் அதிகரிக்க, 3.50 இலட்சம் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட 7 புதிய திரவ உயிர் உர உற்பத்தி மையங்கள் ரூ.8.93 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன. திரவ உயிர் உரம் 100மிலி ரூ.36/-க்கும், 250மிலி ரூ.85/-க்கும், 500மிலி ரூ.150/-க்கும், 1,000மிலி ரூ.280/-க்கும் விநியோகிக்கப்படுகிறது. 2015-2016 ஆம் ஆண்டில், 1,305 மெ.டன் திட உயிர் உரங்களும் 1.82 இலட்சம் லிட்டர் திரவ உயிர் உரங்களும் தயாரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டன.

2016-2017 ஆம் ஆண்டில், 3,000 மெ.டன் திட உயிர் உரங்களும் 3.20 இலட்சம் லிட்டர் திரவ உயிர் உரங்களும் தயாரித்து விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. திட மற்றும் திரவ உயிர் உரங்கள் உற்பத்தி செய்யும் மையங்களின் விவரம் பின்வருமாறு:

[2016 *ஆகஸ்ட்* 19

அட்டவணை 1.13: உயிர் உர மற்றும் திரவ உயிர் உர உற்பத்தி மையங்கள்

வ. எண்	மாவட்டம்	உயிர் உர உற்பத்தி மையங்கள்		திரவ உயிர் உர உற்பத்தி மையங்கள்	
1.	காஞ்சிபுரம்	1	செங்கல்பட்டு		
2.	கடலூர்	2	கடலூர்	1	கடலூர்
3.	திருவண்ணாமலை	3	போளூர்		
4.	சேலம்	4	சேலம்	2	சேலம்
5.	தருமபுரி	5	பாலக்கோடு		
6.	திருப்பூர்	6	அவினாசி		
7.	ஈரோடு	7	பவானி		
8.	திருச்சிராப்பள்ளி	8	திருச்சிராப்பள்ளி		
9.	புதுக்கோட்டை	9	குடுமியான்மலை	3	குடுமியான்மலை
10.	தஞ்சாவூர்	10	சாக்கோட்டை	4	சாக்கோட்டை
11.	திருவாரூர்	11	நீடாமங்கலம்		
12.	தேனி	12	உத்தமபாளையம்		
13.	இராமநாதபுரம்	13	இராமநாதபுரம்	5	இராமநாதபுரம்
14.	திருநெல்வேலி	14	தென்காசி		
15.	தூத்துக்குடி	15	தூத்துக்குடி		

2016 ஆகஸ்ட் 19]

உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி செய்ய 10 உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் மற்றும் 2 ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

அட்டவணை 1.14: உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மற்றும் ஒட்டுண்ணி உற்பத்தி மையங்கள்

வ. எண்	மாவட்டம்	உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம்/ ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம்	ஒட்டுண்ணி உற்பத்தி மையம்	
			கரும்பு	தென்னை
1.	காஞ்சிபுரம்	பஞ்சுப்பேட்டை (ஒ.ப.பா. மையம்)	மதுராந்தகம்	செங்கல்பட்டு
2.	திருவள்ளூர்			புட்லூர்
3.	கடலூர்		விருத்தாசலம்	கடலூர்
4.	விழுப்புரம்	விழுப்புரம்	விழுப்புரம்	
5.	வேலூர்		ஆம்பூர் குடியாத்தம் திருப்பத்தூர்	மேலாளத்தூர் வாணியம்பாடி நாட்ராம்பள்ளி (திருப்பத்தூர்)
6.	சேலம்	சீலநாயக்கன்பட்டி		சுக்கம்பட்டி
7.	நாமக்கல்	நாமக்கல்	மோகனூர்	பரமத்திவேலூர்
8.	தருமபுரி	பாப்பாரப்பட்டி	பாப்பாரப்பட்டி	தருமபுரி
9.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்		ஆழியார்நகர்
10.	திருப்பூர்		உடுமலைப்பேட்டை	
11.	ஈரோடு	பவானி	பவானி	கோபி
12.	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி	லால்குடி	திருச்சிராப்பள்ளி
13.	தஞ்சாவூர்	காட்டுத் தோட்டம்	தஞ்சாவூர்	காட்டுத்தோட்டம்
14.	நாகப்பட்டினம்		மயிலாடுதுறை	
15.	மதுரை	விநாயகபுரம் விநாயகபுரம் (ஒ.ப.பா. மையம்)	மேலூர்	மேலூர்
16.	இராமநாதபுரம்			உச்சிப்புளி
17.	சிவகங்கை			எஸ்.வி.மங்கலம்
18.	விருதுநகர்			தேவதானம்
19.	திருநெல்வேலி	பாளையங்கோட்டை		செங்கோட்டை
20.	தூத்துக்குடி			உடன்குடி
21.	கன்னியாகுமரி			பூதப்பாண்டி

[2016 ஆகஸ்ட் 19

கீழ்க்கண்ட உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி செய்யப்பட்டு, அம்மா சேவை மையங்கள்மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன.

அட்டவணை 1.15: உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள்

உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள்	உற்பத்தி மையங்கள் (எண்கள்)	கட்டுப்படுத்தப்படும் பூச்சிகள் மற்றும் நோய்கள்
டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் (முட்டை ஒட்டுண்ணி)	19	கரும்பு இடைக்கணு புழு
பெத்திலிட், பிரக்கோனிட் (புழு ஒட்டுண்ணிகள்), யூலோபிட் (கூட்டுப்புழு ஒட்டுண்ணி)	12	தென்னை கருந்தலைப் புழு
பச்சை நிற மஸ்கார்டின் பூஞ்சாணம் (மெட்டாரைசியம்)	2	தென்னை காண்டாமிருக வண்டு
என்.பி.வி. (நியூக்ளியர் பாலி ஹெட்ரோசிஸ் வைரஸ்)	12	நிலக்கடலை சிவப்பு கம்பளிப்புழு, புரோடீனியா மற்றும் பருத்தி காய்ப்புழு
உயிரியல் பூஞ்சாணக்கொல்லிகள் – சூடோமோனாஸ், ட்ரைகோடெர்மா விரிடி	12	பருத்தி, பயறுவகைகள் மற்றும் நெற்பயிரில் ஏற்படும் நோய்கள்

1.6.3. வேளாண் தகவல் பரவலாக்க மையங்கள்

முக்கிய இடுபொருட்கள், வேளாண் கருவிகள், பயிர் பாதுகாப்பு உபகரணங்கள் போன்றவற்றை இருப்பு வைத்து விநியோகிப்பதோடு விதைப்பு முதல் அறுவடை வரையிலான அனைத்து ஆலோசனைகளை வழங்கும் ஒருங்கிணைப்பு மையங்களாக திகழும், 880 அம்மா சேவை மையங்கள்மூலம் நவீன தொழில்நுட்பங்களை பரவலாக்க தமிழக அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. இவற்றுள், 146 மையங்கள் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்களாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

2016 ஆகஸ்ட் 19]

அட்டவணை 1.16: அம்மா சேவை மையங்கள்

மாவட்டம்	வட்டார வேளாண்மை விரிவாக்க மையம்	துணை வேளாண்மை விரிவாக்க மையம்	மொத்தம்
காஞ்சிபுரம்	13	16	29
திருவள்ளூர்	14	21	35
கடலூர்	13	17	30
விழுப்புரம்	21	27	48
வேலூர்	20	23	43
திருவண்ணாமலை	17	24	41
சேலம்	20	11	31
நாமக்கல்	15	17	32
தருமபுரி	8	8	16
கிருஷ்ணகிரி	10	7	17
கோயம்புத்தூர்	12	14	26
திருப்பூர்	13	13	26
ஈரோடு	14	21	35
திருச்சி	14	10	24
பெரம்பலூர்	4	3	7
அரியலூர்	6	3	9
கரூர்	8	4	12
புதுக்கோட்டை	13	20	33
தஞ்சாவூர்	14	47	61
நாகப்பட்டினம்	11	33	44
திருவாரூர்	10	32	42
மதுரை	13	19	32
தேனி	8	13	21
திண்டுக்கல்	13	15	28
இராமநாதபுரம்	11	6	17
சிவகங்கை	12	9	21
விருதுநகர்	11	5	16
திருநெல்வேலி	19	31	50
தூத்துக்குடி	12	16	28
கன்னியாகுமரி	10	11	21
நீலகிரி	4	1	5
மொத்தம்	**383**	**497**	**880**

[2016 ஆகஸ்ட் 19

தமிழக அரசு 22 உழவர் பயிற்சி நிலையங்கள் மூலமாக ஆண்டுதோறும் சுமார் 28,820 விவசாயிகள், உழவர் விவாதக்குழு அமைப்பாளர்கள், பண்ணை மகளிர் மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கு பண்ணை மேலாண்மை மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிகள் வழங்கி வருகின்றன.

அட்டவணை 1.17: உழவர் பயிற்சி நிலையங்கள்

வ. எண்	மாவட்டம்	அமைவிடம்
1	காஞ்சிபுரம்	காஞ்சிபுரம்
2	விழுப்புரம்	திண்டிவனம்
3	வேலூர்	வேலூர்
4	திருவண்ணாமலை	திருவண்ணாமலை
5	சேலம்	சேலம்
6	நாமக்கல்	நாமக்கல்
7	தருமபுரி	தருமபுரி
8	கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி
9	ஈரோடு	ஈரோடு
10	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி
11	பெரம்பலூர்	பெரம்பலூர்
12	கரூர்	கரூர்
13	புதுக்கோட்டை	குடுமியான்மலை
14	தஞ்சாவூர்	சாக்கோட்டை
15	தேனி	தேனி
16	திண்டுக்கல்	திண்டுக்கல்
17	இராமநாதபுரம்	பரமக்குடி
18	சிவகங்கை	சிவகங்கை
19	விருதுநகர்	விருதுநகர்
20	திருநெல்வேலி	பாளையங்கோட்டை
21	தூத்துக்குடி	தூத்துக்குடி
22	கன்னியாகுமரி	நாகர்கோவில்

2016 ஆகஸ்ட் 19]

மதுரை மாவட்டம், விநாயகபுரத்தில் 1985 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் நீர் மேலாண்மை பயிற்சி நிலையத்தின்மூலம் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 180 களப்பணியாளர்களுக்கும் 900 விவசாயிகளுக்கும் பாசன தொழில்நுட்பங்கள் மற்றும் பாசனத் திறன் குறித்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் இயங்கிவரும் மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம் (STAMIN) வேளாண்மை விரிவாக்க அலுவலர்களுக்கான பயிற்சிகளை வழங்கும் முக்கிய பயிற்சி நிலையமாகும். ஆண்டுதோறும் 1,100 வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள் பயிற்சி பெறுகின்றனர். திட்டமிடுதல், மதிப்பீட்டாய்வு செய்தல் தொடர்பான ஆலோசனை சேவைகள் வழங்க மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலைய வளாகத்தில், 2012-2013 ஆம் ஆண்டில் மாநில வேளாண் மேலாண்மை மற்றும் விரிவாக்க பயிற்சி நிலையம் (SAMETI) அமைக்கப்பட்டுள்ளது.

1.7. வேளாண் வளர்ச்சிக்கான திட்டங்கள்

விவசாயிகளின் பொருளாதார நிலையை உயர்த்தும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களை வகுத்து, செயல்படுத்துவதில் தமிழக அரசு, பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது. விவசாயிகளின் தேவைகளை கண்டறிந்து மதிப்பீட்டாய்வு செய்து விவசாயிகளுக்கு உகந்த திட்டங்களை வகுப்பதோடு, வளர்ச்சியை அதிகரிக்கக்கூடிய உத்திகளை, பல்வேறு மாநில திட்டங்கள், மத்திய மாநில அரசுகள் பங்கேற்கும் திட்டங்கள், மத்திய அரசின் முழு உதவி பெறும் திட்டங்கள் மற்றும் பிற ஆதாரங்களிலிருந்து உதவி பெறும் திட்டங்களின்கீழ் செயல்படுத்தி வருகிறது. அனைத்து வேளாண்மை செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, மண்வளம், இயற்கை விவசாயம், திறன்மிகு பாசன நீர் பயன்பாடு, பயிர் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் இனங்கள், வேளாண் இடுபொருட்கள் பயன்பாட்டை மேம்படுத்தும் பண்ணைப்பயிர் திட்டங்கள், சுற்றுச்சூழலுக்கு உகந்த சாகுபடி முறைகள், பயிர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கவல்ல நவீன தொழில்நுட்பங்கள், விளைபொருட்களின் தரம், எளிதாக சந்தைப்படுத்தும் முறைகள் மற்றும் உயர்வருவாய் போன்றவற்றிற்கும் முக்கியத்துவம் அளித்து, அரசு புதிய திட்டங்களை வகுக்கிறது.

1.7.1. விதைகள்

தரமான, உயர்விளைச்சல் இரக மற்றும் வீரிய ஒட்டு இரக விதைகளே இலாபகரமான வேளாண்மைக்கு இன்றியமையாததாகும். நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துப் பயிர்கள், பருத்தி மற்றும் தென்னை ஆகிய அனைத்து வேளாண் பயிர்களிலும் விதை / கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்யவும், தரமான சான்று பெற்ற விதை/ கன்றுகள் உரிய நேரத்தில் மாநிலம் முழுவதும் ஒரே விலையில் கிடைப்பதை உறுதி செய்யவும், சான்று பெற்ற விதைகள் பயன்படுத்துவதை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தவும், கடந்த 2015-2016 ஆம் ஆண்டில் ரூ.50 கோடி சுழல் நிதியுடன் “தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை'' தமிழக அரசால் துவக்கப்பட்டது. இதன்மூலம், தன் மகரந்த சேர்க்கை பயிர்களான நெல், கேழ்வரகு, பயறு வகைகள் மற்றும் நிலக்கடலை பயிர்களில் 33 சதவீத விதை மாற்று விகிதமும், அயல் மகரந்த சேர்க்கைப் பயிர்களான சோளம், கம்பு மற்றும் பருத்தி பயிர்களில் 50 சதவீதமும், வீரிய ஒட்டு இரகங்களில் 100 சதவீதமும் விதை மாற்று விகிதம் அடைவதே இம்முகமையின் நோக்கமாகும்.

கடந்த 2015-2016 ஆம் ஆண்டில், ஆதார மற்றும் சான்று விதை கொள்முதல் மற்றும் விற்பனைக்கான மாநில அளவிலான விதை விலைக் கொள்கை முதல் முறையாக வகுக்கப்பட்டு, 18,912 மெ.டன் தரமான சான்றளிக்கப்பட்ட விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு, முந்தைய ஆண்டின் கடைசி பருவத்தில் கொள்முதல் செய்யப்பட்ட 2,246 மெ.டன் விதைகளையும் சேர்த்து, ஆக மொத்தம் 21,158 மெ.டன் விதைகள் 880 அம்மா சேவை மையங்களின் வாயிலாக 4.73 இலட்சம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. மேலும், 8.96 இலட்சம் தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டன. கடந்த 2015-2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பயிர் வாரியான விதை உற்பத்தி மற்றும் விநியோக விவரம் பின்வருமாறு:

2016 ஆகஸ்ட் 19]

அட்டவணை 1.18:விதை கொள்முதல் மற்றும் விநியோகம் 2015–2016

பயிர்	விதை கொள்முதல் (மெ.டன்)	விதை விநியோகம் (மெ.டன்)
நெல்	15,472	15,598
சிறுதானியங்கள்	87	268
பயறுவகைகள்	2,070	3,418
எண்ணெய் வித்துக்கள்	1,281	1,871
பருத்தி	2	3
மொத்தம்	**18,912**	**21,158**

2016-2017 ஆம் ஆண்டில், 32,282 மெ.டன் விதைகள் கொள்முதல் செய்து, 8.39 இலட்சம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், 12.01 இலட்சம் தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்படும்.

அட்டவணை 1.19 : விதை கொள்முதல் மற்றும் விநியோகத் திட்டம் 2016-2017

பயிர்	விதை கொள்முதல் (மெ.டன்)	விதை விநியோகம் (மெ.டன்)
நெல்	25,000	26,400
சிறுதானியங்கள்	352	400
பயறுவகைகள்	4,250	4,315
எண்ணெய் வித்துக்கள்	2,640	3,000
பருத்தி	40	40
மொத்தம்	**32,282**	**34,155**

[2016 ஆகஸ்ட் 19

1.7.2. பேரூட்டச் சத்துக்கள்

இரசாயன உரங்கள் உட்பட அனைத்து ஊட்டச் சத்து ஆதாரங்களையும் ஒருங்கிணைந்த முறையில் திறன்பட பயன்படுத்தி, சுற்றுச்சூழல், சமூக மற்றும் பொருளாதார நிலைகளுக்கு ஏற்றவாறு, பயிர்களில் அதிக உற்பத்தித்திறன் பெறுவதை நிலைப்படுத்துவதற்கு, மண் வளத்தை அதிகரிப்பதே ஒருங்கிணைந்த பயிர் ஊட்டச்சத்து மேலாண்மை முறையின் அடிப்படை நோக்கமாகும்.

தமிழகத்தில் உள்ள சுமார் 81.18 இலட்சம் பண்ணை நில உடைமைகளின் மண்வளத்தை பாதுகாக்கும் நோக்கில், "விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடு" வழங்கும் திட்டம் 2011-2012 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு, 2014-2015 ஆம் ஆண்டு வரை சுமார் 67.45 இலட்சம் கையேடுகள் வழங்கப்பட்டன. அகில இந்திய அளவில் அனைத்து மாநிலங்களுக்கும் முன்னுதாரணமாக செயல்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் வெற்றியினைத் தொடர்ந்து, 2015-2016 ஆம் ஆண்டில், "மண்வள அட்டை இயக்கம்" என்ற திட்டத்தை மத்திய அரசு துவக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், கட்ட அடிப்படையிலான (Grid Sampling) 4.23 இலட்சம் மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, 24.29 இலட்சம் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

2016-2017 ஆம் ஆண்டில், 6.75 இலட்சம் மண்மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, 43.15 இலட்சம் மண்வள அட்டைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாயிகளின் தேவை, செலவினம், நீடித்த நிலையான மண் வளம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளித்து, மண்வகை, மண்வளக் குறியீடு, தற்போதைய மண்வளம், மண்ணுக்கேற்ற பயிர் சாகுபடி முறை, ஆண்டு பயிர்த்திட்டம் மற்றும் சீதோஷ்ண நிலையின் அடிப்படையில் இம்மாநிலம் ஆண்டுதோறும் உர விநியோக திட்டத்தை வகுத்து வருகிறது. மத்திய அரசுடன் இணைந்து, போதுமான உரங்களை முன் கூட்டியே இருப்பு வைத்திட மாநில அரசு அனைத்து

2016 ஆகஸ்ட் 19]

நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. உரங்கள் மீதான 4 சதவீத மதிப்புக்கூட்டு வரியிலிருந்தும், நாப்தா அடிப்படையிலான யூரியாவை மாநிலத்தில் தொடர்ந்து உற்பத்தி செய்யும் பொருட்டு, விவசாயிகளின் நலன் காத்திட எம்.எப்.எல். மற்றும் ஸ்பிக் உர நிறுவனங்கள் கொள்முதல் செய்யும் நாப்தா மீதான 5 சதவீத மதிப்புக்கூட்டு வரியிலிருந்தும் விலக்களித்ததோடு, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு (டான்ஃபெட்) வட்டியில்லாக் கடனும் வழங்கி போதிய அளவில், உரிய நேரத்தில் நியாயமான விலையில் தரமான உரங்கள் விவசாயிகளுக்கு கிடைப்பதை உறுதி செய்ய ஆண்டுதோறும் தமிழக அரசு தீவிர நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் (2011-2012 முதல் 2015-2016 வரை), டான்ஃபெட் நிறுவனத்திற்கு ரூ.719.38 கோடி வழங்கப்பட்டது. 2016-2017 ஆம் ஆண்டில், உரங்களை முன்கூட்டியே கொள்முதல் செய்து இருப்பு வைத்திட இந்நிறுவனத்திற்கு ரூ.150 கோடி வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த 2015—2016 ஆம் ஆண்டில் உர விநியோகம் மற்றும் 2016-2017 ஆம் ஆண்டின் உரத் தேவை விவரம் பின்வருமாறு:

அட்டவணை 1.20 : 2015—2016 உர விநியோகம் மற்றும் 2016 -2017 உரத் தேவை

(இல.மெ.டன்)

உரம்	2015—2016	2016—17 உரத்தேவை		
	விநியோகம்	காரீப்	ராபி	மொத்தம்
யூரியா	11.38	4.50	7.90	12.40
டி.ஏ.பி	2.61	1.75	3.30	5.05
பொட்டாஷ்	2.80	1.50	3.70	5.20
காம்ப்ளக்ஸ்	4.93	3.00	4.50	7.50

தற்போது யூரியா, டிஏபி, பொட்டாஷ், காம்ளெக்ஸ், போன்ற உரங்கள் தேவையான அளவு இருப்பில் உள்ளன.

[2016 ஆகஸ்ட் 19

1.7.3. பயிர் பாதுகாப்பு

மாறி வரும் பருவநிலை மற்றும் பயிர் சாகுபடி முறை, பயிரிடு திறன் காரணமாக பூச்சி மற்றும் நோய் தாக்குதலால் பயிர் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அளவு இழப்பு ஏற்படுகிறது. எனினும் உணவு தானியங்கள் மற்றும் பிற பயிர்களில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைய உறுதி பூண்டுள்ள தமிழக அரசு, இது போன்ற எதிர்மறை காரணிகளை அகற்றி உற்பத்தியை அதிகரிப்பதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக, தீவிர பூச்சி நோய் கண்காணிப்பு மேற்கொள்ளுதல், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளை அறிவுறுத்துதல், உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தியை அதிகரிக்க தற்போது இயங்கி வரும் அரசு ஆய்வகங்களின் திறனை மேம்படுத்துதல், பயிர் பாதுகாப்பு மருந்துகளின் தரத்தை உறுதி செய்தல் மற்றும் பயிர் பாதுகாப்பு குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்வதோடு வானிலை காரணிகளை பதிவு செய்ய தமிழக அரசு வட்டார அளவில் தானியங்கி வானிலை மையங்களையும் நிறுவி விவசாயிகளுக்கு பூச்சிநோய் தாக்குதல் குறித்த முன்னறிவிப்புகளை வழங்கி வருகிறது.

கடந்த 2015-2016 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட பயிர் பாதுகாப்பு மருந்துகள் விவரம் கீழ்க்கண்டவாறு:

அட்டவணை 1.21 : 2015–2016 பயிர் பாதுகாப்பு மருந்துகள் விநியோகம்

இனம்	அளவு	மதிப்பு (ரூ. கோடியில்)
தூள் (மெ.டன்)	**3,088**	**5.68**
திரவம் (லிட்டர்)	**4,98,604**	**32.41**

1.7.3.1. பூச்சி மற்றும் நோய் கண்காணிப்பு

நிரந்தர பூச்சி நோய் கண்காணிப்புத் திடல்கள் அமைத்து வாராந்திர இடைவெளியிலும், சுற்றுக் கணிப்பு முறைமூலம் தினசரியும் தீவிரமாக பூச்சி நோய் தாக்குதலை கண்காணிப்பதோடு முன்னறிவிப்பும் வழங்கப்படுகிறது. பகுதிக்கேற்ற பயிர் வாரியான முன்னறிவிப்புகள் வழங்கப்படுவதோடு குறுஞ்செய்திகள், குரல்

2016 ஆகஸ்ட் 19]

வழிச் செய்திகள், வானொலி, தொலைக்காட்சி, துண்டு பிரசுரங்கள், முகாம்கள் மூலமும் பயிர் பாதுகாப்பு முறைகள் பரிந்துரை செய்யப்படுகின்றன.

1.7.3.2. ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை

இரசாயன பூச்சிக் கொல்லிகளால் வேளாண் சுற்றுச் சூழல் அமைப்புகளில் ஏற்படும் பெரும் பாதிப்புகளிலிருந்து பாதுகாத்திட, பொருளாதார சேத நிலை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பயிர் பாதுகாப்பு அணுகுமுறைகளுக்கு மாற்றாக, பல்வேறு வளர்ச்சிப் பருவங்களில் பயிரின் நிலை, பயிரின் பூச்சி நோய் எதிர்ப்பு சக்தி, பயிரை தாக்கும் மற்றும் நன்மை செய்யும் பூச்சிகளின் இடையிலான விகிதம், மண்ணின் தன்மை, சீதோஷ்ணநிலை, விவசாயிகளின் அனுபவம் போன்ற பல்வேறு பயிர் பாதுகாப்பு உத்திகளை உள்ளடக்கிய, வேளாண் சுற்றுச்சூழல் பகுப்பாய்வு அடிப்படையிலான ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. பூச்சிகளின் எண்ணிக்கை மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு எதிர்ப்புத் திறன் அதிகரிப்பதாலும் நிலைப்புத் தன்மையாலும் வேளாண் சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள் மற்றும் பயிர் சாகுபடி செலவினத்தை குறைக்க இவ்வணுகுமுறை வழிவகை செய்கிறது.

சுற்றுச்சூழல் மற்றும் விவசாயிகளுக்கு உகந்த நீடித்த நிலையான வேளாண் செயல் முறைகளை ஊக்குவித்து வரும் தமிழக அரசு, உயரிய, நவீன, குறைந்த செலவில் மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பூச்சி மேலாண்மை தொழில்நுட்பங்களை பரவலாக்கும் நோக்கில் 150 "சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மாதிரி கிராமங்களை" அமைத்துள்ளது. பயிர் பாதுகாப்பு மேலாண்மை சார்ந்த சுற்றுச்சூழலியல், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை கிராமங்கள் சார்ந்த வேளாண் சுற்றுச்சூழல் பகுப்பாய்வு மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளை வயல்களிலேயே உற்பத்தி செய்யும் தொழில்நுட்பங்களும் பிரபலப்படுத்தப்பட்டன. வேளாண்மையில் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளின் பயன்பாட்டை அதிகரிக்கவும், நச்சுத்தன்மை கொண்ட இரசாயன பூச்சிக்கொல்லிகள் பயன்பாட்டைத் தவிர்த்து சாகுபடி செலவினத்தைக் குறைக்கவும் வேதிப்பொருட்கள் மீதமில்லா உணவு உற்பத்திமூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும்

[2016 ஆகஸ்ட் 19

இவ்வியக்கம் செயல்படுத்தப்பட்டது. விவசாயிகள் ஆர்வலர் குழுக்கள்மூலம் 150 ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு கிராமங்களில் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் விவரம் பின்வருமாறு:

அட்டவணை 1.22 : 150 ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு கிராமங்களில் உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்ட உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள்

வ. எண்	மாவட்டம்	விவசாய ஆர்வலர் குழு (எண்)	உற்பத்தி செய்து விநியோகிக்கப்படும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள்		
			டிரைக்கோ டெர்மா விரிடி (மெ.டன்)	டிரைக்கோ டெர்மா கைலோனிஸ் (சிசி)	ரெடுவிட் பூச்சி (எண்)
1.	அரியலூர்	10	7	0	0
2.	திருச்சி	5	3	150	10,200
3.	நாமக்கல்	5	3	0	0
4.	தருமபுரி	13	7	0	0
5.	திண்டுக்கல்	5	3	0	0
6.	கரூர்	8	5	1,600	0
7.	கிருஷ்ணகிரி	17	14	0	0
8.	புதுக்கோட்டை	8	7	1,600	0
9.	சேலம்	7	4	1,400	1,40,000
10.	இராமநாதபுரம்	14	8	2,710	28,000
11.	சிவகங்கை	14	8	0	0
12.	தூத்துக்குடி	16	10	3,200	16,000
13.	பெரம்பலூர்	6	4	0	0
14.	வேலூர்	7	5	0	0
15.	திருநெல்வேலி	5	0	0	180
16.	விருதுநகர்	10	6	0	0
	மொத்தம்	**150**	**94**	**10,660**	**1,94,380**

2016 ஆகஸ்ட் 19]

சுற்றுச்சூழலுக்கு உகந்த நீடித்த நிலையான அணுகுமுறைகளை தமிழக அரசு ஊக்குவித்ததன்மூலம் 1984-1985 ஆம் ஆண்டில் 10,926 மெ.டன்னாக இருந்த பூச்சிக் கொல்லி மருந்து மூலக்கூறுகளின் பயன்பாடு, 2015-2016 ஆம் ஆண்டில் 2,050 மெ.டன்னாக குறைந்துள்ளது.

1.8. திட்டங்கள்

2016-2017 ஆம் ஆண்டிற்கான இலக்கை அடைவதில் முனைப்புடன் செயல்படும் தமிழக அரசு, நிலம் மற்றும் பாசன நீரை திறன்பட பயன்படுத்தி உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கோடு பல உன்னத திட்டங்களை வகுத்துள்ளது. இதுதவிர, அதிக அளவில் உற்பத்தியை அடைவதற்காக பயிர் சார்ந்த உத்திகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், உற்பத்தியைக் குறைக்கும் காரணிகளை எதிர்கொண்டு, இடுபொருள் பயன்பாட்டுத் திறனை அதிகரிக்கவும், நிலைத்தன்மையுடைய உயர் வருவாய் தரும் பயிர்களை சாகுபடி செய்யவும் புதிய உத்திகள் வகுக்கப்பட்டு வருகின்றன.

1.8.1.தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் (National Agricultural Development Programme)

வேளாண் தட்பவெப்ப நிலை, இயற்கை வள ஆதாரங்கள் மற்றும் தொழில்நுட்பங்களின் அடிப்படையில், வேளாண்மை மற்றும் வேளாண்மைச் சார்ந்த தொழில்களில் ஒருங்கிணைந்த முழுமையான வளர்ச்சியை அடைய, விரிவான வேளாண் மேம்பாட்டுத் திட்டமாக, மத்திய அரசின் கூடுதல் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்த தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், 2015-2016 ஆம் ஆண்டு முதல் மத்திய மாநில அரசுகளின் 60 : 40 சதவீத பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை, ரூ.862.52 கோடி நிதி செலவில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

[2016 ஆகஸ்ட் 19

அட்டவணை 1.23 : தேசிய வேளாண் வளர்ச்சித் திட்ட செயல்பாடுகள்

(ரூ. கோடியில்)

வருடம்	செலவினம்
2011–2012	134.87
2012–2013	306.97
2013–2014	150.93
2014–2015	87.46
2015–2016	182.29
மொத்தம்	862.52

2016-2017 ஆம் ஆண்டில் நெல், சிறு தானியங்கள் மற்றும் பயறுவகை பயிர்களுக்கான உணவு தானிய மேம்பாட்டுத் திட்டம், எண்ணெய் வித்துக்கள், பருத்தி மற்றும் கரும்பு (நீடித்த நவீன கரும்பு உற்பத்தித் திட்டம்) பயிர்களுக்கான ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம், கரும்பு சோகை நிலப் போர்வை மற்றும் பசுந்தாளுர விதைகள்மூலம் மண்வளத்தை அதிகரிக்கும் திட்டம், தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கான ஊக்கத் தொகை வழங்குதல், தென்னங்கன்றுகள் விநியோகம், சிவப்பு கூன் வண்டு கட்டுப்பாடு, வேளாண் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய செயல்பாடுகள் ரூ.237.47 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1.8.2. தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் (National Food Security Mission)

உணவு தானியங்கள் குறிப்பாக நெல் மற்றும் பயறுவகைகளில் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்தோடு, மத்திய அரசின் முழு உதவி பெறும் திட்டமாக தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் கடந்த 2014-2015 ஆம் ஆண்டு முதல் சிறுதானியங்கள் மற்றும் வணிகப் பயிர்களிலும் (பருத்தி மற்றும் கரும்பு) செயல்படுத்தப்பட்டது. 2015-2016 ஆம் ஆண்டு முதல் மத்திய மாநில அரசுகளின் பங்கேற்பு விகிதம் 60 : 40 ஆக மாற்றப்பட்டது. மானாவாரி நிலங்களில் உணவு தானிய பயிர்களின் சாகுபடி, ஊடுபயிராகவும், வரப்பு பயிராகவும் மற்றும்

2016 ஆகஸ்ட் 19]

நெல் தரிசில் சாகுபடி மூலமும் பயறுவகை சாகுபடி பரப்பளவு மற்றும் உற்பத்தியை அதிகரித்தல், நவீன வேளாண் செயல்பாடுகள் மற்றும் பயிர் சாகுபடி முறை அடிப்படையிலான அணுகுமுறைகள் செயல்படுத்துதல் போன்ற இனங்களில் இவ்வியக்கம் கவனம் செலுத்தி வருகிறது.

கடந்த 2011-2012 முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை பல்வேறு பயிர்களுக்காக செலவிடப்பட்ட தொகை விவரம் பின்வருமாறு:

அட்டவணை 1.24 : தேசிய உணவு பாதுகாப்புத் திட்ட செயல்பாடுகள்

(ரூ. கோடியில்)

பயிர்	செலவினம்
நெல்	117.27
சிறுதானியங்கள்	12.80
பயறுவகைகளில்	138.23
பருத்தி	0.86
கரும்பு	0.84
மொத்தம்	**270.00**

2016-2017 ஆம் ஆண்டில், இத்திட்டம் பல்வேறு பயிர்களின்கீழ் மொத்தம் ரூ.84.69 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

1.8.2.1. அரிசிக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் (NFSM)

அரிசிக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம், இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவண்ணாமலை மற்றும் கடலூர் ஆகிய 8 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. கடந்த 2011-2012 ஆம் ஆண்டு முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை, இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ.117.27 கோடி செலவிடப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில், இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு உத்திகளால் அரிசியில் சாகுபடி பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் அடையப்பட்டது.

[2016 ஆகஸ்ட் 19

அட்டவணை 1.25 : தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தால் அரிசி சாகுபடியில் நல்விளைவுகள்

விவரம்	2007–08 (துவக்கம்)	2014–15	உயர்வு சதவீதம்
சாகுபடி பரப்பளவு (இல.எக்.)	5.95	10.07	69
உற்பத்தி (இல.மெ.டன்)	8.69	41.37	376
உற்பத்தித் திறன் (கிலோ / எக்டர்)	1,460	4,109	181

2016-2017 ஆம் ஆண்டில், நேரடி நெல் விதைப்பு, வரிசை நடவு மற்றும் சுவர்ணா சப்-1 என்ற நெல் இரகத்திற்கான செயல்விளக்கங்களையும் தொழில்நுட்ப பயிர் திட்டம் சார்ந்த செயல்விளக்கங்களையும், தொகுப்பு அணுகுமுறையில் அமைத்தல், நெல்லுடன் பசுந்தாளுரப் பயிர் விதைப்பு, உயர் விளைச்சல் இரக மற்றும் வீரிய ஒட்டு இரகங்களுக்கான தரமான விதைகள், நுண்ணூட்ட உரம், பயிர் பாதுகாப்பு மருந்துகள், உயிரியல் காரணிகள், தெளிப்பான்கள், விதை விதைக்கும் கருவி, சுழற்கலப்பை, பம்பு செட் முதலியவை விநியோகம், நெல் நடவு மற்றும் அறுவடை இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல் மற்றும் பயிர் திட்டம் சார்ந்த பயிற்சிகள் வழங்குதல் முதலிய செயல்பாடுகள் ரூ.20.64 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1.8.2.2.பயறு வகைகளுக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் (NFSM-PULSES)

பயறு வகைகளுக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் சென்னை மற்றும் நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. கடந்த 2011-2012 முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை, இத்திட்டத்தை பிரபலப்படுத்துவதற்காக ரூ.138.23 கோடி மானியம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்ட மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு நவீன உத்திகளால் பயறுவகை சாகுபடி பரப்பளவு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் அடையப்பட்டது.

2016 ஆகஸ்ட் 19]

அட்டவணை 1.26 : தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தால் பயறுவகை சாகுபடியில் நல்விளைவுகள்

விவரம்	2007–08 (தொடக்க வருடம்)	2014–15	உயர்வு சதவீதம்
சாகுபடி பரப்பளவு (இல.எக்.)	4.15	8.84	113
உற்பத்தி(இல. மெடன்)	1.18	7.67	550
உற்பத்தி திறன் (கிலோ/ எக்டர்)	285	868	205

2016 ஆம் ஆண்டை சர்வதேச பயறுவகைகள் ஆண்டாக ஐக்கிய நாடுகளின் அமைப்பு அறிவித்துள்ளதை தொடர்ந்து, துவரை, உளுந்து, பச்சைப்பயறு ஆகிய பயிர்களில் மேம்படுத்தப்பட்ட சாகுபடி தொழில்நுட்பங்களை விளக்கும் தொகுப்பு செயல்விளக்கங்கள், மக்காச்சோளம், நிலக்கடலை, பருத்தி போன்ற பயிர்களில் ஊடுபயிர் செயல் விளக்கங்கள், பயிர் சாகுபடி முறை சார்ந்த செயல் விளக்கங்கள், உயர்விளைச்சல் சான்று விதை விநியோகம், பயறுவகை விதைகள் உற்பத்தி மானியம், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பூச்சி நோய் மேலாண்மை, டிராக்டர், தெளிப்பான்கள், சுழற்கலப்பை போன்ற வள ஆதார பாதுகாப்புக்கான கருவிகள் விநியோகம் போன்ற இனங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பயறு வகைகளில் பாசனப் பரப்பை அதிகரிப்பதற்காக, தெளிப்பு நீர் பாசனக் கருவிகள், சிறியவகை தெளிப்பான்கள், பம்பு செட்டுகள், நீர் எடுத்து செல்லும் குழாய்கள் ஆகிய திறன்மிகு பாசன கருவிகள் வழங்கப்படுகின்றன. மேலும் விவசாய உற்பத்தியாளர் சங்கங்கள்மூலம் சிறிய வகை பயறு உடைக்கும் இயந்திரம் நிறுவுதல், பயறுவகைகளை வகைப்படுத்துதல், கொள்முதல் நிலையங்கள் நிறுவி தரம் பிரித்து சுத்திகரிப்பு செய்தல் போன்ற சந்தைப்படுத்தும் செயல்பாடுகளுக்கான உதவிகளும் அளிக்கப்படுகின்றன. இவை அனைத்தும் 2016-2017 ஆம் ஆண்டில் ரூ.54.38 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படுகின்றன.

[2016 ஆகஸ்ட் 19

1.8.2.3. சிறுதானியங்களுக்கான தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் (NF SM-COARSE CEREALS)

சிறுதானியங்கள் அதிக ஊட்டச்சத்து மிக்கவை. ஆதலால், 2014-2015 ஆம் ஆண்டில் சிறுதானியங்களுக்கென பிரத்யேகமாக தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் சேலம், கோயம்புத்தூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், திருப்பூர், திண்டுக்கல், தேனி மற்றும் தூத்துக்குடி ஆகிய 10 மாவட்டங்களில் துவக்கப்பட்டது. இதுவரை, சிறுதானிய சாகுபடியை பரவலாக்குவதற்காக ரூ.12.80 கோடி செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்த மாவட்டங்களில் பகுதிக்கேற்ற தொழில்நுட்பங்களை மேற்கொண்டதால், சிறுதானியங்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் அதிகரித்தது.

அட்டவணை 1.27 : தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தால் சிறுதானியங்கள் சாகுபடியில் நல்விளைவுகள்

விவரம்	திட்டம் செயல்படுத்துவதற்கு முன் 2013-2014	திட்டம் செயல் படுத்தப்பட்ட பின் 2014-2015	உயர்வு சதவீதம்
உற்பத்தி (இல.மெடன்)	19.20	23.55	23
உற்பத்தித் திறன் (கிலோ / எக்டர்)	3,544	4,368	23

2016-2017 ஆம் ஆண்டில், சிறுதானியங்கள் சாகுபடிக்கு வாய்ப்புள்ள வட்டாரங்கள் கண்டறியப்பட்டு, உற்பத்தி தொழில்நுட்ப செயல்விளக்கங்களையும் பயறுவகை பயிர்களை ஊடு பயிராக சாகுபடி மேற்கொள்வதற்கான செயல் விளக்கங்களையும் தொகுப்பு அணுகுமுறையில் மேற்கொள்ளுதல், உயர் விளைச்சல் இரக மற்றும் வீரிய ஒட்டு இரகங்களின் விதை உற்பத்தி மற்றும் விநியோகம் போன்ற செயல்பாடுகள் ரூ.8.66 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

2016 ஆகஸ்ட் 19]

1.8.2.4. வணிகப் பயிர்களுக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் (NFSM-COMMERCIAL CROPS)

பருத்தி மற்றும் கரும்பு போன்ற வணிகப் பயிர்களில் தொகுப்பு அணுகுமுறையை வலியுறுத்தும் வணிகப் பயிர்களுக்கான தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் 2014-2015 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பருத்தி பயிர் சாகுபடி முறை சார்ந்த தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் சேலம், தருமபுரி, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, தேனி, திண்டுக்கல், விழுப்புரம், பெரம்பலூர், தூத்துக்குடி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. கடந்த 2014-2015 மற்றும் 2015-2016 ஆம் ஆண்டுகளில், ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, உள்ளூர் (DESI) மற்றும் மிக நீள இழை பருத்தி இரக விதை உற்பத்தி, ஊடுபயிர் மற்றும் அடர் நடவு முறை தொடர்பான செயல் விளக்கங்கள் ரூ.86 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன. 2016-2017 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.51 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கரும்பு பயிர் சாகுபடி முறை சார்ந்த தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் கடலூர், விழுப்புரம், சேலம், நாமக்கல், ஈரோடு, அரியலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. கடந்த 2014-2015 மற்றும் 2015-2016 ஆம் ஆண்டுகளில், ஊடுபயிர் சாகுபடி தொடர்பான செயல்விளக்கங்கள் மற்றும் மாநில அளவிலான பயிற்சிகளுக்காக ரூ.84 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.8.3. நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (National Mission for Sustainable Agriculture (NMSA))

நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தை, கடந்த 2014-2015 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. சுற்றுப்புறச்சூழலுக்கு உகந்த மாற்று தொழில்நுட்பங்களை மேற்கொள்ளுதல், ஆற்றலை திறன்பட உபயோகிக்கும் கருவிகள்

பயன்படுத்துதல், வள ஆதாரங்களை பாதுகாத்தல், மானாவாரி நிலங்களில் ஒருங்கிணைந்த பண்ணையம் மேற்கொள்ளுதல் போன்ற நிலையான மேம்பாட்டிற்கான செயல்பாடுகள்மூலம் பாசன நீர் உபயோகிக்கும் திறனை அதிகரிக்கவும், நுண்ணூட்டச் சத்து மேலாண்மைக்கும் விவசாயிகளின் பலதரப்பட்ட வாழ்வாதாரத்திற்காகவும் மானாவாரி பகுதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் மண்வள மேலாண்மை, நீர் வள ஆதார மேம்பாடு, திறன்மிகு இரசாயன இடுபொருட்கள் பயன்பாடு, மாற்று பயிர் சாகுபடி, கால்நடை வளர்ப்புடன் இணைந்த பயிர் சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு, வேளாண் காடுகள் வளர்ப்பு மற்றும் மீன் வளர்ப்புடன் கூடிய பயிர்சாகுபடி போன்ற ஒருங்கிணைந்த அணுகுமுறைகளை மேற்கொண்டு பகுதிக்கேற்ற மேம்படுத்தப்பட்ட பயிர்சாகுபடி முறைகளை பரவலாக்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

கடந்த 2014-2015 ஆம் ஆண்டில், இத்திட்டம் மத்திய அரசின் 100 சதவீத நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டது. கடந்த 2015—2016 ஆம் ஆண்டில், மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி பங்களிப்பு 60 : 40 ஆக மாற்றப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்ட ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டத்தின்கீழ், ரூ.61.21 கோடி செலவில், கறவை மாடுகள்/ஆடுகள் வளர்ப்புடன் இணைந்த பயிர்த்திட்டம், களர்/உவர் நிலங்களை சீர்திருத்துதல் மற்றும் மண்புழு உர மையங்கள் அமைத்தல் போன்ற இனங்களும், மண்வள மேலாண்மையின்கீழ் ஆய்வகங்களை வலுப்படுத்துதல் மற்றும் அங்கக கிராமங்கள் அமைத்தல் போன்ற இனங்களும் பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் பங்களிப்பு உத்தரவாத சான்றளிப்பு முறையின்கீழ் குழு அணுகுமுறையில் அங்ககப் பண்ணையமும், மண்வள அட்டை இயக்கத்தின்கீழ் மண்வள அட்டைகளும் வழங்கப்பட்டன. கடந்த 2015-2016 ஆம் ஆண்டில், நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு:

2016 ஆகஸ்ட் 19]

அட்டவணை 1.28 : நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின்கீழ் 2015-2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயல்பாடுகள்

செயல்பாடுகள்	சாதனை
1. மானாவாரி பகுதி மேம்பாடு	
அ. ஒருங்கிணைந்த பண்ணைய முறை	
பயிர் சார்ந்த செயல் விளக்கங்கள் (எக்டர்)	13,212
கறவை மாடுகள் விநியோகம் (எண்கள்)	6,875
ஆடுகள் விநியோகம் (9+1 எண்கள்)	6,337
ஆ. மதிப்பு கூட்டுதல் மற்றும் வள ஆதார பாதுகாப்பு	
மண்புழு உர மையங்கள் அமைத்தல் (எண்கள்)	1,322
2. பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம்	
விவசாயிகளை குழுக்களாக ஒருங்கிணைத்து மண்டல மன்றங்களாக பதிவு செய்தல் (எண்கள்)	42
3. மண் வள அட்டை இயக்கம்	
மண் மாதிரிகள் சேகரிப்பு (இல. எண்கள்)	4.23
மண் மாதிரிகள் ஆய்வு (இல. எண்கள்)	4.23
மண் வள அட்டைகள் விநியோகம் (இல. எண்கள்)	24.29

2016-2017 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.40.19 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

1.8.4. எண்ணெய்வித்துக்கள் மற்றும் எண்ணெய்ப் பனைக்கான தேசிய இயக்கம் [(National Mission on Oilseeds & Oilpalm (NMOOP)]

எண்ணெய்வித்துக்கள், பயறுவகைகள், எண்ணெய்ப் பனை மற்றும் மக்காச்சோளப் பயிர்களுக்கான ஒருங்கிணைந்த திட்டம் எண்ணெய்வித்துக்கள் மற்றும் எண்ணெய்ப் பனைக்கான தேசிய இயக்கமாக 2014-2015 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எண்ணெய் வித்துக்கள், எண்ணெய்ப்பனை மற்றும் மரவகை எண்ணெய் வித்துக்களிலிருந்து கிடைக்கும்

[2016 ஆகஸ்ட் 19

தாவர எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 60 : 40 என்ற விகிதத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டம் எண்ணெய் வித்துக்கள், எண்ணெய்ப்பனை மற்றும் மரவகை எண்ணெய்வித்துக்களுக்கான மூன்று குறு இயக்கங்களை உள்ளடக்கியது.

கடந்த 2011-2012 முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை, எண்ணெய்வித்துக்கள், எண்ணெய்ப்பனை மற்றும் மரவகை எண்ணெய் வித்துக்களின் (2014-2015 முதல்) உற்பத்தித் திறனை அதிகரிக்க ரூ.66.14 கோடி செலவிடப்பட்டது.

2016-2017 ஆம் ஆண்டில் இவ்வியக்கம் ரூ.15.01 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்பட உள்ளது.

கடந்த 2011-2012 முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை மூன்று குறு இயக்கங்களின்கீழ் ஒதுக்கீடு பின்வருமாறு:

அட்டவணை 1.29 : எண்ணெய் வித்துகள் மற்றும் எண்ணெய்ப் பனைக்கான தேசிய இயக்கத்தின் செயல்பாடுகள்

(ரூ. கோடியில்)

பயிர்	நிதி ஒதுக்கீடு
எண்ணெய்வித்துகள்	64.99
எண்ணெய்ப்பனை	12.75
மரவகை எண்ணெய் வித்துகள்	1.17
மொத்தம்	**78.91**

1.8.4.1. எண்ணெய்வித்துக்களுக்கான குறு இயக்கம் – I (Mini Mission-I on Oil Seeds)

கன்னியாகுமரி, சென்னை, நீலகிரி நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் எண்ணெய் வித்துக்களுக்கான குறு இயக்கம் செயல்படுத்தப்படுகிறது. தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகம், பல்வேறு இரகங்களை அறிமுகப்படுத்துதல், விதைகளுக்கான உட்கட்டமைப்பு மேம்பாடு, பயிர் பாதுகாப்பு, மேம்படுத்தப்பட்ட பண்ணை இயந்திரங்கள் விநியோகம் மற்றும் தொழில் நுட்ப பரவலாக்கம் போன்ற இனங்களில் தீவிர கவனம் செலுத்தப்படுகிறது. கடந்த 2011-2012 முதல் 2015-2016 ஆம் ஆண்டு

வரை எண்ணெய்வித்துக்களில் உற்பத்தியை அதிகரிக்க இவ்வினங்களுக்காக ரூ.58.55 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2016-2017 ஆம் ஆண்டில், வல்லுநர் விதை கொள்முதல், ஆதார மற்றும் சான்று விதை உற்பத்தி மற்றும் விநியோகம், பெரு விளக்கத் திடல்கள் (நிலக்கடலை) மூலம் நவீன தொழில்நுட்பங்களை பரவலாக்குதல், சுழற்கலப்பை விநியோகம் போன்ற இனங்கள் ரூ.9.12 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

1.8.4.2. எண்ணெய்ப்பனைக்கான குறு இயக்கம்– II (Mini Mission-II on Oil Palm)

தரமான நடவு பொருட்களை வழங்குவதோடு ஏற்கெனவே பயிர் செய்யப்பட்டுள்ள எண்ணெய்ப்பனை மரங்கள் பராமரிப்பிற்காக ஊடுபயிர் சாகுபடி மற்றும் மண்புழு உர மையத்திற்கான உற்பத்தி இடுபொருட்கள், டீசல் பம்புசெட்டுகள், இயந்திரங்கள் மற்றும் கருவிகள் விநியோகிக்கப்பதோடு தகவல் பரிமாற்றம்மூலம் பரப்பு விரிவாக்கம் செய்வதே எண்ணெப்பனைக்கான குறு இயக்கத்தின் நோக்கமாகும். கடந்த 2011-2012 முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை ரூ.6.65 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

2016-2017 ஆம் ஆண்டில் ரூ.4.02 கோடி நிதி ஒதுக்கீட்டில் கன்னியாகுமரி, சென்னை, நீலகிரி, தூத்துக்குடி மற்றும் மதுரை மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பப்பட உள்ளது.

1.8.4.3 மரவகை எண்ணெய்வித்துப் பயிர்களுக்கான குறு இயக்கம்–III [(Mini Mission-III on Tree Borne Oilseeds (TBOs)]

வேம்பு மற்றும் புங்கம் ஆகிய மர வகை எண்ணெய் வித்துப் பயிர்களுக்கான குறு இயக்கம் சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தூத்துக்குடி, மதுரை, திருப்பூர், திண்டுக்கல், விழுப்புரம், புதுக்கோட்டை, திருவண்ணாமலை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. வேம்பு மற்றும் புங்கம் மரவகை எண்ணெய்வித்துப் பயிர்களுக்கான நாற்றாங்கால் அமைப்பதை ஊக்குவித்தல் மற்றும் தரிசு நிலங்களில் சாகுபடி செய்தல், ஊடுபயிர் சாகுபடி மற்றும் மேம்பட்ட சாகுபடி முறைகளை குறித்த பயிற்சி அளித்தல் போன்றவை

இக்குறு இயக்கத்தின் நோக்கமாகும். கடந்த 2014-2015 மற்றும் 2015-2016 ஆம் ஆண்டுகளில், ரூ.94 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

2016-2017 ஆம் ஆண்டில், ரூ.1.87 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பப்பட உள்ளது.

1.8.5. வேளாண் விரிவாக்கம் மற்றும் தொழில் நுட்பத்திற்கான தேசிய இயக்கம் [(National Mission on Agricultural Extension & Technology (NMAET)]

வேளாண் விரிவாக்கத்தை மறுசீரமைத்து வலுப்படுத்துவதற்காக விரிவான நேரடி விரிவாக்க தொடர்பு மற்றும் கலந்துரையாடல் முறைகள்மூலம் தகவல் பரிமாற்றத்தை திறன்பட மேற்கொள்ளுதல், தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல், நவீன மற்றும் உகந்த தொழில்நுட்பங்களை பரவலாக்குதல், திறன் மேம்பாடு மற்றும் இயந்திரமயமாக்குதலை ஊக்குவிக்க நிறுவன அமைப்பினை வலுப்படுத்துதல், தரமான விதைகள் கிடைக்கச் செய்தல், பயிர்பாதுகாப்பு மேற்கொள்ளுதல் மற்றும் விவசாயிகளை ஆர்வலர் குழுக்களாக ஒருங்கிணைத்து விவசாய உற்பத்தியாளர்கள் அமைப்பை ஏற்படுத்துதல் ஆகிய செயல்பாடுகள் வேளாண் விரிவாக்கம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தேசிய இயக்கத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வியக்கம் வேளாண் விரிவாக்கத்திற்கான துணை இயக்கம், விதைகள் மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கம், வேளாண் இயந்திரமயமாக்குத்தலுக்கான துணை இயக்கம், பயிர் பாதுகாப்பு மற்றும் தாவர நோய் தடுப்புக்கான துணை இயக்கம் என நான்கு துணை இயக்கங்களை உள்ளடக்கியதாகும்.

1.8.5.1. வேளாண் விரிவாக்கத்திற்கான துணை இயக்கம் – மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டம் [(Sub-Mission on Agricultural Extension (SMAE)- Support to State Extension Programmes for Extension Reforms Scheme (SSEPERS)]

வேளாண் விரிவாக்கத்திற்கான துணை இயக்கத்தின்கீழ் செயல்படுத்தப்படும் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணைக்கான விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தில் அனைத்து விரிவாக்க செயல்பாடுகள், நவீன தொழில்நுட்ப தகவல் பரிமாற்றம்

2016 ஆகஸ்ட் 19]

மற்றும் விரிவாக்க பணியாளர்களுக்கான ஆதரவு போன்ற இனங்கள் 60:40 என்ற மத்திய மாநில நிதி பங்கீட்டுடனும், விவசாயிகளின் நண்பன் என்ற இனம் 50:50 என்ற மத்திய மாநில நிதி பங்கீட்டுடனும் வேளாண்மை, தோட்டக்கலை (ம) மலைப்பயிர்கள், கால்நடை வளர்ப்பு, பட்டுப்பூச்சி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, வனத் துறை, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை (ம) வேளாண் வணிகம், விதைச்சான்று (ம) அங்ககச் சான்று ஆகிய துறைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவம் (ம) அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

இவ்வியக்கத்தின்கீழ் பயிற்சி, செயல்விளக்கங்கள், கண்டுணர் சுற்றுலா, விருதுகள் வழங்குதல், விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகளுக்கிடையே கலந்துரையாடல், விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அலுவலர்களின் ஒருங்கிணைந்த ஆய்வு, வயல் விழாக்கள் மற்றும் பண்ணைப் பள்ளிகள் நடத்துதல், நவீன தொழில்நுட்ப தகவல் பரிமாற்ற உத்திகள் போன்ற பல்வேறு இனங்கள் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும், மாநிலங்களுக்கிடையிலும் கடந்த 2011-2012 முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை ரூ.145.43 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டன.

2016-2017 ஆம் ஆண்டில் ரூ. 56.96 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

1.8.5.2. விதைகள் மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கம் [Sub-Mission on Seed and Planting Material (SMSP)]

கரு விதை முதல் சான்று பெற்ற விதைகள் வரை விதை பெருக்கம் செய்வதுடன் விதைப் பிரிவு மேம்பாட்டிற்கு தேவையான உட்கட்டமைப்புகளை அமைத்திடும் நோக்கில் விதை மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கம் 60 : 40 என்ற மத்திய-மாநில அரசுகளின் நிதி பங்கீட்டு விகிதத்துடன் செயல்படுத்தப்படுகிறது. நெல், சிறுதானியங்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பயறுவகை ஆதார/சான்றளிக்கப்பட்ட விதைகள் விவசாயிகளுக்கு மானியத்தில் விநியோகிக்கப்படுவதுடன் விவசாயிகளின் விதை தேவையை பூர்த்தி செய்யவும், பண்ணை வருமானத்தை உயர்த்தவும்

விஞ்ஞான முறையில் தரமான விதை உற்பத்தி மேற்கொள்ள உரிய பயிற்சிகளும் இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன.

கடந்த 2011-2012 முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை இத்திட்டம் ரூ.100.37 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது.

2016-2017 ஆம் ஆண்டில், இத்திட்டத்தை ரூ.14.28 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

1.8.5.3. தேசிய மின் ஆளுமை திட்டம்–வேளாண்மை [National e-governance Plan-Agriculture (NeGP-A)]

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சியை விரைவுபடுத்தவும், உணவு பாதுகாப்பை ஊக்குவிக்கவும், ஊரகப் பகுதிகளில் வறுமையை அகற்றவும், மின்னணு வேளாண்மையின் வளர்ச்சி வழி வகுக்கிறது. பயிர் சாகுபடி மற்றும் சிறந்த வேளாண் அணுகுமுறைகள் தொடர்பான தகவல்களை தடையின்றி பெறுவதோடு பண்ணை அளவில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளின் நிலைத்தன்மை, திறன் மற்றும் வருவாயை அதிகரிக்கவும், பணிகளை துரிதமாக முடிக்கவும், விதை மற்றும் உர விநியோகிப்பாளர்களிடையே உள்ள தொடர்பை மேம்படுத்தவும், செய்தி மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் பெரிதும் பயன்படுகின்றன.

விவசாயிகளுக்கு விரிவாக்க சேவையை விரைவாக வழங்க புதிய மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்திட தமிழக அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1.8.6. வேளாண் காப்பீட்டுத் திட்டங்கள்

இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் அதிக பயிர் பாதிப்பு வேளாண்மை தொழிலுக்கு மிகப் பெரும் சவாலாக உள்ளது. விவசாயிகளின் நலனில் அதிக அக்கறை உடைய தமிழக அரசு மாநிலத்தின் சீதோஷ்ண நிலை, விவசாயிகளின் தேவை மற்றும் அதிகளவில் இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பயிர் பாதிப்புகளை காப்பீடு செய்ய உகந்த வேளாண் காப்பீட்டுத் திட்டங்களை தேர்ந்தெடுத்து செயல்படுத்துகிறது.

2016 ஆகஸ்ட் 19]

கடந்த 2011-2012 முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை, ரூ.217.44 கோடி காப்பீட்டு கட்டண மானியத்தில் சுமார் 41.88 இலட்சம் விவசாயிகள் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம், மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம், வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீட்டுத் திட்டம் மற்றும் தென்னை மரக் காப்பீட்டுத் திட்டம் போன்ற பயிர் காப்பீட்டுத் திட்டங்களின்கீழ் பதிவு செய்யப்பட்டனர். மேலும் இதே வருடக் காலத்தில் சுமார் 10.12 இலட்சம் விவசாயிகளுக்கு மாநில அரசின் இழப்பீட்டு தொகையாக ரூ.655.07 கோடி வழங்கப்பட்டது.

தமிழக அரசு 2016-2017 ஆம் ஆண்டில் "பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம்'' [(Pradhan Mantri Fasal Bima Yojana (PMFBY)] *என்ற புதிய திட்டத்தை சென்னையைத் தவிர ஏனைய 31 மாவட்டங்களில் செயல்படுத்தும். சென்ற ஆண்டு வரை குறுவட்டம் (பிர்கா) அளவில் செயல்படுத்தப்பட்டு வந்த பயிர்க்காப்பீட்டுத் திட்டம், இந்த ஆண்டு முதல் வருவாய் கிராம அளவில் செயல்படுத்தப்படவுள்ளதால், விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பினைத் துல்லியமாகக் கணக்கிட்டு, அதற்குரிய இழப்பீட்டினை விவசாயிகள் பெற, இப்புதிய பயிர்க்காப்பீட்டுத் திட்டம் வழிவகை செய்கிறது. பயிர்க்கடன் பெறும் மற்றும் பயிர்க்கடன் பெறாத விவசாயிகளும் இத்திட்டத்தில் பதிவு செய்ய ஒரே காலக்கெடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், மகசூல் இழப்பு அடிப்படையில் மட்டுமல்லாமல் விதைப்பு பொய்த்தாலும், நடவு செய்ய இயலாத நிலை ஏற்பட்டாலும், விதைப்பு முதல் அறுவடை வரையிலான காலத்தில் ஏற்படும் இயற்கை இடர்பாடுகளினால் பாதிப்பு ஏற்பட்டாலும் இழப்பீடு வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதேபோல, பண்ணையளவில் ஏற்படும் பயிர்ப்பாதிப்பு மற்றும் அறுவடைக்குப் பின் வயலளவில் ஏற்படும் இழப்பு உள்ளிட்ட அனைத்திற்கும் இழப்பீடு வழங்க இப்புதிய திட்டத்தில் வழிவகை உள்ளது.*

கடந்த ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டு வந்த தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்திற்காக, காப்பீட்டுக் கட்டண மானியமாகவும் இழப்பீட்டுத் தொகையின் பங்குத் தொகையாகவும் சராசரியாக ஆண்டுதோறும் 160 கோடி ரூபாய் தமிழக அரசு செலவிட்டது. ஆனால், 2016-2017 ஆம் ஆண்டு முதல், பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்துவதால் தமிழக அரசுக்கு

உத்தேச செலவினம் 487 கோடி ரூபாயாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதைத் தவிர, தென்னை மர காப்பீட்டுத் திட்டமும் 2016-2017 ஆம் ஆண்டில், அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மேலும், "ஒருங்கிணைக்கப்பட்ட தொகுப்பு காப்பீட்டு திட்டம்" [(Unified Package Insurance scheme (UPIS)] என்ற புதிய திட்டத்தையும் மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. பயிர்களுக்கு காப்பீடு வழங்குவதோடு இயந்திரங்கள், ஆயுள் காப்பீடு, விபத்து, வீடு மற்றும் மாணவர் பாதுகாப்பு போன்றவற்றிற்கும் காப்பீடு வழங்க இத்திட்டம் தமிழகத்தில் கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்படும்.

1.8.7. தென்னை வளர்ச்சி வாரிய நிதி உதவிபெறும் திட்டங்கள்

பல்லாண்டுப் பயிரான தென்னை, தமிழ்நாட்டில் 4.28 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதன் உற்பத்தி ஆண்டுக்கு 498.65 கோடி தேங்காய்கள் மற்றும் உற்பத்தித்திறன் எக்டருக்கு 11,655 தேங்காய்கள் ஆகும். தென்னை சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தியினை அதிகரிக்கவும், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களைத் தயாரிக்கவும் தமிழகத்தில் அதிக வாய்ப்புகள் இருப்பதால் தரமான நெட்டை, நெட்டை x குட்டை மற்றும் குட்டை x நெட்டை தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகத்தை அதிகரிக்கவும், அறிவியல் சார்ந்த மேலாண்மை முறைகளை பரவலாக்கி ஒருங்கிணைந்த அணுகுமுறைமூலம் தென்னை சாகுபடி பரப்பளவை அதிகரிக்கவும், தற்போதுள்ள தென்னை பயிரின் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும் தென்னை வளர்ச்சி வாரிய நிதி உதவியுடன் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஆண்டுதோறும் சுமார் 9 இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றுள் 4.80 இலட்சம் தென்னங்கன்றுகள் மானிய விலையிலும் (தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்) மீதமுள்ள தென்னங்கன்றுகள் முழு விலையிலும் விநியோகிப்படுகின்றன. கடந்த 2011-2012 முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், ரூ.12.53 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டில், ரூ.1.88 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2016 ஆகஸ்ட் 19]

1.8.8. ஒருங்கிணைந்த மண்வள மேலாண்மை

"பயிருக்கு ஊட்டமளிக்க மண்ணுக்கு ஊட்டமிடுதல்" என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் இயங்கும் ஒருங்கிணைந்த மண்வள மேலாண்மை, வேளாண் உற்பத்தி முறையின் முக்கிய அங்கமாகும். இரசாயன உரங்கள், பகுதிக்குரிய மண் சீர்திருத்தும் இடுபொருட்கள் (சுண்ணாம்பு மற்றும் ஜிப்சம்) மற்றும் அங்ககப் பொருட்கள் (பயிர் கழிவுகள், மக்கு உரங்கள் மற்றும் பசுந்தாள் உரப் பயிர்கள்) போன்றவற்றை ஒருங்கிணைத்து பயன்படுத்துவதன்மூலம் இழந்த வளத்தை மீண்டும் பெறும் உத்திகளை இம்மேலாண்மை முறை மையமாக கொண்டுள்ளது. மண்ணின் தன்மை, உரம் மற்றும் இதர வேளாண் இடுபொருட்களின் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்த இம்முறை உதவுகிறது.

மண் மாதிரிகள் சேகரித்து, ஆய்வு செய்து மண்வள அட்டை வழங்குவதன்மூலம் மண்ணுக்கு உகந்த ஊட்டச்சத்து மேலாண்மை, உயிரி-அங்கக உரமிடுதல், அமிலம் மற்றும் களர்- உவர் நிலங்களை சீர்திருத்துதல், உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட அமெரிக்க வேளாண் துறை (USDA) முறைகளின்படி கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் இயங்கும் மண் வகையீடு மற்றும் நில பயன்பாட்டு அமைப்புகள் மூலமாக விரிவான மண் ஆய்வு போன்ற நீடித்த நிலையான மண்வள மேலாண்மை முறைகளை விவசாயிகளிடையே வெற்றிகரமாக பரவலாக்கி மண்வளத்தை பாதுகாக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

1.8.8.1. மண்வள மேலாண்மைக்கான ஒருங்கிணைந்த வேளாண்–சூழலியல் அணுகுமுறைகள்

*சுற்றுச்சூழலில் நிகழும் பல்வேறு மாற்றங்களையும் தாங்கி வளரக்கூடிய தன்மையை பயிர்களுக்கு அளிக்கவல்ல மண்வாழ் உயிரினங்களை பாதுகாப்பதன் அடிப்படையிலேயே சுற்றுச்சூழலின் நிலைத்தன்மையும், இடர்பாடுகளிலிருந்து மீளும் வல்லமையும் அமையும். **"உயிரி-அங்கக உரமிடுதலே"** மண்ணில் உள்ள நுண்ணுயிரிகளை பாதுகாக்க சிறு நிலவுடைமைதாரர்களும் மேற்கொள்ளக்கூடிய எளிய முறையாகும்.*

[2016 ஆகஸ்ட் 19

இத்தொழில்நுட்ப தொகுப்பு முறையின் முக்கிய இனங்கள் கீழ்க்கண்டவாறு:

- ❖ பண்ணைக் கழிவுகளிலிருந்து புளூரோட்டஸ்மூலம் மக்கு உரம் தயாரிப்பதற்கு ஒரு கிலோ புளூரோட்டஸ் மற்றும் 5 கிலோ யூரியா அடங்கிய 5000 பைகள், ஒவ்வொரு ஆண்டும் விவசாயிகளுக்கு விலையில்லாமல் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

- ❖ மண்ணில் தழைச்சத்தை அதிகரிக்கவும், களைகளைக் குறைக்கவும், ஆண்டுதோறும் 525 மெ.டன் நீலப்பச்சைப்பாசி மற்றும் 500 மெ.டன் அசோலா உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

- ❖ வயல்களிலேயே மடக்கி உழுது மண்ணின் அங்ககச் சத்தை அதிகரிக்க ஆண்டுதோறும் 250 மெ.டன் பசுந்தாள் உரவிதைகள் கொள்முதல் செய்யப்பட்டு 50 சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

 - ➢ மண்வளத்தை மேம்படுத்த நெற்பயிருடன் பசுந்தாளுரப் பயிர்களை ஊடுபயிராக சாகுபடி செய்து, உரங்கள் உபயோகிக்கும் திறன் மற்றும் அரிசியில் உற்பத்தி திறனை அதிகரிக்கும் புதிய திட்டம் 2015-2016 ஆம் ஆண்டில், தமிழ்நாடு நவீன உத்திகள் திட்டத்தின்கீழ் ரூ.30 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது.

 - ➢ 2016-2017 ஆம் ஆண்டில், 1,000 எக்டர் பரப்பளவில் ரூ.4.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

கடந்த 2015-2016 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்து வழங்கப்பட்ட உயிரி இடுபொருட்கள் விவரம் மற்றும் 2016-2017 ஆம் ஆண்டுக்கான திட்டம் பின்வருமாறு:

2016 ஆகஸ்ட் 19]

அட்டவணை 1.30 : உயிரி இடுபொருட்கள்–2015–2016 ஆம் ஆண்டில் விநியோகம் மற்றும் 2016–2017 ஆம் ஆண்டுக்கான திட்டம்

உயிரி இடுபொருட்கள்	விநியோகம் 2015–2016	திட்டம் 2016–2017
நீலப் பச்சைபாசி (மெ.டன்)	519	525
பசுந்தாள் உர விதைகள் (மெ.டன்)	203	250
புளூரோட்டஸ் பைகள் (எண்கள்)	3,500	5,000
அசோலா (மெ.டன்)	447	500

❖ *பயோ-மினரலைசர் (Bio-Mineraliser) என்னும் உயிரியல் காரணியைக் கொண்டு உயிரி மக்குஉரம் தயாரித்து கரும்பு சாகுபடி செய்யும் நிலங்களில் மண்வளத்தை அதிகரிக்கும் திட்டம் 2015-2016 ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது.*

❖ *கரும்பு பயிர்க் கழிவுகள் மேலாண்மைக்காக, கரும்புத் தோகையை உரமாக்கும் திட்டம், 2013-2014 ஆம் ஆண்டு முதல் 2015-2016 ஆம் ஆண்டு வரை, 29,641 எக்டர் பரப்பளவில் ரூ.7.11 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டது. 2016-2017 ஆம் ஆண்டிலும், இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.*

❖ *உயிரியல் பூச்சிக் கொல்லிகள் உற்பத்தியை அதிகரிப்பதோடு, விழிப்புணர்வு ஏற்படுத்தி அங்கக பண்ணையத்தை ஊக்குவிக்கும் திட்டம், 2015-2016 ஆம் ஆண்டில் ரூ.44.15 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது.*

1.8.9. தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம் (Tamil Nadu Cotton Cultivation Mission)

ஐந்தாண்டுகளில் பருத்தி சாகுபடி பரப்பளவை அதிகரித்து உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரிக்கவும் தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம் 2014-2015 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. 2014-2015 மற்றும் 2015-2016 ஆம் ஆண்டுகளில், சென்னை, நீலகிரி, காஞ்சிபுரம், திருவள்ளூர், கரூர், புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

[2016 ஆகஸ்ட் 19

இவ்வியக்கம் துவக்கப்பட்டது முதல், பருத்தி இரக விதைகள் உற்பத்தி மற்றும் விநியோகம், துல்லிய பண்ணையம், பண்ணை இயந்திரமயமாக்குதல், மேம்படுத்தப்பட்ட உழவியல் அணுகுமுறைகள், ஒருங்கிணைந்த பாசன நீர், ஊட்டச்சத்து, களை மற்றும் பூச்சி நோய் மேலாண்மை அணுகுமுறைகள் போன்றவை ரூ.39.03 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது.

கடந்த 2014-2015 ஆம் ஆண்டில், பாசன நீர் சேமிப்பு முறைகள்மூலம் இறவை மற்றும் மானாவாரி பகுதிகளிலும், தரிசு மற்றும் டெல்டா மாவட்டங்களில் நெல் தரிசுகளிலும் சுமார் 35,737 எக்டர் பரப்பளவில் கூடுதலாக சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

2016-2017 ஆம் ஆண்டில், இவ்வியக்கம் ரூ.4.175 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.8.10. தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் (TN-IAMWARM)

உலக வங்கி நிதியுதவியுடன், முதல் கட்டமாக 2015, ஜூன் வரை, 61 உபவடிப் பகுதிகளில் ரூ.101.60 கோடி செலவில் செயல்படுத்தப்பட்ட **"தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்"** *மூலம் திருந்திய நெல் சாகுபடி, மாற்றுப்பயிர் சாகுபடி மற்றும் நவீன தொழில்நுட்பங்களை செயல்படுத்தியதால், சராசரி உற்பத்தித்திறன் நெற்பயிரில் 39 சதவீதமும், மக்காச்சோளத்தில் 42 சதவீதமும், பயறுவகை பயிர்களில் 57 சதவீதமும் அதிகரித்தது. மீதமுள்ள 66 உபவடிப்பகுதிகளை மேம்படுத்தவும் இவ்வுபவடிப் பகுதிகளின் பாசனப் பரப்பை அதிகரித்திடவும் முனைப்புடன் செயல்படும் தமிழக அரசு இரண்டாம் கட்டமாக இத்திட்டத்தை செயல்படுத்த திட்டம் வகுத்து கொள்கையளவில் உலக வங்கியும் ஏற்றுக் கொண்டுள்ளது. இதனை தொடர்ந்து இத்திட்டம் முதற்கட்டமாக 18 தெரிவு செய்யப்பட்ட உபவடிப் பகுதிகளில் செயல்படுத்தப்படும்.*

1.8.11. பயிர் விளைச்சல் போட்டி

பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க, அரசு பல்வேறு நவீன விஞ்ஞான சாகுபடி தொழில்நுட்பங்களை அறிவுறுத்துவதோடு அவற்றை பண்ணையளவில் மேற்கொள்வதையும் உறுதி செய்கிறது. சிறந்த வேளாண்மை சாகுபடி முறைகளை விவசாயிகள் முழு ஈடுபாட்டுடன் கடைபிடிப்பதை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு

2016 ஆகஸ்ட் 19]

ஆண்டும் பயிர்விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட மற்றும் மாநில அளவில் இறவையில் நெல், மக்காச்சோளம், சோளம், கம்பு, நிலக்கடலை, துவரை, உளுந்து, பச்சைப்பயறு, பருத்தி மற்றும் கரும்பு பயிர்களிலும் மானாவாரியில் நிலக்கடலைப் பயிரிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆண்டுதோறும் மாநில அளவிலான 9 போட்டிகளும் மாவட்ட அளவிலான 88 போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. மாநில அளவிலான போட்டிகளில் பங்குபெற நெல், நிலக்கடலை, கரும்பு மற்றும் பருத்தி பயிர்களுக்கு நுழைவுக் கட்டணம் ரூ.100/-ம், பிற பயிர்களுக்கு ரூ.50/-ம்; மாவட்ட அளவிலான போட்டிகளுக்கு நெல், நிலக்கடலை, கரும்பு மற்றும் பருத்தி பயிர்களுக்கு ரூ.50/-ம் பிற பயிர்களுக்கு ரூ.25/-ம் வசூலிக்கப்படுகிறது. மாநில மற்றும் மாவட்ட அளவில் அதிக பயிர் மகசூல் பெறும் விவசாயிகளுக்கு கீழ்க்கண்டவாறு ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

அட்டவணை 1.31 : மாநில மற்றும் மாவட்ட அளவில் பரிசுத் தொகை

(ரூபாயில்)

பயிர்கள்	மாநில அளவில்		மாவட்ட அளவில்	
	முதல் இடம்	இரண்டாம் இடம்	முதல் இடம்	இரண்டாம் இடம்
நெல், நிலக்கடலை, பருத்தி மற்றும் கரும்பு	25,000	15,000	15,000	10,000
இதரபயிர்கள்	15,000	10,000	10,000	5,000

இதுதவிர, மாநில அளவில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை மேற்கொண்டு அதிக மகசூல் பெறும் விவசாயிக்கு ரூ.5 இலட்சம் பரிசுத்தொகையும், ரூ.3,500/- மதிப்புள்ள பதக்கமும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் குடியரசு தின விழாவில் வழங்கப்படுகிறது.

[2016 ஆகஸ்ட் 19

1.9. மனித வள மேலாண்மை

பயிர் உற்பத்தித் திறன் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும், நாள் முழுவதும் விவசாயிகளுக்கு விரிவாக்க மற்றும் தகவல் சேவை வழங்கவும், வேளாண் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கவும் 4,838 தொழில்நுட்ப பணியாளர்கள் (வேளாண்மை ஆணையர் அலுவலகம்) மற்றும் 8,275 இதர பணியாளர்களை (சகோதர துறைகள் உட்பட) கொண்டு வேளாண் துறை இயங்கி வருகிறது.

அட்டவணை 1.32 : தொழில்நுட்ப நிருவாகம் (வேளாண்மை ஆணையர் அலுவலகம்)

பதவி	ஒப்பளிக்கப் பட்ட பணியிடங்கள்
வேளாண்மை கூடுதல் இயக்குநர்	5
வேளாண்மை இணை இயக்குநர்	31
வேளாண்மை துணை இயக்குநர்	122
உதவி வேளாண்மை இயக்குநர்	418
வேளாண்மை அலுவலர்	1,096
துணை வேளாண்மை அலுவலர்	337
தொழில்நுட்ப அலுவலர் மொத்தம்	**2,009**
உதவி விதை அலுவலர்	509
உதவி வேளாண்மை அலுவலர்	2,320
களப்பணியாளர்கள் மொத்தம்	**2,829**
மொத்தம் தொழில்நுட்ப பணியாளர்கள்	**4,838**

2016 ஆகஸ்ட் 19]

அட்டவணை 1.33 : தொழில்நுட்பமல்லாத இதர பணியாளர்கள் நிருவாகம் (சகோதர துறைகள் உட்பட)

பதவி	ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள்
துணை இயக்குநர் (நிருவாகம்)	4
ஆட்சி அலுவலர்	44
கண்காணிப்பாளர்	515
உதவியாளர்	1,521
இளநிலை உதவியாளர்	914
தட்டச்சர்	689
கிடங்கு மேலாளர் (தரம்–1)	143
கிடங்கு மேலாளர் (தரம்–2)	281
கிடங்கு மேலாளர் (தரம்–3)	589
சுருக்குத் தட்டச்சர் (தரம்–1)	6
சுருக்குத் தட்டச்சர் (தரம்–2)	57
சுருக்குத் தட்டச்சர் (தரம்–3)	146
ஓட்டுநர்	560
ஆய்வக உதவியாளர்	135
பதிவறை எழுத்தர்	205
அலுவலக உதவியாளர் / காவலர்	2,466
மொத்தம் தொழில்நுட்பமல்லாத இதர பணியாளர்கள்	**8,275**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 19

2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை 1979 இல் வேளாண்மைத் துறையிலிருந்து தனித்து உருவாக்கப்பட்டு 27-11-2015 முதல் தனி பணி விதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

தோட்டக்கலையானது, விவசாயிகளின் வருவாயை அதிகரித்து, கிராமப்புற வேலைவாய்ப்பினை மேம்படுத்தவும் மற்றும் சிறப்பான வாழ்வாதாரத்தினை அளிப்பதன்மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக விளங்குகிறது. சத்தான பழங்கள், காய்கறிகள் மற்றும் மலர்களை வழங்குவதன்மூலம் தோட்டக்கலையானது நமது அன்றாட வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், ஊட்டச்சத்து பாதுகாப்புக்கும் வழிவகை செய்கிறது.

அதிக ஊட்டச்சத்து விழிப்புணர்வு காரணமாக பழங்கள் மற்றும் காய்கறிகளின் தேவை மிகவும் அதிகரித்துள்ளது. எனவே, பல ஆண்டுகளாக தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது.

2.1. தேசிய அளவில் தோட்டக்கலைப் பயிர்களில் தமிழகத்தின் நிலை

தமிழக அரசின், பல்வேறு சிறப்புத் திட்டங்களின் செயலாக்கம் காரணமாக தமிழகம் தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனில் தேசிய அளவில் முன்னிலையில் உள்ளது. வாழை (1.18 இலட்சம் எக்டர்), மரவள்ளி (1.21 இலட்சம் எக்டர்), கோகோ (24,000 எக்டர்) மற்றும் மலர்கள் (55,000 எக்டர்) சாகுபடி பரப்பளவில் முதலிடம் வகிக்கிறது. மேலும், வாழை (56.50 இலட்சம் மெ.டன்), மரவள்ளி (49.76 இலட்சம் மெ.டன்), மலைத்தோட்டப்பயிர்கள் (48.42 இலட்சம் மெ.டன்) மற்றும் உதிரிப் பூக்கள் (3.44 இலட்சம் மெ.டன்) உற்பத்தியிலும் முதலிடத்தில் உள்ளது.

உற்பத்தித் திறனில், பப்பாளி (98.7 மெ.டன்/எக்டர்), மாதுளை (32.7 மெ.டன்/எக்டர்), சப்போட்டா (32.80 மெ.டன்/எக்டர்), காய்கறிகள் (30.00 மெ.டன்/எக்டர்) மற்றும் மரவள்ளி (41.30 மெ.டன்/ எக்டர்) ஆகிய பயிர்களில் நாட்டின் அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.

2016 ஆகஸ்ட் 19]

நறுமணப்பயிர்கள் (1.62 இலட்சம் மெ.டன்) உற்பத்தியில் அகில இந்திய அளவில் தமிழகம் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளது.

திராட்சை (3,000 எக்டர்), மலைத்தோட்டப் பயிர்கள் (6.35 இலட்சம் எக்டர்) மற்றும் மிளகு (4,000 எக்டர்) ஆகிய பயிர்களின் சாகுபடி பரப்பளவில் தமிழகம் தேசிய அளவில் மூன்றாம் இடத்தில் உள்ளது.

அட்டவணை 2.1 : தமிழ்நாடு–தோட்டக்கலைப் பயிர்களின் தேசிய அளவிலான நிலை

வ. எண்	பயிர்கள்	பரப்பு (இலட்சம் எக்டர்)	உற்பத்தி (இலட்சம் மெ.டன்)	உற்பத்தித் திறன் (மெ.டன்/எக்.)
		முதலிடம்		
I	பழங்கள்			
1.	வாழை	1.18	56.50	
2.	பப்பாளி			98.7
3.	மாதுளை			32.7
4.	சப்போட்டா			32.8
II	காய்கறிகள்			30.0
	மரவள்ளி	1.21	49.76	41.3
III	மலைப்பயிர்கள்		48.42	
	கோகோ	0.24		
IV	பூக்கள்	0.55		
	உதிரிப்பூக்கள்		3.44	
		இரண்டாவது இடம்		
I.	நறுமணப் பயிர்கள்	–	1.62	–
		மூன்றாவது இடம்		
I	பழங்கள் – திராட்சை	0.03	–	–
II	மலைப்பயிர்கள்	6.35	–	–
III	சுவை தாளிதப் பயிர்கள் – மிளகு	0.04	–	–

[2016 ஆகஸ்ட் 19

அட்டவணை 2.2 : தோட்டக்கலைப்பயிர்கள் பரப்பளவு, உற்பத்தி, உற்பத்தித்திறன் (2015–16 மற்றும் 2016–17)

(பரப்பு: இலட்சம் எக்டர், உற்பத்தி: இலட்சம் மெ.டன், உற்பத்தித் திறன்: மெ.டன் / எக்டர்)

பயிர்	2015–16 (உத்தேச மதிப்பீடு)			2016–17 (இலக்கு)		
	பரப்பு	உற்பத்தி	உற்பத்தித் திறன்	பரப்பு	உற்பத்தி	உற்பத்தித் திறன்
பழங்கள்	2.94	62.61	21.30	3.03	67.62	22.32
காய்கறிகள்	2.93	78.92	26.94	3.02	85.26	28.23
சுவை தாளிதப் பயிர்கள்	1.16	8.21	7.08	1.20	8.86	7.38
மலைப் பயிர்கள்	7.06	13.48	1.91	7.26	14.55	2.00
நறுமணப் பயிர்கள்	0.14	2.31	16.50	0.15	2.49	16.60
மலர்கள்	0.26	3.52	13.54	0.27	3.81	14.11
மொத்தம்	**14.49**	**169.05**	**11.67**	**14.93**	**182.59**	**12.23**

உயர் தொழில்நுட்ப சாகுபடி முறைகள், மேம்படுத்தப்பட்ட அறுவடை பின்செய் மேலாண்மையின்மூலம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு பார்வையின்படி விவசாயிகளின் உற்பத்தியை இருமடங்காக்கி, வருமானத்தை மும்மடங்காக பெருக்குவதே தோட்டக்கலைத் துறையின் தலையாய கொள்கையாகும்.

வீரிய ரக விதைகள் மற்றும் தரமான நடவுச் செடிகளை தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கத்தில் பயன்படுத்துதல், உயர் தொழில்நுட்பச் சாகுபடி, அடர் நடவு சாகுபடி, பசுமைக்குடிலில் அதிக மதிப்புள்ள தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியை ஊக்குவித்தல், நுண்ணீர் பாசன உபயோகம், தேனீ வளர்ப்பின்மூலம் மகரந்தச் சேர்க்கையை அதிகரித்தல், ஒருங்கிணைந்த உரம், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, வீடு மற்றும் மாடித்தோட்டம் அமைத்தல் மற்றும் மேம்படுத்தப்பட்ட அறுவடை பின்செய் நேர்த்தி ஆகியவை தோட்டக்கலைத் துறையின் உத்திகளாகும்.

2.2. தோட்டக்கலைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

2.2.1. தேசிய தோட்டக்கலை இயக்கம் [(National Horticulture Mission (NHM)]

தமிழகத்தில் தோட்டக்கலைத் துறையில் முழுமையான வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தேசிய தோட்டக் கலை இயக்கமானது 2005-2006 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வியக்கமானது 2014-2015-லிருந்து ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத்தின்கீழ், ஒரு துணைத் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசு உதவி பெறும் இவ்வியக்கத்திற்கு 2015-2016-லிருந்து மத்திய மாநில அரசுகள் 60:40 என்ற விகிதத்தில் நிதியளித்து வருகின்றன.

தேசிய தோட்டக்கலை இயக்கம் தமிழகத்தில் அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், நீலகிரி, தேனி, திருநெல்வேலி, திருப்பூர், திருச்சி, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 22 மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது.

முன்னர் குறிப்பிடப்பட்ட உத்திகள் அனைத்தையும் முனைப்புடன் செயல்படுத்தி தோட்டக்கலைப்பயிர்களின் உற்பத்தியையும், உற்பத்தித்திறனையும் அதிகரிப்பதே தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் தலையாய நோக்கமாகும்.

தேசிய தோட்டக்கலை இயக்கம், 2015-2016 ஆம் ஆண்டில், ரூ.97.66 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டது. தோட்டக்கலை பயிர்கள் பரப்பு விரிவாக்கம், 12,228 எக்டரில் மேற்கொள்ளப்பட்டது. மேலும் 1,500 எக்டர் பரப்பளவில் பழைய தோட்டங்கள் புனரமைக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளன. தோட்டக்கலை பயிர்களின் மகரந்தச் சேர்க்கையை ஊக்குவிக்கும் விதமாக, மகரந்த சேர்க்கைக்கு உதவி புரிய 10,885 தேனீக்கூடுகள், தேனீக்கூட்டங்களுடன் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. பாதுகாக்கப்பட்ட பயிர் சாகுபடி இனத்தின்கீழ், 6.87 இலட்சம் சதுர மீட்டருக்கு பாலித்தீன் பசுமைக்குடில்கள் நிறுவப்பட்டு, அதன்மூலம் உயர் மதிப்பு தோட்டக்கலைப் பயிர்களான குடை மிளகாய், வெள்ளரி, ஜெர்பரா, ரோஜா மற்றும் கார்னேசன் போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

[2016 ஆகஸ்ட் 19

மலைக்காய்கறிகளுக்கு மகத்துவ மையம் உதகமண்டலத்திலும், வெப்பமண்டல பழங்களுக்கு மகத்துவ மையம் திருச்சியிலும், ரூ.11 கோடி நிதியில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

நிகழும் 2016-2017 ஆம் நிதியாண்டில், புதிய தோட்டங்களை உருவாக்குதல், பழைய தோட்டங்களை புதுப்பித்தல், பாதுகாக்கப்பட்ட பயிர் சாகுபடி, தேனீக்கள்மூலம் மகரந்த சேர்க்கையை ஊக்குவித்தல், தோட்டக்கலை இயந்திரமயமாக்கம், நீர் ஆதாரங்கள் உருவாக்கம், மண்புழு உர உற்பத்தி, மனித வள மேம்பாடு, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, தோட்டக்கலைப் பயிர்களுக்கான அறுவடை பின்செய் மேலாண்மை இனத்தின்கீழ் சிப்பம் கட்டும் அறை, முன் குளிர்விப்பு அறை மற்றும் குளிர்பதனக் கிடங்கு ஆகியவையும், சந்தை உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்துதல் மற்றும் சிறப்பு உத்திகள் போன்றவையும் ரூ.91.72 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.

2.2.2. பிரதம மந்திரியின் விவசாயத்திற்கான நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் ஒரு துளி நீருக்கு அதிக பயிர் என்னும் உட்பிரிவில் செயல்படுத்தப்படும் நுண்ணீர் பாசனத் திட்டம் [(Micro Irrigation scheme under Per drop More Crop component of Pradhan Mantri Krishi sinchayee Yojana (PMKSY)]

நுண்ணீர் பாசனம் என்பது ஒவ்வொரு துளி பாசன நீரையும் சிக்கனமாகவும், திறம்படவும் பயன்படுத்தும் சீரிய தொழில்நுட்ப முறையாகும். பயிரின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க செய்ய பாசன நீர் இன்றியமையாத தேவையாக விளங்குகிறது. தேசிய அளவில் ஒப்பிடுகையில் தமிழகத்தில் மொத்தம் 3 சதவீதம் மட்டுமே நீர் ஆதாரம் உள்ளது. எனவே, பாசன நீரை சிக்கனமாகவும், திறம்படவும் பயன்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. நுண்ணீர் பாசன முறையில் நீர் பயன்பாட்டுத்திறன் 40 முதல் 60 சதவீதம் வரை அதிகரிக்கிறது. மேலும், உரங்களையும் பாசன நீர்வழியாக செடியின் வேர் பகுதிக்கு நேரடியாக செலுத்துவதனால் உரங்கள் வீணாகாமல் தேவைக்கேற்றாற் போல் பயன்படுத்தி, மகசூலையும் அதிகரிக்கலாம்.

2016 ஆகஸ்ட் 19]

மத்திய அரசு 2015-2016 ஆம் நிதியாண்டிலிருந்து, வறட்சிக்கு இலக்காகும் வட்டாரம் மற்றும் வறட்சிக்கு இலக்காகாத வட்டாரம் என வகைப்படுத்தி மானிய விகிதத்தை மாற்றியுள்ளது. சிறு/குறு விவசாயிகளுக்கு வழங்கி வந்த 60 சதவீத மானியத்தை வறட்சிக்கு இலக்காகும் வட்டாரத்தில் இருக்கும் விவசாயிகளுக்கு மட்டும் 60 சதவீதமாகவும், வறட்சிக்கு இலக்காகாத வட்டாரத்தில் இருக்கும் விவசாயிகளுக்கு 45 சதவீதமாகவும் குறைத்தது. இதைப்போலவே, இதர விவசாயிகளுக்கு வழங்கி வந்த 50 சதவீத மானியத்தை வறட்சிக்கு இலக்காகும் வட்டாரத்தில் இருக்கும் விவசாயிகளுக்கு 45 சதவீதமாகவும், வறட்சிக்கு இலக்காகாத வட்டாரத்தில் இருக்கும் விவசாயிகளுக்கு 35 சதவீதமாகவும் குறைத்துள்ளது. மேலும், மத்திய மாநில அரசுகளுக்கு இடையே மானிய பகிர்வு விகிதத்தையும் 60 : 40 ஆக மாற்றியது. இருப்பினும், நாட்டிலேயே தமிழக அரசு மட்டுமே, வறட்சிக்கு இலக்காகும் மற்றும் வறட்சிக்கு இலக்காகாத வட்டாரம் என்ற பாகுபாடின்றி, நுண்ணீர் பாசனம் அமைக்க சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும் மற்றும் இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும், வழங்கி வருகிறது.

அட்டவணை 2. 3 : மத்திய அரசு மற்றும் மாநில அரசு மானிய பகிர்வு விவரம்

மத்தியஅரசு / மாநிலஅரசு பங்கு	வறட்சிக்கு இலக்காகும் பகுதி		வறட்சிக்கு இலக்காகாத பகுதி	
	சிறு குறு விவசாயிகள்	இதர விவசாயிகள்	சிறு குறு விவசாயிகள்	இதர விவசாயிகள்
மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறையின் படி				
மத்திய அரசு	36%	27 %	27 %	21%
மாநில அரசு	24 %	18 %	18 %	14 %
மாநிலஅரசின் கூடுதல் பங்களிப்பு				
மாநிலஅரசின் கூடுதல்பங்கு	40 %	30 %	55 %	40 %
தமிழகஅரசின் மொத்தபங்கு (2+3)	64%	48%	73%	54%
ஆக மொத்தம்	**100 %**	**75 %**	**100 %**	**75 %**

[2016 ஆகஸ்ட் 19

அட்டவணை 2.4

2011–2012 முதல் 2015–2016 நுண்ணீர் பாசனத் திட்ட சாதனை விவரம்

வருடம்	மொத்தம்		பயனாளிகள் எண்ணிக்கை		
	பொருள் (எக்டர்)	நிதி (ரூ. கோடி)	சிறு/ குறு விவசாயிகள்	இதர விவசாயி கள்	மொத்தம்
2011-12	27,550	87.44	13,997	10,559	24,556
2012-13	26,538	135.34	23,316	12,036	35,352
2013-14	39,780	288.25	32,634	10,553	43,187
2014-15	12,518	119.76	8,557	2,155	10,712
2015-16	32,288	242.23	24,838	6,631	31,469
மொத்தம்	**1,38,674**	**873.02**	**1,03,342**	**41,934**	**1,45,276**

கடந்த 2015-2016 ஆம் நிதியாண்டில், 31,469 விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.242.23 கோடி நிதியில் 32,288 எக்டர் பரப்பளவில் நுண்ணீர் பாசனம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

நிகழும் 2016-2017 ஆம் ஆண்டில், ரூ.319.58 கோடி நிதியில், 46,099 எக்டர் (தோட்டக்கலைப்பயிர்கள்-34,684 எக்டர், வேளாண் பயிர்கள்-11,415 எக்டர்) பரப்பளவில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.3. தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் [(National Agricultural Development Programme (NADP)]

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டமானது, 60:40 என்ற விகித மத்திய மாநில அரசு பங்களிப்புத் திட்டமாகும். கடந்த 2015-2016 ஆம் ஆண்டில், ரூ.26.62 கோடி நிதியில், பாதுகாக்கப்பட்ட சூழல் சாகுபடி, புதிய அரசு தோட்டக்கலைப் பண்ணைகளை நிறுவுதல் மற்றும் பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து செயல்படுத்தப்பட்டது.

2016-2017 ஆம் ஆண்டில், தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தித்திறன் பெருக்குத் திட்டம், வெங்காய உற்பத்தி அதிகரிப்புத் திட்டம், பழங்கள் மற்றும் காய்கறிகளில் வேளாண் சுற்றுச்சூழல் அடிப்படையிலான பூச்சி மேலாண்மைத் திட்டம்,

2016 ஆகஸ்ட் 19]

தேனீ வளர்ப்புமூலம் உற்பத்தியை அதிகரித்தல், மாடித் தோட்டத்தை ஊக்குவிப்பதற்கான இயக்கம், விவசாயிகளின் தோட்டங்களில் நிழல்வலைக் குடில்களில் குழித்தட்டு முறையில் மஞ்சள் நாற்றுகள் உற்பத்தி செயல்விளக்கம் ஆகிய திட்டக்கூறுகள் ரூ.80.77 கோடி நிதியில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.4. பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சித் திட்டம் [(Perimetro Vegetable Cluster Development Programme)]

பெருநகரங்களின் காய்கறித் தேவையை, அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் பயிரிட்டு, பூர்த்தி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் தமிழகத்தில் சென்னை, கோவை, திருச்சி, மதுரை, சேலம் மற்றும் கிழக்கு கடலோர மாவட்டங்கள் என 6 தொகுப்புகளில் செயல்படுத்தப்படுகிறது.

காய்கறிகள் சாகுபடி, விவசாய குழுக்கள் / விவசாய கூட்டமைப்புகளை உருவாக்குதல், காய்கறி சேகரிப்பு மையங்கள் கட்டுதல், நடமாடும் மற்றும் நிரந்தர காய்கறி விற்பனை மையங்களை நிறுவுதல் போன்றவை இத்திட்டத்தின்மூலம் செயல்படுத்தப்படுகிறது.

அட்டவணை 2. 5: தொகுப்பு வாரியாக நிதி ஒதுக்கீடு விவரம்

வ. எண்	பகுதி	மாவட்டம்	நிதி ஒதுக்கீடு (ரூ. கோடியில்)
1.	சென்னை	காஞ்சிபுரம், வேலூர், திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை.	17.00
2.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி மற்றும் திருப்பூர்.	17.00
3.	திருச்சி	திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கரூர், புதுக்கோட்டை மற்றும் திண்டுக்கல்	12.00
4.	மதுரை	மதுரை, தேனி, சிவகங்கை, விருதுநகர் மற்றும் ராமநாதபுரம்	2.55
5.	சேலம்	சேலம், கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் நாமக்கல்.	2.45
6.	கிழக்கு கடலோர மாவட்டங்கள்	கடலூர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி.	5.02
		மொத்தம்	**56.02**

கடந்த 2015-2016 ஆம் ஆண்டில், கிழக்கு கடலோர மாவட்டங்களான கடலூர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.5.02 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டப்பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

இத்திட்டம் அனைத்து தொகுப்புகளிலும் 2016-2017 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2.2.5. நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (National Mission for Sustainable Agriculture)

இத்திட்டம் மத்திய, மாநில அரசுகளின் பங்காக 60:40 என்ற விகிதத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மானாவாரி பகுதி மேம்பாடு மற்றும் பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ஆகிய உப திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2.2.5.1. மானாவாரி பகுதி மேம்பாடு [(Rainfed Area Development (RAD)]

கடந்த 2015-2016 ஆம் நிதியாண்டில், தோட்டக்கலை சார்ந்த பண்ணையம் மற்றும் பாதுகாக்கப்பட்ட சூழல் சாகுபடி 30 மாவட்டங்களில் ரூ.10 கோடி நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

நிகழும் 2016-2017 ஆம் நிதியாண்டில், ரூ.8 கோடி நிதியில், தோட்டக்கலை சார்ந்த பண்ணையம் 3,200 எக்டர் பரப்பளவில் அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், ஈரோடு, கரூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, சேலம், சிவகங்கை, திருவண்ணாமலை, திருச்சி, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 16 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

2.2.5.2. பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் [(Paramparagat Krishi Vikas Yojana (PKVY)]

பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், குழு சார்ந்த அணுகுமுறையில் இயற்கை வேளாண்மையை ஊக்குவித்து எளிய சான்றளிப்பு முறையான விவசாயக்குழுக்களின் பங்கேற்பு உத்திரவாத சான்றிதழ் (Participatory Guarantee System) எனப்படும் சான்றுடன் அங்கக விளைப்பொருட்களை உள்ளூர்

2016 ஆகஸ்ட் 19]

சந்தைகளில் சந்தைப்படுத்தும் திட்டமாகும். இத்திட்டம் 2015-2016 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டு, 3 ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 2015-2016 ஆம் ஆண்டில், இத்திட்டம் அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், புதுக்கோட்டை, சேலம், சிவகங்கை, திருவண்ணாமலை, தஞ்சாவூர், நீலகிரி, தேனி, திருப்பூர், திருநெல்வேலி, திருவள்ளூர், திருச்சி, தூத்துக்குடி, வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 27 மாவட்டங்களில், 51 குழுக்கள் அமைக்கப்பட்டு, 2,550 ஏக்கர் பரப்பளவில், ரூ.3.60 கோடி நிதியில் செயல்படுத்தப்பட்டது.

2016-17 ஆம் ஆண்டில் இதன் இரண்டாமாண்டு திட்டம், அதே 51 குழுக்களில் ரூ.2.54 கோடி நிதியில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.6. தேசிய ஆயுஷ் இயக்கம்–மருத்துவப் பயிர்கள் [(National AYUSH Mission-Medicinal Plants (NAM-MP)

இத்திட்டம் மத்திய அரசின் ஆயுஷ் அமைச்சகம் மூலமாக மத்திய மாநில அரசுகளுக்கிடையே 60:40 என்ற நிதி பங்களிப்பில் செயல்படுத்தப்படுகிறது. மருத்துவப் பயிர்களின் சாகுபடியை ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மருத்துவப்பயிர்களான, மருந்து கூர்க்கன், கண்வலி கிழங்கு, அவுரி, நித்திய கல்யாணி, நெல்லி, மணத்தக்காளி, திப்பிலி, துளசி போன்ற பயிர்கள் சாகுபடி தமிழகத்தில் ஊக்குவிக்கப்படுகிறது.

கடந்த 2015-2016 ஆம் நிதி ஆண்டில் இத்திட்டம் 395 எக்டர் பரப்பளவில், ரூ.25 இலட்சம் நிதியில் செயல்படுத்தப்பட்டது.

2016-2017 ஆம் நிதியாண்டிலும், தொடர்ந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.7. தேசிய வேளாண் காடுகள் மற்றும் மூங்கில் இயக்கம் [(National Agroforestry and Bamboo Mission (NABM)]

தேசிய வேளாண் காடுகள் மற்றும் மூங்கில் இயக்கத்தின்கீழ் மூங்கில் சாகுபடியை வனமில்லாத பகுதிகளில் சாகுபடி செய்ய ஊக்குவிக்கப்படுகிறது. இத்திட்டம் மத்திய மாநில

அரசுகளுக்கிடையே 60:40 என்ற நிதிப்பங்களிப்பில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், சாகுபடி செலவினத்தில் 35 சதவீதம் அதிகபட்சம் எக்டருக்கு ரூ.10,500/- வரை மானியம் வழங்கப்படுகிறது.

கடந்த 2015-2016 ஆம் நிதியாண்டில், ரூ.45 இலட்சம் நிதியில், 125 எக்டர் பரப்பில் மூங்கில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

2016-2017 ஆம் நிதியாண்டில் தொடர்ந்து செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

2.2.8. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம் [(Integrated Horticulture Development Scheme (IHDS)]

தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்மூலம் உயர் விளைச்சல் மற்றும் வீரிய ரக காய்கறி விதைகள் மற்றும் தரமான நடவுச் செடிகள் 40 சதவீத மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் கரூர், காஞ்சிபுரம், நாமக்கல், நாகப்பட்டினம், திருவாரூர், திருவண்ணாமலை, திருவள்ளூர், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய 9 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த 2015-2016 ஆம் நிதியாண்டில், 4,604 எக்டர் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கத்துடன் ரூ.3.33 கோடி நிதிச் செலவில் செயல்படுத்தப்பட்டது.

நடப்பு 2016-2017 ஆம் ஆண்டில், இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2.2.9. கோகோ பரப்பு விரிவாக்கம் (Cocoa Area Expansion Programme)

இத்திட்டம் மத்திய-மாநில அரசுகளுக்கிடையே 60 : 40 என்ற நிதிப்பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது. கடந்த 2015-16 ஆம் ஆண்டில், ரூ.1.2 கோடி நிதியில், 1,000 எக்டர் பரப்பளவில் கோகோ பரப்பு விரிவாக்கம் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் கோயம்புத்தூர், திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, கரூர், மதுரை, நாமக்கல், சேலம், திருநெல்வேலி, தஞ்சாவூர், தேனி, நீலகிரி, திருப்பூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 14 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது.

2016 ஆகஸ்ட் 19]

2016-2017 ஆம் நிதி ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு, தமிழகத்தில் கோகோ சாகுபடி ஊக்குவிக்கப்படும்.

2.2.10. தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் (தோட்டக்கலை) (TN IAMWARM)

1. *தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டம், தமிழ்நாடு அரசினால் உலகவங்கி நிதி உதவியுடன் நடத்தப்படும் ஒரு பல்நோக்கு திட்டமாகும்.*

2. *உபநதி படுகைகளில் சாகுபடி செய்யப்பட்டு வரும் அதிக நீர் தேவைப்படும் பயிர்களை மாற்றி குறைந்த நீரில் அதிக வருவாய் தரும் தோட்டக்கலை பயிர்களை குறிப்பாக காய்கறி பயிர்களை நீர் சேமிப்பு தொழில் நுட்பங்களை செயல்படுத்தி சாகுபடி செய்ய ஊக்குவித்து உற்பத்தித் திறனை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.*

3. *2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை செயல்படுத்தப்பட்ட முதற்கட்ட நீர்வள நிலவளத் திட்டத்தில், 61 உபநதி படுகைகளில், ரூ.77.47 கோடி நிதியில், 49,580 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலை பயிர்கள் பரப்பு விரிவாக்கம் மேற்கொள்ளப்பட்டது.*

4. *தமிழ்நாட்டில் இரண்டாம் கட்டமாக 2016-2017 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தினை செயல்படுத்திட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.*

5. *இத்திட்டத்தில் பரப்பு விரிவாக்கம், வேதிப்பொருள் படியாத காய்கறி சாகுபடி, பந்தல் காய்கறி சாகுபடி, அறுவடை பின்சார் மேலாண்மை, நுண்ணீர் பாசனம், பசுமை குடில் சாகுபடி மற்றும் நிலப்போர்வை போன்ற தொழில்நுட்பங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.*

2.2.11. தோட்டக்கலை பயிற்சி மையங்கள்

தமிழகத்தில், திருவள்ளூர் மாவட்டத்தில் மாதவரம், நீலகிரி மாவட்டம் உதகை, புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியான்மலை, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தளி ஆகிய

[2016 ஆகஸ்ட் 19

4 இடங்களில் தோட்டக்கலைப் பயிற்சி மையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி மையங்கள் மூலமாக விவசாயிகளுக்கு, தோட்டக்கலையில் நவீன தொழில்நுட்பங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

2016-2017 ஆம் ஆண்டிலும், விவசாயிகளுக்கு இப்பயிற்சிகள் தொடர்ந்து வழங்கப்படும்.

திருவள்ளூர் மாவட்டம், மாதவரத்தில் இயங்கி வரும் தோட்டக்கலை மேலாண்மை மையம்மூலமாக ஆண்டுதோறும், 40 மாணவர்களுக்கு தோட்டக்கலையில் இரண்டாண்டு பட்டயப் படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது.

2.2.12. உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்

தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.6 கோடி நிதியில், திருவள்ளூர், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், விருதுநகர், அரியலூர், திருநெல்வேலி, கடலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 10 மாவட்டங்களில் மாவட்ட தோட்டக்கலை தகவல் மற்றும் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

மேலும், சேலம், நாமக்கல், தேனி, சிவகங்கை மற்றும் திருவண்ணாமலை ஆகிய 5 மாவட்டங்களில், ரூ.3.25 கோடி நிதியில் மாவட்ட தோட்டக்கலை தொழில்நுட்பம் மற்றும் ஆதார மையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பகுதி 2 திட்டத்தின்கீழ், தருமபுரி, ஈரோடு மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் ரூ.1.7 கோடி நிதியில் மாவட்ட தோட்டக்கலை விரிவாக்கம் மற்றும் தகவல் மையங்களும், புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான் மலையிலுள்ள தோட்டக்கலை பயிற்சி மையத்தில் ரூ.45 இலட்சம் நிதியில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2.3. அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்

இனத்தூய்மை மற்றும் தரமான நடவுச் செடிகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதே அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாட்டில் 22 மாவட்டங்களில் 56 அரசு தோட்டக்கலைப்

2016 ஆகஸ்ட் 19]

பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் நவீன தொழில்நுட்பங்கள், பண்ணை இயந்திரமயமாக்கல், நவீன பாசன முறைகள் போன்ற தோட்டக்கலை சாகுபடி முறைகளை விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்யும் பொருட்டு செயல் விளக்க மையங்களாக செயல்பட்டு வருகிறது.

கீழ்க்கண்ட நவீன தொழில்நுட்ப செயல் விளக்கங்கள் பண்ணைகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது:

1. மா மற்றும் முந்திரியில் அடர் நடவு
2. மா பழத்தோட்டங்களில் கிளை மேலாண்மை
3. குழித்தட்டுகளில் காய்கறி நாற்றுக்கள் உற்பத்தி
4. மா மென்தண்டு ஒட்டு
5. மா, மாதுளை, கொய்யா, மிளகு பயிர்களில் புதிய ரகங்கள் அறிமுகம் செய்தல்
6. பண்ணைப் பயிர்களுக்கு உரப்பாசனத்துடன் கூடிய நுண்ணீர் பாசனம்
7. அதிக மகசூல் தரும் வீரிய இரகங்களை பயிரிடுதல்

இந்திய அரசின் தேசிய தோட்டக்கலை வாரியம்மூலம் 34 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளுக்கு தரமான நடவுபொருட்கள் உற்பத்திக்கான தரச் சான்று பெறப்பட்டுள்ளது.

மாநில விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, அனைத்து மாவட்டங்களிலும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி பெரம்பலூர் மாவட்டம், வெங்கலம் கிராமத்திலும், தூத்துக்குடி மாவட்டம், தோழப்பன் பண்ணை கிராமத்திலும், ஈரோடு மாவட்டம், பகுதம்பாலம் கிராமத்திலும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

2016-17 ஆம் நிதியாண்டில், 498 இலட்சம் நடவுச்செடிகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 19

அட்டவணை 2.6 : அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் விவரம்

வ.எண்	மாவட்டம்	தோட்டக்கலைப் பண்ணை	நிறுவப்பட்ட ஆண்டு	பரப்பு (ஹெ)
1.	கோயம்புத்தூர்	ஆனைக்கட்டி	1986	12.00
2.		கண்ணம்பாளையம்	2001	11.20
3.	கடலூர்	நெய்வேலி	1985	39.53
4.		விருத்தாச்சலம்	1975	10.43
5.	தருமபுரி	போலயம்பள்ளி	2013	2.73
6.	திண்டுக்கல்	சந்தையூர்	2013	15.20
7.		கொடைக்கானல்	1961	3.25
8.		தாண்டிக்குடி	1985	5.45
9.		ரெட்டியார்சத்திரம்	1994	5.33
10.		சிறுமலை	1980	200.04
11.	காஞ்சிபுரம்	ஆத்தூர்	1961	12.24
12.		விச்சந்தாங்கல்	1982	23.25
13.		மேல்கதிர்பூர்	1982	42.63
14.		மேலொட்டிவாக்கம்	1982	20.60
15.		பிச்சிவாக்கம்	1982	34.00
16.	கன்னியாகுமரி	கன்னியாகுமரி	1922	12.64
17.		பேச்சிப்பாறை	1967	6.00
18.	கரூர்	முதலைப்பட்டி	1978	23.96
19.	கிருஷ்ணகிரி	திம்மாபுரம்	1952	9.51
20.		ஜீனூர்	1980	121.96
21.	மதுரை	பூஞ்சுத்தி	2012	5.76
22.	நாமக்கல்	செம்மேடு	1974	11.60
23.		படசோலை	1989	22.67
24.	புதுக்கோட்டை	குடுமியான்மலை	1974	118.68
25.		வல்லத்திராக்கோட்டை	1977	521.20
26.		நாட்டுமங்களம்	1985	53.02
27.	சேலம்	ஏற்காடு	1975	6.04
28.		கருமந்துறை	1981	419.77
29.		கருமந்துறை	1981	39.35
30.		மணியார்குன்றம்	1982	100.00
31.		கருமந்துறை	2014	4.00
32.		முள்ளுவாடி	1985	48.40
33.		சிறுமலை	1987	8.00

2016 ஆகஸ்ட் 19]

அட்டவணை 2.6: அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் விவரம் (தொடர்ச்சி)

வ. எண்	மாவட்டம்	தோட்டக்கலைப் பண்ணை	நிறுவப்பட்ட ஆண்டு	பரப்பு (ஹெ)
34.	சிவகங்கை	தேவகோட்டை	1985	81.19
35.		நேமம்	1979	38.77
36.	தஞ்சாவூர்	ஆடுதுறை	1988	8.90
37.		மருங்குளம்	1966	10.70
38.	நீலகிரி	பர்லியார்	1871	6.25
39.		கல்லார்	1900	8.92
40.		FPU குன்னூர்	1965	4.05
41.		PS குன்னூர்	1948	10.46
42.		தொட்டபெட்டா	1969	4.08
43.		தும்மனட்டி	1956	9.80
44.		நஞ்சநாடு	1917	64.00
45.		தேவாலா	1978	80.00
46.		கோல்கரைன்	1989	20.40
47.	தேனி	பெரியகுளம்	1950	9.32
48.	திருவள்ளூர்	மாதவரம்	1980	4.38
49.	திருச்சி	தொரக்குடி	2013	4.05
50.	வேலூர்	தகரக்குப்பம்	1985	34.40
51.		கூடப்பட்டு	1961	10.08
52.		நவ்லாக்	1981	84.42
53.	விருதுநகர்	பூவாணி	1967	9.46
54.		ஸ்ரீவில்லிபுத்தூர்	1982	46.27
55.	இராமநாதபுரம்	ஓரியூர்	2013	14.77
56.	திருவண்ணாமலை	தொம்பரெட்டி	2014	3.05
		மொத்தம்		2538.16

[2016 ஆகஸ்ட் 19

2.4. பூங்காக்கள்

தோட்டக் கலைத் துறை, மாநிலத்தின் 6 மாவட்டங்களில் 13 பூங்காக்களைப் பராமரித்து வருகிறது. இவை உள்ளூர் மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு பொழுதுபோக்கு மையங்களாகத் திகழ்கின்றன. மேலும் இவை தாவரவியல் மாணவர்களுக்கு பயிலும் களமாகவும் விளங்குகின்றது.

அட்டவணை 2.7: பூங்காக்கள் மற்றும் தோட்டங்களின் விவரம்

வ. எண்	பூங்காக்கள் மற்றும் தோட்டங்களின் பெயர்கள்	மாவட்டம்	பரப்பளவு (ஏக்கர்)
1.	அரசு தாவரவியல் பூங்கா, ஊட்டி	நீலகிரி	55.00
2.	அரசு ரோஜா பூங்கா, ஊட்டி		36.00
3.	சிம்ஸ் பூங்கா, குன்னூர்		30.35
4.	காட்டேரி பூங்கா (அரசு தோட்டக்கலை பண்ணை, காட்டேரி)		47.40
5.	தேயிலை பூங்கா, தொட்டபெட்டா & வண்ணத்துப்பூச்சி பூங்கா, தேவாலா		10.50
6.	பிரையண்ட் பூங்கா, அண்ணா பூங்கா, மற்றும் செட்டியார் பூங்கா, கொடைக்கானல்	திண்டுக்கல்	25.70
7.	அண்ணா பூங்கா மற்றும் ஏரிபூங்கா, ஏற்காடு	சேலம்	7.85
8.	ரோஜா தோட்டம், அரசு தோட்டக்கலை பண்ணை , ஏற்காடு		15.26
9.	ஐந்திணை மரபணு பூங்கா, ஏற்காடு		20.68
10.	அரசு தாவரவியல் பூங்கா, ஏற்காடு		36.45
11.	செம்மொழி பூங்கா	சென்னை	7.93
12.	சுற்றுசூழல் பூங்கா, குற்றாலம்	திருநெல்வேலி	37.23
13.	ஐந்திணை மரபணு பூங்கா, அச்சடிபிரம்பு	இராமநாதபுரம்	10.00

2016 ஆகஸ்ட் 19]

2.5. ஆண்டு மலர் மற்றும் பழக் கண்காட்சிகள்


ஆண்டுதோறும், வசந்த காலம் மற்றும் கோடைகாலப் பருவங்களில் பூங்காக்களில் பல்வேறு கண்காட்சிகள் நடைபெறுகின்றன. உதகமண்டலம், ஏற்காடு மற்றும் கொடைக்கானல் ஆகிய இடங்களில் உள்ள பூங்காக்கள் மற்றும் தோட்டங்களில் மலர் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. மலர் அலங்காரங்கள், இந்திய மற்றும் ஜப்பானிய மலர் அலங்காரங்கள், காய்கறிகளால் ஆன உருவங்கள், பூக்கோலங்கள் மற்றும் போன்சாய் ஆகியவை இக்கண்காட்சியின் முக்கிய கண்கவர் அம்சங்களாக விளங்குகின்றன.

குன்னூர் (உதகமண்டலம்), சிம்ஸ் பார்க்கில் பழக்கண்காட்சி, கிருஷ்ணகிரி மாம்பழக் கண்காட்சி, கோத்தகிரி (உதகமண்டலம்), காய்கறிகள் கண்காட்சி மற்றும் கூடலூர் (உதகமண்டலம்), நறுமணப் பயிர்கள் கண்காட்சி ஆகியவை சுற்றுலா பயணிகளிடையே மிகவும் பிரசித்தி பெற்றுள்ளன.


உதகை ரோஜா தோட்டத்தில் நடத்தப்படும் ரோஜா மலர் கண்காட்சி இத்துறையினால் நடத்தப்படும் மற்றுமொரு முக்கிய நிகழ்ச்சியாகும். இக்கண்காட்சியில் பிரபலமான மற்றும் சுவாரசியமான (வசீகரிக்கும்) உருவ அமைப்புகள் பல்வேறு வண்ண ரோஜா மலர்களைக்கொண்டு அமைக்கப்படுகின்றன. திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் அமைந்துள்ள சுற்றுச் சூழல் பூங்காவிலும் சாரல் விழா நடத்தப்படுகின்றது.

2.6. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

2.6.1. தோட்டக்கலை இயக்கக நிருவாக அமைப்பு




2.6.2. மாவட்ட நிர்வாக அமைப்பு



2016 ஆகஸ்ட் 19]

2.6.3. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை (டான்ஹோடா) நிருவாக அமைப்பு



அட்டவணை 2.8 : தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மொத்த அலுவலர்கள் சுருக்கம் (தொழில்நுட்பம் மற்றும் இதர அலுவலர்கள்)

வ. எண்	பதவி விவரம்	மொத்த பணியிடம்
1.	தொழில் நுட்ப அலுவலர்கள்	2,610
2.	இதர அலுவலர்கள்	1,223
	மொத்தம்	**3,833**

[2016 ஆகஸ்ட் 19

அட்டவணை 2.9: தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை அலுவலர்கள் பணியிட விவரம்

வ. எண்	அலுவலர்கள் விவரம்	மொத்த பணியிடம்
1.	கூடுதல் தோட்டக்கலை இயக்குநர்	2
2.	தோட்டக்கலை இணை இயக்குநர்	6
3.	தோட்டக்கலை துணை இயக்குநர்	39
4.	தோட்டக்கலை உதவி இயக்குநர்	398
5.	தோட்டக்கலை அலுவலர்	404
6.	தோட்டக்கலை துணை அலுவலர்	123
7.	உதவி தோட்டக்கலை அலுவலர்	1,633
8.	உதவி விதை அலுவலர்	5
9.	இதர அலுவலர் பணியிடங்கள் விவரம் (துணை இயக்குநர் (நிருவாகம்), முதன்மை கணக்கு அலுவலர், ஆட்சி அலுவலர், கணக்கு அலுவலர், உதவி கணக்கு அலுவலர், கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் இதர அனைத்து பதவிகள்)	1,223
	மொத்தம்	**3,833**

2.7. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை (டான்ஹோடா)

தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையானது, 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு பதிவாளர் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு மத்திய அரசு மற்றும் மாநில அரசின்கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு வகையான தோட்டக்கலை சார்ந்த திட்டங்களை செயல்படுத்தும் ஒரு “சிறப்பு நோக்க அமைப்பாக”

2016 ஆகஸ்ட் 19]

செயல்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கம் (தேசிய தோட்டக்கலை இயக்கம் மற்றும் தேசிய வேளாண் காடுகள் மற்றும் மூங்கில் இயக்கம்), பிரதம மந்திரியின் விவசாயத்திற்கான நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் ஒரு துளி நீருக்கு அதிக பயிர் மகசூல் என்னும் உட்பிரிவில் செயல்படுத்தப்படும் நுண்ணீர் பாசனத் திட்டம், தேசிய ஆயுஷ் இயக்கம்-மருத்துவப் பயிர்கள், அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மற்றும் தமிழ்நாடு நீர்வள நில வளத்திட்டம் ஆகிய முக்கிய திட்டங்கள் டான்ஹோடாமூலம் செயல்படுத்தப்படுகின்றன.

வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறைகளின் திட்டங்களுக்கான தரமான விதைகள் மற்றும் நீரில் கரையும் உரங்கள் கொள்முதல் செய்து, விநியோகம் செய்யும் சிறப்பு நோக்க அமைப்பாகவும் டான்ஹோடா செயல்படுகிறது. டான்ஹோடாவின் ஆளுமைக் குழு இந்த சிறப்பு நோக்க அமைப்பிற்கு அதிகாரக் குழுவாக செயல்படுகிறது. நீரில் கரையும் உரங்கள் மற்றும் விதைகள் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு உரிய தருணத்தில் வழங்க ரூபாய் ஐம்பது கோடி வட்டியில்லா சுழல் நிதியாக பயன்படுத்தப்படுகிறது.

2.8. தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் வரையறுக்கப்பட்டது (டான்ஹோப்)

தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம், சிறு மற்றும் குறு தோட்டக்கலை விவசாயிகளின் நலனுக்காக, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின்படி முதன்மை தோட்டக்கலை கூட்டுறவு நிறுவனமாக 1994 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தில் சந்தை தொடர்புடன்கூடிய தோட்டக்கலை நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துவதே முக்கிய நோக்கமாகும். இந்நிறுவனம் செயல்படுத்தப்படும் பகுதிகள் தமிழகம் முழுவதும் ஆகும். குழுவின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர் இந்நிறுவனத்தின் தலைவராகவும், தோட்டக்கலை இணை இயக்குநர், மேலாண்மை இயக்குநராகவும் செயல்பட்டு வருகின்றனர்.

3. வேளாண்மைப் பொறியியல்

3.1. முன்னுரை

தமிழ்நாட்டின் நிலம் மற்றும் நீர் வளங்களைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளில் வேளாண்மைப் பொறியியல் துறை ஈடுபட்டு வருகிறது. வேளாண்மையை இயந்திரமயமாக்குதல், பாசனப் பகுதிகளில் நீர் மேலாண்மை, நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு, மழை நீர் சேகரிப்பு மற்றும் நிலத்தடி நீரை செயற்கை முறையில் செறிவூட்டுதல், பசுமை சக்தியை முதன்மைப்படுத்தும் வகையில் சூரிய சக்தியால் இயங்கும் நீர் இறைப்பான்கள், உலர்த்திகள் அமைத்தல் போன்ற திட்டங்கள் வேளாண்மைப் பொறியியல் துறையால் செயல்படுத்தப்படுகின்றன.

3.2. வேளாண்மை இயந்திரமயமாக்குதல்

இயந்திர ஆற்றல் வேளாண் உற்பத்தியில் ஒரு முக்கிய பங்காற்றி வருகிறது. விவசாயப் பணிகளை உரிய காலத்தில் மேற்கொள்வதற்கும், விவசாயப் பணியாட்கள் பற்றாக்குறையினால் ஏற்படும் விளைவுகளை எதிர்கொள்வதற்கும், வேளாண் பணியாளர்களின் பணிச்சுமையினை எளிதாக்குவதற்கும் வேளாண்மையை இயந்திரமயமாக்குதல் மிகவும் அவசியமாகிறது. வேளாண் பணிகளை குறித்த நேரத்தில் மேற்கொள்வதாலும் வேளாண் பணியாளர்களின் வேலைப்பளுவினை குறைத்தல் மற்றும் சாகுபடி பரப்பினை அதிகப்படுத்துவதன் மூலமும் ஒட்டுமொத்த வேளாண் உற்பத்தியினை அதிகரிக்கலாம். இத்திட்டத்தில் சிறு, குறு, ஆதிதிராவிட, பழங்குடி மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50 சதவிகிதம் வரையும் இதர விவசாயிகளுக்கு 40 சதவிகிதம் வரையும் மானியம் வழங்கப்படுகிறது.

3.2.1. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் (NADP)

கடந்த 2015-16 ஆம் ஆண்டில், 4,897 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்கிட விவசாயிகளுக்கு ரூ.19.56 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

2016-17 ஆம் ஆண்டில், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளான உழுவை, விசைஉழுவை (பவர்டில்லர்), நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம், விதைப்புக் கருவி, களையெடுக்கும்

2016 ஆகஸ்ட் 19]

கருவி, வைக்கோல் கட்டும் இயந்திரம், பலவகைப்பயிர் கதிரடிக்கும் இயந்திரம், தட்டை வெட்டும் கருவி, புதர் அகற்றும் கருவி, நேரடி நெல்விதைப்புக் கருவி, தென்னை மரம் ஏறுவதற்கான கருவி, விசைத் தெளிப்பான் ஆகியவற்றை வாங்கிக் கொள்ள விவசாயிகளுக்கு மானியம் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயிகள், தங்களுக்குத் தேவைப்படும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை, அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து, தங்களின் முழு விருப்பத்தின் அடிப்படையில் தேர்வு செய்து, மானிய உதவியுடன் வாங்கி பயனடையலாம்.

3.2.2. கரும்பு சாகுபடியை இயந்திரமயமாக்கும் திட்டம்

கரும்பு சாகுபடிக்கேற்ற நடவு முதல் அறுவடை வரையிலான அனைத்து பணிக்கும் ஏற்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை, தொழில் முனைவோர் வாங்கி வாடகை மையங்கள் அமைத்து, கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கும் திட்டத்தை ஊக்குவிக்கும் பொருட்டு 40 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின்கீழ் 2015-16 ஆம் நிதி ஆண்டில் தொழில் முனைவோர்களுக்கு ரூ.2.05 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம்மூலம் விவசாயிகள் குறைந்த வாடகையில் குறித்த காலத்தில் கரும்பை அறுவடை செய்ய உதவிகரமாக இருந்தது. 2016-2017 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

3.2.3. வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கம்

இத்திட்டத்தின் கீழ் 2015-2016 ஆம் ஆண்டில் 3,236 இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்கிட விவசாயிகளுக்கு ரூ.20.31 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

3.2.4. வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு விடும் மையங்கள் அமைக்கும் திட்டம்

இந்த திட்டம் வேளாண் இயந்திரமயமாக்குதலுக்கான துணை இயக்கத்திட்டத்தின் வழிகாட்டுதல்களின்படி, இயந்திரங்கள் மற்றும் கருவிகள் விலையில் 40 சதவிகிதம் அரசு மானியமாகவும் மீதமுள்ள 60 சதவிகிதம் விவசாயிகள் குழுக்கள்/ தொழில்முனைவோர்/ விவசாயிகள் பங்காகவும் செலுத்தி கருவிகள் வாங்கப்படுகிறது.

[2016 ஆகஸ்ட் 19

கடந்த 2014-2015 ஆம் நிதியாண்டில் விவசாயிகளின் இயந்திர தேவைகளை ஈடுசெய்யும் பொருட்டு தமிழகத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் வேளாண்மை இயந்திரங்கள் வாடகைக்கு விடும் மையங்கள் அமைக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறிவித்தார்கள். முதற்கட்டமாக ரூ.2.15 கோடி மானியத்தில் 22 வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு விடும் மையங்கள் நிறுவப்பட்டன. கடந்த 2015-2016 ஆம் நிதியாண்டில் 190 வட்டாரங்களில் இதுபோன்ற மையங்கள் ரூ.18.84 கோடி மானியத்தில் அமைக்கப்பட்டுள்ளன. 2016-2017 ஆம் ஆண்டில் 324 வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு விடும் மையங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

3.3. நிலமேம்பாட்டுத் திட்டம்

தரிசாகவும் மேடுபள்ளமாகவும் உள்ள பெருவாரியான மானாவாரி நிலங்களை சமன் மற்றும் சீர்திருத்தம் செய்து விளைநிலங்களாக மாற்றிட வேளாண்மை பொறியியல் துறையின் மண்தள்ளும் இயந்திரங்கள் பெரும் பங்காற்றி வருகின்றன. ஆறுகள், குளங்களில் தூர்வாரி அவற்றை சீர்படுத்தவும் மண்தள்ளும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

விவசாயிகள் குறைந்த வாடகையில் தங்கள் நிலங்களை சீர்த்திருத்தம் செய்து கொள்வதற்கு ஏதுவாக வேளாண்மை பொறியியல் துறையில் 90 மண் தள்ளும் இயந்திரங்கள் உள்ளன. விவசாய நிலங்களில் கோடை உழவு மற்றும் சேற்று உழவுப் பணிகளை மேற்கொள்ள விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் வழங்கிட 163 இயந்திர உழுவைகள் துறையில் உள்ளன. மேற்கண்ட கருவிகள், வெள்ளம் போன்ற இயற்கை பேரிடர் காலங்களில் வெள்ள நீரை வடித்தல், மணல் படிவுகளை அகற்றுதல் போன்ற மீட்புப் பணிகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

மேலும், நெல் வயல்களில் துல்லிய பாசனநீர் உபயோகத்திற்கு ஏற்ற வகையில் வயல்களை சமன் செய்வதற்கு லேசர் தொழில்நுட்பத்தில் இயங்கும் 63 நிலம் சமன் செய்யும் கருவிகள், நெல் நடவு செய்ய ஏழு நெல் நடவு இயந்திரங்கள், நெல் அறுவடை பணிகளுக்கு 50 நெல் அறுவடை இயந்திரங்கள் துறையில் பராமரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு வாடகையில் வழங்கப்பட்டு வருகிறது. வேளாண்மைப் பொறியியல் துறையால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும் வேளாண் இயந்திரங்களை

2016 ஆகஸ்ட் 19]

வாடகையில் வழங்கும் திட்டம் விவசாயிகள் மத்தியில் பெரிய வரவேற்பினை பெற்றுள்ளது.

3.4. சிறுபாசனத் திட்டம்

நிலத்தடி நீரை விவசாயத்திற்கு பயன்படுத்த ஏதுவாக திறந்தவெளி கிணறுகள் மற்றும் துளைக் கிணறுகள் அமைக்க 28 சுழல்விசைத் துளைக்கருவிகள், 7 பெர்குசன் துளைக் கருவிகள் (Percussion Drill), *19 சிறு விசைத் துளைக்கருவிகள், 55 கைத்துளைக்கருவிகள், 7 நீள்துளைக் கருவிகள், 30 பாறை தகர்க்கும் கருவிகள் ஆகியவை துறைமூலம் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்படுகின்றன. மேலும் நிலத்தடி நீர் இருப்பையும், கிணறு அமைப்பதற்கு ஏற்ற இடத்தையும் அறிய உதவும் பொருட்டு 10 நிலத்தடி நீர் ஆய்வுக் கருவிகளும், துளைக் கிணறு அமைத்த பின் மண்படிவங்களை அறிந்து, அதன்படி குழாய்கள் அமைப்பதை திட்டமிட ஏதுவாக இரண்டு மின்னியல் ஆய்வுக் கருவிகளும் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கிட துறையில் உள்ளன. சிறுபாசனக் கருவிகள் மற்றும் இயந்திரங்களை விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கும் திட்டம் வேளாண்மைப் பொறியியல் துறையால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும் பயனுள்ள திட்டமாகும்.*

3.5. வேளாண்மையில் சூரிய சக்தி – பசுமை ஆற்றல் பயன்பாட்டில் ஒரு புதிய முயற்சி

மின்சார சக்தியினை அதிகம் பயன்படுத்துகிற இனங்களில், இறவைப் பாசனம் முக்கிய பங்கு வகிக்கின்றது. தமிழ்நாட்டில் மொத்தம் 20.47 இலட்சம் மின் மோட்டார் பம்பு செட்டுகள், இறவைப் பாசனத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. சூரிய வெப்ப சக்தி நிலையானது என்பதோடு பசுமை ஆற்றலாக கருதப்படும் சூரிய வெப்ப சக்தி அதிக அளவில் கிடைக்கும் நம் மாநிலத்தில் அதனை மின்சக்தியாக மாற்றி பயன்பாட்டிற்கு கொண்டு வருவது மிகவும் உகந்த தொழில்நுட்பமாக மாறி உள்ளது. தமிழக அரசால் "சூரிய சக்தி கொள்கை 2012" சிறந்த முறையில் வகுக்கப்பட்டு அதிக அளவிலான சூரிய சக்தியின் பயன்பாட்டினை நடைமுறைபடுத்தியதில் தமிழகம் முன் மாதிரி மாநிலமாக விளங்குகிறது. சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்புசெட்டுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் 80 சதவிகித மானியம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

[2016 ஆகஸ்ட் 19

சூரிய வெப்ப சக்தியை ஈர்த்து வேளாண் விளைபொருளை பதப்படுத்தும் கூடார உலர்த்திகள் விவசாயிகளுக்கு பயனுள்ளதாக உள்ளது. வேளாண் விளைபொருட்களை அறுவடைக்குப் பிறகு சந்தைப்படுத்துவதற்கு முன் அவற்றை பாதுகாப்பான கூடாரங்களில் வைத்து கட்டுப்படுத்தப்பட்ட அளவில் சூரிய வெப்பத்தை பயன்படுத்தி உலரவைப்பதால் பொருட்களின் இயற்கை தன்மை மாறாமல் தரமாக பதப்படுத்த முடிகிறது. இத்திட்டத்தில் விவசாயிகள் / விவசாய குழுக்களுக்கு 50 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது.

3.5.1. சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் அமைக்கும் திட்டம்

வேளாண்மையில் சூரிய சக்தியின் பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்கான தொழில்நுட்பத்தை பரவலாக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், 2013-2014 ஆம் நிதியாண்டில் 2,000 எண்கள் சூரிய சக்தியால் இயங்கும் மின் மோட்டார் பம்பு செட்டுகள் 80 சதவிகித மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

கடந்த 2015-2016 ஆம் நிதியாண்டு வரை தானியங்கி சாய்மான வசதியுடைய சூரியத் தகடுகள் பொருத்தப்பட்ட 5 குதிரைத் திறன் கொண்ட 1,630 மோட்டார் பம்பு செட்டுகள், நிலையான சூரியத் தகடுகள் பொருத்தப்பட்ட 500 மோட்டார் பம்பு செட்டுகள் ஆக மொத்தம் 2,130 சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் ரூ.75.62 கோடி மானியத்தில் நிறுவப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வாறாக சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் நிறுவப்பட்டதன்மூலம் 10 மெகா வாட் மின் அளவுக்கு நிகரான மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. சூரிய சக்தியை பயன்படுத்துவதால் ஆண்டொன்றுக்கு 10,080 டன்கள் கரியமில வாயு வெளியேற்றம் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகள் தாங்கள் பயன்படுத்தும் டீசல் பம்பு செட்டுகளுக்கு பதிலாக சூரிய சக்தி பம்பு செட்டுகளை நிறுவும்போது ஆண்டொன்றுக்கு டீசல் செலவு ஒரு பம்பு செட்டுக்கு ரூ.57,000/- அளவில் சேமிக்க முடிகிறது.

2016 ஆகஸ்ட் 19]

மேற்கூறிய சிறப்பான பயன்களால் விவசாயிகளிடையே சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளுக்கு மிகுந்த வரவேற்பும் மற்றும் தேவையும் அதிகரித்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் இத்திட்டம் 2016-2017 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

3.5.2. வேளாண் பொருட்களை உலர வைப்பதற்கு சூரிய வெப்ப கூடார உலர்த்திகள் அமைக்கும் திட்டம்

கடந்த 2015-2016 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் 74 சூரிய கூடார உலர்த்திகள் நிறுவப்பட்டு, ரூ.1.29 கோடி மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. திருச்சி, தஞ்சாவூர், விருதுநகர், காஞ்சிபுரம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலுள்ள விவசாயிகள் கூடார சூரிய வெப்ப உலர்த்திகள் அமைத்ததன்மூலம் வாழை, அன்னாசி, மாம்பழம் உள்ளிட்ட உலர் பழங்கள், கொப்பரை தேங்காய், வற்றல் மிளகாய், உலர் முருங்கைக் கீரை, கருவேப்பிலை ஆகிய மதிப்பு கூட்டப்பட்ட விளைபொருள்களை தயாரித்து விற்பனை செய்து அதிக இலாபம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. 2016-2017 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

3.6. நீர் மேலாண்மை

இந்தியாவின் சராசரி ஆண்டு மழை அளவு 1,200 மில்லி மீட்டராக இருக்கும் நிலையில் தமிழ்நாட்டின் வருடாந்திர மழை அளவு 921 மில்லி மீட்டர் மட்டுமே ஆகும். தமிழ்நாடு ஆறு மற்றும் குளங்கள் போன்ற நீர் ஆதாரங்களில் கிடைக்கும் நீரில் (Surface water) 95 சதவிகிதத்தையும் நிலத்தடி நீர் வளத்தில் (ground water) 85 சதவிகிதத்தையும் பயன்படுத்தி வருகிறது. மேலும், இருக்கின்ற நீர் வள ஆதாரத்தை கொண்டு பாசன வசதிகளை பெருக்கிட இயலாத நிலை உள்ளது. இந்நிலையில் நீர்வளப் பாதுகாப்பு ஏற்படுத்திட அரசு நீர்வள மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதனால் கிடைக்கின்ற தண்ணீரை சிக்கனமான முறையில் உபயோகித்து பயிர் விளைச்சலை அதிகப்படுத்திட திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

[2016 ஆகஸ்ட் 19

3.6.1. பிரதம மந்திரியின் வேளாண்மை பாசன திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வயலுக்கும் தண்ணீர் என்ற உபதிட்டம்

கால்வாய் மற்றும் கண்மாய் பாசனப் பகுதிகளில் மண்வாய்க்கால்களில் நீர் வீணாவதை குறைக்கவும், தலைமடை கடைமடை விவசாயிகளிடையே உரிய பங்கீட்டு முறையில் நீரை பங்கிட்டுக் கொள்ள முறைப் பாசனத்தை நடைமுறைப்படுத்தவும், மத்திய மாநில அரசுகளின் சம அளவு நிதிப் பங்களிப்புடன் பாசனப் பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டம் 2014-2015 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட்டது.

கடந்த 2015-2016 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் பிரதம மந்திரியின் வேளாண்மைப் பாசனத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வயலுக்கும் தண்ணீர் என்ற உபதிட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் வழங்கப்பட்ட பாசன திட்டப் பகுதிகளில் பண்ணை மேம்பாட்டுப் பணிகளாக கான்கிரீட் வாய்க்கால்கள் அல்லது குழாய்கள் அமைத்தல், பிரிவுத் தொட்டிகள் மற்றும் வண்டிப்பாதைகள் அமைத்தல் போன்ற பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. தொடர்ந்து, முறைப்பாசனத்தை நடைமுறைப்படுத்தவும் தொடர்பராமரிப்பை மேற்கொள்ளவும் பாசன நீரை பயன்படுத்துவோர் சங்கங்கள் அமைக்கப்பட்டு அவற்றிற்கு நிதி ஆதாரமும் வழங்கப்படுகிறது. கடந்த 2015-16 ஆம் ஆண்டில் இத்திட்டம் கீழ்க்கண்ட பாசனப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது:

2016 ஆகஸ்ட் 19]

அட்டவணை 3.1 : மாவட்டவாரியான பாசன பகுதி மேம்பாட்டு திட்டங்கள்

வ. எண்.	பாசனப்பகுதி	மாவட்டங்கள்
1.	காளிங்கராயன் அணைக்கட்டு திட்டம்	ஈரோடு
2.	மணிமுக்தா நதி திட்டம்	விழுப்புரம், கடலூர்
3.	பிலான்துறை அணைக்கட்டு திட்டம்	கடலூர்
4.	எல்லீஸ் அணைக்கட்டுத் திட்டம்	விழுப்புரம்
5.	செய்யாறு அணைக்கட்டு திட்டம்	திருவண்ணாமலை
6.	கலிங்கலாா் நிசாபா நதி திட்டம்	திருநெல்வேலி
7.	கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத்திட்டம்	கிருஷ்ணகிரி
8.	குதிரையார் நீர்த்தேக்கத் திட்டம்	திண்டுக்கல்

மேற்கண்ட பாசனப் பகுதிகளில், 2015-16 ஆம் நிதி ஆண்டில் 5,139.72 எக்டர் பாசனப் பரப்பில் ரூ.13.38 கோடி செலவில் பண்ணை மேம்பாட்டு பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக 2016-17 ஆம் ஆண்டில் மேற்கண்ட எட்டு பாசனப் பகுதிகளில் 17,986 எக்டர் பரப்பில் ரூ.85.15 கோடி மதிப்பீட்டில் பண்ணை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்ட மொத்த மதிப்பீட்டில், ரூ.18.59 கோடி செலவில் கிளை வாய்க்கால்கள், மதகுகள் ஆகியவற்றை புதுப்பிப்பதற்காக நீர்வள ஆதாரத்துறை மூலம் பணிகள் செயல்படுத்தப்பட உள்ளது.

[2016 ஆகஸ்ட் 19

3.6.2. பங்கேற்பு முறையில் பாசனநீர் மேலாண்மை

பாசனத் திட்டங்களில், பாசன நிலங்கள் உள்ள விவசாயிகளை ஒருங்கிணைத்து பாசன நீரை பயன்படுத்துவோர் சங்கங்கள் அமைக்கப்படுகிறது. இச்சங்கங்கள் தொடர்ந்து செயல்படவும், பாசனக் கட்டமைப்புகளை திறம்பட பராமரிக்கவும், முறைப்பாசனத்தை அமல்படுத்தி நீரை பகிர்ந்து கொள்ளவும் ஏதுவாக, எக்டருக்கு ரூ.1,200 செயல்பாட்டு மானியமாக ஒருமுறை வழங்கப்படுகிறது. இத்தொகை நிரந்தர வைப்பு நிதியாக தேசியமயமாக்கப்பட்ட வங்கிக் கணக்கில் பற்று வைக்கப்படுகிறது. இந்த வைப்பு நிதிக்கான வட்டித் தொகையை சங்கங்கள் பாசன வாய்க்கால்களின் பராமரிப்புக்கு பயன்படுத்தப்படுகிறது. இதுவரை தமிழகத்தின் 33 பாசனத் திட்டங்களில், 9,35,664 எக்டர் பரப்பளவிற்கு 1,989 பாசன நீரை பயன்படுத்துவோர் சங்கங்கள் அமைக்கப்பட்டு பராமரிப்பு மானியமாக ரூ.42.52 கோடி வழங்கப்பட்டு வங்கிகளில் வைப்பு நிதியாக உள்ளது.

3.6.3. உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்

உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்-I-ல் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் 48,302 எக்டர் நிலங்களில் நுண்ணீர் பாசன அமைப்புகள் ஏற்படுத்துதல், 2,691 பண்ணைக் குட்டைகள்அமைத்தல், திட்டப் பரப்பில் உள்ள நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கு 800 பண்ணைக் கருவிகள் வழங்குதல், 882 மழைநீர் சேகரிப்பு கட்டுமானங்கள் அமைத்தல் மற்றும் 12 இடங்களில் குழாய் பாசனக் கட்டமைப்பு நிறுவுதல் போன்ற பணிகள் ரூ.175.57 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டம் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்-II-ன்கீழ் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

3.7. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு மேலாண்மை

தமிழகத்தின் சாகுபடி பரப்பில் 44 சதவிகிதம் மானாவாரி நிலங்களாக உள்ளது. மேற்கண்ட நிலங்கள் ஏரிகள் மற்றும் நீர்த்தேக்கங்களுக்கு நீர்ப்பிடிப்புப் பகுதியாகவும் உள்ளன. இந்நிலங்கள் மழைக்காலங்களில் வெள்ளப் பெருக்கிற்கும் மண் அரிமானத்திற்கும் உட்படுகின்றன. எனவே, மானாவாரி நிலங்களில்

மண் அரிப்பை தடுத்து மண் வளத்தை காத்திடவும், மழைநீரை ஆங்காங்கே தேக்கி வைத்திடவும் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

3.7.1. நதிப் பள்ளத்தாக்குகளில் மண்வளப்பாதுகாப்புத் திட்டம்

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மண் அரிமானத்தை தடுத்தல், அதன்வழி நீர்தேக்கங்களில் வண்டல் மண் படிவதை குறைத்தல் மற்றும் மண்ணில் ஈரப்பதத்தினை அதிகரித்தல் ஆகியவை நதிப் பள்ளத்தாக்கு திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டத்தின்கீழ் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகளான நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் மற்றும் ஓடை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் நதிப் பள்ளத்தாக்குத் திட்டம் தென்பெண்ணையாறு மற்றும் மேட்டூர் (காவிரி) நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 2013-14 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2016-17 ஆம் ஆண்டில் 25 குறு நீர்வடிப்பகுதிகளில் ரூ.4.57 கோடி செலவில் மண் மற்றும் நீர்வளம் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

3.7.2. அணை புனரமைப்பு திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்புத் திட்டம்

உலகவங்கி உதவியுடன், அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு திட்டம், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தமிழ்நாடு மின்வாரியத் துறையினால் தேர்வு செய்யப்பட்ட அணைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக கிருஷ்ணகிரி மற்றும் குந்தா அணைகளில் வண்டல் மண் படிவதை குறைக்கும் நோக்கத்துடன் அவ்வணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு பணிகள், வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் மேற்கொள்ளப்படுகிறது. நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஒருங்கிணைந்த மண்வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்வதன் மூலம் நீர்த்தேக்கங்களில் வண்டல்மண் படிவதைத் குறைத்தல் இத்திட்டத்தின் முக்கியமான நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தடுப்பணைகள், வண்டல் சேகரிக்கும் கட்டுமானங்கள், வண்டல் படிதல் கண்காணிப்பு நிலையம் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

[2016 ஆகஸ்ட் 19

கடந்த 2015-16 முதல் எதிர்வரும் 2017-18 வரை உள்ள மூன்று ஆண்டுகளில் வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் மண்வளப் பாதுகாப்பு பணிகளை மொத்தம் ரூ.15.41 கோடி செலவில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த 2015-16 ஆம் ஆண்டில் உதகமண்டலம், ஓசூர் மற்றும் சூளகிரி ஆகிய வட்டாரங்களில் ஓடை பாதுகாப்புப் பணிகள் மற்றும் மண்வளப் பாதுகாப்பு பணிகள் ரூ.2.88 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டன.

2016-17 ஆம் ஆண்டில் உதகமண்டலம், சூளகிரி மற்றும் வேப்பனஹள்ளி ஆகிய வட்டாரங்களில் ஓடை பாதுகாப்பு பணிகள் மற்றும் மண்வளப் பாதுகாப்பு பணிகள் ரூ.7.30 கோடி செலவில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

3.7.3. இராமநாதபுரம் மாவட்டத்தில் பண்ணை குட்டைகள் ஆழப்படுத்தும் திட்டம்

மழைநீர் சேகரிக்கும் கட்டமைப்பான பண்ணைக் குட்டைகள் விவசாயிகளிடத்தில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. பண்ணைக் குட்டைகளில் தேக்கி வைக்கப்பட்டுள்ள நீரைக் கொண்டு, மிளகாய், பயறு வகைகள் மற்றும் சிறு தானியங்கள் ஓரிரு பாசனங்களில் உற்பத்தி செய்ய முடியும். விளைச்சலை எட்டும் நிலையில் மழை பொய்த்துவிட்டாலும் பண்ணைக் குட்டைகளைக் கொண்டு உயிர்ப்பாசனம் அளித்து மகசூலை காப்பாற்ற இயலும். பண்ணைக் குட்டைகள் அரை மீட்டர் ஆழத்திற்கு மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் ஆட்களைக் கொண்டு ஆழப்படுத்தப்படுகிறது. அதன்பிறகு இயந்திரங்களை கொண்டு இரண்டு மீட்டர் ஆழம் வரை வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் ஆழப்படுத்தப்படுகிறது. கடந்த 2015-16 ஆம் ஆண்டில் 1,734 பண்ணைக் குட்டைகள் ரூ.8.58 கோடி மதிப்பில் ஆழப்படுத்தப்பட்டுள்ளது.

2016-17 ஆம் ஆண்டில் 2,131 பண்ணைக் குட்டைகள் ரூ.10.65 கோடி செலவில் ஆழப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 19]

3.7.4. நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் மூலம் நீர் சேகரிப்புத் திட்டம்

கடந்த 2015-16 ஆம் ஆண்டில் நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம்மூலம் 68 பண்ணைக் குட்டைகள் ரூ.38.70 இலட்சம் மதிப்பில் பெரம்பலூர், புதுக்கோட்டை, சிவகங்கை, விருதுநகர் மற்றும் தூத்துகுடி மாவட்டங்களில் அமைக்க திட்டமிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், தனிப்பட்ட பண்ணைக்குட்டைகளுக்கு 50 சதவீத மானியமும் சமுதாய பண்ணைக்குட்டைகளுக்கு 100 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது.

மேலும் 2016-17 ஆம் ஆண்டில், 98 சமுதாய நீர் சேகரிப்பு கட்டுமானங்கள் ரூ.4.80 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3.8. தொலை உணர்வு மற்றும் புவியியல் தகவல் மையம்

வேளாண்மைப் பொறியியல் துறையில், தொலை உணர்வு மற்றும் புவியியல் தகவல் பிரிவு செயல்பட்டு வருகிறது. வேளாண்மைப் பொறியியல் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் அனைத்து செயலாக்கங்களுக்கும், திட்ட மதிப்பீடு தயாரிப்பதிலிருந்து, திட்டம் நிறைவடையும் வரை பணிகளை கண்காணிப்பதற்கும் உறுதுணையாக உள்ளது. இம்மையமானது துறையின் திட்டங்களுக்கு கருத்துரு தயாரிக்க உதவும் வகையில் செயல்படுகிறது. இத்துறைக்கும் இதர துறைகளுக்கும் பல்வேறு புவியியல் விவரங்கள், கிராம வரைபடங்கள் வழங்குதல், புவிசார் படங்கள் ஆகியவற்றை தொகுத்து உருவாக்கி வருகிறது.

4. வேளாண் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கக் கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண்மைக் கல்வி, வேளாண்மை ஆராய்ச்சி, வேளாண்மை விரிவாக்கக் கல்வி, வேளாண்மை வணிக மேம்பாடு, வேளாண்மை கொள்கை ஆதரவு மற்றும் திறந்த வெளி மற்றும் தொலைதூரக் கல்வி மூலமாக இளைஞர்களின் வேளாண் செயல்திறனை மேம்படுத்துவது ஆகிய

[2016 ஆகஸ்ட் 19

ஆறு பெரும் பணிகளை மேற்கொள்வதன்மூலம், உணவு உற்பத்தி மற்றும் விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்குவதில் உள்ள உலக அளவிலான சவால்களை எதிர்கொண்டு செயல்பட்டு வருகிறது.

மேற்கண்ட இலக்குகளை அடையும் பொருட்டு, தனது தலையாய பணிகளுடன் பின்வரும் பணிகளையும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மேற்கொண்டு வருகிறது. அவை பின்வருமாறு. தரமான விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு உழவர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. டிரைகோடெர்மா விரிடி, சூடோமோனாஸ் புளோரசன்ஸ் போன்ற உயிரி இடுபொருட்கள், பல்வேறு வகையான உயிர் உரங்கள் மற்றும் பயிர் வளர்ச்சி ஊக்கிகளான, மக்காச்சோள மேக்சிம், பயறு ஒண்டர், நிலக்கடலை ரிச், பருத்தி பிளஸ், கரும்பு பூஸ்டர் மற்றும் தென்னை டானிக் ஆகியனவும் உற்பத்தி செய்யப்பட்டு பயிர் உற்பத்தி திறனை மேம்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. மேலும், துல்லிய பண்ணையம், ஒருங்கிணைந்த பண்ணையம், பண்ணை இயந்திரமயமாக்குதல், மேம்படுத்தப்பட்ட பயிர் திட்டமிடல் காரணிகளான பயிர்களைத் தேர்வு செய்தல், பயிரிடப்படும் பரப்பை நிர்ணயம் செய்தல் மற்றும் இடு பொருள் உபயோகம் சீராக அமைய விலை முன்னறிவிப்பு, காலநிலை முன்னறிவிப்பு, ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளுதல், இ-வேளாண்மை, சந்தை விரிவாக்கம் மற்றும் வேளாண்மை வணிக மேம்பாடு ஆகியவற்றை வேளாண் வருவாயைப் பெருக்கும் வகையிலும் செயல்படுத்தி வருகின்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு 2015-2016 ஆம் ஆண்டு, சிறப்பு மிக்க நான்கு விருதுகள் வழங்கப்பட்டன அவை; 1. ‘2016 ஆம் ஆண்டின் சிறந்த வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த பாடங்களுக்கான விருது’ ஆசிய கல்வி உச்சி மாநாடு மற்றும் விருதுகள் வழங்கும் விழாவில் 15.03.2016 அன்று வழங்கப்பட்டது. 2. ரிக்கோ—கல்வியில் சிறப்புத்தன்மைக்கான விருதை, சிறந்த தொழில்நுட்பங்களை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் செயல்படுத்தியதற்காக, ரிக்கோ இந்தியா லிமிடெட் நிறுவனம் 19-2-2016 அன்று புதுதில்லியில் வழங்கியது. 3. மகேந்திரா சம்ரிதி இந்தியா வேளாண் விருதுகள் 2016 இன்கீழ்

2016 ஆகஸ்ட் 19]

க்ரிஷி சிக்ஷா சம்மான் எனும் விருது உற்பத்தித் திறனை அதிகரித்து, கிராமப்புற செழிப்புக்கான சிறந்த பங்களிப்பிற்காக 3-3-2016 அன்று வழங்கப்பட்டது. 4. அகில இந்திய ஒருங்கிணைந்த நெல் மேம்பாட்டுத்திட்டத்தின் 50-வது ஆண்டு குழு கூட்டத்தில் கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு பொன்விழா ஆண்டு சிறந்த நெல் ஆராய்ச்சி மையத்திற்கான விருதினை 15-4-2015 அன்று ஹைதாராபாத்தில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் இந்திய நெல் ஆராய்ச்சி நிறுவனம் வழங்கியது.

4.1. வேளாண்மைக் கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தற்பொழுது 13 இளங்கலை அறிவியல், 39 முதுகலை அறிவியல் மற்றும் 26 முனைவர் பட்டப் படிப்புகளும், 27 பகுதி நேர ஆராய்ச்சி சார்ந்த முனைவர் பட்டப் படிப்புகளும், 14 கல்லூரிகள் மற்றும் 8 பட்டய படிப்பு நிறுவனங்கள் (Diploma Institute) மூலம் வழங்கி வருகிறது. கடந்த 2015-2016 ஆம் ஆண்டில், இளநிலைப் பட்டப் படிப்பில் 1,357 மாணவர்களும், முதுநிலைப் பட்டப் படிப்பில் 392 மாணவர்களும், முனைவர் பட்டப் படிப்பில் 159 மாணவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர். இளநிலைப் பட்டப் படிப்பில் 1,350 மாணவர்களும், முதுநிலைப் பட்டப் படிப்பில் 387 மாணவர்களும், முனைவர் பட்டப் படிப்பில் 152 மாணவர்களும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் மூலமாக பல்வேறு அஞ்சல் வழிப் பாடத் திட்டங்களை வழங்கி வருகிறது. தற்பொழுது, ஐந்து முதுநிலைப் பட்டயப் படிப்புகள், மூன்று முதுநிலைப் பட்டப் படிப்புகள், ஒரு இளநிலைப் பட்டப் படிப்பு மற்றும் 16 சான்றிதழ் படிப்பு ஆகிய பாடங்களை இவ்வியக்ககம் வழங்கி வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மாணவர் நல இயக்ககம் வாயிலாக வேலைவாய்ப்பு ஆலோசனைகளை வழங்கி வருகிறது. இவ்வியக்ககத்தின் மூலமாக, 2015-2016 ஆம் ஆண்டு 117 மாணவர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அவை; வேளாண் தொழில் நிறுவனங்கள் (53), விதை நிறுவனங்கள் (8), உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் (4), உர நிறுவனங்கள் (10), அரசு சாரா அமைப்புகள்

(1), தோட்டக்கலை நிர்வாகம் (3), வங்கிகள் (30), இந்திய ஆட்சிப்பணி (1) மற்றும் இதர நிறுவனங்கள் (8) ஆகும். மேலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைப்பை ஏற்படுத்தி வேளாண் பட்டதாரிகளுக்கு வெளிநாட்டில் வேலைவாய்ப்பைப் பெற உதவி வருகிறது. பட்டதாரிகளின் மென் திறனை மேம்படுத்த அதி நவீன கருத்துப் பரிமாற்ற ஆய்வகத்தையும் இவ்வியக்ககம் கொண்டுள்ளது.

4.2. வேளாண்மை ஆராய்ச்சி

தமிழ்நாடு முழுவதும் 39 வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் 14 கல்லூரிகள் அந்தந்த பகுதியில் உள்ள பயிர்களுக்கேற்ப ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன. பல்கலைக்கழகம் இதுவரை, 807 புதிய பயிர் இரகங்கள், 164 வேளாண் கருவிகள் மற்றும் 1,523 பயிர் மேலாண்மைத் தொழில்நுட்பங்களை வெளியிட்டுள்ளது. மேலும், விவசாயிகள் உள்ளிட்ட பல்வேறு பயனாளிகள் பயன்பெறும் வகையில் 373 ஆராய்ச்சிக் கட்டுரைகள் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான இதழ்களில் 2015-2016 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

கீழ்க்காணும் எட்டு பயிர் இரகங்களும் மூன்று பண்ணை கருவிகளும் 2015-2016 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளன;

4.2.1. பயிர் இரகங்கள்

4.2.1.1. கம்பு கோ 10

கம்பு கோ 10 இரகமானது 85-90 நாட்களில் முதிர்வடையும். இந்த இரகம் இறவை (மார்ச்-ஏப்ரல்; ஜனவரி - பிப்ரவரி) மற்றும் மானாவாரியாக (சூன் - சூலை; செப்டம்பர் - அக்டோபர்) மாதங்களில் பயிரிட ஏற்றது. இது இறவையில் எக்டருக்கு 3,526 கிலோவும் மானாவாரியில் எக்டருக்கு 2,923 கிலோவும் சராசரி மகசூல் தரவல்லது. அதிகபட்ச மகசூலாக எக்டருக்கு 4,800 கிலோ தந்துள்ளது. இந்த இரகம் தமிழகம் முழுவதும் பயிரிட ஏற்றது. இது அடிச்சாம்பல் நோய்க்கு எதிர்ப்புத்திறன் கொண்டதாகும். இந்த இரகம் அதிக புரதச்சத்தும் (12.07 விழுக்காடு) நெருக்கமான கதிர்களையும் திரட்சியான விதைகளையும் கொண்டது.

4.2.1.2. உளுந்து வம்பன் 8

உளுந்து வம்பன் 8 இரகம் 65 - 75 நாட்கள் வயதுடையதாகும். இது ஆடிப்பட்டம் (சூன்-ஆகஸ்டு), புரட்டாசிப்பட்டம்

2016 ஆகஸ்ட் 19]

(செப்டம்பர்-அக்டோபர்) மற்றும் தை பட்டத்தில் (ஜனவரி - பிப்ரவரி) பயிரிட ஏற்றது. இதன் சராசரி மகசூல் இறவையில் எக்டருக்கு 900 கிலோ ஆகும். இது வம்பன் 6 மற்றும் கோ 6 இரகங்களை விட முறையே, 11.94 விழுக்காடும் மற்றும் 13.49 விழுக்காடும் அதிகமாகும். அதிகபட்ச மகசூலாக எக்டருக்கு 2,050 கிலோ தந்துள்ளது. .இது தமிழகத்தில் நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை தவிர மற்ற இடங்களில் பயிரிட ஏற்றது. இந்த இரகம் ஒரே தருணத்தில் முதிர்ச்சி, விதை உதிராத்தன்மை, மஞ்சள் தேமல் நோய்க்கும், இலைசுருள் நோய்க்கும் எதிர்ப்புத்திறன் கொண்டதாகும். புரதச்சத்து 21.9 விழுக்காடும் அராபினோஸ் 7.5 விழுக்காடும் உடையதாகும்.

4.2.1.3. நிலக்கடலை விஆர்ஐ 8

நிலக்கடலை விஆர்ஐ 8 இரகமானது 105-110 நாட்களில் முதிர்வடையும். இது மானாவாரியாக ஏப்ரல்-மே, ஜூன்-ஜூலை, அக்டோபர்-நவம்பர் மாதங்களில் பயிரிட ஏற்றது. இறவை பயிராக டிசம்பர்-ஜனவரி, பிப்ரவரி-மார்ச் மற்றும் ஏப்ரல்-மே மாதங்களில் பயிரிட ஏற்றது. இது சராசரியாக மானாவாரியில் எக்டருக்கு 2,130 கிலோவும் இறவையில் எக்டருக்கு 2,700 கிலோவும் மகசூல் தரவல்லது. இது விஆர்ஐ 6 இரகத்தை விட முறையே 22 விழுக்காடு, 26.6 விழுக்காடு அதிக மகசூல் தரவல்லது. அதிகபட்ச மகசூலாக எக்டருக்கு 5,170 கிலோ தந்துள்ளது. தமிழகத்தின் அனைத்து கடலை பயிரிடும் மாவட்டங்களிலும் பயிரிட எற்றது. டிக்கா இலைப்புள்ளி நோய்க்கும் (Tikka Leaf spot) *துரு நோய்க்கும்* (Rust disease) *மிதமான எதிர்ப்புத் திறன் கொண்டதாகும். உடைப்புத் திறன் 70 விழுக்காடும் எண்ணெய்ச்சத்து 49 விழுக்காடும் மத்திய பருமனான விதைகளைக் கொண்டது.*

4.2.1.4. பருத்தி கோ 14

பருத்தி கோ 14 இரகமானது 150 நாட்களில் முதிர்வடையும். இது இறவைப் பயிராக ஆகஸ்டு - பிப்ரவரி (குளிர்) பருவத்தில் பயிரிட ஏற்றது. இது தமிழ்நாட்டில் குளிர்பருவ மாவட்டங்களான கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தருமபுரி, நாமக்கல், திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் இறவைப்பயிராக பயிரிட ஏற்றது. சராசரியாக எக்டருக்கு 1,768 கிலோ பருத்தி மகசூல் தரவல்லது (எம்சியு 13 இரகத்தை விட 18.3 விழுக்காடு அதிகமாகும்).

அதிகபட்ச மகசூலாக எக்டருக்கு 3,500 கிலோ தந்துள்ளது. மிக நீண்ட இலை பருத்தி வலிமையும் (35 மி.மீ), அறவைத் திறன் (34.8 விழுக்காடு), இழை வலிமை 23.4 கி/டெக்ஸ், 70 ஆம் எண் நூல் நூற்புத் திறன் (Spinning upto 70's counts) *கொண்டது.*

4.2.1.5. கரும்பு கோ 0212

கரும்பு கோ 0212 இரகமானது 12 மாதங்களில் முதிர்வடையும். இது ஜனவரி - மார்ச் பருவத்தில் நடவுக்கு ஏற்றது. இதன் கரும்பு எடை எக்டருக்கு 150.56 டன்கள், கரும்புச் சர்க்கரை கட்டுமானம் 12.8 விழுக்காடும் கரும்புச் சர்க்கரை மகசூல் எக்டருக்கு 19.27 டன்கள் ஆகும். அதிகபட்ச மகசூலாக கரும்பு எக்டருக்கு 175.30 டன்கள் தந்துள்ளது. தமிழகம் மற்றும் புதுச்சேரி பகுதிகளுக்கு ஏற்றது. இந்த இரகம், கோ 86032 இரகத்தைவிட அதிக கரும்பு எடையும் சர்க்கரை மகசூலும் தரவல்லது. இது அதிக தூர்களுடன் நேராக வளரும் தன்மை, உயர் தரமான வெல்லம் மற்றும் மறுதாம்புப் பயிருக்கு ஏற்ற இரகம். வறட்சி மற்றும் உப்புத்தன்மையை தாங்கி வளரக்கூடியது.

4.2.1.6. தீவன தட்டைப்பயறு கோ 9

தீவன தட்டைப்பயறு கோ 9 இரகம் 50 - 55 நாட்களில் தீவனப்பயிருக்காகவும் 90-95 நாட்களில் விதைக்காகவும் அறுவடை செய்யலாம். இது முதல் பட்டம், இரண்டாவது பட்டம் மற்றும் கோடையில் பயிரிட ஏற்றது. இதன் சராசரி மகசூல் எக்டருக்கு 22.82 டன்கள் கோ (எப்சி) 8 இரகத்தை விட 18.42 விழுக்காடு அதிகம் தரவல்லது. அதிகபட்ச மகசூலாக எக்டருக்கு 28 டன்கள் கொடுத்துள்ளது. தமிழகம் எங்கும் பயிரிட ஏற்றது. இது அதிக பசுந்தாள் எடையும் (எக்டருக்கு 22.82 டன்கள்), தானிய எடையும் (எக்டருக்கு 3.85 டன்கள்) தரவல்லது. இது அகலமான இலைகள், அதிக கிளைகள், அதிக புரதச்சத்து (21.56 விழுக்காடு), குறைந்த அளவு நார் சத்து கொண்டது. குறைந்த வயதுடையதால், சோளம், மக்காச்சோளத்துடன் கலப்புத் தீவனமாக பயிரிட ஏற்றது.

4.2.1.7. வீரிய ஒட்டு வெண்டை கோ 4

வீரிய ஒட்டு வெண்டை கோ 4 இரகமானது 110 நாட்கள் வயதுடையது. இந்த இரகம் மே - ஜூன், பிப்ரவரி - மார்ச் மற்றும் அக்டோபர் - நவம்பர் மாதங்களில் பயிரிட ஏற்றது. சராசரி மகசூல் எக்டருக்கு 25.6 டன்களாகும். இது

2016 ஆகஸ்ட் 19]

கோபிஎச்எச் 1 (CoBhH1) இரகத்தை விட 19.6 விழுக்காடும் சக்தி இரகத்தைவிட 23.1 விழுக்காடும் அதிக மகசூல் தரவல்லது. அதிகபட்ச மகசூலாக எக்டருக்கு 32.40 டன்கள் கொடுத்துள்ளது. இந்த இரகத்தினை தமிழகத்தில் மலைப்பகுதிகளை தவிர அனைத்து மாவட்டங்களிலும் பயிரிடலாம். செடிகளின் உயரம் 135-150 செ.மீ. நீளமான அடர்ந்த பச்சை நிற காய்கள், செடி ஒன்றுக்கு 25-29 காய்கள், ஒரு பருவத்தில், அதாவது 39-வது நாள் முதல் 110 நாட்கள் வரை22 அறுவடைகள். இது மஞ்சள் நரம்புத் தேமல் நோய்க்கு [Yellow Vein Mosaic Virus (YVMV)] எதிர்ப்புத் தன்மை கொண்டது.

4.2.1.8. எலுமிச்சை விஆர்எம் 1

எலுமிச்சை விஆர்எம் 1 இரகமானது பிரான்ஸ் நாட்டின் தகிடி தீவிலிருந்து அறிமுகம் செய்யப்பட்டது. இதன் பழங்களை நான்காவது ஆண்டு முதல் அறுவடை செய்யலாம். இது டிசம்பர் - ஜனவரி மற்றும் ஜூன் - செப்டம்பர் பருவத்தில் பயிரிட ஏற்றது. இதன் சராசரி மகசூல் மரத்திற்கு 69 கிலோவாகும். அதிகபட்ச மகசூல் மரத்திற்கு 78.56 கிலோவாகும். நீலகிரி மாவட்டத்தைத் தவிர மற்ற மாவட்டங்களில் பயிரிட ஏற்றது. இந்த இரகம் வீட்டுத் தோட்டத்திற்கு உகந்தது. பழச்சாறு, ஊறுகாய் மற்றும் சமையலுக்கு உகந்தது. அதிக வைட்டமின் சி சத்து (96 மி.கி / 100 மி.லி). இலைத்துளைப்பான் (Leaf Miner) மற்றும் சொறிநோய்க்கு (citrus canker) எதிர்ப்புத் திறன் கொண்டது.

4.2.2. இயந்திரங்கள் மற்றும் பண்ணை கருவிகள்

4.2.2.1. புளி விதை நீக்கும் இயந்திரம்

உலர்ந்த தோல் நீக்கிய புளியிலிருந்து விதையை பிரித்தெடுக்கக் கூடியது. வெவ்வேறு அளவான புளியிலிருந்தும் விதையை பிரித்தெடுக்கலாம். உருளைகளின் இடைவெளியை தேவைக்கேற்ப மாற்றிக்கொள்ளலாம். இவ்வியந்திரத்தின்மூலம், புளி, விதை மற்றும் உடைந்தவற்றை தனித்தனியாக பிரிக்கலாம். இயந்திரத்தின் விலை ரூபாய் 60,000 ஆகும். ஒரு கிலோ புளி விதை நீக்க ஆகும் செலவு ரூபாய் 2.50 ஆகும். புளி விதை பிரிக்கும் திறன் மணிக்கு 40 கிலோ ஆகும்.

[2016 ஆகஸ்ட் 19

4.2.2.2. சிறுதானியங்களுக்கு ஏற்ற இரட்டை அடுக்கு சுழல் விசை உமி நீக்கும் இயந்திரம்

சிறுதானியங்களான தினை, வரகு, பனி வரகு, குதிரைவாலி, சாமை ஆகியவற்றிலிருந்து உமியை நீக்கும் போது உமி மட்டும் பிரிவதால் தானியத்திற்கு எந்த பாதிப்பும் இல்லை. ஐந்து குதிரைத்திறன் கொண்ட மின் இயக்கியால் இயங்கும் இந்த இயந்திரம் ஒரு மணி நேரத்திற்கு, 300 கிலோ சிறுதானியங்களில் உள்ள உமி நீக்கும் தன்மையுடன், 95 விழுக்காடு செயல்திறன் உடையது. இதன் விலை ரூபாய் 1,20,000 ஆகும். உமி நீக்கும் செலவானது ஒரு கிலோவிற்கு ரூபாய் 5 ஆகும்.

4.2.2.3. டிராக்டிரால் இயங்கும் துல்லியமாக பயறு விதைக்கும் கருவி

புழக்கத்திலுள்ள முறையுடன் ஒப்பிடுகையில் 19.1 விழுக்காடு செலவும் 97.0 விழுக்காடு நேரமும் மீதமாகிறது. ஒரு எக்டருக்குத் தேவையான விதையின் அளவு புழக்கத்திலுள்ள முறையுடன் ஒப்பிடுகையில் 40 விழுக்காடு மீதமாகிறது. ஒரே நேரத்தில் ஐந்து வரிசைகளில் சீராக விதைக்கலாம். நிர்ணயிக்கப்பட்ட 10 செ.மீ இடைவெளியில் துல்லியமாக விதைக்கலாம். நாளொன்றுக்கு சுமார் 1.0 எக்டரில் விதை விதைக்கலாம். இக்கருவியைக் கொண்டு உளுந்து மற்றும் பச்சைப்பயறு விதைகளை விதைக்கலாம். இக்கருவியின் விலை ரூபாய் 50,000 ஆகும்

4.2.3. 2015–16 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை பெருக்க திட்டங்கள்

4.2.3.1. தமிழக அரசின் புதுமைத் திட்டங்கள் (மாநிலம் திட்டம் - மாநில புதுமை நிதி)

1. *தாவர நல மாற்றங்களைப் புதுமையாக்க கருவிகள் மற்றும் நுட்பங்கள்மூலம் உருவாக்குதல் பயிர்களில் நிலைத்த மகசூல் உயர்வு பெற, ரைசோக்டிரான் கருவி கொண்டு நுண்ணிய வகைப்பாடு ஆய்வுக்காக ரூபாய் 9.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

2. *அடர் நடவு முறையில் பழத்தோட்டம் அமைத்தல் மேலும் குட்டை இரகங்கள் மற்றும் கிளை படர்வு மேலாண்மைமூலம் நவீன முறையில் பழ மரங்கள் சாகுபடிக்காக ரூபாய் 1.57 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

2016 ஆகஸ்ட் 19]

3. தமிழகத்தின் தென் மாவட்டங்களுக்கான ஒருங்கிணைந்த விதை உற்பத்தி முனையம் அமைப்பதற்காக ரூபாய் 5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகளுக்கு மாம்பழத்தில் சேதம் விளைவிக்கும் பழ ஈக்களை கவர்ந்து அழிக்கும் முறையை வயல்வெளி ஆய்வுத் திடல்கள் அமைத்து சேதத்தைக் குறைக்கும் திட்டத்திற்காக ரூபாய் 1.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.2.3.2. தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டங்கள்

1. கடந்த 2015-2016 ஆம் ஆண்டு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஆறு புதிய மகத்துவ மையங்கள் ரூபாய் 22.96 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்டுள்ளது.

 i. கோயம்புத்தூரில் மூலக்கூறு மரபியல் மகத்துவ மையம்.

 ii. செட்டிநாட்டில் உள்ள மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில், மானாவாரி பண்ணையத்திற்கான மகத்துவ மையம்.

 iii. திருச்சிராப்பள்ளி வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், மண் வளத்திற்கான மகத்துவ மையம்.

 iv. மதுரையில் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், புதுமை மையம்.

 v. திருச்சிராப்பள்ளி மகளிர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், பண்ணை மகளிர் அறிவு மையம்.

 vi. பட்டுக்கோட்டையில் உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில், எண்ணெய் பனை ஆராய்ச்சிக்கான மகத்துவ மையம்.

2. திறன் மேம்பாட்டு மையம், வேளாண் இயந்திரங்களுக்கான இயக்கம், பழுது மற்றும் பராமரிப்பிற்காக ரூபாய் 20.00 கோடி மதிப்பீட்டில் குமுளூரில் துவங்கப்பட்டுள்ளது.

3. திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் தாலூகாவில் ரூபாய் 4.00 கோடி மதிப்பீட்டில் எலுமிச்சை ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி 2015-2016 ஆம் ஆண்டில் ரூபாய் 45 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுவருகிறது.

4. வேளாண் மற்றும் தோட்டக்கலை விளைபொருட்களின் தரத்தினை தேசிய சான்று பெற்ற ஆய்வகத்தின்மூலம் ஆய்வு மேற்கொள்ள 2015-2016 ஆம் ஆண்டில் ரூபாய் 6.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. மானாவாரி வேளாண்மையில் உற்பத்தி மற்றும் இலாபம் பெற உயிரியல் சார்ந்த விதை மூலாமிட்டு விதைத்தல் பற்றிய ஆய்வுக்காக 2015-2016 ஆம் ஆண்டில் ரூபாய் 1.07 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள பூச்சி அருங்காட்சியகத்தை வலுப்படுத்துவதற்காக 2015-2016 ஆம் ஆண்டில் ரூபாய் 1.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. தமிழ்நாட்டில் உள்ள பாரம்பரியமிக்க விதைகளை சேகரித்து நவீன முறையில் சேமிப்பதற்காக 2015-2016 ஆம் ஆண்டில் ரூபாய் 1.96 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.2.3.3. மூலதனச் சொத்து உருவாக்குதல் – மாநில திட்டம்

1. மூன்று புதிய வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களுக்கு கட்டடங்கள் கட்டும் பணிக்காக ரூபாய் 10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் மகளிருக்காக நான்கு தங்கும் விடுதிகள் கட்டும் பணிக்காக ரூபாய் 4.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நவீன வசதிகளுடன்கூடிய மாணவர் விடுதி மேம்படுத்துவதற்காக ரூபாய் 2.25 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 19]

4. ஆறு மகத்துவ மையங்களுக்கு கட்டுமானப் பணிகள் ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

4.3. வேளாண் விரிவாக்கக் கல்வி

வேளாண்மை விரிவாக்கக் கல்வி இயக்ககம், `விவசாயி உந்துதல் மற்றும் சந்தை வழி' முறைகளைப் பின்பற்றி வேளாண் உற்பத்தி, உற்பத்தித்திறன் மற்றும் வருவாயைப் பெருக்க கீழ்க்காணும் பணிகளை செயல்படுத்துகிறது. இது விரிவாக்கம் மற்றும் வளர்ச்சித் துறைகளை, தகவல் தொடர்பு தொழில்நுட்ப உதவியுடன் இணைந்து செயல்பட முக்கியத்துவம் அளித்து வருகிறது.

கீழ்க்காணும் துறைகள் இவ்வியக்கத்தில் செயல்பட்டு வருகின்றன.

4.3.1. வேளாண் அறிவியல் நிலையங்கள் (KVKS)

மொத்தம் 14 மாவட்டங்களில் இயங்கும் விவசாயிகளின் பயிர் சார்ந்த தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு ஆய்வகத்திலிருந்து பண்ணை வயல்களுக்கு தொழில்நுட்பப் பரிமாற்றத்திற்காக, 1974 ஆம் ஆண்டு பண்ணை அறிவியல் மையம் என்ற பெயரில் துவங்கப்பட்டன. பிறகு, வேளாண்மை அறிவியல் நிலையம் என அழைக்கப்பட்டன. வேளாண் அறிவியல் நிலையங்களின் செயல்பாடுகள் தொழில்நுட்பத்தை பரிசோதித்தல், மேம்படுத்துதல் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களுக்கும் விவசாயிகள் வயல்களில் கிடைக்கும் மகசூல் இடைவெளியினைக் குறைப்பதற்கும் தொழில்நுட்பப் பரிமாற்றம் செய்து வருகின்றன.

வேளாண்மை அறிவியல் நிலையங்களின் குறிக்கோள்கள்:

i. வேளாண் தொழில்நுட்பங்களை அந்தந்த பகுதிகளுக்கேற்றதாக உள்ளனவா என பண்ணை வழி ஆய்வுகள்மூலம் கண்டறிதல்

ii. உழவர்களின் வயல்களில் முதல் நிலை செயல் விளக்கத் திடல்கள் அமைத்தல்

iii. உழவர்கள், விரிவாக்க அலுவலர்கள், கிராமப் புற இளைஞர்களுக்கு வேளாண்மை தொழில்நுட்பப் பயிற்சிகள் அளித்தல்.

[2016 ஆகஸ்ட் 19

iv. முன்னோடி விவசாயிகளுக்கு பயிற்சிகள் அளித்து மற்ற விவசாயிகளுக்கு வேளாண் தொழில்நுட்பங்களைப் பரவலாக்கம் செய்து வருகின்றன.

v. வேளாண்மை அறிவியல் நிலையங்கள் தொழில்நுட்ப தகவல் மையங்களாக பொதுத் துறை, தனியார், தன்னார்வ நிறுவனங்களுக்கு வேளாண்மை சார்ந்த தகவல்களை அளித்து மாவட்டத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்றன. மாநிலத்தில் 14 வேளாண்மை அறிவியல் நிலையங்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்படுகின்றன. மொத்தம், 66 பண்ணை வழி ஆய்வுகள் 190 எக்டரில் 330 இடங்களிலும், புதியதாக வெளியிடப்பட்ட இரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்களில், 256 முதல் நிலை செயல் விளக்கத்திடல்கள் 906 எக்டரில் 2,048 இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டன. மேலும், 487 வளாக மற்றும் புற வளாக பயிற்சிகள் 20,466 உழவர்களுக்கும் 27 தொழில்நுட்பப் பயிற்சிகள் 2,023 உழவர்கள் மற்றும் இதர விரிவாக்க அலுவலர்களுக்கும் 2015-2016 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டன.

4.3.2. கல்வி ஊடக மையம்

இம்மையம், பல்கலைக்கழகத்தின் முக்கிய நிகழ்வுகளை காணொலிப் படங்களாக பதிவு செய்து வருகிறது. 2015-2016 ஆம் ஆண்டு 260 காணொலி நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டன; 152 காணொலிப் படங்கள் விற்கப்பட்டன; 290 காணொலிப் படங்கள் உழவர்களுக்கு காண்பிக்கப்பட்டன. சென்னை பொதிகை தொலைக்காட்சி வாயிலாக, 210 நிகழ்ச்சிகள் 52 வாரங்களில் ஒளிபரப்பப்பட்டன.

4.3.3.தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான இ–விரிவாக்கம்

இது ஒரு மின்னணு தொழில்நுட்பப் பரிமாற்றத்திற்கான காலம். ஆகவே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தொழில்நுட்பப் பரிமாற்றத்திற்காக சிறந்த முறையில் கீழ்க்காணும் அங்கங்களைக் கொண்டு செயல்படுத்தி வருகின்றது.

2016 ஆகஸ்ட் 19]

4.3.3.1. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணையதளம் (http://agritech.tnau.ac.in)

தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை சார்ந்த பல்வேறு ஊடகங்களை உள்ளடக்கிய சுமார் எட்டரை இலட்சம் பக்கங்களைக் கொண்டு உலகின் மிகப்பெரிய பண்ணைய தொழில்நுட்ப இணையதளமாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் திகழ்கிறது.

4.3.3.2. பயிர் மருத்துவ நிபுணத்துவ மென்பொருள்

பயிர் மருத்துவ மென்பொருள் நெல், கரும்பு, இராகி, தென்னை, வாழை மற்றும் கால்நடை தொழில் முனைவோர்களுக்கான பசு, ஆடு, கோழி வளர்ப்பு சார்ந்த தீர்மானங்களை மேற்கொள்ள பல்—விருப்பு கேள்விகளின் அடிப்படையில், நோய், பூச்சிகள் தாக்கம், ஊட்டச்சத்து குறைபாடுகள், உற்பத்தித் தொழில்நுட்பங்கள் குறித்த தகவல்கள் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகளாலும், விரிவாக்க அலுவலர்களாலும், முன்னோடி உழவர்களாலும், தொழில்நுட்ப ஆலோசனைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன.

4.3.3.3. சமுதாய வானொலி நிலையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள சமுதாய வானொலி நிலையம் பண்ணை சார்ந்த தகவல்களை கோயம்புத்தூரைச் சுற்றியுள்ள 18 கி.மீ. தொலைவிற்குள் வசிக்கும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒலிபரப்பு செய்துவருகிறது. இது வேளாண் பல்கலைக்கழக விவசாயி எப்.எம். எனப் பெயரிடப்பட்டு 107.4 மெகா ஹெர்ட்ஸ் அலைவரிசையில் ஒலிபரப்பப்படுகிறது. தினசரி 10.00 மணி முதல் 13.00 மணி வரை மூன்று மணி நேரத்திற்கும், மறு ஒலிபரப்பு 14.00 முதல் 17.00 மணி வரையும் செய்து வருகிறது.

விவசாயி எப்.எம்.-இல், சீதோஷ்ண நிலை, சந்தை விலை நிலவரம், விஞ்ஞானிகளின் தொழில்நுட்பத் தகவல்கள் ஒலிபரப்பப்படுகின்றன. 2015-2016 ஆம் ஆண்டு, 278 வேளாண் நிகழ்ச்சிகள் ஒலிபரப்புவதற்காக பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் 216 நிகழ்ச்சிகள் http://agritech.tnau.ac.in/comm-e-radio.html எனும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள 22 கிராமங்களில் வசிக்கும் 10,000 பண்ணைக் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் இது நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகிறது.

4.3.3.4. விவசாயிகள் அழைப்பு மையம் (கிஸான் கால் சென்டர்)

விவசாயிகளுக்கு கட்டணமில்லா 1551 அல்லது 1800-180-1551 என்ற எண்களுடைய தொலைபேசி மூலமாக சேவைகளை அளித்து வருகிறது. தொலைபேசியில் அழைப்பவர் வட்டார மொழியில் வல்லுநர்களுடன் கலந்துரையாடலாம். இம்மையம் அனைத்து வேலை நாட்களிலும் காலை 7.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை செயல்படுகின்றது. சராசரியாக நாள் ஒன்றுக்கு 1,072 தொலைபேசி அழைப்புகள் பெறப்படுகின்றன.

4.3.4. உழவர் உறுதுணை மையம்

கோயம்புத்தூரில் உள்ள உழவர் உறுதுணை மையம் வேளாண்மைத் தொழில்நுட்பங்களை ஒற்றை சாளரமுறையில் உழவர்களுக்கு வழங்கி வருகின்றது. இது 2015-2016 ஆம் ஆண்டு, 158 உழவர்-விஞ்ஞானிகள் கூட்டங்களை நடத்தியும் முதன்மைத் தகவல்களை அளித்தும் உள்ளது.

4.3.5. வேளாண்மைத் தொழில்நுட்பத் தகவல் மையம்

வேளாண்மைத் தொழில்நுட்பத் தகவல் மையம் ஒற்றை சாளரமுறையில் உழவர்களுக்கு இடுபொருட்களையும் தொழில்நுட்பங்களையும் வழங்கி வருகின்றது. இம்மையம் 2015-16 ஆம் ஆண்டு 4,000 விதை பைகளையும் 250 லிட்டர் மரக்கொல்லி மருந்தினையும் 220 கிலோ பயிர் வளர்ச்சி ஊக்கிகள், தென்னை டானிக் மற்றும் உயிர் உரங்களை விற்பனை செய்துள்ளது. இதன்மூலம் 4,500 உழவர்கள் பயனடைந்துள்ளார்கள்.

4.3.6. உழவரின் வளரும் வேளாண்மை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் 1975 ஆம் ஆண்டு முதல் பிரசுரிக்கப்பட்டு வரும் தமிழ் மாத இதழாகும். இதழ் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 14,248 ஆகும்.

4.3.7. உழவர் மேளா / கருத்துக் காட்சிகள்

மாநில அளவிலான உழவர் தின விழா 8-1-2016 அன்று கோயம்புத்தூர், பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தப்பட்டது. இதில் 5,000 உழவர்கள் பல்வேறு மாவட்டங்களில் இருந்து கலந்து கொண்டனர்.

2016 ஆகஸ்ட் 19]

கோயம்புத்தூர் கொடிசியா வளாகத்தில் நடந்த செயல்விளக்கங்கள் மற்றும் வேளாண்மை கருத்துக்காட்சியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கலந்துகொண்டது. இதை 30,000-க்கும் மேற்பட்டோர் பார்த்துப் பயனடைந்தனர்.

வேலூர் தொழில்நுட்ப நிறுவனம் நடத்திய உழவர் தின விழா மற்றும் கருத்துக்காட்சியில் வேளாண்மை அறிவியல் நிலையங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் பங்குகொண்டன. இதில் 5,000 உழவர்கள் பல்வேறு மாவட்டங்களில் இருந்து கலந்து கொண்டனர்.

4.3.8. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையம், சென்னை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையம் சென்னையில் அமைந்துள்ளது. 2015-2016 ஆம் ஆண்டு 95 பயிற்சிகள் 3,707 பயனாளிகளுக்கு பல்வேறு தலைப்புகளான; மாடித் தோட்டம், வீட்டு காய்கறி தோட்டம் அமைத்தல், பழங்கள் மற்றும் காய்கறிகள் பதப்படுத்துதல், சிறுதானியங்கள் மற்றும் நறுமணப்பயிர்களில் மதிப்பூட்டம் செய்தல், உள்ளரங்க தாவரங்களைப் பராமரித்தல் மற்றும் காளான் உற்பத்தி, மண்புழு உரம் தயாரித்தல், அங்ககப் பண்ணையம், மசாலா பொருட்கள் தயாரித்தல், அடுமனைப் பொருட்கள் ஆகியவற்றில் நடத்தப்பட்டுள்ளன.

4.4. தரமான விதைகள் உற்பத்தி மற்றும் விநியோகம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், 175 முக்கிய பயிர் இரகங்களில் வல்லுநர் விதைகள், ஆதார விதைகள், சான்றிதழ் மற்றும் உண்மை நிலை விதைகளை உற்பத்தி செய்து விநியோகித்து வருகிறது. 2015-2016 ஆம் ஆண்டு, 1,171 குவிண்டால் வல்லுநர் விதைகள், 4,261 குவிண்டால் ஆதார விதைகள், 11,076 குவிண்டால் சான்றிதழ் மற்றும் உண்மை நிலை விதைகள் மற்றும் 27,58,397 நாற்றுக்கள் மற்றும் நடவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

தானியங்கி விதை விற்பனை இயந்திரம், கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டு

செயல்பட்டு வருகிறது. இதன்மூலம், சிறு விவசாயிகள் மற்றும் வீட்டுக் காய்கறித் தோட்டத்திற்குத் தேவையான காய்கறி மற்றும் பழ விதைகளை பெறுவதற்கு இயலும். இதுவரை, மூன்று இலட்சம் பாக்கெட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. தானியங்கி விதை விற்பனை இயந்திரம்; திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, தேனி, திருநெல்வேலி, சேலம், திருவண்ணாமலை, சென்னை, பையூர் மற்றும் விருத்தாசலம் என மேலும் பத்து இடங்களிலும் 2015-2016 ஆம் ஆண்டு நிறுவப்பட்டுள்ளன.

4.5. வேளாண் வணிக மேம்பாடு

வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம், வேளாண் சார்ந்த துவக்க நிலை தொழில் நிறுவனங்களைக் கருவிலிருந்து உருவாக்கியும், பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பங்களை வணிகப்படுத்தியும் செயல்பட்டு வருகிறது. சுமார் 100 நிறுவனங்கள் இம்முறையில் இவ்வியக்ககத்தில் பதிவு செய்துள்ளன. இதுவரை, 23 தொழில்நுட்பங்கள் வணிகப்படுத்தப்பட்டுள்ளன. தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் மத்திய அரசு, புது தில்லிமூலம் கீழ்க்கண்ட ஐந்து தொழில்நுட்பங்களை வணிகப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1. TNAU தென்னை டானிக்,
2. TNAU பஞ்சகவ்யா,
3. TNAU சூடோமோனாஸ் மற்றும் ட்ரைகோடெர்மா நுண்ணுயிரிகள் உற்பத்தி,
4. TNAU பூச்சி விரட்டி,
5. TNAU கம்பு மாவில் உடனடியாக உணவு தயாரிக்கும் மிக்ஸ் கலவை.

4.6. சந்தை மற்றும் விலை முன்னறிவிப்பு சேவைகள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் விலை முன்னறிவிப்பு மற்றும் சந்தை நுண்ணறிவு சேவைகளைத் தனது உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையத்தின் (DEMIC) மூலம் அளித்து வருகிறது. வேளாண் பொருட்களின் உள்ளூர்

2016 ஆகஸ்ட் 19]

சந்தை விலைகளை விதைப்பிற்கு முன்பும் அறுவடைக்கு முன்பும் ஆக இரண்டு முறை முன்னறிவிப்பு செய்கிறது. இத்தகவல்கள் நாளிதழ்களிலும், வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமும் வெளியிடப்படுகின்றன. இம்மையம், 24 வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களான, மக்காச்சோளம், சோளம், கேழ்வரகு, கம்பு, உளுந்து, கொண்டைக்கடலை, பச்சைப்பயறு, நிலக்கடலை, எள், சூரியகாந்தி, தேங்காய், கொப்பரைத் தேங்காய், பருத்தி, உருளைக்கிழங்கு, கேரட், பீட்ரூட், தக்காளி, வெண்டைக்காய், கத்தரிக்காய், மஞ்சள், சிறிய வெங்காயம், மிளகாய் வற்றல், கொத்தமல்லி, வாழைப்பழம் (நேந்திரன் மற்றும் பூவன்) ஆகியவற்றிற்கு விலை முன்னறிவிப்பு செய்கிறது. விலை முன்னறிவிப்பானது 90 விழுக்காடுக்கும் அதிகமாக துல்லியமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

4.7. வணிகம் மற்றும் அறிவுசார் சொத்துரிமைக் காப்புத் துறை

இதுவரை ஏழு காப்புரிமைகளைப் பெறவும், 59 கண்டுபிடிப்புகளை பதிவு செய்யவும் உதவியுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளோடு விவசாயிகள் பயன்பெறும் வகையில் அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு 2016-2017 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து உதவிகரமாக செயல்படும்.

5. சர்க்கரைத் துறை

தமிழ்நாட்டின் வேளாண் சார்ந்த தொழிற்பயிர்களில் கரும்பு இரண்டாம் இடம் வகிக்கிறது. மொத்த சாகுபடி பரப்பில் 5.7 விழுக்காடு நிலப்பரப்பில் கரும்பு சாகுபடி செய்யப்படுகின்றது. மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தி இந்திய சர்க்கரை உற்பத்தியில் 5 முதல் 7 விழுக்காடு ஆகும். நுண்ணீர் பாசன பயன்பாடு, நிழல்வலை நாற்று பண்ணையிலிருந்து கிடைக்கும் 25 முதல் 30 நாட்கள் வயதுடைய செதில்பரு நாற்று நடவு, அகல பார்கள், சொட்டுநீர் பாசனம்மூலம் சீரான உரம் நேரடியாக வழங்கல் ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய தொழில்நுட்பமான நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டம் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

[2016 ஆகஸ்ட் 19

கடந்த 2015-2016 ஆம் ஆண்டில், நான்காம் முன் மதிப்பீட்டின்படி, 2.57 இலட்சம் எக்டரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டு, 264.97 இலட்சம் டன்கள் கரும்பு உற்பத்தி அடையப்பெறும் என கணக்கிடப்பட்டுள்ளது.

உற்பத்தியாகும் கரும்பு, மாநிலத்தில் இயங்கி வரும் 43 சர்க்கரை ஆலைகளால் அரைவை செய்யப்படுகிறது. இவற்றில் கூட்டுறவுத் துறையில் 16 சர்க்கரை ஆலைகளும், பொதுத் துறையில் 2 சர்க்கரை ஆலைகளும், தனியார் துறையில் 25 சர்க்கரை ஆலைகளும் கரும்பு அரைவை மேற்கொள்கின்றன.

ஒவ்வோர் ஆண்டும் மத்திய அரசு நியாயமான மற்றும் ஆதாய விலையை அகில இந்திய அளவில் அறிவித்து வருகிறது. நியாயமான மற்றும் ஆதாய விலை, இதர செலவுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, மாநில அரசின் கரும்பு பரிந்துரை விலையை தமிழக அரசு அறிவித்து வருகிறது. 2015-2016 ஆம் அரைவைப் பருவத்திற்கு 9.5 சதவிகித சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்புக்கு டன் ஒன்றுக்கு நியாயமான மற்றும் ஆதாய விலையாக ரூ.2300/- எனவும், அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு 0.1 சதவிகித கூடுதல் சர்க்கரைக் கட்டுமானத்திற்கு ஊக்கத் தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.24.20 எனவும் மத்திய அரசு அறிவித்தது. தமிழக அரசு 2015-2016 ஆம் அரைவைப் பருவத்திற்கு மாநில அரசின் பரிந்துரை விலையாக கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.2,850/- என உயர்த்தி அறிவித்துள்ளது.

6. விதைச் சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறை

வேளாண்மையில் விதை மிகவும் இன்றியமையாத இடுபொருள் ஆகும். வேளாண் உற்பத்தியின் மொத்த மகசூல் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட விளைபொருட்களின் தரம் ஆகியவற்றினை நிர்ணயம் செய்வதில், உபயோகிக்கப்பட்ட விதைகளின் தரம் மற்றும் குணாதிசயங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றது. வேளாண் பெருமக்களுக்கு தரமான சான்றுப் பெற்ற விதைகள் காலத்தே கிடைப்பதனை உறுதி செய்வதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். வேளாண் பெருமக்களின் பொருளாதார வளர்ச்சி மற்றும் நிதி நிலைப்பாட்டினை உறுதி செய்வதில் தரமான சான்று பெற்ற விதைகள் முக்கிய பங்கு வகிக்கிறது.

2016 ஆகஸ்ட் 19]

விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறை, மாநிலத்தில் உள்ள வேளாண் பெருமக்களுக்கு தரமான சான்று பெற்ற விதைகளை வழங்குவதனை உறுதி செய்ய கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

i. விதைச் சான்றளிப்பு திட்டத்தில், அறிவிக்கை செய்யப்பட்ட பயிர் இரகங்களில் இந்திய குறைந்தபட்ச விதைத் தரங்களின் (IMSCS) படி சான்றளிப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்.

ii. விதை தரக்கட்டுப்பாட்டு திட்டத்தில், தற்பொழுது நடைமுறையில் உள்ள விதை சட்டங்களை அமல்படுத்தி விதைத் தரங்களை கண்காணித்து கட்டுப்படுத்துதல்.

iii. விதைப் பரிசோதனைத் திட்டத்தில், அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களில் விதைகளை பரிசோதனை செய்து விதைத் தரங்களை உறுதி செய்தல்.

iv. பயிற்சி திட்டத்தில், விதை உற்பத்தி, விதைச் சான்றளிப்பு மற்றும் விதை விற்பனை ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள அனைத்து நபர்களுக்கும் திறன் மேம்பாட்டிற்கான பயிற்சி வழங்குதல்.

v. வேளாண் பெருமக்களை அங்ககச் சான்றளிப்பு திட்டத்தின்கீழ் பதிவு செய்வித்து தேசிய அங்கக உற்பத்தி (NPOP) வழிமுறைகளின் அடிப்படையில் திட்டத்தினை செயல்படுத்துதல்.

6.1. துறையின் செயல்பாடுகள்

இத்துறையானது தனது திட்டப் பணிகளை மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களை தலைமை இடமாகக் கொண்டு, அந்தந்த தொழில்நுட்ப அலுவலர்கள் வாயிலாக திட்டப் பணிகளை நிறைவேற்றி வருகிறது.

6.2. விதைச் சான்றளிப்பு

விதைச் சான்றளிப்பு திட்டம், விதைகள் சட்டம், 1966 மற்றும் விதை விதிகள், 1968 இல் உள்ள வழிமுறைகளின்படி செயல்படுத்தப்படுகிறது.

[2016 ஆகஸ்ட் 19

இத்துறை சான்று பெற்ற விதைகள் இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச தர நிர்ணய தேவையை பூர்த்தி செய்வதாக உள்ளது. இதன்படி முளைப்புத் திறன், புறத்தூய்மை, இனத் தூய்மை மற்றும் விதை நலம் ஆகியவை பரிசோதிக்கப்பட்டு சான்றளிக்கப்படுகின்றன.

கடந்த 2015-2016 ஆம் ஆண்டில் இத்துறையானது மாநிலத்தில் அதிகளவில் பயிரிடக்கூடிய நெற்பயிரில் 92,671 மெ.டன் விதைகள் சான்றளிப்பு செய்துள்ளது. மேலும் இத்துறை பயறு வகைகள், தானியங்கள் மற்றும் எண்ணெய்வித்து ஆகிய பயிர்களில் சான்று செய்யப்படும் விதைகளின் அளவினை உயர்த்துவதையும் குறிக்கோளாக கொண்டு செயல்பட்டு வருகிறது.

தமிழகத்தில் 843 அங்கீகரிக்கப்பட்ட விதைசுத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகிறது.

அட்டவணை 6.1 : விதைச்சுத்தி நிலைய விவரம்

(எண்களில்)

பிரிவு	பெரியது	நடுத் தரம்	சிறியது	கை சுத்தி	மொத்தம்
அரசு	16	37	63	492	608
அரசு சார்பு	4	12	9	0	25
தனியார்	81	103	13	13	210
மொத்தம்	101	152	85	505	843

கடந்த 2015-2016 ஆம் வருடத்தில் 56,907 ஹெக்டேர் பரப்பளவில் பல்வேறு பயிர்களில் விதைப்பண்ணைகள் பதிவு செய்யப்பட்டு 97,895 மெட்ரிக் டன் விதைகளுக்கு சான்று வழங்கப்பட்டுள்ளது.

2016-2017 ஆம் ஆண்டில் சான்று விதை உற்பத்தியில் 1,10,000 மெட்ரிக் டன் இலக்கினை அடைந்திட திட்டமிடப்பட்டுள்ளது.

6.3. விதை தரக்கட்டுப்பாடு

இத்துறையின் விதை கட்டுப்பாட்டு பிரிவு, தற்பொழுது நடைமுறையில் உள்ள விதைச் சட்டங்களான 1966 ஆம் ஆண்டு விதைகள் சட்டம், 1968 ஆம் ஆண்டு விதைகள் விதிகள்,

2016 ஆகஸ்ட் 19]

1983 ஆம் ஆண்டு விதைகள் (கட்டுப்பாடு) ஆணை மற்றும் 1986 ஆம் ஆண்டு சுற்றுப்புறச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் ஆகியவற்றினை செயல்படுத்தி மாநிலத்தில் உள்ள வேளாண் பெருமக்களுக்கு தரமான விதை விநியோகத்தினை உறுதி செய்கிறது. 1983 ஆம் ஆண்டு விதை (கட்டுப்பாடு) ஆணை ஆகியவற்றின்படி மாநிலத்தில் உள்ள விதை விற்பனையாளர்களுக்கு விதை விற்பனை உரிமம் வழங்கப்படுகிறது. தற்பொழுது, இப்பிரிவின்கீழ் 9,274 உரிமம் பெற்ற விதை விற்பனை நிலையங்கள் செயல்பாட்டில் உள்ளன. இவற்றில் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, விதைச் சட்டங்களை பின்பற்றுதல் மற்றும் தரமான விதைகள் விற்பனை செய்தல் ஆகியவை கண்காணிக்கப்படுகிறது. எந்தவொரு விதை சட்ட மீறல்கள் அல்லது தரக்குறைவான விதைகளை விற்பனை செய்தல் ஆகிய நிகழ்வுகளில் உரிய சட்ட நடவடிக்கை / துறை நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

தமிழகத்தில் செயல்பாட்டில் உள்ள உரிமம் பெற்ற விதை விற்பனை மையங்களின் விவரம் கீழ்க்கண்டவாறு:

அட்டவணை 6.2 : உரிமம் பெற்ற விதை விற்பனை மையங்கள் விவரம்

(எண்களில்)

விவரம்	அரசு	அரசு சார்பு	தனியார்	மொத்தம்
உரிமம் பெற்ற விதை விற்பனை மையங்கள்	1,310	1,814	6,150	9,274

கடந்த 2015-2016 ஆம் ஆண்டில் விதை விற்பனை மையங்களில் 69,126 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விதைத்தரங்களை உறுதி செய்திட 61,285 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளது. ஆய்வுகளின்போது, விதை விதிகளை மீறிய செயல்களுக்காக 1,513 விதைக்குவியல்கள் அடங்கிய ரூபாய் 893 இலட்சம் மதிப்புள்ள 1,383 மெட்ரிக் டன் விதைகள், தரக்குறைவு என கண்டறியப்பட்டு வேளாண் பெருமக்களுக்கு விற்பனை செய்வதிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 19

2016-2017 ஆம் ஆண்டில், விதை ஆய்வுகள் மற்றும் விதை மாதிரிகளில் தர பரிசோதனை மேற்கொள்ளும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

6.4. விதை பரிசோதனை

விதைச் சான்றளிப்பு மற்றும் விதைத் தரக்கட்டுப்பாடு செயல்பாட்டில், விதைப் பரிசோதனைப் பணிகள் மிகவும் தேவையாகவும் உறுதுணையாகவும் உள்ளது. விதைப் பரிசோதனை நிலையங்களினால் வழங்கப்படும் பகுப்பாய்வு முடிவுகள், இத்திட்டங்களின் செயல்பாடுகளுக்கு அடிப்படையாக உள்ளது. விதைப் பரிசோதனை நிலையங்களில், முளைப்புத்திறன், புறத்தூய்மை, விதையின் ஈரப்பதம், விதை நலம் மற்றும் பிற இரகக் கலப்பு ஆகிய விதைத்தர காரணிகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. விதைக் குவியல்களின் இனத்தூய்மையானது, பயிர் வளர்ப்பு பரிசோதனை பண்ணை(Grow Out Test farm), *கண்ணாடி ஆய்வகம்* (Glass house) *மற்றும் டி.என்.ஏ. பிங்கர் பிரிண்ட் ஆய்வகம்* (DNA Finger Print Laboratory) *ஆகியவற்றில் பரிசோதனை செய்யப்படுகிறது.*

இத்துறையில் மொத்தம் 33 அறிவிக்கை செய்யப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள் 29 விதைப் பரிசோதனை நிலையங்கள், பல்வேறு மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் பயிர் வளர்ப்பு பரிசோதனை பண்ணை கோவை, கண்ணம்பாளையத்திலும், ஒப்பீட்டு ஆய்வகம் (Referral Laboratory) *(பி.டி. நச்சு பரிசோதனை வசதியுடன்), கண்ணாடி ஆய்வகம் மற்றும் டி.என்.ஏ. பிங்கர் பிரிண்ட் ஆய்வகம் கோவை தலைமையிடத்திலும் செயல்பட்டு வருகின்றன.*

இந்தியாவிலேயே, அரசு சார்ந்த நிறுவனங்களுள் கோவையில் செயல்பட்டு வரும் விதை பரிசோதனை நிலையம் 2014 ஆம் ஆண்டில் முதன்முதலாக சுவிட்சர்லாந்து நாட்டின் ஸூரிச் (Zurich) *என்ற இடத்தில் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் பன்னாட்டு விதை பரிசோதனை குழுமத்தின்* (ISTA-International Seed Testing Association) *அங்கீகாரத்தினை பெற்றுள்ளது. அங்கீகாரத்தினை தொடர்ந்து நீட்டித்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

2016 ஆகஸ்ட் 19]

மத்திய அரசின், வேளாண் அமைச்சகத்தால், இந்திய நாட்டின் மிகச் சிறந்த விதைப் பரிசோதனை நிலையத்திற்கான விருது 2015 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், ஹைதராபாத்தில் நடைபெற்ற எட்டாவது தேசிய விதை கழக கூட்டத்தில் கோவை விதைப் பரிசோதனை நிலையத்திற்கு வழங்கப்பட்டது. இப்பரிசோதனை நிலையம் அனைத்து உலக நாடுகளில் இருந்து பெறப்படும் விதை மாதிரிகளையும் பகுப்பாய்வு செய்திடும் வசதிகள் மற்றும் திறன்கள் கொண்டதாகும். கடந்த 2015-2016 ஆம் ஆண்டில் 98,363 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, 2016-2017 ஆம் ஆண்டிலும் விதை மாதிரிகள் தொடர்ந்து பகுப்பாய்வு செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

6.5. பயிற்சி

பயிற்சித் திட்டத்தில், இத்துறை அலுவலர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகிறது. மேலும் விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் சான்று விதை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள உழவர் பெருமக்கள் ஆகியோரின் தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன் மேம்பாட்டினை குறிக்கோளாக கொண்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இத்துறையின் பயிற்சி பிரிவின்மூலம் கடந்த 2015-2016 ஆம் ஆண்டில் 49,846 நபர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டது. 2016-2017 ஆம் ஆண்டிலும் விதை தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு பயிற்சிகள் தொடர்ந்து வழங்கப்படும்.

6.6. அங்ககச் சான்றளிப்பு

அங்ககச் சான்றளிப்பானது, அங்கக விளைபொருட்களின் தரத்தினை உறுதி செய்தும், நடைமுறைப்படுத்தியும் நுகர்வோருக்கு சான்றளிக்கப்பட்ட அங்ககப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்கிறது. உலக அளவில் அதிகரித்துவரும் அங்கக உணவிற்கான தேவையை அங்ககச்சான்று பூர்த்தி செய்கிறது. தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறையானது தேசிய அங்கக உற்பத்தித் திட்டத்தின் (NPOP-National Programme for Organic Production) விதிகளின்படி அங்கக பண்ணைகளை ஆய்வு செய்து சான்று வழங்கி வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 19

தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறை வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (APEDA-Agricultural and Processed Food Products Exports Development Authority) மதிப்பேற்றல் அங்கீகாரத்தினை பெற்றுள்ளது.

தமிழக அரசின் நிலையான தொடர் முயற்சி மற்றும் வெற்றிகரமான செயல்திறனால் மதிப்பேற்றல் அங்கீகாரம் தொடர்ந்து பெறப்பட்டு 2018 ஆம் ஆண்டுவரை அங்கீகாரத்திற்கு நீட்டிப்பு பெறப்பட்டுள்ளது. நமது நாட்டில் செயல்பாட்டில் உள்ள 25 அங்ககச்சான்று நிறுவனங்களுள், தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறை (TNOCD), மிக அதிகமான தனிநபர் விவசாயிகளை உள்ளடக்கிய நிறுவனம் என்ற தனித்துவம் பெற்றுள்ளது.

கடந்த 2015-2016 ஆம் ஆண்டில் அங்ககச் சான்றளிப்புத் துறையின்கீழ் 29,720 ஏக்கர் பரப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் 9,199 ஏக்கர் பரப்பு கொண்ட 329 தனி நபர் விவசாயிகளும், 19,598 ஏக்கர் பரப்பளவு கொண்ட 4,070 விவசாயிகள் அடங்கிய 12 குழுக்களும், 923 ஏக்கர் பரப்பளவு கொண்ட 13 நிறுவனங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டில், இத்துறையின்கீழ் 31,000 ஏக்கர் பரப்பு அங்ககச் சான்றளிப்பு பதிவின்கீழ் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

7. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம்

உழவர் சமுதாயத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு வேளாண் விற்பனை உறுதுணையாக உள்ளது. வேளாண் விற்பனை, விளைபொருள் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை ஊக்குவிப்பதோடு மட்டுமல்லாமல், பொருளாதார வளர்ச்சியையும் விரைவுபடுத்துகிறது. வேளாண்மையில், விற்பனைச் செயல்பாடுகள் முக்கியப் பங்கு வகிப்பதுடன் விவசாயிகள் வேளாண்மையில் முதலீடு செய்வதற்கும், உற்பத்தியினை பெருக்கிடவும் ஊக்கப்படுத்துகிறது. விளைபொருட்களை உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோருக்கு கொண்டு செல்வதுடன் சந்தைத் தொடரமைப்பின் பல்வேறு நிலைகளில் விலைகளை கண்டறியவும், சந்தை

2016 ஆகஸ்ட் 19]

விலையினை விவசாயிகளுக்கு பரப்பவும் சந்தை அமைப்புகள் முக்கிய பங்காற்றுகின்றன.

விளைபொருள் உற்பத்தி, பதப்படுத்துதல், விற்பனை, வர்த்தகம் மற்றும் விநியோகம் தொடர்பான முன்னிணைப்பு மற்றும் பின்னிணைப்பு செயல்பாடுகளை உள்ளடக்கியதே வேளாண் வணிகமாகும். உயர்மதிப்பு கொண்ட விளைபொருட்கள், பதப்படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் முன்தயாரிப்பு உணவு பொருட்கள் ஆகியவற்றிற்கான நுகர்வோரின் தேவையைச் சார்ந்து வேளாண் வணிகம் செயல்படுகிறது. வேளாண் வணிக மேம்பாட்டின் மூலமாக விளைபொருள் உற்பத்தி அதிகரிப்பதுடன், கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் உருவாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு 1977 ஆம் ஆண்டு முதல் வேளாண்மை விற்பனையை முறைப்படுத்துவதற்கென தனியாக செயல்பட்டு வந்த வேளாண்மை விற்பனைத் துறை, அறுவடை பின்செய் மேலாண்மை, மதிப்புக் கூட்டுதல், பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி செயல்பாடுகளில் முக்கியத்துவம் வழங்கும் பொருட்டு 2001 ஆம் ஆண்டு முதல் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையாக மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது.

7.1. முக்கிய செயல்பாடுகள்

1. *வேளாண் விளைபொருட்களை சந்தைப்படுத்தவும், அறுவடை பின்செய் மேலாண்மைக்கும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.*

2. *விவசாயிகளின் பொருளாதார மேன்மைக்காக உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை உருவாக்குதல்.*

3. *முதன்மைப் பயிர்களில் விளைபொருள் குழுக்கள் அமைத்து சந்தை ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல்.*

4. *ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், உழவர் சந்தை, சிறப்பு வணிக வளாகங்கள் போன்ற உட்கட்டமைப்புகள்மூலம் விவசாயிகளுக்கு சந்தை வாய்ப்பினை உருவாக்குதல்.*

5. சேமிப்புக் கிடங்குகள், குளிர்பதனக் கிடங்குகள், பழுக்கவைக்கும் கூடங்கள் மற்றும் உலர்கள வசதிகள்மூலம் விளைபொருட்களில் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினைக் குறைத்து, விவசாயிகள் சிறந்த முறையில் விளைபொருட்களை சந்தைப்படுத்திட உதவுதல்.

6. தனியார் மற்றும் பொதுத் துறை பங்கேற்புடன் வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டவும், பதப்படுத்தவும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அமைத்தல்.

7. பயிர்சார்ந்த ஆலோசனைகள் மற்றும் சந்தைத் தகவல்களை பதிவு செய்த விவசாயிகளுக்கு வழங்குதல்.

8. அக்மார்க் ஆய்வகங்கள்மூலம் தரமான, கலப்படமற்ற உணவுப் பொருட்கள் நுகர்வோர்க்கு கிடைக்க செய்தல்.

9. அறுவடை பின்செய் மேலாண்மை, பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டுதல், தரம் பிரித்தல் போன்ற தொழில்நுட்ப உத்திகளை விவசாயிகளுக்கு திறன்மேம்பாட்டு பயிற்சிகள்மூலம் வழங்குதல்.

7.2. வேளாண் விற்பனை செயல்பாடுகள்

7.2.1. விற்பனைக் குழுக்கள் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

பெரும்பான்மை மக்களின் (சுமார் 70 சதவீதம்) வாழ்வாதாரம் வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த செயல்பாடுகளை சார்ந்தே உள்ளது. வேளாண் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பங்களின் விரைவான வளர்ச்சியின் காரணமாக வேளாண் விளைபொருட்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பொதுவாக விளைபொருட்களின் விலை விவசாயிகளால் நிர்ணயிக்க இயலாமல் இடைத்தரகர்களால் நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, இலாபகரமான விலை உத்தரவாதமே விவசாயிகளின் முன்நிபந்தனை ஆகிறது. எனவே உரிய விலை விவசாயிகளுக்கு கிடைத்திட திறன் வாய்ந்த சந்தை அமைப்பு அவசியமாகிறது.

2016 ஆகஸ்ட் 19]

தமிழகத்தில், 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டம், 1991 ஆம் ஆண்டு விதிகள்மூலம் விற்பனையை முறைப்படுத்திட 22 விற்பனைக் குழுக்களின்கீழ் 277 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரியவிலை கிடைத்திடவும், சந்தை குறைபாடுகளை தவிர்த்திடவும், விவசாயிகளுக்கு தகுந்த விலை பாதுகாப்பு அளித்திடவும், சந்தை உட்கட்டமைப்புகள் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

விவசாயிகள் மற்றும் வியாபாரிகள், இடைத்தரகர்களின் குறுக்கீடின்றி, வேளாண் விற்பனையை மேற்கொள்ளும் வகையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வழங்கப்படும் சேவைகளுக்காக விவசாயிகளிடமிருந்து எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. கொள்முதல் செய்யும் விளைபொருட்களின் மதிப்பில் ஒரு விழுக்காடு மட்டும் வியாபாரிகளிடமிருந்து சந்தைக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இதுதவிர வியாபாரிகள் மற்றும் எடையாளர்களிடமிருந்து உரிமக் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. கடந்த 5 ஆண்டுகளில் 117.42 இலட்சம் மெ.டன் விளைபொருட்கள் விவசாயிகளால் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விற்பனை செய்யப்பட்டு, அதன்மூலம் ரூ.479.18 கோடி சந்தைக் கட்டணம் வியாபாரிகளிடமிருந்து விற்பனைக்குழுக்களால் வசூலிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் “சந்தை ஆராய்ச்சி மற்றும் தகவல் இணைப்பு” திட்டத்தின்கீழ் 184 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக வேளாண் விளைபொருட்களின் தினசரி விலை மற்றும் வரத்து விவரங்கள் (www.agmarknet.nic.in என்ற இணையதளத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

[2016 ஆகஸ்ட் 19

7.2.2. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் உள்ள வசதிகள்

i. சேமிப்புக் கிடங்கு

ii. பரிவர்த்தனைக்கூடம்

iii. உலர்களம்

iv. குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகம்

v. குளிர்பதனக் கிடங்கு

vi. வணிகர் கடை

vii. ஊரக வணிக மையம், இடுபொருள் கடை

viii. தானியங்கி எடையிட்டு மூட்டை தைக்கும் இயந்திரம்

ix. எடை மேடை, எடைத்தராசு

x. தினசரி விலை விவரப் பலகை, இலவச மருத்துவ உதவி

xi. விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் ஓய்வறை, குடிநீர் வசதி

7.2.3. பொருளீட்டுக் கடன்

விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூட கிடங்குகளில் விஞ்ஞான முறைப்படி சேமித்து இழப்பினைக் குறைக்கவும், அடுத்த பருவத்திற்கான பண்ணைச் செயல்பாடுகளை மேற்கொள்ளவும், உடனடி நிதித் தேவைகளுக்கும் பொருளீட்டுக்கடன் விவசாயிகளுக்கு பயன்படுகிறது. சிறு மற்றும் குறு விவசாயிகள் விளைபொருளின் மதிப்பில் 75 விழுக்காடும், இதர விவசாயிகள் விளைபொருளின் மதிப்பில் 50 விழுக்காடும், அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரை பொருளீட்டுக்கடன் பெறலாம். கிடங்குகளில் இருப்பு வைக்கப்படும் முதல் 15 நாட்களுக்கு வட்டி கிடையாது. 15 நாட்களுக்கு மேல் 5 விழுக்காடு வட்டி வசூலிக்கப்படும். கடந்த 5 ஆண்டுகளில் 13,746 விவசாயிகள் ரூ.172.53 கோடி பொருளீட்டுக் கடன் பெற்று பயன் பெற்றுள்ளனர்.

வணிகர்கள், விளைபொருளின் மதிப்பில் 50 விழுக்காடும் அதிகபட்சமாக ரூபாய் ஒரு இலட்சம் வரை, 9 விழுக்காடு வட்டி

2016 ஆகஸ்ட் 19]

வீதத்தில் 3 மாதம் வரை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இருப்பு வைத்து பொருளீட்டுக்கடன் பெறலாம். கடந்த 5 ஆண்டுகளில் 1,556 வணிகர்கள் ரூ.15.05 கோடி பொருளீட்டுக் கடன் பெற்று பயன் பெற்றுள்ளனர்.

7.2.4. கிராம அளவில் உலர்களங்கள்

தானியம் மற்றும் பயறுவகைகளில் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பு, மொத்த உற்பத்தியில் 10 முதல் 15 விழுக்காடாக உள்ளது. அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பு பண்ணை முதல் சந்தை வரையிலான பல்வேறு விநியோக தொடரமைப்பில் ஏற்படுகிறது. விவசாயிகள் அறுவடைக்குப்பின் உடனடியாக விளைபொருட்களை உலர்த்தி, தூய்மைப்படுத்தி, சுத்தம் செய்திட கிராமங்களில் மற்றும் பண்ணைக்கருகில் உலர்களங்கள் அமைப்பது அவசியமாகும். கிராம அளவில் 1,359 உலர்களங்கள் அமைக்கப்பட்டு விவசாயிகளால் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

7.2.5. தேசிய வேளாண் சந்தை

வேளாண் விளைபொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்தி, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் நோக்கில் மத்திய அரசால் நடப்பாண்டில் தேசிய வேளாண் சந்தைத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, இத்திட்டம் நாடு முழுவதும் உள்ள 585 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் செயல்படுத்தப்பட உள்ளது.

திட்டத்தின் பயன்கள்

1. *விவசாயிகளுக்கு விளைபொருட்களை விற்பதற்கு அதிகமான வாய்ப்பு*
2. *வியாபாரிகளுக்கு தேசிய அளவிலான பெரிய சந்தைகளில் பரிவர்த்தனை மேற்கொள்ள வசதி*
3. *மொத்த வியாபாரிகள், பதப்படுத்துவோர், ஏற்றுமதியாளர்கள் உள்ளூர் சந்தையில் நேரடியாக பங்கேற்பு.*
4. *ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு அதிக அளவிலான பரிவர்த்தனையின் காரணமாக கூடுதல் வருவாய் கிடைக்கும் வாய்ப்பு.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 19

2016-2017 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வேளாண் பொருட்களுக்கான சந்தைகளின் செயல்திறனை மேம்படுத்த, 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தில் தேவையான திருத்தங்கள் கொண்டு வரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது நடைமுறையில் உள்ள 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தில் மின்னணு வர்த்தகம், ஒருமுனை வரிவிதிப்பு, ஒரே சீரான உரிமம், தனியார் சந்தை, நேரடி மொத்த விற்பனை சந்தை, ஒப்பந்தப் பண்ணையம், விவசாயி - நுகர்வோர் சந்தை ஆகியவற்றை உள்ளடக்கி திருத்தம் மேற்கொள்ளப்பட உள்ளது. தேசிய வேளாண் சந்தைத் திட்டத்தினை செயல்படுத்த மேற்காணும் சட்ட திருத்தம் அவசியமாகிறது. இதற்கென விளைபொருள் வரத்தை அடிப்படையாகக் கொண்டு 100 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் தேர்வு செய்யப்பட்டு தேவையான தரமதிப்பீட்டு தளவாட கருவிகள் வாங்கிட மத்திய அரசின் வேளாண் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு நிதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7.2.6. ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (RIDF) மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள்

ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி என்பது, மாநில அரசு மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களான நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசன, மண்பாதுகாப்பு, நீர்பாதுகாப்பு, நீர்வடிப்பகுதி மேலாண்மை மற்றும் இதர ஊரக உட்கட்டமைப்புகளை குறைந்த செலவில் விரைவாக முடித்திட நிதி ஆதரவு வழங்குவது ஆகும். இதுவரை கடந்த 5 ஆண்டுகளில் ரூ.22.26 கோடி மதிப்பில் தலா 25 மெ.டன் கொள்ளளவில் 70 குளிர்பதனக் கிடங்குகள், ரூ.127.60 கோடி மதிப்பில் 10,000 மெ.டன் கொள்ளளவில் 5, 5,000 மெ.டன் கொள்ளளவில் 8, 2,000 மெ.டன் கொள்ளளவில் 75 என மொத்தம் 88 சேமிப்புக் கிடங்குகள், ரூ.1.30 கோடி மதிப்பில் வாழைக்கென அம்பாசமுத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் சிறப்பு வணிக வளாகம், ரூ.3.60 கோடி மதிப்பில் காய்கறி மற்றும் பழங்களுக்கென மேட்டுப்பாளையம் மற்றும் ஒட்டன்சத்திரம்

2016 ஆகஸ்ட் 19]

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் சேகரிப்பு மையங்கள் (அச்சு மற்றும் ஆரம் மாதிரி), ரூ.1.18 கோடி மதிப்பில் அவல்பூந்துறை மற்றும் பழனி ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் சேகரிப்புமூலம் ஒருங்கிணைந்த விளைபொருள் மேலாண்மைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இது தவிர, ரூ.65 கோடி மதிப்பில் காய்கறி, பழங்கள் மற்றும் பூக்களுக்கு திருச்சி மாவட்டம் கள்ளிக்குடியில் மத்திய சந்தை அமைக்கப்பட்டு வருகிறது.

7.2.7. கிடங்கு உட்கட்டமைப்பு நிதியின் (WIF) மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள்

நபார்டு வங்கி கிராமப்புற திட்டங்களுக்கு 2014-15 ஆம் ஆண்டு முதல் கிடங்கு உட்கட்டமைப்பு நிதி என்ற பெயரில் நிதி உதவி வழங்கி வருகிறது. பொது மற்றும் தனியார் துறைமூலம் கட்டப்படும் சேமிப்புக் கிடங்குகள், சேமிப்புக் கலன், குளிர்பதனக் கிடங்குகள் மற்றும் இதர கட்டுமான வசதிகளுக்கு நிதி உதவி அளித்திட உதவுகிறது.

தற்போது 35 சேமிப்புக் கிடங்குகள், 49 பரிவர்த்தனைக்கூடங்கள், ஒரு வணிக வளாகம், இரண்டு குளிர்பதனக் கிடங்குகள், மூன்று அலுவலக கட்டடங்கள், நான்கு எடை மேடைகள், ஐந்து இரப்பர் உருளைகள் மற்றும் ஒரு பதப்படுத்தும் மையம் என மொத்தம் 100 சந்தை உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.83.35 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வருகிறது.

2016-2017 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பழங்கள், காய்கறிகள் போன்ற விரைவில் அழுகக்கூடிய விளைபொருட்களை, உற்பத்தி முதல் சந்தைப்படுத்துதல் வரையிலான விநியோகச் சங்கிலித் தொடர் மேலாண்மைக்காக ஒரு சிறப்புத் திட்டத்தை 10 மாவட்டங்களில் ரூ.398.75 கோடி செலவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து தருமபுரி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருச்சி, தேனி, திண்டுக்கல், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் இச்சிறப்புத் திட்டத்தினை செயல்படுத்த அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு முதற்கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

[2016 ஆகஸ்ட் 19

7.2.8. அக்மார்க் தரம் பிரிப்பு

வேளாண் விளைபொருட்கள் மற்றும் அதனை சார்ந்த பொருட்களுக்கு தரம் பிரித்தல் மற்றும் தரப்படுத்துதலுக்கான 1937 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருட்கள் (தரம்பிரித்தலும் குறியிடுதலும்) சட்டத்தினை (1986 இல் திருத்தியமைக்கப்பட்டது) அடிப்படையாகக் கொண்டு மத்திய அரசின் விற்பனை மற்றும் ஆய்வு இயக்குநரகத்தின் மூலம் தன்னார்வத் திட்டமாக அக்மார்க் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மத்திய அரசால் வகுக்கப்பட்ட தர நிர்ணய அளவுகளின்படி இதுவரை 213 பொருட்களுக்கு தரநிலைக் குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளன. இத்தரநிலைக் குறியீடுகளின்படி தரம்பிரிப்பு செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட, கலப்படமற்ற உணவுப்பொருட்கள் அக்மார்க் பொருட்கள் எனப்படும்.

மாநில அரசின் 30 அக்மார்க் தரம்பிரிப்பு ஆய்வகங்கள்மூலம் தரம்பிரிப்பு மற்றும் தரச்சான்று வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாய்வகங்களை ஒருங்கிணைக்க ஒரு முதன்மை ஆய்வகமும் செயல்பட்டு வருகின்றது. கடந்த ஐந்தாண்டுகளில் 85.31 இலட்சம் குவிண்டால் உணவு பொருட்கள் மாநில அக்மார்க் ஆய்வகங்கள்மூலம் தரம்பிரிப்பு செய்யப்பட்டுள்ளன.

7.2.9. உழவர் சந்தைகள்

உழவர் சந்தைகளில் இடைத்தரகர்கள் குறுக்கீடின்றி விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாயமான விலையும், நுகர்வோர்க்கு உரிய விலையில் பழங்கள் மற்றும் காய்கறிகளும் கிடைத்திட உறுதி செய்யப்படுகிறது. தற்பொழுது தமிழகத்தில் 179 உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன.

தற்பொழுதுள்ள, 179 உழவர் சந்தைகளின், தினசரி காய்கறிகள் மற்றும் பழங்களின் விலை விவரங்கள் www.tnsamb.gov.in *என்ற இணையதளத்தின்மூலம் அறியலாம். கடந்த 5 ஆண்டுகளில் நாளொன்றுக்கு சராசரியாக ரூ.5.34 கோடி மதிப்பிலான 2,532 மெ.டன் காய்கறிகள் மற்றும் பழங்கள் 9,285 விவசாயிகளால் விற்கப்பட்டு, 5.14 இலட்சம் நுகர்வோர் பயனடைந்துள்ளனர்.*

2016 ஆகஸ்ட் 19]

7.3. வேளாண் வணிக செயல்பாடுகள்

வேளாண் விளைபொருட்களுக்கு மதிப்பு கூட்டுவதன்மூலம் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு அதிக விலை கிடைக்கிறது. இதன் பொருட்டு சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளான தரம்பிரித்து வகைப்படுத்தும் கூடம், சேமிப்புக் கிடங்குகள், சிப்பமிடும் அறை, உலர்களங்கள், முன்குளிர்விப்பு அறை, குளிர்பதன அறை போன்றவற்றைக் கொண்ட பல்வேறு சிறப்பு வணிக வளாகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

7.3.1 சிறப்பு வணிக வளாகங்கள்

7.3.1.1. நெல் வணிக வளாகம்

மதுரை மாவட்டம், மாட்டுத்தாவணியில் 9.85 ஏக்கர் பரப்பளவில் நெல்லுக்கென ஒரு வணிக வளாகம் ரூ.17.06 கோடி மதிப்பீட்டில் விற்பனைக்குழு நிதியில் கட்டப்பட்டு நெல், வேளாண் இடுபொருள் மற்றும் மலர் வணிகர்களின் பயன்பாட்டிற்காக 276 கடைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வணிக வளாகத்தில், ஒழுங்குமுறை விற்பனைக்கூட அலுவலகம், ஊரக கிடங்குகள், ஏலமையம், சிற்றுண்டிச்சாலை, வங்கி, அஞ்சல் அலுவலகம், தீத்தடுப்பு உபகரணங்கள் ஆகிய வசதிகள் உள்ளன.

7.3.1.2. மஞ்சள் வணிக வளாகம்

ஈரோடு மாவட்டம், கருமாண்டி செல்லிபாளையத்தில் ரூ.6.62 கோடி மதிப்பில் மஞ்சளுக்கென சிறப்பு வணிக வளாகம் விற்பனைக்குழு நிதியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வணிக வளாகத்தில் சேமிப்புக் கிடங்கு, பரிவர்த்தனைக்கூடம், உலர்களம், அலுவலகக் கட்டடம், வங்கி வசதி, ஓய்வறை, உணவக வசதி, வாகன நிறுத்துமிடம், எடை மேடை போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 5,376 மெ.டன் மஞ்சள் பரிவர்த்தனை செய்யப்பட்டு ரூ.46.67 இலட்சம் சந்தைக் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது.

7.3.1.3. தேங்காய் வணிக வளாகம்

தென்னை விவசாயிகள் தேங்காய்க்கு உரிய ஆதாயவிலை பெற்றிட தஞ்சாவூர் மாவட்டம், பொன்னவராயன் கோட்டை, உக்கடை கிராமத்தில் ரூ.4 கோடி மதிப்பில் தேங்காய்க்கென தஞ்சாவூர் விற்பனைக் குழு மற்றும் மாநில அரசு நிதிமூலம் வணிக வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. ஊரக கிடங்கு,

பரிவர்த்தனைக்கூடம், சேமிப்புக் கிடங்கு, உலர்களம், சூரிய சக்தியால் இயங்கும் கொப்பரை உலர்விப்பான், தரம்பிரித்து வகைப்படுத்தும் கூடம், இடுபொருள் கடைகள், வணிகர் கடைகள், தேங்காய் ஓடு நீக்கும் கூடம், மின்னணு எடைகருவிகள், தானியங்கி சிப்பம் கட்டும் வசதியுடன்கூடிய எண்ணெய் எடுக்கும் ஆலை போன்ற வசதிகள் தென்னை விவசாயிகள் பயனுறும் வகையில் இவ்வணிக வளாகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை ரூ.31.06 கோடி மதிப்பிலான 6,071.66 மெ.டன் கொப்பரை மற்றும் ரூ.15.72 இலட்சம் மதிப்பிலான 84.85 மெ.டன் தேங்காய் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டம், பெதப்பம்பட்டியில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் தேங்காய் வணிக வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை 564 தென்னை விவசாயிகள்மூலம் ரூ.15.66 கோடி மதிப்புடைய 3,421.40 மெ.டன் தேங்காய் மற்றும் 1,434.42 மெ.டன் கொப்பரை பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

7.3.1.4. இளநீர் வணிக வளாகம்

கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம் திப்பம்பட்டியில் ரூ.3.25 கோடி மதிப்பில் இளநீருக்கென வணிக வளாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வணிக வளாகத்தில் 300 மெ.டன் கொள்ளளவுடைய கிடங்கு, பரிவர்த்தனைக்கூடம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை இவ்வணிக வளாகத்தில் 40,518 இளநீர் மற்றும் ரூ.19.59 இலட்சம் மதிப்புடைய 22.39 மெ.டன் கொப்பரை 78 விவசாயிகளால் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

7.3.1.5. காய்கறி வணிக வளாகங்கள்

நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்ட நிதியின்கீழ் ரூ.85 இலட்சம் மதிப்பில் காய்கறிக்கென வணிக வளாகம் பரிவர்த்தனைக்கூடம், வணிகர் கடை, அலுவலகக் கட்டடம் போன்ற வசதிகளுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிபாளையத்தில் ரூ.4 கோடி செலவில் காய்கறி மற்றும் பழங்களுக்கென 1,000 மெ.டன் கொள்ளளவிலும், திருச்சி மாவட்டம், துறையூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் ரூ.2.95 கோடி மதிப்பில் 100 மெ.டன் கொள்ளளவிலும் குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகங்கள் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 19]

கோவை மாவட்டம், கிணத்துக்கடவு, திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவிலில் தலா ரூ.2.25 கோடி மதிப்பில் 500 மெ.டன் கொள்ளளவிலும், வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டையில் ரூ.35 இலட்சம் செலவில் 25 மெ.டன் கொள்ளளவிலும், சேலம் மாவட்டம், வாழப்பாடியில் ரூ.44 இலட்சம் செலவில் 25 மெ.டன் கொள்ளளவிலும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்மூலம் குளிர்பதன கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

7.3.1.6. மலைக் காய்கறிகளுக்கென குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகம்

கோயம்புத்தூர் மாவட்டம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளிலுள்ள மலைக் காய்கறிகள் பயிரிடுவோர் நலன் கருதி காரமடை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் மலைக் காய்கறிகளுக்கென ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் 50 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 32 மலைக்காய்கறி விளைபொருள் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு 118.23 மெ.டன் காய்கறிகள் மற்றும் 163.20 மெ.டன் மலைக்காய்கறிகள் குளிர்பதன கிடங்கில் சேமிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

7.3.1.7. தக்காளிக்கென குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகம்

தக்காளி பயிரிடும் விவசாயிகள் நன்முறையில் விளைபொருளை சந்தைப்படுத்தி உரிய ஆதாய விலை பெற்றிட தருமபுரி மாவட்டம், பாலக்கோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் தக்காளிக்கென குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகம் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் மற்றும் மாநில அரசின் நிதிமூலம் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.2.43 கோடி மதிப்பிலான 3,703.12 மெ.டன் தக்காளி பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம், மேச்சேரியில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் 100 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை 2,049 மெ.டன் மதிப்புள்ள வேளாண் விளைபொருட்கள் குளிர்பதனக் கிடங்கில் சேமிக்கப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 19

7.3.1.8. வெங்காயத்திற்கென வணிக வளாகங்கள்

வெங்காயத்தினை நீண்ட நாட்கள் சேமித்து உரிய தருணத்தில் விற்று நல்ல விலை பெற்றிட திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் வெங்காயத்திற்கென வணிக வளாகம் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் மற்றும் மாநில அரசின் நிதி மூலம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வணிக வளாகத்தின்மூலம் இதுவரை ரூ.58.41 இலட்சம் மதிப்புள்ள 205.70 மெ.டன் வெங்காயம், கொப்பரை, தக்காளி மற்றும் மக்காச்சோளம் ஆகிய விளைபொருட்கள் பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டம், செட்டிகுளம் கிராமத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.1.15 கோடி மதிப்பீட்டில் வெங்காயத்திற்கென வணிக வளாகமும், இதர காய்கறிகளுக்கான குளிர்பதன கிடங்கும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வணிக வளாகத்தின்மூலம் ரூ.3.70 கோடி மதிப்புடைய 2,206 மெ.டன் சின்ன வெங்காயம் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

7.3.1.9. மாங்கனிக்கென குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகம்

சிறு மற்றும் குறு விவசாயிகளின் நலன் கருதி கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் மாங்கனிக்கென குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் மற்றும் மாநில அரசின் நிதிமூலம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வணிக வளாகத்தில் இதுவரை ரூ.1.14 கோடி மதிப்பீட்டிலான 910.91 மெ.டன் மா மற்றும் வாழை பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

7.3.1.10. திராட்சைக்கென குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகம்

திராட்சை பயிரிடும் சிறு, குறு விவசாயிகள் நலன் கருதி தேனி மாவட்டம், ஓடைப்பட்டியில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் திராட்சைக்கென குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகம் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை

வாரியம் மற்றும் மாநில அரசின் நிதிமூலம் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.4.98 கோடி மதிப்பிலான 4,525.36 மெ.டன் திராட்சை, வாழை ஆகிய விளைபொருட்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது. மேலும், கம்பம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.3.95 கோடி செலவில் திராட்சைக்கென 500 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 386 மெ.டன் விளைபொருட்கள் இக்குளிர்பதன கிடங்கில் சேமிக்கப்பட்டுள்ளது.

7.3.1.11. வாழைக்கென குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகம்

திருச்சி மாவட்ட வாழை சாகுபடி செய்யும் விவசாயிகளின் வருமானத்தை அதிகப்படுத்த திருச்செந்துறையில் ரூ.4 கோடி மதிப்பில் 1,000 மெ.டன் குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வணிக வளாகத்தின்மூலம் 396 விவசாயிகள் மற்றும் 481 வணிகர்கள் ரூ.10.29 இலட்சம் மதிப்புடைய 602.17 மெ.டன் வாழை பரிவர்த்தனை செய்து பயனடைந்துள்ளனர்.

7.3.1.12. வாழை பழுக்க வைக்கும் கூடம்

வாழையில் அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பு 30-40 சதவீதமாக உள்ளது. இவ்விழப்பினை குறைத்து, வாழையை ஒரே சீராக பழுக்க வைக்க, திருச்சி, சின்னமனூர், ஸ்ரீவைகுண்டம் மற்றும் மோகனூரில் வாழை பழுக்க வைக்கும் கூடம் மொத்தம் ரூ.2 கோடி மதிப்பில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. திருச்சி, ஸ்ரீவைகுண்டம் மற்றும் மோகனூர் ஆகிய இடங்களில் தலா 15 வாழை விளைபொருள் குழுக்களும், சின்னமனூரில் 23 வாழை விளைபொருள் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை 109.75 மெ.டன் வாழை பழுக்க வைக்க உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறில் ரூ.1.74 கோடி செலவில் 50 மெ.டன் கொள்ளளவு கொண்ட வாழை பழுக்க வைக்கும் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

7.3.1.13. எலுமிச்சைக்கென குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகம்

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.2.20 கோடி செலவில் எலுமிச்சைக்கென

200 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

7.3.1.14. மிளகாய்க்கென குளிர்பதன கிடங்கு

மிளகாய் பயிரிடும் விவசாயிகளின் நலனுக்கென இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மிளகாய்க்கென ரூ.99.50 இலட்சம் மதிப்பீட்டில் 100 மெ.டன் கொள்ளளவு உள்ள குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை 332.59 மெ.டன் மிளகாய் சேமிக்கப்பட்டுள்ளது.

7.3.1.15. ஊரக வணிக மையம்

விவசாயிகளிடமிருந்து விளைபொருட்களை ஒருங்கிணைத்து, பெரு வியாபாரிகள் மற்றும் தொழில் முனைவோர் நேரடியாக மொத்தமாக கொள்முதல் செய்ய ஊரக வணிக மையம் வழிவகை செய்கிறது. இம்மையத்தில், இடுபொருள் கடை, சேமிப்பு அறை, உலர்களம், மின்னணு தராசு, ஈரப்பதமானி போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் சத்தியமங்கலம், கலவை, கிருஷ்ணகிரி, கெங்கவல்லி, ஆர். பொன்னாபுரம், உளுந்தூர்பேட்டை, பண்ருட்டி, பாவூர்சத்திரம், வத்தலக்குண்டு மற்றும் ராஜபாளையம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ரூ.1.50 கோடி மதிப்பில் 10 ஊரக வணிக மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த 2 ஆண்டுகளில் மொத்தம் 1,161 விளைபொருள் குழுக்கள் அமைக்கப்பட்டு 11,013 விவசாயிகளால் ரூ.26.50 கோடி மதிப்புள்ள 17,443 மெ.டன் விளைபொருட்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

7.3.2. விற்பனை முனையங்கள்

விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள், பழங்கள் மற்றும் இதர விளைபொருட்களில் அறுவடைக்குப்பின் ஏற்படும் சேதாரங்களைக் குறைக்கவும், மதிப்புக் கூட்டவும், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் விற்பனை முனையங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

7.3.3. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டமானது 100 சதவீதம் மத்திய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்ட திட்டமாகும்.

2016 ஆகஸ்ட் 19]

12 வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த துறையின் ஒருங்கிணைந்த வளர்ச்சிமூலம் நீடித்த, நிலையான வளர்ச்சி அடைவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 2015-2016 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் மத்திய மாநில அரசுகளின் 60:40 என்ற நிதி பங்களிப்பு முறையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மாநில மற்றும் மாவட்ட செயல் திட்டத்தின்மூலம் சந்தைப்படுத்துதல் மற்றும் அறுவடைபின்செய் மேலாண்மைக்கான உட்கட்டமைப்பு வசதிகளான சேமிப்புக் கிடங்குகள், குளிர்பதனக் கிடங்குகள், பழுக்க வைக்கும் கூடங்கள், குளிர்பதன வசதியுடன்கூடிய வணிக வளாகங்கள், வணிகர் கடை, பரிவர்த்தனைக்கூடம், கணிப்பொறி மற்றும் கட்டடங்கள் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம்மூலம் 2014-2015 ஆம் ஆண்டில் பரமக்குடியில் மிளகாய்க்கென குளிர்பதன வசதியுடன்கூடிய ஒருங்கிணைந்த வணிக வளாகம், இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கான கட்டடம், வாழப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 25 மெ.டன் குளிர்பதனக் கிடங்கு, திங்கள்சந்தையில் 500 மெ.டன், தேரூரில் 1,000 மெ.டன் சேமிப்புக் கிடங்குகள், கன்னியாகுமரி மாவட்டம் தோவாளையில் நறுமணப் பயிர்களுக்கு வணிக வளாகம், திருவையாற்றில் வாழை பழுக்க வைக்கும் கூடம், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 7 பரிவர்த்தனைக் கூடங்கள் மற்றும் 19 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் அமைத்தல் ஆக மொத்தம் ரூ.19.44 கோடி மதிப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2015-2016 ஆம் ஆண்டில் 5 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் அமைத்தல், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய பயிற்சி மையத்தினை வலுப்படுத்துதல், அக்மார்க் ஆய்வகங்களுக்கு 31 கணிப்பொறி வாங்குதல் ஆகிய பணிகள் ரூ.7.08 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

2016-2017 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.42.71 கோடி மதிப்பிலான திட்டங்கள் மாநில அளவிலான குழுவால் அங்கீகரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது.

[2016 ஆகஸ்ட் 19

7.3.4. வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு முகமை (அபீடா)

ஒருங்கிணைந்த குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டத்தின்கீழ் ஒட்டன்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் 25 மெ.டன், விழுப்புரம் மற்றும் கோயம்புத்தூரில் தலா 15 மெ.டன், வத்தலகுண்டு, பழனி மற்றும் ஒட்டன்சத்திரத்தில் தலா 5 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்குகள் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மேக்குடி கிராமத்தில் வாழை, காய்கறிகள் மற்றும் இதர பழங்களை ஏற்றுமதி செய்வதற்காக ஒருங்கிணைந்த அறுவடைக்குப் பிந்தைய சிப்பம் கட்டும் கூடம் கட்டுவதற்காக ரூ.4 கோடி மதிப்பீட்டில் கருத்துரு அபீடாவின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

7.3.5. உணவு பதப்படுத்தும் தொழில்முனைப்பு மற்றும் பயிற்சி மையம்

உணவு பதப்படுத்தும் தொழிலில் புதிதாக தொழில் முனைவோர் பயிற்சி பெற்றிட கோவை மாவட்டம், கிணத்துக்கடவு மற்றும் திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் பகுதியில் உணவு பதப்படுத்தும் தொழில் முனைப்பு மற்றும் பயிற்சி மையம் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் மாநில அரசின் நிதியின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக ஒருங்கிணைப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

7.3.6. தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு

சிறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் தேவையான முன், பின் இணைப்புகளை ஏற்படுத்தி, சிறந்த தொழில்நுட்பங்கள் மற்றும் சந்தை முறைகளை கடைபிடிக்கச் செய்வதே தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பின் நோக்கமாகும். தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு ரூபாய் ஒரு கோடி வைப்பு நிதியில் இருந்து பெறப்படும் வட்டிமூலம் செயல்பட்டு வருகிறது. இவ்வமைப்பு அரசு, தனியார், கூட்டுறவு சங்கங்கள், இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள்/நிதி நிறுவனங்கள் ஆகியவற்றோடு இணைந்து

2016 ஆகஸ்ட் 19]

செயல்படுகிறது. தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்புமூலம் மூலதன முதலீட்டு உதவி மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

7.3.6.1. மூலதன முதலீட்டு உதவி

வேளாண் சார்ந்த தொழில்களை ஊக்குவிக்கும் வண்ணம், மூலதன முதலீட்டு உதவித் தொகை, மத்திய அரசின் சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பினால் வழங்கப்படுகிறது. குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்படும் இத்தொகை திட்டத்தின் முடிவில் பயனாளியால் திருப்பி செலுத்தப்பட வேண்டும்.

வணிக நிறுவனங்களுக்கு நிதிபங்களிப்பில் 26 சதவீதம் அல்லது ரூ.50 இலட்சம் இதில் எது குறைவோ அது வழங்கப்படும். பதிவு செய்யப்பட்ட உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு மூலதன முதலீட்டுத் தொகையாக நிதி பங்களிப்பில் 40 சதவீதம் அல்லது ரூ.50 இலட்சம் இதில் எது குறைவோ அது வழங்கப்படும்.

வேளாண் சார்ந்த தொழில் தொடங்க மூலதன முதலீட்டுத் தொகை மற்றும் திட்ட மேம்பாட்டு வசதிகள் வழங்கி தமிழகத்தில் வேளாண் வணிகம் மேம்பட உதவுகிறது. இதுவரை 78 வேளாண் வணிக திட்டங்கள் தொடங்குவதற்கான மூலதன முதலீட்டுத் தொகையாக ரூ.25.07 கோடி வழங்கப்பட்டுள்ளது.

7.3.6.2. உழவர் உற்பத்தியாளர் அமைப்பு

மத்திய, மாநில அரசின் ஒத்துழைப்புடன் 2011-2012 ஆம் ஆண்டு முதல், தேசிய அளவில் வழிகாட்டித் திட்டமாக உறுப்பினர் சார்ந்த உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை உருவாக்கி மேம்படுத்தும் பணியினை சிறுவிவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்புமூலம் மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் 3 ஆண்டு கால திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்திட, தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பே முகமை நிறுவனமாகும்.

[2016 ஆகஸ்ட் 19

திட்டக் குறிக்கோள்கள்:

(1) கிராம அளவில் விவசாயிகளை குழுக்களாக திரட்டி, சங்கங்களாக உயர்த்தி உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளாக்கி திட்டமிட்டு/வணிக ரீதியான பயிர் சுழற்சிகளை செயல்படுத்துதல்.

(2) உயரிய வேளாண் தொழில்நுட்பங்களை கடைபிடிக்கச் செய்வதன்மூலம் உற்பத்தித் திறனை அதிகரித்து விவசாயிகளின் திறனை வலுப்படுத்துதல்.

(3) குழுக்களுக்கு இடையிலான போட்டியினை அதிகரிக்கவும் தரமான இடுபொருட்கள் மற்றும் சேவைகள் பெற்று உற்பத்தியை தீவிரமாக்கி பயனடையவும் வகை செய்தல்.

(4) சரியான மற்றும் ஆதாயமான சந்தைகளில் விற்பனை செய்து கொள்ள ஏதுவாக, உற்பத்தியாளர் குழுமங்களுக்கு சிறந்த விற்பனைக்கான வாய்ப்புகளை சந்தை ஒருங்கிணைப்பாளர் மூலம் ஏற்படுத்துதல்.

மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின்கீழ் 2014-2015 இல் 20 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், 2015-2016 இல் 8 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் 2016-2017 ஆம் ஆண்டில் 14 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் வெவ்வேறு பயிர்களுக்கு பல்வேறு மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட உள்ளது.

2016 ஆகஸ்ட் 19]

அட்டவணை 7.1 : ஒப்பளிக்கப்பட்டுள்ள உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்

வ. எண்	மாவட்டம்	பயிர்
2014–15 தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (ரூ.839.72 இலட்சம்)		
1.	திண்டுக்கல்	கொய்யா
2.	திருச்சி	வாழை
3.	கிருஷ்ணகிரி	மா
4.	கோயம்புத்தூர்	காய்கறிகள்
5.	தருமபுரி	குறுதானியங்கள்
6.	கடலூர்	மக்காச்சோளம்
7.	இராமநாதபுரம்	மிளகாய்
8.	திருவண்ணாமலை	சாமை
9.	விருதுநகர்	சிறுதானியம்
10.	தஞ்சாவூர்	பயறு வகைகள்
11.	சேலம்	பயறு வகைகள்
12.	புதுக்கோட்டை	பயறு வகைகள்
13.	விழுப்புரம்	பயறு வகைகள்
14.	தூத்துக்குடி	பயறு வகைகள்
15.	நாகப்பட்டினம்	பயறு வகைகள்
16.	திருவண்ணாமலை	பயறு வகைகள்
17.	தருமபுரி	பயறு வகைகள்
18.	கிருஷ்ணகிரி	பயறு வகைகள்
19.	வேலூர்	பயறு வகைகள்
2014–15 நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (ரூ.42.50 இலட்சம்)		
20.	விழுப்புரம்	சிறுதானியம் மற்றும் பயறு வகைகள்
2015–16 தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (ரூ.214.50 இலட்சம்)		
21.	புதுக்கோட்டை	தென்னை
22.	புதுக்கோட்டை	அங்கக தானியங்கள்
23.	திருப்பூர்	மக்காச்சோளம்
24.	விருதுநகர்	மா
25.	நாமக்கல்	சிறுதானியம் மற்றும் பயறு வகைகள்

வ.எண்	மாவட்டம்	பயிர்
2015–16 நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (ரூ.128.68 இலட்சம்)		
26.	பெரம்பலூர்	மக்காச்சோளம் மற்றும் வெங்காயம்
27.	தேனி	தென்னை
28.	நாகப்பட்டினம்	பயறு வகைகள்

திருப்பூர் மற்றும் பெரம்பலூர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தவிர மற்ற அனைத்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களும் பதிவு செய்யப்பட்டுவிட்டது. இதில் 19 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் வர்த்தக வணிகத்தில் ஈடுபட்டுள்ளது.

அட்டவணை 7.2 : 2016-2017 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்படவுள்ள உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள்

வ.எண்	மாவட்டம்	பயிர்
2016–17 தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் (ரூ.518.52 இலட்சம்)		
1.	சேலம்	குறுதானியங்கள்
2.	விருதுநகர்	மக்காச்சோளம்
3.	ஈரோடு	கேழ்வரகு
4.	விருதுநகர்	சிறுதானியங்கள்
5.	காஞ்சிபுரம்	சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகள்
6.	திருவண்ணாமலை	பயறு வகைகள்
7.	திருவண்ணாமலை	எண்ணெய்வித்து
8.	திருச்சி	நிலக்கடலை
9.	கடலூர்	பயறு வகைகள்
10.	கோயம்புத்தூர்	தென்னை
11.	மதுரை	தென்னை
12.	சிவகங்கை	தென்னை

2016 ஆகஸ்ட் 19]

வ.எண்	மாவட்டம்	பயிர்
நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (ரூ.86.42 இலட்சம்)		
13.	தஞ்சாவூர்	தென்னை
14.	திருவாரூர்	பயறு வகைகள்

அட்டவணை 7.3 : திட்டம் / வருடவாரியான உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் விவரம்

வ. எண்	ஆண்டு/ திட்டம்	எண்ணிக்கை	நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சம்)
1.	2014–15 (தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்)	9	413.00
2.	2014–15 (தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்–பயறு வகைகள்)	10	426.72
3.	2014–15 நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம்	1	42.50
4.	2015–16 (தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்)	5	214.50
5.	2015–16 (நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம்)	3	128.68
	மொத்தம்	28	1225.40

வ. எண்	ஆண்டு/ திட்டம்	எண்ணிக்கை	நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சம்)
	2016–17 இல் ஏற்படுத்தப்படவுள்ள உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள்		
1.	தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்	12	518.52
2.	நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம்	2	86.42
	மொத்தம்	14	604.94

பயறு உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை திறம்பட செயல்படுத்திட, 2016-2017 ஆம் ஆண்டில் ஓர் உழவர் உற்பத்தியாளர் அமைப்பிற்கு பயறு உடைக்கும் இயந்திரத்திற்காக ரூ.5.40 இலட்சம், உடைத்த பருப்புகளை சந்தைப்படுத்திட ரூ.5 இலட்சம் மற்றும் கொள்முதல் மையம் அமைத்திட ரூ.5 இலட்சம் நிதி உதவியாக, ஆக மொத்தம் ரூ.15.40 இலட்சம் வீதம் 10 பயறு உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு ரூ.1.54 கோடி தேசிய உணவு பாதுகாப்பு இயக்க நிதியின்கீழ் வழங்கப்படும்.

7.3.7. தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டம்

நீர்வள நிலவளத் திட்டத்தின் முதன்மையான நோக்கமே நீர்நிலைகளை மேம்படுத்துதலும், ஒரு துளி நீருக்கு கூடுதல் வருவாய் பெறுவதேயாகும். தமிழகத்தில் நீர்வள நிலவளத் திட்டம் I, உலக வங்கி நிதியுதவியுடன் 61 உபவடி நிலப் பகுதிகளில் 5,012 நீர்நிலை மற்றும் 6.70 இலட்சம் எக்டரில் ரூ.53.78 கோடி மதிப்பிலான பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சந்தை உட்கட்டமைப்புகளை உருவாக்குதல், வேளாண் விளைபொருள் குழுக்களை உருவாக்கி சந்தைகளுடன் இணைத்தல், வணிகர்கள் விவசாயிகளிடையே சந்தை ஒருங்கிணைப்பு ஏற்படுத்துதல், திறன் மேம்பாட்டு பயிற்சிகள்மூலம் விவசாயிகளின் திறனை மேம்படுத்துதல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின்மூலம் 6,577 விளைபொருள் குழுக்கள் உருவாக்கப்பட்டு 1.73 இலட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

2016 ஆகஸ்ட் 19]

இத்திட்டத்தின்கீழ் வேளாண் வணிக மையங்கள், உலர்களங்கள், சேமிப்பு மையங்கள், உலர்களத்துடன்கூடிய சேமிப்பு மையம், சிப்பம் கட்டும் அறை போன்ற உட்கட்டமைப்பு வசதிகள், அறுவடைக்குப்பின் ஏற்படும் சேதத்தை குறைத்து விளைபொருட்களை மதிப்புக் கூட்டி சந்தைப்படுத்தும் விதமாக ஈரப்பதமானிகள், மின்னணு எடைத்தராசுகள், தார்பாலின்கள், அட்டகங்கள், இணையதள வசதியுடனான கணினிகள், கிரேட்டுகள், கொப்பரை உலர்த்திகள், தேங்காய் மட்டை உரிக்கும் இயந்திரங்கள், சரக்கு ஆட்டோக்கள், மினி லாரி ஆகியன விளைபொருள் குழு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் II, ஆறு ஆண்டு காலத்திற்கு செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 66 உபவடி நிலப் பகுதிகளின்கீழ் 4,000/-க்கும் கூடுதலான நீர்நிலைகள் மற்றும் 5.43 இலட்சம் எக்டர் சாகுபடி பரப்பை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7.3.8. வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையம்

விவசாயிகள், விலை ஏற்ற இறக்கங்களினால் பாதிப்படைவதை தடுப்பதற்கும், அவர்களின் பொருளாதார நிலை மேம்படவும், தேவையான சந்தைத் தகவல் வழங்கிட புதிய முயற்சியாக, திருச்சியில் வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மையம் பகுதி II திட்டத்தின்கீழ் ரூ.43 இலட்சம் செலவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஒருங்கிணைப்புடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மையத்தின் மூலமாக, பயிர் ஆலோசனை மற்றும் சந்தை விலை நிலவரங்கள் பதிவு செய்யப்பட்ட விவசாயிகள் மற்றும் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 1,629 வகையான குறுஞ்செய்திகள், 22.50 இலட்சம் விவசாயிகள் மற்றும் பல்வேறு துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 79 சந்தை நுண்ணறிவு ஆலோசனைகள் (37 முன்விதைப்பு, 42 முன் அறுவடை) ஊடகங்களின் வாயிலாக பரவலாக்கப்பட்டுள்ளது. மேலும், 1,117 செய்தி மடல்கள்மூலம் சந்தைப்படுத்துதலில் தற்போதைய தகவல்கள் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

[2016 ஆகஸ்ட் 19

7.4. தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் 1970 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. விற்பனைக் குழுக்களின் மொத்த வருவாயில் 15 விழுக்காடு பங்குத் தொகை விற்பனை வாரியத்திற்கு செலுத்தப்படுகிறது. இவ்வாறாகப் பெறப்படும் மொத்தத் தொகையில், 50 விழுக்காடு சந்தை மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள சந்தை மேம்பாட்டு நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின், பயிற்சி மையம் மற்றும் விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பிரிவின் மூலமாக விவசாயிகள் மற்றும் துறைப் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகளும், தமிழ்நாடு உழவர் நல மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு உதவித் தொகையும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஒருங்கிணைப்புடன் சந்தை ஆராய்ச்சித் திட்டங்களும், பொறியியல் பிரிவின் மூலமாக கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அட்டவணை 7.4 : மாவட்ட வாரியாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்

மாவட்டம்	ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்	
1. காஞ்சிபுரம்	1	காஞ்சிபுரம்
	2	மதுராந்தகம்
	3	உத்திரமேரூர்
	4	திருக்கழுக்குன்றம்
	5	சுங்குவார்சத்திரம்
	6	அச்சிறுப்பாக்கம்
	7	செங்கல்பட்டு
2. திருவள்ளூர்	8	திருத்தணி
	9	திருவள்ளூர்
	10	செங்குன்றம்
	11	பொன்னேரி
	12	பள்ளிப்பட்டு
	13	ஊத்துக்கோட்டை
	14	கும்மிடிப்பூண்டி
	15	நசரத்பேட்டை

2016 ஆகஸ்ட் 19]

மாவட்டம்	ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்	
3. திருவண்ணாமலை	**16**	திருவண்ணாமலை
	17	ஆரணி
	18	வந்தவாசி
	19	சேத்துப்பட்டு
	20	செய்யாறு
	21	போளூர்
	22	செங்கம்
	23	புதுப்பாளையம்
	24	வானாபுரம்
	25	வேட்டவலம்
	26	தெள்ளார்
	27	மங்கல மாமண்டூர்
	28	தேசூர்
	29	பெரணமல்லூர்
	30	தூசி
	31	கீழ்பென்னாத்தூர்
4. நாமக்கல்	**32**	நாமக்கல்
	33	இராசிபுரம்
	34	திருச்செங்கோடு
	35	வேலூர்
	36	நாமகிரிப்பேட்டை
	37	சோளக்காடு

மாவட்டம்	ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்	
5. வேலூர்	38	வேலூர்
	39	திருப்பத்தூர்
	40	ஆற்காடு
	41	அரக்கோணம்
	42	வாணியம்பாடி
	43	காவேரிப்பாக்கம்
	44	குடியாத்தம்
	45	கலவை
	46	அம்மூர்
	47	காட்பாடி
	48	ஆம்பூர்
	49	திமிரி
6. கடலூர்	50	விருத்தாச்சலம்
	51	கடலூர்
	52	பண்ருட்டி
	53	திட்டக்குடி
	54	காட்டுமன்னார் கோவில்
	55	சிதம்பரம்
	56	குறிஞ்சிப்பாடி
	57	சேத்தியாதோப்பு
	58	ஸ்ரீமுஷ்ணம்
	59	புவனகிரி
7. விழுப்புரம்	60	திண்டிவனம்
	61	திருக்கோவிலூர்

2016 ஆகஸ்ட் 19]

மாவட்டம்	ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்	
	62	உளுந்தூர்ப்பேட்டை
	63	விழுப்புரம்
	64	சின்னசேலம்
	65	கள்ளக்குறிச்சி
	66	செஞ்சி
	67	தியாகதுருகம்
	68	சங்கராபுரம்
	69	திருவெண்ணெய்நல்லூர்
	70	மணலூர்பேட்டை
	71	அவலூர்பேட்டை
	72	மரக்காணம்
	73	விக்கிரவாண்டி
	74	அனந்தபுரம்
	75	வளத்தி
	76	மூங்கில்துறைப்பட்டு
8. தருமபுரி	77	தருமபுரி
	78	பாலக்கோடு
	79	பென்னாகரம்
	80	அரூர்
	81	பாப்பிரெட்டிபட்டி
	82	கம்பை நல்லூர்
	83	தேன்கனிக்கோட்டை
	84	பாப்பாரப்பட்டி
9. கிருஷ்ணகிரி	85	கிருஷ்ணகிரி
	86	ஓசூர்
	87	கெலமங்கலம்
	88	போச்சம்பள்ளி
	89	காவேரிப்பட்டினம்
	90	ஊத்தங்கரை
	91	பர்கூர்
	92	இராயக்கோட்டை

மாவட்டம்	ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்	
10. சேலம்	93	சேலம்
	94	ஆத்தூர்
	95	சங்ககிரி
	96	கொங்கனாபுரம்
	97	கொளத்தூர்
	98	மேச்சேரி
	99	வாழப்பாடி
	100	தம்மம்பட்டி
	101	தலைவாசல்
	102	ஓமலூர்
	103	காடையம்பட்டி
	104	கெங்கவல்லி
	105	கருமந்துறை
11. கோயம்புத்தூர்	106	அன்னூர்
	107	காரமடை
	108	கோயம்புத்தூர்
	109	சூலூர்
	110	ஆனைமலை
	111	பொள்ளாச்சி
	112	மலையடிப்பாளையம்
	113	நெகமம்
	114	கிணத்துக்கடவு
	115	தொண்டாமுத்தூர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 19]

மாவட்டம்	ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்	
12. ஈரோடு	116	ஈரோடு
	117	அவல்பூந்துறை
	118	கொடுமுடி
	119	சிவகிரி
	120	சித்தோடு
	121	பவானி
	122	பூதப்பாடி
	123	அந்தியூர்
	124	மயிலம்பாடி
	125	கவுந்தப்பாடி
	126	கோபிச்செட்டிபாளையம்
	127	நம்பியூர்
	128	வெள்ளக்கோவில்
	129	சத்தியமங்கலம்
	130	புஞ்சை புளியம்பட்டி
	131	தாளவாடி
	132	பெருந்துறை
	133	எழுமாத்தூர்
13. திருப்பூர்	134	குன்னத்தூர்
	135	காங்கேயம்
	136	வெள்ளாங்கோயில்
	137	தாராபுரம்
	138	மூலனூர்
	139	அலங்கியம்
	140	முத்தூர்
	141	திருப்பூர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 19

மாவட்டம்	ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்
	142 அவிநாசி
	143 சேவூர்
	144 பல்லடம்
	145 உடுமலைப் பேட்டை
	146 மடத்துக்குளம்
	147 பெதப்பம்பட்டி
	148 பொங்கலூர்
14. கரூர்	149 குளித்தலை
	150 கரூர்
	151 இரும்பூதிப்பட்டி
	152 சின்னதாராபுரம்
15. திருச்சிராப்பள்ளி	153 மணப்பாறை
	154 துறையூர்
	155 லால்குடி
	156 திருச்சிராப்பள்ளி
	157 தொட்டியம்
	158 மண்ணச்சநல்லூர்
	159 துவரங்குறிச்சி
	160 புள்ளம்பாடி
	161 தாத்தையங்கார்பேட்டை
	162 காட்டுப்புத்தூர்
16. அரியலூர்	163 அரியலூர்
	164 ஜெயங்கொண்டம்
	165 ஆண்டிமடம்
	166 மேலணிக்குழி

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 19]

மாவட்டம்	ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்	
17. பெரம்பலூர்	167	பெரம்பலூர்
18. தஞ்சாவூர்	168	அதிராமபட்டினம்
	169	அம்மாப்பேட்டை
	170	பூதலூர்
	171	கும்பகோணம்
	172	மதுக்கூர்
	173	ஒரத்தநாடு
	174	பட்டுக்கோட்டை
	175	பாபநாசம்
	176	பேராவூரணி
	177	தஞ்சாவூர்
	178	வல்லம்
	179	திருப்பனந்தாள்
	180	பாப்பாநாடு
19. இராமநாதபுரம்	181	இராமநாதபுரம்
	182	பரமக்குடி
	183	கமுதி
	184	திருவாடானை
	185	இராசசிங்கமங்கலம்
	186	முதுகுளத்தூர்
20. கன்னியாகுமரி	187	ஈத்தாமொழி
	188	வடசேரி
	189	களியக்காவிளை
	190	திங்கள்சந்தை
	191	குலசேகரம்
	192	தொடுவட்டி
21. மதுரை	193	திருமங்கலம்
	194	உசிலம்பட்டி
	195	மேலூர்

மாவட்டம்	ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்	
	196	மதுரை
	197	டி.கல்லுப்பட்டி
	198	வாடிப்பட்டி
22. புதுக்கோட்டை	199	ஆலங்குடி
	200	அறந்தாங்கி
	201	புதுக்கோட்டை
	202	கந்தர்வக்கோட்டை
	203	ஆவுடையார்கோவில்
	204	கீரனூர்
	205	கீரமங்கலம்
	206	பொன்னமராவதி
	207	இலுப்பூர்
	208	கறம்பக்குடி
23. விருதுநகர்	209	விருதுநகர்
	210	இராஜபாளையம்
	211	சாத்தூர்
	212	அருப்புக்கோட்டை
	213	ஸ்ரீவில்லிபுத்தூர்
	214	வத்திராயிருப்பு
	215	வெம்பக்கோட்டை
24. சிவகங்கை	216	சிவகங்கை
	217	திருப்புவனம்
	218	மானாமதுரை
	219	சிங்கம்புணரி
	220	காரைக்குடி
	221	இளையான்குடி
	222	தேவகோட்டை
25. தூத்துக்குடி	223	கோவில்பட்டி
	224	தூத்துக்குடி

2016 ஆகஸ்ட் 19]

மாவட்டம்	ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்	
	225	புதூர்
	226	கடம்பூர்
	227	கழுகுமலை
	228	ஸ்ரீவைகுண்டம்
	229	விளாத்திகுளம்
	230	எட்டையபுரம்
	231	சாத்தான்குளம்
26. திருநெல்வேலி	232	சங்கரன்கோவில்
	233	தென்காசி
	234	அம்பாசமுத்திரம்
	235	வள்ளியூர்
	236	திருநெல்வேலி
	237	கடையநல்லூர்
	238	திசையன்விளை
	239	பாவூர்சத்திரம்
	240	திருவேங்கடம்
	241	சிவகிரி
	242	ஆலங்குளம்
27. நாகப்பட்டினம்	243	கீவளூர்
	244	குத்தாலம்
	245	மயிலாடுதுறை
	246	நாகப்பட்டினம்
	247	செம்பனார்கோவில்
	248	சீர்காழி
	249	வேதாரண்யம்
	250	திருப்பூண்டி
28. நீலகிரி	251	உதகமண்டலம்.
	252	கோத்தகிரி
	253	குன்னூர்
	254	கூடலூர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2016 ஆகஸ்ட் 19

மாவட்டம்	ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்	
29. தேனி	255	தேனி
	256	கம்பம்
	257	போடிநாயக்கனூர்
	258	சின்னமனூர்
	259	ஆண்டிப்பட்டி
	260	உத்தமபாளையம்
	261	பெரியகுளம்
30. திண்டுக்கல்	262	திண்டுக்கல்
	263	ஒட்டன்சத்திரம்
	264	பழனி
	265	நத்தம்
	266	வத்தலக்குண்டு
	267	கோபால்பட்டி
	268	வடமதுரை
	269	வேடசந்தூர்
31. திருவாரூர்	270	வலங்கைமான்
	271	கொரடாச்சேரி
	272	மன்னார்குடி
	273	பூந்தோட்டம்
	274	வடுவூர்
	275	குடவாசல்
	276	திருவாரூர்
	277	திருத்துறைப்பூண்டி

2016 ஆகஸ்ட் 19]

அட்டவணை 7.5: ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகள்

(எண்கள்)

வஎண்	விற்பனைக்குழு	சொந்த இடம்	கிடங்கு	பரிவர்த்தனைக்கூடம்	உலர்களம்	குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகம்	வணிக வளாகம்	குளிர்பதன வசதி	ஊரக வணிக மையம்	தானியங்கி எடையிடும் மற்றும் மூட்டை தைக்கும் இயந்திரம்	வணிகர் கடை
1.	காஞ்சிபுரம்	8	9	8	16	–	–	–	–	–	–
2.	வேலூர்	8	24	11	15	–	–	3	1	–	–
3.	திருவண்ணா மலை	14	30	26	27	–	–	7	–	1	10
4.	கடலூர்	6	12	15	15	–	–	1	1	–	10
5.	விழுப்புரம்	14	28	45	21	–	–	4	1	2	–
6.	சேலம்	12	19	12	21	–	–	9	1	–	–
7.	தருமபுரி	8	16	8	20	2	–	7	1	–	10
8.	கோயம்புத் தூர்	10	29	15	28	1	–	7	1	3	10
9.	ஈரோடு	15	34	49	34	–	–	7	1	–	10
10.	திருச்சி	14	27	24	20	1	–	1	–	–	–
11.	தஞ்சாவூர்	7	23	14	8	–	1	1	–	1	–
12.	புதுக்கோட்டை	2	3	2	4	–	–	2	–	–	–
13.	மதுரை	4	8	4	7	–	1	1	–	–	–
14.	இராமநாதபுரம்	14	22	6	19	–	–	6	1	–	25
15.	திருநெல்வேலி	16	28	17	15	1	–	12	1	–	10
16.	கன்னியாகுமரி	5	11	5	4	–	2	1	–	–	–
17.	தேனி	5	12	4	7	2	–	2	–	–	–
18.	திண்டுக்கல்	6	12	6	8	–	–	7	1	1	–
19.	திருவாரூர்	5	11	4	8	–	–	–	–	–	–
20.	நாகப்பட்டினம்	5	14	4	7	–	–	–	–	–	–
21.	நீலகிரி	0	––	––	—	–	1	–	–	–	–
22.	திருப்பூர்	13	49	30	43	1	–	4	–	–	–
	மொத்தம்	**191**	**421**	**309**	**347**	**8**	**5**	**82**	**10**	**8**	**85**

அட்டவணை 7.6 : மாவட்ட வாரியாக அக்மார்க் ஆய்வகங்கள்

வ..எண்	மாவட்டம்	அக்மார்க் ஆய்வக இருப்பிடம்	
1.	சென்னை	முதன்மை ஆய்வகம்	வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரகத்தில் அமைந்துள்ளது
2.	காஞ்சிபுரம்	சென்னை (வடக்கு)	
		சென்னை (தெற்கு)	
3.	வேலூர்	வேலூர்	
4	கடலூர்	பண்ருட்டி	
5.	தஞ்சாவூர்	தஞ்சாவூர்	
6.	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி I	
		திருச்சிராப்பள்ளி II	
7.	கரூர்	கரூர்	
8.	மதுரை	மதுரை (வடக்கு)	
		மதுரை(தெற்கு)	
9.	தேனி	தேனி	
10.	திண்டுக்கல்	திண்டுக்கல்	
11.	விருதுநகர்	விருதுநகர்	
12.	திருநெல்வேலி	திருநெல்வேலி	
		தென்காசி	
13.	தூத்துக்குடி	தூத்துக்குடி	
14.	கன்னியாகுமரி	நாகர்கோவில்	
		மார்த்தாண்டம்	
15.	சேலம்	சேலம்	
16.	தருமபுரி	தருமபுரி	
17.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர்	
18.	ஈரோடு	பெருந்துறை	
		ஈரோடு I	
		ஈரோடு II	
		சித்தோடு	
19.	திருப்பூர்	திருப்பூர்	
		பல்லடம்	
		காங்கேயம் I	
		காங்கேயம் II	
		வெள்ளக்கோவில்	

2016 ஆகஸ்ட் 19]

8. தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

8.1. முன்னுரை

நீர் ஆதாரங்களை பாதுகாத்து, நீர் பயன்பாட்டுத் திறனை ஊக்குவித்து விவசாய பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்தோடு தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை கடந்த 2002 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

கீழ்க்கண்ட இரண்டு நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் இம்முகமையின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன:

1. *பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் - நீர்வடிப்பகுதி மேம்பாடு*
2. *நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி*

மேலும், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட திட்டங்களுக்கான நிதியை வழிப்படுத்தி கொண்டு செல்வதற்கான இணைப்பு முகமையாக செயல்படுகிறது:

1. *தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்* (NADP)
2. *நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம்* (NMSA)
3. *பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம்* (PMKSY)
4. *தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம்* (NFSM)
5. *மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டம்* (SSEPERS-ATMA)

8.2. பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் –நீர்வடிப் பகுதி மேம்பாடு (முன்பிருந்த ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம்)

ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம், தற்பொழுது பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் - நீர்வடிப்பகுதி மேம்பாடு எனும் புதிய திட்டமாக பிற நீர் பாசன மேம்பாட்டுத் திட்டங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்பட உள்ளது.

[2016 ஆகஸ்ட் 19

இத்திட்டம் 26 மாவட்டங்களில் உள்ள 2,770 நீர்வடிப்பகுதிகளில் 24 மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைகள்மூலம் கடந்த 7 ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான செலவினத்தை 2015-2016 வரை மத்திய மற்றும் மாநில அரசுகள் முறையே 90:10 என்ற விகித அளவில் பகிர்ந்து கொண்டன. தற்பொழுது 2015-2016 முதல் 60 : 40 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பின்வரும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

செயல்பாடு	மேற்கொள்ளப்படும் பணிகள்
நிலமேம்பாடு	நிலம் சமன்படுத்துதல், சம உயர வரப்பு அமைத்தல், கல்வரப்பு அமைத்தல், தடுப்புச்சுவர் அமைத்தல், கோடை உழவு, தாவர வரப்பு அமைத்தல் மற்றும் தொடர் குழி அமைத்தல்
நீர்வள மேம்பாடு	புதிய குளங்கள் / ஊருணிகள், பண்ணைக்குட்டை அமைத்தல், கசிவு நீர்க்குட்டை அமைத்தல், குளங்கள் மற்றும் நீர்வரத்துக் கால்வாய்களை தூர்வாருதல்
தாவர நடவுப் பணி	பழமரக் கன்றுகள் நடுதல், சமூக வேளாண் காடுகள் அமைத்தல், தீவனப்பயிர் மேம்பாடு, பயிர் செயல் விளக்கம் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைத்தல்
பொதுக் கட்டமைப்பு மேம்பாடு	தடுப்பணைகள் கட்டுதல், கால்நடைக் குட்டைகள் அமைத்தல், வரத்துக் கால்வாய் அமைத்தல், ஊருணி தூர் வாருதல், ஏரி மற்றும் குளம் தூர்வாருதல்
பண்ணை உற்பத்தி திட்டம் மற்றும் குறுந்தொழில்கள்	பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாராத தொழில்கள் துவங்க அதிகபட்சமாக ரூ.24,000/– விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.
சுய உதவிக்குழு மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கான வாழ்வாதாரப்பணிகள்	நீர்வடிப்பகுதியில் சுய உதவிக் குழுக்களுக்கு வட்டியில்லாத சுழல் நிதியாக ரூ. 24,000/–மும் நிலமற்ற விவசாயிகள் மற்றும் பயனாளிகள் குழுக்களுக்கு மானியமும் வழங்கப் படுகிறது.

2016 ஆகஸ்ட் 19]

கடந்த 2011-2012 முதல் 2015-2016 வரையிலான ஐந்தாண்டு காலத்தில், பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் - நீர்வடிப்பகுதி மேம்பாட்டின் (முன்பிருந்த ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம்) கீழ் மத்திய மற்றும் மாநில அரசிடமிருந்து ரூ.781.731 கோடி நிதி பெறப்பட்டு ரூ.674.302 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், 2011-2012 முதல் 2015-2016 வரையிலான ஐந்தாண்டு காலத்தில் 33,661 மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் புதிதாக உருவாக்கப்பட்டு, 5,881 நீர் ஆதாரங்கள் புனரமைக்கப்பட்டு, 87,904 ஹெக்டேர் கூடுதல் பரப்பு பாசன வசதி பெற்றுள்ளன. இத்திட்டத்தின்கீழ் கடந்த ஐந்தாண்டுகளில் 3.42 இலட்சம் விவசாயிகள் இதனால் பயனடைந்துள்ளனர்.

கடந்த 2015-2016 ஆம் ஆண்டு ரூ.113.70 கோடி நிதி மத்திய அரசாலும், ரூ.75.80 கோடி நிதி மாநில அரசின் பங்காகவும் விடுவிக்கப்பட்டுள்ளது.

8.3. நபார்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி திட்டம்

நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் இந்த நீர்வடிப்பகுதி திட்டங்கள் பிரதம மந்திரியின் விவசாய பாசன திட்டத்தில் நடைபெறுவது போன்ற பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. தற்போது 12 நீர்வடிப்பகுதிகளுக்கு முழு மானியத்திலும், மற்ற 156 நீர்வடிப்பகுதிகளுக்கு கடன் அடிப்படையிலும் செயல்படுத்தப்படுகிறது. இந்த 156 நீர்வடிப்பகுதிகளில், 58 நீர்வடிப்பகுதிகளில் தற்போது தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலம் பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியான முழு செயலாக்க அலகின் (Full Implementation Phase) கீழ் 50% நிதி ஒப்பளிப்பு தமிழக அரசுமூலம் விடுவிக்கப்படுகிறது.

[2016 ஆகஸ்ட் 19

8.4. மாநில அளவிலான புள்ளியியல் தகவல் மையம் (State Level data Centre)

நீர்வடிப்பகுதிகளை அறிவியல் பூர்வமாக திட்டமிடவும் திறமையாக நிர்வகிக்கவும், மாநில அளவிலான புள்ளியியல் தகவல் மையம், புவித்தகவல் தொழில்நுட்ப அமைப்புடன் (GIS) *அமைக்கப்பட்டுள்ளது. அனைத்து நீர்வடிப் பகுதி பணிகளையும் புவித்தகவல் தொழில்நுட்ப அமைப்பின்மூலம் கண்காணிக்கப்படுவதால் நீர்வடிப்பகுதிகளில் ஒவ்வொரு திட்டப் பகுதியும் துல்லியமாக வரையறுக்கப்பட இயல்கிறது.*

இந்த புள்ளியியல் தகவல் மையத்தில், இதுவரை 2770 நீர்வடிப்பகுதிகளை உள்ளடக்கிய 13.69 இலட்சம் எக்டர் பரப்புக்கான விவரங்கள் முழுமையாக மின்னணுமயமாக்கப்பட்டுள்ளது. புவித்தகவல் தொழில்நுட்ப அமைப்பின்மூலம் நிலஅளவு வரைபடங்கள் (Cadastral Maps) *நீர்வடிப்பகுதியின் வரையறைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. நீர்வடிப்பகுதிகளில் மேற்கொள்ளப்படுகிற அனைத்து மேம்பாட்டு பணிகளும் புவித்தகவல் தொழில்நுட்ப அமைப்பின்மூலம் குறியீடு செய்யப்பட்டு ஏற்கெனவே உள்ள புவியின் செயற்கைக்கோள் படங்கள்* (Satellite imagery) *மூலமாக ஒப்பிட்டு சரிபார்க்கப்படுகிறது. இவ்விவரங்கள் அனைத்தும்* www.bhuran.nrsc.gov.in *என்ற இணையதளத்தில் பதிவேற்றப்படுகின்றன.*

TRUTH ALONE TRIUMPHS

2016 ஆகஸ்ட் 19]

9. கோரிக்கை எண் 5 – வேளாண்மைத் துறை 2016–2017– திருத்த வரவு செலவு தொகை பற்றிய மதிப்பீடு

2016–2017 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு (ரூபாய் ஆயிரத்தில்)				
	வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
மானியக் கோரிக்கை அனுமதித்தது	6,434,20,72	356,55,68	150,50,00	6,941,26,40
மொத்த தொகை சாட்டியது	4	...	...	4

நிகரச் செலவு (ரூபாய் ஆயிரத்தில்)					
கணக்குத் தலைப்பு		2014-15 கணக்குகள்	2015-16 திருத்த மதிப்பீடு	2016-17 இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடு	2016-17 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு
2059	பொதுப் பணிகள்	2,17,77	2,42,00	2,52,00	2,52,00
2401	பயிர் வளர்ப்பு	4,387,24,89	5,243,42,95	5,635,68,31	5,555,94,03
2402	மண்வள, நீர் வளப் பாதுகாப்பு	109,32,26	93,29,08	94,23,78	95,23,77
2408	உணவு சேமிப்பு – கிடங்கு வசதி	62,44	...	...	...
2415	வேளாண்மை ஆராய்ச்சியும் (ம) கல்வியும்	289,73,59	369,32,79	415,54,72	415,54,72
2435	ஏனைய வேளாண்மைத் திட்டங்கள்	127,40,86	127,54,56	142,88,63	144,83,42
2501	ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள்	130,50,77	189,50,00	189,50,00	189,50,00
2551	மலைப் பகுதிகள்	3,72,76	82,19	93,15	93,15
2702	சிறுபாசனம்	8,42,55	8,98,43	10,04,78	10,04,78
2705	பாசனப் பகுதி மேம்பாடு	13,65,33	6,43,04	3,50,34	3,50,34
2810	புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி	15,39,12	17,72,61	76,50	76,50
2852	தொழில்கள்	...	48	...	...

[2016 ஆகஸ்ட் 19

		நிகரச் செலவு (ரூபாய் ஆயிரத்தில்)			
கணக்குத் தலைப்பு		2014-15	2015-16	2016-17	2016-17
		கணக்குகள்	திருத்த மதிப்பீடு	இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடு	திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு
3451	தலைமைச் செயலகம் – பொருளாதாரப் பணிகள்	9,21,22	9,21,13	10,23,55	10,23,55
4401	பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு	9,41,44	105,85,44	95,00,03	95,50,03
4402	மண்வள நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு	38,83,61	16,37,14	15,65,02	22,94,89
4435	ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு	79,15,94	81,68,60	100,00,02	167,15,13
4551	மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு	6,44,00	6,50,01	6,50,01	6,50,01
4705	பாசனப் பகுதி மேம்பாடு குறித்த மூலதனச் செலவு	5,78,08	55,23,55	64,45,62	64,45,62
6401	பயிர் வளர்ப்புக்கான கடன்கள்	...	150,00,00	150,00,00	150,00,00
7610	அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள்	...	50,00	50,00	50,00

கோரிக்கை எண் 5 வேளாண்மைத் துறை
2015–2016 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு
ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)

துறைத் தலைவர்			வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
05 01	தலைமைச் செயலகம்	அனுமதித்தது	10,23,55	...	50,00	10,73,55
05 02	வேளாண்மை இயக்ககம்	சாட்டியது	2	...	...	2
		அனுமதித்தது	5,064,04,16	95,00,02	150,00,00	5,309,04,18
05 03	வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்ககம்	அனுமதித்தது	94,04,20	167,15,13	...	261,19,33
05 04	விதைச் சான்று இயக்ககம்	அனுமதித்தது	45,72,83	...	...	45,72,83
05 05	தோட்டக்கலை, மலைத் தோட்டப் பயிர்கள் இயக்ககம்	சாட்டியது	1	...	...	1
		அனுமதித்தது	518,08,66	50,01	...	518,58,67
05 06	வேளாண்மைப் பொறியியல் துறை	சாட்டியது	1	...	...	1
		அனுமதித்தது	287,76,77	93,90,52	...	381,67,29
05 07	வேளாண் பொறியியல் பணிகள்	அனுமதித்தது	46,45	...	...	46,45
05 08	தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்	அனுமதித்தது	412,98,05	...	...	412,98,05
05 09	அங்கக சான்றளிப்பு இயக்ககம்	அனுமதித்தது	86,05	...	...	86,05
	மொத்தம்	சாட்டியது	4	...	...	4
		அனுமதித்தது	6,434,20,72	356,55,68	150,50,00	6,941,26,40

[2016 ஆகஸ்ட் 19

10. முடிவுரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஒப்பற்ற தலைமையில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த தமிழக அரசால் எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகள், புதிய கொள்கைகள், உயர் தொழில்நுட்ப உத்திகள் மற்றும் முன்னோடி செயல்திறன் ஆகியவற்றால் மாநிலத்தின் வேளாண் உற்பத்தியின் தரம் மற்றும் மகசூல் அதிகரித்ததோடு, விவசாயிகளின் வருமானமும் உயர வழிவகுத்துள்ளது.

வேளாண்மையை உயர் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல முனைப்புடன் செயல்படும் தமிழக அரசு, பகுதிக்கேற்ற மாற்றுப்பயிர் சாகுபடித் திட்டம், நீடித்த நிலையான இயற்கை வள ஆதாரங்களின் மேலாண்மை, தரமான விதைகள் மற்றும் மரபுத்தூய்மையுடைய நடவுச் செடிகளின் விநியோகத்தை அதிகரித்தல், அரசுப் பண்ணைகளை மேம்படுத்துதல், பண்ணைக் குட்டைகளை அதிக அளவில் உருவாக்குதல், மானிய விலையில் வழங்கப்படும் நுண்ணீர் பாசனக் கருவிகளைக் கொண்டு பாசன நீரைத் திறம்பட பயன்படுத்துதல், பண்ணை இயந்திரமயமாக்கலை ஊக்குவித்தல், வேளாண் இயந்திரங்களுக்கான வாடகை மையங்கள் நிறுவுதல், பசுமைக்குடில் சாகுபடியை ஊக்குவித்தல், உயர் தொழில்நுட்ப தோட்டக்கலைப் பயிர் சாகுபடி, வீடு மற்றும் மாடித்தோட்ட காய்கறி சாகுபடி மற்றும் பெருநகர காய்கறி தொகுப்புத் திட்டம், பண்ணை மகளிரின் திறனை மேம்படுத்துதல், விளைபொருள் பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதலுடன் கூடிய உற்பத்தி முறை, சேமிப்புக் கிடங்குகளும், குளிர்பதனக் கிடங்குகளும் அமைத்தல், பண்ணை அளவிலான இதர மதிப்புக் கூட்டுதலுக்கான செயல்பாடுகள் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் சார்ந்த செய்தி மற்றும் வேளாண் அறிவு மேலாண்மை போன்ற சிறந்த வேளாண்மை உத்திகளை உட்புகுத்தி, செயல்படுத்தி வருகிறது. மேலும், இயற்கை இடர்பாடுகளால் ஏற்பட்ட பாதிப்பைக் குறைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட பல்வேறு சிறப்புத் தொகுப்பு திட்டங்களால், மாநிலத்தின் வேளாண் உற்பத்தி உயர வழி வகுத்ததோடு, கடந்த ஐந்து ஆண்டுகளில் உணவுதானிய உற்பத்தியில் இதுவரை கண்டிராத சாதனையைப் படைத்துள்ளது.

2016 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிக்கையில் வேளாண்மைத் துறையின் தொலைநோக்குத் திட்டமானது கீழ்க்கண்டவாறு தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

“நமது மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் உணவு பாதுகாப்பு மற்றும் இரண்டாம் பசுமைப் புரட்சி முக்கிய அங்கம் வகிக்கின்றன. நவீன வேளாண் முறைகளை அறிமுகப்படுத்தி, அவற்றை தொடர்ந்து கடைபிடிக்க தேவையான பல்வேறு வேளாண் அமைப்புகளை ஒருங்கிணைத்து, பயிர் உற்பத்தித் திறனை குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பதே எனது நோக்கமாகும்”..

அரசின் சீரிய முயற்சிகளின் விளைவாக, தேசிய அளவில் வேளாண்மையில் தமிழ்நாடு தொடர்ந்து முதன்மையாக விளங்குவதோடு, இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் “இருமடங்கு வேளாண் உற்பத்தி மற்றும் மும்மடங்கு விவசாயிகள் வருமானம்” எனும் தொலைநோக்கு நிறைவேறும்”.

2016 ஆகஸ்ட் 19]

இணைப்பு II

(480 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2016–2017

"எனது தலைமையிலான அரசு, இதுவரையில் கவனிப்பாரற்று இருந்த கால்நடை பராமரிப்புத் தொழிலுக்கு சிறப்பு முக்கியத்துவம் வழங்கி வருகிறது. எனது தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டமானது ஒருங்கிணைந்த வேளாண்மை மற்றும் கால்நடை பராமரிப்பு தொழிலை மேம்படுத்தி கிராமப்புற குறிப்பாக ஏழை மக்களின் வருவாய் உயர வழி வகுத்துள்ளது"

—மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்

1. முன்னுரை

கால்நடை பராமரிப்புத் துறையானது, மாநிலத்தில் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு கால்நடை மருத்துவ சேவைகளை வழங்குவதுடன் அவற்றின் மரபியல் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றுகிறது. இவையல்லாமல், சமூகத்தில் ஏழைகள், வறுமையில் வாடுபவர்கள் மற்றும் நலிவுற்ற பிரிவினரின் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், நலனுக்காகவும் பயனாளிகள் சார்ந்த பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. மேற்கண்ட சேவைகளை மாநிலமெங்கும் பரவியுள்ள கால்நடை நிலையங்கள் வழங்குகின்றன. பயனாளிகள் சார்ந்த பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துதல், கால்நடைகள் மற்றும் இயற்கை வளங்களை இயன்ற அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ளுதல் மூலம் கால்நடை வளமானது மாநிலத்தில் உன்னத நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

கால்நடைப் பிரிவின் பங்களிப்பு, மொத்த மாநில உற்பத்தியின் மதிப்பில் 4.31 விழுக்காடாகவும், வேளாண்மை மற்றும்

[2016 ஆகஸ்ட் 19

அவை சார்ந்த பிரிவுகளில் 41.84 விழுக்காடாகவும் (முந்தைய மதிப்பீட்டில் நடப்பு விலை: 2004-2005) உள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் மாநிலத்தில், கால்நடைப் பிரிவின் மொத்த உற்பத்தி மதிப்பு ரூ.11,535.23 கோடியிலிருந்து 2014-2015 ஆம் ஆண்டில் ரூ.55,068.20 கோடியாக (முந்தைய மதிப்பீட்டில் நடப்பு விலை: 2004-2005) உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டின் மதிப்பிடப்பட்ட பால் உற்பத்தி, 2005-2006 ஆம் ஆண்டில் 54.74 இலட்சம் மெட்ரிக் டன்னில் இருந்து, 2015-2016 ஆம் ஆண்டில் 72.43 இலட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. அதேபோன்று, மதிப்பிடப்பட்ட முட்டை உற்பத்தி 2005-2006 ஆம் ஆண்டில் 62,225 இலட்சம் எண்ணிக்கையிலிருந்து, 2015-16 ஆம் ஆண்டில் 1,61,252 இலட்சம் எண்ணிக்கையாக அதிகரித்துள்ளது.

ஒரு நாளைக்கு தனி நபருக்கு கிடைக்கும் பாலின் அளவு 2005-2006 ஆம் ஆண்டில் 231 கிராமிலிருந்து 2015-2016 ஆம் ஆண்டில் 258 கிராம் ஆகவும், ஒரு வருடத்தில் கிடைக்கும் முட்டைகளின் எண்ணிக்கை 2005-2006 ஆம் ஆண்டில் 100 எண்ணிக்கையிலிருந்து 2015-2016 ஆம் ஆண்டில் 210 எண்ணிக்கையாகவும் உயர்ந்துள்ளது. இவற்றைத்தவிர, மதிப்பிடப்பட்ட இறைச்சி உற்பத்தி (கோழி இறைச்சியையும் உள்ளடக்கி) 2005-2006 ஆம் ஆண்டில் 1,18,600 மெட்ரிக் டன்னில் இருந்து 2015-2016 ஆம் ஆண்டில் 5,44,500 மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது.(ஆதாரம்: மத்திய அரசின் கால்நடை பராமரிப்பு-புள்ளியியல் பிரிவு)

2. துறையின் குறிக்கோள்கள்

- ❖ *அயலின மற்றும் கலப்பின உறைவிந்தைப் பயன்படுத்தி செயற்கைமுறை கருவூட்டல் செய்து, உள்ளூர் பசுக்களின் தரத்தையும், முர்ரா இன உறைவிந்தைப் பயன்படுத்தி எருமைகளின் தரத்தையும் உயர்த்துவது.*

- ❖ *உள்நாட்டின கால்நடைகளை அவற்றின் வாழ்விடங்களிலேயே பாதுகாப்பது மற்றும் அவற்றின் எண்ணிக்கையைப் பெருக்குவது.*

- ❖ *கால்நடை மற்றும் கோழியினங்களின் உற்பத்தித் திறனைப் பெருக்கி அதன்மூலம் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியை அதிகரிப்பது.*

2016 ஆகஸ்ட் 19]

- ❖ கால்நடைகளுக்கும், கோழியினங்களுக்கும் தேவையான காலத்தில் நவீன மருத்துவ சேவை அளிப்பது.
- ❖ தடுப்பூசிகள் வாயிலாக, நோய்களை தடுத்து அனைத்துக் கால்நடைகளின் உடல்நலனை உறுதிப்படுத்துவது.
- ❖ கிராமப்புற ஏழைகளின் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்குடன் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவது.
- ❖ கால்நடைகள்மூலம் மனிதர்களுக்குப் பரவும் நோய்களைக் கண்டறிந்து கட்டுப்படுத்துவது.
- ❖ நவீன கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றி பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது.
- ❖ அடிப்படை மற்றும் நவீன கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றிய பயிற்சியை விவசாயிகளுக்கு அளிப்பது.

3. காலவரிசை முறையில் துறையின் வளர்ச்சி

ஆண்டு

1799 இந்தியாவில் குதிரைகள் மற்றும் ஒட்டகங்களின் இனப் பெருக்கத்தை மேம்படுத்துவதற்காக கிழக்கிந்திய கம்பெனியால் ஐந்து கால்நடை மருத்துவர்கள் இலண்டனில் இருந்து வரவழைக்கப்பட்டு, இந்தியாவில் கால்நடை மருத்துவ சேவை தொடங்கப்பட்டது.

1892 இராணுவ அதிகாரிகளைக் கொண்டு தனியாக கால்நடை மருத்துவத் துறை தொடங்கப்பட்டது.

1903 சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது.

1924 இராணுவத்திடம் இருந்து ஓசூர் கால்நடைப் பண்ணை எடுத்துக் கொள்ளப்பட்டு கால்நடை இனப்பெருக்க நிலையம் நிறுவப்பட்டது.

1948 துறைத் தலைவர் பதவி, கால்நடை பராமரிப்பு இயக்குநர் என்று மாற்றம் செய்யப்பட்டது. திரவ விந்தைப் பயன்படுத்தி செயற்கைமுறை கருவூட்டல் அறிமுகப்படுத்தப்பட்டது.

[2016 ஆகஸ்ட் 19

1959 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்பட்டன.

1969 கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம் தனியாகத் தொடங்கப்பட்டது.

1975 உறைவிந்துக் குச்சிகள் வாயிலாக செயற்கைமுறை கருவூட்டல் அறிமுகப்படுத்தப்பட்டது.

1977 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள்(Animal Disease Intelligence Units) தொடங்கப்பட்டன.

1985 நாமக்கல்லில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்பட்டது.

1989 தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

2003 தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை தொடங்கப்பட்டது.

2005 நபார்டு ஊரக உட்கட்டமைப்பு மேம்படுத்தும் நிதி வாயிலாக கால்நடை நிலையங்களின் உட்கட்டமைப்பு மேம்படுத்தும் பணி தொடங்கப்பட்டது.

2006 கால்நடைக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

2011
- ❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டம் மற்றும் விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்கள் தொடங்கப்பட்டன.
- ❖ தீவன உற்பத்தியை பெருமளவில் அதிகரிக்க மாநில தீவன அபிவிருத்தித் திட்டம் தொடங்கப்பட்டது.
- ❖ 585 கிளை நிலையங்கள் ஊரக கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டன.
- ❖ வருவாய் கோட்டங்களின் எண்ணிக்கைக்கு இணையாக கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் கோட்டங்களின் எண்ணிக்கை 65 லிருந்து 76 ஆக அதிகரிக்கப்பட்டது.

2016 ஆகஸ்ட் 19]

- ❖ இராணிப்பேட்டையில் அமைந்துள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள நுண்ணுயிரி தடுப்பூசிகள் தயாரிப்பு ஆய்வகம் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நல் உற்பத்தித் தரத்திற்கு (GMP) மேம்படுத்தப்பட்டது.

2012 ❖ கோழியின அபிவிருத்தித் திட்டம் தொடங்கப்பட்டது.

- ❖ 20 புதிய கால்நடை மருந்தகங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

- ❖ 50 புதிய கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

- ❖ 5 புதிய மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள் (கன்னியாகுமரி, பெரம்பலூர், உதகமண்டலம், கிருஷ்ணகிரி மற்றும் புதுக்கோட்டை) தோற்றுவிக்கப்பட்டன.

- ❖ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின்கீழ், திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் புதியதாக நிறுவப்பட்டன.

2013 ❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரகத்திற்கு தரமான சேவை மற்றும் சிறந்த நிர்வாகத்தை உறுதிப்படுத்தியதற்காக சுதந்திர தினவிழாவில் "நல் ஆளுமை விருது" வழங்கப்பட்டது.

- ❖ 100 கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டன.

- ❖ 11 புதிய கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்திப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டன.

- ❖ பன்முக கால்நடை மருத்துவமனைகள், கால்நடை பெரு மருத்துவமனைகள், கால்நடைப் பண்ணைகள் மற்றும் கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தித் திட்டப் பிரிவுகளுக்கு நுண்ணலை நுண்ணாய்வுக் கருவிகள் (Ultrasound Scanner) வழங்கப்பட்டன.

[2016 ஆகஸ்ட் 19

❖ உள்நாட்டு மாட்டினங்களான காங்கேயம், உம்பளாச்சேரி மற்றும் பர்கூர் ஆகியவற்றைப் பாதுகாக்க கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

2014 ❖ ஸ்ரீரங்கம், இலுப்பூர் மற்றும் அம்பத்தூர் ஆகிய இடங்களில் புதியதாக மூன்று கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

❖ 100 கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டன.

❖ 50 புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

❖ 15 கால்நடை நிலையங்களுக்கு கணினிமயமாக்கப்பட்ட ஊடுகதிர் கருவிகள்வழங்கப்பட்டன.

2015 ❖ தேசிய கால்நடை இயக்கத் திட்டத்தின் கீழான கால்நடை காப்பீட்டுத் திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

❖ நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி உதவியுடன் இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலைய வளாகத்தில் தரக் கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடம் (Quality Control Laboratory) ரூ.19.92 கோடி செலவில் கட்டப்பட்டு வருகின்றது.

❖ 25 கால்நடை கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தப்பட்டன.

❖ விழுப்புரம் மாவட்டம், பந்தாடு மற்றும் நாகல்பாக்கம், வேலூர் மாவட்டம் கீழ்வீதி ஆகிய இடங்களில் உள்ள மேய்க்கால் புறம்போக்கு நிலங்களில் தீவன உற்பத்தி அலகுகள் நிறுவப்பட்டன.

❖ கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் மீன் வளத் துறை ஆகியவற்றின் இயக்குனரகங்களின் நிர்வாக அலுவலகங்களுக்காக சென்னை, சைதாப்பேட்டையில் ரூ.29.7 கோடி மதிப்பீட்டில் புதிய ஐந்து மாடி ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் கட்டப்பட்டு வருகிறது.

2016 ❖ 100 புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

2016 ஆகஸ்ட் 19]

4. தமிழகத்தின் கால்நடை வளம்

கால்நடைகள் பழங்காலந்தொட்டே மக்களின் வாழ்வில் ஓர் அங்கமாக இருந்து வருகின்றன. மக்கள், கால்நடைகளை நடமாடும் சொத்தாகவும் மனிதர்களுக்கு உற்ற துணையாகவும் கருதி வருகின்றனர். கால்நடைகள்மூலம் கிடைக்கும் உற்பத்திப் பொருட்கள் மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருந்து வருகின்றன.

காங்கேயம், உம்பளாச்சேரி, ஆலம்பாடி, பர்கூர் மற்றும் புலிக்குளம் ஆகிய நாட்டின பசுக்களும், தோடா இன எருமைகளும் தமிழ்நாட்டில் வளர்க்கப்படும் உள்நாட்டு மரபினங்களாகும். இவற்றில் காங்கேயம் இன மாடுகள் திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் கரூர் ஆகிய மேற்கு மாவட்டங்களிலும், உம்பளாச்சேரி இன மாடுகள் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர் ஆகிய கிழக்கு மாவட்டங்களிலும், ஆலம்பாடி இன மாடுகள் தருமபுரி, ஈரோடு மற்றும் சேலம் ஆகிய மேற்கு மாவட்டங்களிலும், புலிக்குளம் இன மாடுகள் சிவகங்கை, மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய தென் மாவட்டங்களிலும், பர்கூர் இன மாடுகள் ஈரோடு மாவட்டத்திலும், தோடா எருமைகள் நீலகிரி மாவட்டத்திலும் வளர்க்கப்படுகின்றன. அதேபோல உள்நாட்டு செம்மறியாடுகளான மேச்சேரி (சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்கள்), இராமநாதபுரம் வெள்ளை (தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்), சென்னை சிவப்பு (சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்கள்), கீழக்கரிசல் (இராமநாதபுரம், விருதுநகர், மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள்), வேம்பூர் (தூத்துக்குடி மாவட்டம்), திருச்சி கருப்பு (பெரம்பலூர், அரியலூர், திருச்சி மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள்), கோயம்புத்தூர் (கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்கள்) மற்றும் நீலகிரி (நீலகிரி மாவட்டம்) போன்றவையும், உள்நாட்டு வெள்ளாட்டினங்களான கன்னியாடு (விருதுநகர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள்), கொடியாடு (தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள்) மற்றும் சேலம் கருப்பு (சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்) போன்றவையும் தமிழகத்தில் வளர்க்கப்படுகின்றன.

[2016 ஆகஸ்ட் 19

இத்தகைய உள்நாட்டினங்கள் மட்டுமல்லாது கூடுதலான பால் உற்பத்தியைத் தரும் ஜெர்சி கலப்பின பசுக்கள் சமவெளிப் பகுதிகளிலும், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பின பசுக்கள் மலைப் பிரதேசங்களிலும் விவசாயிகளால் வளர்க்கப்படுகின்றன.

அட்டவணை 1 : மாநில கால்நடைகள் மற்றும் கோழி இனங்களின் எண்ணிக்கையுடன் தேசிய கால்நடைகளின் எண்ணிக்கை ஒப்பீடு (19–வது கால்நடை கணக்கெடுப்பின்படி–2012)

இனம்	இந்தியாவில் எண்ணிக்கை (இலட்சங்களில்)	தமிழ்நாட்டில் எண்ணிக்கை (இலட்சங்களில்)	தமிழ்நாட்டில் உள்ள கால்நடைகளின் விழுக்காடு
பசுவினம்	1,909.04	88.14	4.62
எருமையினம்	1,087.02	7.81	0.72
செம்மறியாடுகள்	650.69	47.87	7.36
வெள்ளாடுகள்	1,351.73	81.43	6.02
பன்றிகள்	102.94	1.84	1.79
மற்றவை (குதிரைகள், மட்டக் குதிரைகள், கழுதைகள்)	9.44	0.14	3.74
மொத்த கால்நடைகள்	**5,110.86**	**227.23**	**4.44**
மொத்த கோழியினம்	**7,292.09**	**1,173.49**	**16.09**

தேசிய அளவில் தமிழ்நாடு கோழியின எண்ணிக்கையில் 2-வது இடத்திலும், செம்மறியாட்டின எண்ணிக்கையில் 4-வது இடத்திலும், வெள்ளாட்டின எண்ணிக்கையில் 7-வது இடத்திலும், பசுவின எண்ணிக்கையில் 13-வது இடத்திலும், எருமையின எண்ணிக்கையில் 14-வது இடத்திலும் உள்ளது.

2016 ஆகஸ்ட் 19]

5. நிருவாகம்


கால்நடை பராமரிப்புத் துறை, இந்திய ஆட்சிப் பணி அலுவலர் நிலையிலான கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் தலைமையின்கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தொழில்நுட்ப பணிகளில் இயக்குநருக்கு உதவுவதற்காக நான்கு கூடுதல் இயக்குநர்களும், இரண்டு இணை இயக்குநர்களும், ஒரு துணை இயக்குநரும் மற்றும் ஒன்பது உதவி இயக்குநர்களும் இயக்குனரகத்தில் பணிபுரிகின்றனர். நிர்வாகம் சம்பந்தமான பணிகளில் இயக்குநருக்கு உதவுவதற்காக மேற்கண்ட நான்கு கூடுதல் இயக்குநர்களில் ஒரு கூடுதல் இயக்குநர், ஒரு துணை இயக்குநர் மற்றும் இரண்டு நிர்வாக அலுவலர்களும், நிதி மற்றும் கணக்கு சம்பந்தமான பணிகளில் உதவுவதற்காக நிதித் துறையிலிருந்து அயற்பணியில் நிதி கட்டுப்பாட்டாளர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலரும் மற்றும் கருவூல கணக்குத் துறையிலிருந்து அயற்பணியில் கணக்கு அலுவலரும் இயக்குனரகத்தில் பணியில் உள்ளனர்.

மாவட்ட அளவில் மண்டல இணை இயக்குநர்களும் மற்றும் துணை இயக்குநர்களும், கோட்ட அளவில் உதவி இயக்குநர்களும் கால்நடை பராமரிப்புத் துறையின் பணிகளுக்கு பொறுப்பு வகிக்கின்றனர்.

இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம், கூடுதல் இயக்குநர் பணி நிலையிலான இயக்குநர் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இராணிப்பேட்டை, கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் செயல்பட்டு வரும் மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம், மாவட்டங்களில் உள்ள கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்களின் பணிகளை ஒருங்கிணைக்கிறது.

மேலும், இத்துறையில் எட்டு கால்நடைப் பண்ணைகளும், மூன்று ஆட்டுப் பண்ணைகளும், ஒரு கோழிப் பண்ணையும், ஒரு தீவன விதை உற்பத்திப் பண்ணையும் செயல்பட்டு வருகின்றன.

துறையின் நிர்வாக அமைப்பு



2016 ஆகஸ்ட் 19]

அட்டவணை 2 : அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் விவரம்

வ. எண்	பதவி பெயர்	எண்ணிக்கை
1.	இயக்குநர், கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள்	1
2.	கூடுதல் இயக்குநர்	5
3.	இயக்குநர், கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை	1
4.	இணை இயக்குநர்	33
5.	முதுநிலை ஆராய்ச்சி அலுவலர்	3
6.	துணை இயக்குநர்	42
7.	துணை இயக்குநர் (பணியாளர்)	1
8.	உதவி இயக்குநர்	311
9.	ஆராய்ச்சி அலுவலர்	7
10.	நிர்வாக அலுவலர்	17
11.	உதவி ஆராய்ச்சி அலுவலர்	22
12.	கால்நடை உதவி மருத்துவர்	2,764
13.	ஆராய்ச்சி உதவியாளர்	40
14.	மேலாளர்	49
15.	கண்காணிப்பாளர்	172
16.	முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர்	165
17.	கால்நடை ஆய்வாளர் நிலை–1	1,404
18.	கால்நடை ஆய்வாளர் நிலை–2	1,457
19.	உதவியாளர்	425
20.	சுருக்கெழுத்துத் தட்டச்சர்	32
21.	இளநிலை உதவியாளர்	352
22.	தட்டச்சர்	219
23.	கால்நடை பராமரிப்பு உதவியாளர்	4,621
24.	அடிப்படைப் பணியாளர்கள்	541
25.	இதர பணியாளர்கள்	984
	மொத்தம்	**13,668**

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

[2016 ஆகஸ்ட் 19

6. கால்நடை மருத்துவ சேவைகள்

கால்நடை பராமரிப்புத் துறை, கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு குறித்த நேரத்தில் மருத்துவ சேவையை வழங்கி, மாநிலத்தில் கால்நடைகளின் உற்பத்தி அளவு மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கிறது. மாநிலம் முழுவதும் கால்நடை மருத்துவ சேவைகள் கால்நடை மருத்துவர்கள் மூலமும், சிறு சேவைகள் மற்றும் முதலுதவி கால்நடை ஆய்வாளர்கள் மூலமாகவும் வழங்கப்படுகின்றன.

6.1. கால்நடை நிலையங்கள்

1959-60-களில் 120 என்ற குறைந்த எண்ணிக்கையில் இருந்த கால்நடை நிலையங்களின் எண்ணிக்கை 2015-2016-ல் 2,704 என்ற அளவுக்கு விரிவடைந்துள்ளது. 6 கால்நடை பன்முக மருத்துவமனைகள், 22 கால்நடை பெருமருத்துவமனைகள், 139 கால்நடை மருத்துவமனைகள், 2,481 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 56 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் ஆகியவை கள அளவில் இயங்கி வருகின்றன. அவை மாநிலத்தில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு கால்நடை மருத்துவ சேவைகளை வழங்கி வருகின்றன.

- *கால்நடை பன்முக மருத்துவமனைகள், பிரதம மருத்துவரின் தலைமையில் கால்நடை உதவி மருத்துவர்களின் உதவியுடன் 24 மணி நேரமும் செயல்பட்டு சிறப்பு சேவைகளை வழங்கி வருகின்றன.*

- *கால்நடை பெருமருத்துவமனைகள், பிரதம மருத்துவரின் தலைமையில் கால்நடை உதவி மருத்துவர்களின் உதவியுடன் சிறப்பு சேவைகளை வழங்கி வருகின்றன.*

- *கால்நடை மருத்துவமனைகள், கால்நடை மருத்துவரின் தலைமையில் கால்நடை உதவி மருத்துவர் / முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர் உதவியுடன் விவசாயிகளுக்கு கால்நடை மருத்துவ சேவைகளை வழங்கி வருகின்றன.*

- *கால்நடை மருந்தகங்கள், கால்நடை உதவி மருத்துவர்களின் கீழ் செயல்பட்டு விவசாயிகளுக்கு கால்நடை மருத்துவ சேவைகளையும், அரசு நலத் திட்டங்களையும் மற்றும் விரிவாக்க சேவைகளையும் வழங்கி வருகின்றன.*

2016 ஆகஸ்ட் 19]

❖ நடமாடும் கால்நடை மருந்தகங்கள், கால்நடை உதவி மருத்துவர்களின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணையின்படி விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே கால்நடை மருத்துவ சேவைகளை வழங்கி வருகின்றன.

❖ கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை ஆய்வாளர்கள்மூலம் முதலுதவிச் சேவைகளையும், சிறு மருத்துவ சேவைகளையும் வழங்கி வருகின்றன.

அட்டவணை 3 : மாவட்டவாரியாக கால்நடை நிலையங்களின் விவரம்

வ. எண்	மாவட்டம்	பன்முக மருத்துவமனைகள்	பெருமருத்துவ மனைகள்	மருத்துவ மனைகள்	கால்நடை மருந்தகங்கள்	நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள்	கிளைநிலையங்கள்
1.	அரியலூர்	–	–	2	40	1	5
2.	கோயம்புத்தூர்	1	1	12	87	2	26
3.	கடலூர்	–	1	5	81	1	61
4.	தருமபுரி	–	1	2	67	2	11
5.	திண்டுக்கல்	–	1	5	96	1	68
6.	ஈரோடு	–	2	6	95	3	23
7.	காஞ்சிபுரம்*	1	2	2	97	3	43
8.	கன்னியாகுமரி	–	1	2	49	2	15
9.	கரூர்	–	1	2	58	1	19
10.	கிருஷ்ணகிரி	–	1	2	67	1	13
11.	மதுரை	1	–	4	82	1	65
12.	நாகப்பட்டினம்	–	2	3	68	2	21
13.	நாமக்கல்	–	–	4	93	3	9
14.	பெரம்பலூர்	–	–	–	35	–	3
15.	புதுக்கோட்டை	–	1	4	89	2	34
16.	இராமநாதபுரம்	–	–	4	54	–	14
17.	சேலம்	1	–	6	134	6	11
18.	சிவகங்கை	–	–	2	73	–	45
19.	தஞ்சாவூர்	–	2	6	100	3	29
20.	தேனி	–	–	3	51	1	47
21.	நீலகிரி	–	1	2	25	3	11
22.	திருநெல்வேலி	1	–	7	101	1	38

வ. எண்	மாவட்டம்	பன்முக மருத்துவமனைகள்	பெருமருத்துவ மனைகள்	மருத்துவ மனைகள்	கால்நடை மருந்தகங்கள்	நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள்	கிளைநிலையங்கள்
23.	திருவள்ளூர்	–	–	5	83	1	25
24.	திருவண்ணாமலை	–	1	5	113	3	20
25.	திருவாரூர்	–	1	7	66	1	33
26.	தூத்துக்குடி	–	1	2	63	1	38
27.	திருச்சிராப்பள்ளி	1	–	8	95	2	32
28.	திருப்பூர்	–	–	7	91	1	37
29.	வேலூர்	–	1	8	112	4	29
30.	விழுப்புரம்	–	1	7	145	4	20
31.	விருதுநகர்	–	–	5	71	–	30
மொத்தம்		**6**	**22**	**139**	**2,481**	**56**	**875**

*சென்னை உட்பட

அட்டவணை 4 : ஆற்றிய பணிகள் விவரம் 2015–16 (இலட்சத்தில்)

இனம்	சிகிச்சை அளிக்கப்பட்டவை	ஆண்மை நீக்கம்	குடற்புழு நீக்கம்	செயற்கைமுறை கருவூட்டல்
பசுவினம்	117.73	1.47	51.73	53.98
எருமையினம்	8.93	0.04	6.01	2.82
செம்மறியாட்டினம்	46.28	1.59	111.64	–
வெள்ளாட்டினம்	97.25	6.84	162.66	–
நாய் மற்றும் பூனை	17.29	0.16	6.47	–
கோழியினம்	40.58	–	14.45	–
மற்றவை	3.22	0.04	2.66	–
மொத்தம்	**331.28**	**10.14**	**355.62**	**56.80**

6.2. மருந்துகள், உபகரணங்கள் மற்றும் வேதிப் பொருட்கள்

இத்துறைக்குத் தேவையான மருந்துகள், உபகரணங்கள் மற்றும் வேதிப் பொருட்கள் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படுகின்றன.

2016 ஆகஸ்ட் 19]

அட்டவணை 5 : நிதி ஒதுக்கீடு விவரம் 2015–16

வ. எண்	திட்டத்தின் பெயர்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூபாயில்
1.	பொது மருந்துகள்	22,03,86,430
2.	தீவிர சுகாதாரத் திட்டம்	1,00,00,000
3.	உபகரணங்கள் மற்றும் வேதிப் பொருட்கள்	3,05,37,830
4.	தாது உப்புக் கலவை	3,38,12,000
5.	நாட்டு மருந்துகள்	1,37,69,370
6.	சேமிப்பு நிதி	1,37,69,370
	மொத்தம்	**32,22,75,000**

அனைத்து கால்நடை நிலையங்களுக்கும், அவற்றின் நிதி உச்சவரம்பு அடிப்படையில் மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அட்டவணை 6 : கால்நடை நிலையங்களின் மருந்துகளுக்கான நிதி உச்சவரம்பு

வ. எண்	நிலையத்தின் வகை	நிதி உச்சவரம்பு 2015–16 (ரூபாயில்)
1.	கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு(22) கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடம் (2) மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம்	30,00,000
2.	கால்நடை பண்ணைகள் (11 கால்நடை பண்ணைகளுக்கு)	16,00,000
3.	அ) கால்நடை பன்முக மருத்துவமனை, சைதாப்பேட்டை	5,50,000
	ஆ) இதர கால்நடை பன்முக மருத்துவமனைகள் (ஒன்றுக்கு)	4,00,000
4.	அ) கால்நடை பெருமருத்துவமனைகள் (கடலூர், தருமபுரி, ஈரோடு, வேலூர், காஞ்சிபுரம், கும்பகோணம், தஞ்சாவூர்) (ஒன்றுக்கு)	2,85,000
	ஆ) இதர கால்நடை பெருமருத்துவமனைகள் (ஒன்றுக்கு)	2,00,000
5.	அ) கால்நடை மருத்துவமனை, இராயபுரம், அம்பத்தூர் மற்றும் சிட்லபாக்கம் (ஒன்றுக்கு)	2,50,000
	ஆ) இதர கால்நடை மருத்துவமனைகள் (ஒன்றுக்கு)	1,50,000

[2016 ஆகஸ்ட் 19

வ எண்	நிலையத்தின் வகை	நிதி உச்சவரம்பு 2015–16 (ரூபாயில்)
6.	செல்லப்பிராணிகள் மருத்துவமனை, அடையார்	1,20,000
7.	கோழிப் பண்ணை, காட்டுப்பாக்கம்	1,00,000
8.	கால்நடை மருந்தகம் (ஒன்றுக்கு)	1,00,000
9.	அ) நடமாடும் கால்நடை மருந்தகம், சைதாப்பேட்டை	70,000
	ஆ) இதர நடமாடும் கால்நடை மருந்தகங்கள் (ஒன்றுக்கு)	60,000
10.	கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்திப் பிரிவுகள் (ஒன்றுக்கு)	50,000
11.	நாய் வளர்ப்புப் பிரிவு, சைதாப்பேட்டை	30,000
12.	கால்நடை கிளை நிலையம் (ஒன்றுக்கு)	18,500

6.3. நோய் தடுப்பு, கண்டறிதல், கட்டுப்படுத்துதல் மற்றும் அறவே ஒழித்தல்

பல்வேறு நுண்ணுயிரி, நச்சுயிரி, முதல் உயிரி மற்றும் ஒட்டுண்ணி கிருமிகள், கால்நடைகள் மற்றும் கோழியினங்களைத் தாக்கி விவசாயிகளுக்கு பெரும் பொருளாதார இழப்பினை ஏற்படுத்துகின்றன. கால்நடை நோய்களைத் தடுப்பது மற்றும் அறவே ஒழிப்பது இலாபகரமான கால்நடை உற்பத்திக்கு மட்டுமின்றி, நமது கால்நடைகள் மற்றும் கால்நடை பொருட்கள் உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முக்கியமானவை ஆகும்.

இந்த நோக்கத்திற்காக மாநிலத்தில் 22 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகளும், 2 கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்களும் மற்றும் ஒரு மத்திய தொடர்பு ஆய்வுக்கூடமும் செயல்பட்டு வருகின்றன.

6.3.1 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் (Animal Disease Intelligence Unit-ADIU)

கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் நோய் கண்காணிப்பு மற்றும் பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த கால்நடை நோய்களை கடுங்கண்காணிப்பு செய்து, மாவட்ட அளவில் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் பெரும்பங்கு வகிக்கிறது. இவை, நோய் தொற்று விவரங்களைச் சேகரித்து நோய் ஏற்படக்கூடிய இடங்களை தெரிவிக்கின்றன. இது, கள கால்நடை மருத்துவர்களுக்கு முன்கூட்டியே பாதுகாப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க உதவுகிறது.

2016 ஆகஸ்ட் 19]

பொது சுகாதாரத்தை பாதுகாக்கும் பொருட்டு, இறைச்சிக் கூடங்களில் பின்பற்றப்படும் சுகாதார முறைகளை கண்காணித்தல் மற்றும் பறவைக் காய்ச்சல் முன்னெச்சரிக்கை பணிகளுக்காக, கோழியின சந்தைகள், புறக்கடை மற்றும் வணிகரீதியான கோழிப் பண்ணைகளைக் கண்காணித்தல், பறவை சரணாலயங்கள், நீர்நிலைகள், இடம்பெயரும் பறவைகள் ஆகியவற்றில் ஏற்படும் வழக்கத்திற்கு மாறான எதிர்பாராத இறப்புகளை வாரந்தோறும் கண்காணித்தல் ஆகியவை இப்பிரிவுகளின் மூலம் மேற்கொள்ளப்படும் முக்கியமான பணிகளாகும்.

அட்டவணை 7 : கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள்

வ. எண்.	கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு	சேவை செய்யும் மாவட்டங்கள்
1.	கோயம்புத்தூர்	கோயம்புத்தூர், திருப்பூர்
2.	கடலூர்	கடலூர்
3.	தருமபுரி	தருமபுரி
4.	திண்டுக்கல்	திண்டுக்கல்
5.	ஈரோடு	ஈரோடு
6.	காஞ்சிபுரம்	சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர்
7.	கரூர்	கரூர்
8.	கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி
9.	மதுரை	மதுரை, தேனி
10.	நாகப்பட்டினம்	நாகப்பட்டினம், திருவாரூர்
11.	புதுக்கோட்டை	புதுக்கோட்டை
12.	சேலம்	சேலம், நாமக்கல்
13.	சிவகங்கை	சிவகங்கை, இராமநாதபுரம்
14.	தஞ்சாவூர்	தஞ்சாவூர்
15.	திருநெல்வேலி	திருநெல்வேலி, கன்னியாகுமரி
16.	திருவண்ணாமலை	திருவண்ணாமலை
17.	தூத்துக்குடி	தூத்துக்குடி
18	திருச்சிராப்பள்ளி	திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர்

[2016 ஆகஸ்ட் 19

வ. எண்	கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு	சேவை செய்யும் மாவட்டங்கள்
19.	உதகமண்டலம்	நீலகிரி
20.	வேலூர்	வேலூர்
21.	விழுப்புரம்	விழுப்புரம்
22.	விருதுநகர்	விருதுநகர்

ஆய்வுக்கூடங்களில் அடிப்படை மற்றும் நவீன கருவிகளான இரத்தம் மற்றும் சிறுநீர் பகுப்பாய்வுக் கருவி மற்றும் உயிர்வேதியியல் பகுப்பாய்வு கருவிகள் போன்றவை உள்ளன. தடுப்பூசிகள் மற்றும் உயிரியல் பொருட்கள் ஆகியவற்றை பாதுகாத்து வைக்க குளிர்பதன அறைகள் மற்றும் குளிர்பதனப் பெட்டிகள் உள்ளன.

6.3.2 கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள் (Poultry Disease Diagnostic Laboratory-PDDL)

கோழிப் பண்ணைகள் அதிகம் உள்ள இடங்களில் கோழிப் பண்ணையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள் நாமக்கல் மாவட்டம் ஆண்டகலூர்கேட்டிலும், ஈரோட்டிலும் இயங்கி வருகின்றன. இந்த ஆய்வுக்கூடங்கள் நச்சுயிரி, நுண்ணுயிரி மற்றும் ஒட்டுண்ணி நோய்த்தாக்குதல்களை சரியாகக் கண்டறிவதற்காக பல்வேறு மாதிரிகளைப் பரிசோதிப்பதில் முதன்மையாக ஈடுபட்டுள்ளன. அத்துடன், உயிர் பாதுகாப்பு முறைகள் பற்றிய தொழில்நுட்ப அறிவுரைகளையும் விவசாயிகளுக்கு வழங்குகின்றன.

உயிர் பாதுகாப்பு நிலை II (Bio Safety Level II) *தரத்திலான இந்த ஆய்வுக்கூடங்கள் பறவைக் காய்ச்சலைக் கண்டறிவதற்கான முதற்கட்ட ஆய்வுகளையும் மேற்கொள்கின்றன.*

6.3.3 மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் (Central Referral Laboratory-CRL)

மத்திய தொடர்பு ஆய்வுக் கூடம், மாநிலத்தின் உச்ச நிலை ஆய்வுக்கூடமாகும். இது இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலைய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுக்கூட உத்திகளின்மூலம் நோய்களை உறுதிப்படுத்துவதிலும், நோய்க்கிளர்ச்சியை அறிவிப்பதிலும், நோய்க் கிளர்ச்சியின்போது நோயைக் கட்டுப்படுத்த தொழில்நுட்ப அறிவுரைகளை கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் / கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள் ஆகியவற்றிற்கு வழங்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம், ஏற்றுமதிக்கான கால்நடை உடல்நல சான்றுகளை வழங்கும் பணியையும் மேற்கொள்கிறது.

6.3.4. கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம், இராணிப்பேட்டை (Institute of Veterinary Preventive Medicine-IVPM)

இராணிப்பேட்டை, கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம் பல்வேறு கால்நடை நோய்களுக்கான தடுப்பு மருந்துகள் மற்றும் உயிரியல் பொருட்கள் தயாரிக்கக்கூடிய புகழ்பெற்ற நிலையமாகும். இந்நிலையம், முதன் முதலில் 1932 ஆம் ஆண்டு சென்னையில் "ஊநீர் நிலையம்" என்ற பெயரில் துவக்கப்பட்டது. 1942 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போரின்போது அவசர நடவடிக்கையாக இந்நிலையம் கோயம்புத்தூர் வேளாண் கல்லூரி வளாகத்திற்கு மாற்றப்பட்டது. பின்னர் 1948 ஆம் ஆண்டு இந்நிலையம் இராணிப்பேட்டையில், 129.5 ஏக்கர் பரப்பளவுள்ள, தற்போதைய வளாகத்திற்கு மாற்றப்பட்டது.

இந்த நிலையத்தில், தடுப்பூசி தயாரிக்கும் பணிகளுடன் கூடுதலாக, கோமாரி நோய்க் கிளர்ச்சி ஆய்வு, கோமாரி நோயை உண்டாக்கும் நச்சுயிரியை வகைப்படுத்துதல் மற்றும் கோமாரி நோய் தடுப்பு மருந்து அளிக்கப்பட்ட கால்நடைகளின் நோய் தடுப்பு திறன் கண்காணித்தல் குறித்த பணிகளும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழக (Indian Council of Agricultural Research) உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையமானது, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் 2013 ஆம் ஆண்டுக்கான அகில இந்திய அளவில் சிறந்த செயல்திறனுக்கான இரண்டாவது பரிசைப் பெற்றுள்ளது.

ரூ.12.02 கோடி ஒதுக்கீட்டில் உலக தரத்திற்கு இணையாக தடுப்பு மருந்துகள் தயாரிப்பதற்கு ஏதுவாக இந்நிலைய தடுப்பு மருந்து ஆய்வகங்கள் 'நல் உற்பத்தி தரத்திற்கு' (Good Manufacturing Practices) உயர்த்தப்பட்டு வருகின்றன.

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் மற்றும் நபார்டு திட்டம்மூலம் ரூ.57.98 கோடி ஒதுக்கீட்டில் நல் உற்பத்தி தரத்தில் புதிய அடைப்பான் நோய் தடுப்பு மருந்து ஆய்வகம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

நபார்டு திட்டத்தின்மூலம் ரூ.19.92 கோடியில், தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

[2016 ஆகஸ்ட் 19

ரூபாய் மூன்று கோடி செலவில் கோழி நோய் தடுப்பூசி மருந்து தயாரிக்கும் ஆய்வகத்தை நல் உற்பத்தி தரத்திற்கு மேம்படுத்தும் பணி தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடைபெற்று வருகிறது.

7. கால்நடை அபிவிருத்தி

7.1. கால்நடை பண்ணைகள்

இத்துறையில் 13 பண்ணைகள் இயங்கி வருகின்றன. அவற்றில் எட்டு கால்நடைப் பண்ணைகள், மூன்று ஆட்டுப் பண்ணைகள், ஒரு கோழிப் பண்ணை மற்றும் ஒரு பசுந்தீவன விதை உற்பத்திப் பண்ணை ஆகியவை அடங்கும். கால்நடை பராமரிப்பு தொடர்பான பல்வேறு தொழில்நுட்ப உத்திகளை கால்நடை வளர்ப்போருக்கு எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் விளக்கும் விதமாக துறை பண்ணைகள் மாதிரி அலகுகளாக செயல்பட்டு வருகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அட்டவணை 8 : துறை பண்ணைகள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் பராமரிக்கப்படும் கால்நடை இனங்கள்

வ. எண்	பண்ணையின் பெயர்	வகை	இனங்கள்
1.	அயலின கால்நடை பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)	பசுவினம்	ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், உம்பளாச்சேரி
		எருமையினம்	முர்ரா
2.	மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் (கிருஷ்ணகிரி மாவட்டம்)	பசுவினம்	ஜெர்சி கலப்பினம், பிரிசியன் கலப்பினம், சிந்தி, காங்கேயம், பர்கூர், புலிக்குளம்
		செம்மறியாடுகள்	மேச்சேரி
		வெள்ளாடுகள்	தலைச்சேரி, கொடியாடு, சேலம் கருப்பு
		பன்றிகள்	பெரிய வெள்ளை யார்க்ஷையர்
		கோழிகள்	அசில், கிரிராஜா
		குதிரைகள்	கத்தியவார் மற்றும் தரோப்ரெட் இனம் (Thoroughbred)

2016 ஆகஸ்ட் 19]

வ. எண்.	பண்ணையின் பெயர்	வகை	இனங்கள்
3.	மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்)	பசுவினம்	ஜெர்சி கலப்பினம், சாஹிவால்
		செம்மறியாடுகள்	கீழக்கரிசல்
		வெள்ளாடுகள்	கன்னி ஆடு
		பன்றிகள்	பெரிய வெள்ளை யார்க்ஷையர்,லேண்ட்ரேஸ்
		கோழிகள்	வனராஜா, கிரிராஜா, அசில்
4.	மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்)	பசுவினம்	ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், பிரிசியன், பிரிசியன் கலப்பினம்
5.	மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்)	பசுவினம்	ஜெர்சி கலப்பினம், பிரிசியன் கலப்பினம்
		செம்மறியாடுகள்	இராமநாதபுரம் வெள்ளை
		வெள்ளாடுகள்	ஜமுனாபாரி
		பன்றிகள்	லேண்ட்ரேஸ், பெரிய வெள்ளை யார்க்ஷையர்
6.	மாவட்ட கால்நடைப் பண்ணை, நடுவூர்(தஞ்சாவூர் மாவட்டம்)	பசுவினம்	ஜெர்சி
		எருமையினம்	முர்ரா
7.	மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்)	பசுவினம்	ஜெர்சி கலப்பினம், பிரிசியன், பிரிசியன் கலப்பினம், தார்ப்பார்க்கர், சாஹிவால்
		செம்மறியாடுகள்	இராமநாதபுரம் வெள்ளை
		வெள்ளாடுகள்	ஜமுனாபாரி, தலைச்சேரி
		பன்றிகள்	பெரிய வெள்ளை யார்க்ஷையர்
		கோழிகள்	அசில்
8.	கால்நடைப் பண்ணை, கொருக்கை (திருவாரூர் மாவட்டம்)	பசுவினம்	உம்பளாச்சேரி

வ. எண்	பண்ணையின் பெயர்	வகை	இனங்கள்
9.	ஆட்டுப் பண்ணை, சின்னசேலம் (விழுப்புரம் மாவட்டம்)	செம்மறியாடுகள்	மேச்சேரி, சென்னை சிவப்பு
		வெள்ளாடுகள்	சேலம் கருப்பு, தலைச்சேரி
10.	ஆட்டுப்பண்ணை, முகுந்தராயபுரம் (வேலூர் மாவட்டம்)	செம்மறியாடுகள்	சென்னைசிவப்பு
11.	ஆட்டுப் பண்ணை, சாத்தூர் (விருதுநகர் மாவட்டம்)	செம்மறியாடுகள்	வேம்பூர்
		வெள்ளாடுகள்	கன்னி ஆடு
12.	கோழிப் பண்ணை, காட்டுப்பாக்கம் (காஞ்சிபுரம் மாவட்டம்)	கோழிகள்	வனராஜா, கிரிராஜா, வெள்ளை லகார்ன், அசில், கிராம ஸ்ரீ
		வான்கோழிகள்	பிராட்பிரெஸ்டெடு பிரான்ஸ், பெல்ட்ஸ்வில்லி வெள்ளை
13.	தீவன விதை உற்பத்திப் பண்ணை, படப்பை (காஞ்சிபுரம் மாவட்டம்)		கோளப்பாஸ் 29, வேலி மசால், அகத்தி

7.1.1. உறைவிந்து உற்பத்தி

உறைவிந்து உற்பத்தி நிலையமே செயற்கைமுறை கருவூட்டலின் முக்கிய அங்கமாகும். இது, தரமான உறைவிந்து உற்பத்தி என்ற முதன்மை நோக்கத்துடன், விவசாயிகளால் பராமரிக்கப்படும் மாட்டினங்களில் சிறந்த கருவுறு தன்மை, சினைபிடிப்புவீதம் மற்றும் விரைவான மரபுவழி முன்னேற்றத்தை உறுதிப்படுத்தவே செயல்படுகிறது.

மூன்று உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் ஈச்சங்கோட்டை, ஓசூர் மற்றும் உதகமண்டலம் ஆகிய கால்நடை பண்ணைகளில் செயல்பட்டு வருகின்றன. தரமான விந்தினை உற்பத்தி செய்வதற்கு, இந்திய அரசினால் உறைவிந்து உற்பத்தி நிலையங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச தர வழிமுறைகள் இந்த நிலையங்களில் முறையாக பின்பற்றப்படுகின்றன. இந்நிலையங்களில்

2016 ஆகஸ்ட் 19]

ஜெர்சி, ஹோல்ஸ்டீன் பிரிசியன், ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டீன் பிரிசியன் கலப்பினம், சிந்தி, காங்கேயம், உம்பளாச்சேரி, பர்கூர், புலிக்குளம் மற்றும் முர்ரா ஆகிய இனங்களின் பொலிகாளைகள் பராமரிக்கப்படுகின்றன.

அட்டவணை 9 : உறைவிந்து உற்பத்தி (இலட்சத்தில்)

வ. எண்	உறைவிந்து உற்பத்தி நிலையம்	இனம்	2011–12	2012–13	2013–14	2014–15	2015–16
1.	அயலின கால்நடை பெருக்கப் பண்ணை, ஈச்சங் கோட்டை	ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், உம்பளாச் சேரி, முர்ரா	18.05	30.76	32.66	39.71	42.20
2.	மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒசூர்	ஜெர்சி கலப்பினம், சிந்தி, காங்கேயம், புலிக்குளம், பர்கூர்	7.89	6.78	6.97	11.30	9.55
3.	மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலம்	ஜெர்சி, ஜெர்சி கலப்பினம், பிரிசியன், பிரிசியன் கலப்பினம்	13.73	13.36	18.42	19.16	18.37
மொத்தம்			**39.67**	**50.90**	**58.05**	**70.17**	**70.12**

7.1.2. தீவன அபிவிருத்தி

கால்நடை வளர்ப்பில், தீவனச் செலவு மொத்தச் செலவினத்தில் 55-60 விழுக்காடு ஆகும். எனவே, பொருளாதார ரீதியான பண்ணையத்திற்கு சிறப்பான முறையில் தீவனம் அளிப்பதே மிகவும் முக்கியமான நோக்கமாகும். கால்நடைகளுக்கு அனைத்து சத்துக்களையும் கொண்ட சமச்சீரான உணவை சரி விகித அளவில் வழங்க வேண்டும்.

2015-16 ஆம் ஆண்டு 1,455.68 ஏக்கர் பண்ணை நிலங்களில் 11,433.419 மெட்ரிக் டன் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்பட்டது. இதில் 1,243.40 மெட்ரிக் டன் பசுந்தீவனம் டிசம்பர் 2015-ல் ஏற்பட்ட பெருவெள்ளப் பெருக்கில் பாதிக்கப்பட்ட கடலூர், திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள கால்நடைகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

[2016 ஆகஸ்ட் 19

7.2. கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி பிரிவுகள் (Cattle Breeding and Fodder Development -CBFD)

மாநிலத்தில், சென்னை மாவட்டம் நீங்கலாக, 31 மாவட்டங்களில், துணை இயக்குநர் தலைமையில் தலா ஒரு கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி பிரிவு செயல்பட்டு வருகின்றது. இந்தப் பிரிவுகள் செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களுக்குத் தேவையான உள்ளீடுகளை காலமுறையில் விநியோகம் செய்து வருவதுடன் தீவன விதைகள் விநியோகம் மற்றும் தீவன அபிவிருத்திப் பணிகளையும் கண்காணித்து வருகின்றன.

7.3. நாய் இனவிருத்திப் பிரிவு

இராஜபாளையம், கோம்பை, சிப்பிப்பாறை மற்றும் கன்னி ஆகிய சிறந்த நாட்டின நாய் இனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. இந்த நாட்டின நாய்களைப் பாதுகாக்கவும் பெருக்கவும் 1980 ஆம் ஆண்டில் சென்னை சைதாப்பேட்டையில் நாய் வளர்ப்புப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டது. இவற்றின் குட்டிகள் பொதுமக்களுக்கு பதிவு மூப்பு அடிப்படையில் அரசு நிர்ணயிக்கும் விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

8. திட்டங்கள்

கால்நடை பராமரிப்பு, இலட்சக்கணக்கான சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற ஏழை மக்களுக்கு வாழ்வாதாரத்தை அளிக்கும் தொழிலாக விளங்குகிறது. வேலைவாய்ப்பை உருவாக்கக் கூடிய திட்டங்கள் முறையாக செயல்படுத்தப்படும்போது கிராமப்புறப் பகுதிகளில் நீடித்த, நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும். இதனைக் கருத்தில் கொண்டு ஏழை, எளிய மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான, பயனாளிகள் சார்ந்த பல்வேறு திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது.

8.1. விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள்/ செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 9-7-2011 அன்று அறிவித்தபடி, தமிழ்நாட்டில் மீண்டும் ஒரு வெண்மைப் புரட்சியை உருவாக்கும் வகையில் விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும்

2016 ஆகஸ்ட் 19]

திட்டத்தின்கீழ் ஊரக பகுதிகளில் வாழ்கின்ற ஏழைக் குடும்பங்களுக்கு பயனாளி ஒருவருக்கு ஒரு கறவைப் பசு வீதம், ஒவ்வொரு ஆண்டும் 12,000 கலப்பின பசுக்கள் என்ற எண்ணிக்கையில் கடந்த ஐந்து ஆண்டுகளில், 60,000 பயனாளிகளுக்கு கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மற்றொரு திட்டமான விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின்படி, ஊரக பகுதிகளில் வசித்து வரும் நிலமற்ற ஏழ்மையிலும் ஏழ்மை நிலையிலுள்ள பயனாளி ஒருவருக்கு தலா நான்கு விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வீதம் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏழு இலட்சம் பயனாளிகளுக்கு 28 இலட்சம் ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காக நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 15.08.2013 அன்று புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்ற சுதந்திர தின விழா நிகழ்ச்சியின்போது, கால்நடை பராமரிப்புத் துறைக்கு “நல் ஆளுமை விருது” வழங்கினார்கள்.

கிராமப்புற பெண்களை பொருளாதார ரீதியில் தன்னிறைவு பெற்றவர்களாக ஆக்கிய, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்கள் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து, இந்தத் திட்டங்கள் இந்நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். விலையில்லா கறவைப் பசு ஒன்றின் கொள்முதல் விலை ரூ.30,000-லிருந்து ரூ.35,000 ஆக நடப்பாண்டில் உயர்த்தி வழங்கப்படும்.

முக்கிய அம்சங்கள்

அ. விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டம்

❖ *இத்திட்டம் வருவாய் கிராமங்களின் மொத்த எண்ணிக்கையைக் காட்டிலும் குறைவான எண்ணிக்கையிலான கூட்டுறவு சங்கங்கள் இருக்கும் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

[2016 ஆகஸ்ட் 19

- ❖ பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் இல்லாத கிராம ஊராட்சிகளில் விலையில்லா கறவை பசுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கறவைப் பசுக்கள் வழங்கப்படுவதையடுத்து இந்த கிராமங்களில் புதிய பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டு, பயனாளிகளிடமிருந்து பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.
- ❖ இத்திட்டத்தில் பெண்கள் மட்டுமே பயனாளியாக இருத்தல் வேண்டும்.
- ❖ கறவை பசுக்களை அண்டை மாநிலங்களிலிருந்து பயனாளிகளே தேர்வு செய்து வாங்குகின்றனர்.
- ❖ கறவைப் பசுக்களுக்கான காப்பீடு அரசு செலவிலேயே, கொள்முதல் செய்யப்படும் இடத்தில் இருந்தே மேற்கொள்ளப்படுகிறது.

ஆ. விலையில்லா வெள்ளாடுகள்/செம்மறியாடுகள் வழங்கும் திட்டம்

- ❖ ஒவ்வொரு பயனாளிக்கும் ஆறு முதல் எட்டு மாத வயதுடைய ஒரு கிடா மற்றும் மூன்று பெட்டை ஆடுகள் வழங்கப்படுகின்றன.
- ❖ வெள்ளாடுகள் செம்மறியாடுகளை பயனாளிகளே உள்ளூர் சந்தையிலிருந்து கொள்முதல் செய்கின்றனர்.
- ❖ கால்நடைகளுக்கான காப்பீடு அரசு செலவிலேயே, கொள்முதல் செய்யப்படும் இடத்தில் இருந்தே மேற்கொள்ளப்படுகிறது.

தகுதியுடைமைக்கான வரையறைகள்

- ❖ இரண்டு திட்டங்களுக்கும் ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர், மூத்த தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினத்தைச் சேர்ந்த வார்டு உறுப்பினர், ஊராட்சி நிலை கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர், கிராம வறுமை ஒழிப்புக் குழுச் செயலர் அல்லது சுய உதவிக் குழு பிரதிநிதி, கால்நடை உதவி மருத்துவர் மற்றும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கிராம நிலையிலான குழுவால் பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். பயனாளிகளின்

இறுதி பட்டியல் கிராம சபையின்மூலம் ஒப்புதல் பெறப்படுகிறது. விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்திற்காக பயனாளியைத் தேர்ந்தெடுப்பதில் கிராம நிலையிலான குழுவில் துணைப் பதிவாளர் (பால்வளம்) அலுவலகத்தில் உள்ள விரிவாக்க அலுவலர் அல்லது முதுநிலை ஆய்வாளரும் உறுப்பினராகச் செயல்படுவார்.

❖ இத்திட்டத்தில் பெண்கள் மட்டுமே பயனாளி ஆவர். விதவைகள், ஆதரவற்றோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

❖ இரு திட்டங்களுக்கும், பயனாளி கிராம ஊராட்சியில் நிரந்தரமாக வசிப்பவராகவும், 60 வயதுக்குள் இருப்பவராகவும் இருத்தல் வேண்டும். வெள்ளாடுகள்/ செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தில் ஆடுகளை சிறப்பாக வளர்க்கும் பொருட்டு பயனாளியின் குடும்ப உறுப்பினர்களில் ஒருவராவது 18 முதல் 60 வயதுக்குள் இருக்க வேண்டும்.

❖ பயனாளிகளில் குறைந்தபட்சம் 30 விழுக்காட்டினர் கட்டாயமாக ஆதி திராவிடர்/பழங்குடியினர் இனத்தை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

❖ பயனாளிகள்/அவரது நெருங்கிய உறவினர்கள், மத்திய/ மாநில அரசின் அல்லது எந்த ஒரு நிறுவனத்தின்/கூட்டுறவு சங்கத்தின் பணியாளராகவோ, ஏதேனும் உள்ளாட்சி அமைப்பில் உறுப்பினராகவோ இருத்தல் கூடாது.

❖ மேலும், விலையில்லா கறவைப் பசு வழங்கும் திட்டத்தின் பயனாளி அல்லது குடும்ப உறுப்பினர் ஒரு ஏக்கர் நிலத்திற்கு மேல் நிலமுடையவராக இருத்தல் கூடாது.

❖ விலையில்லா வெள்ளாடுகள்/செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின் பயனாளி நிலமற்ற ஏழை விவசாய தொழிலாளியாக இருத்தல் வேண்டும்.

சாதனைகள்

விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டம் மற்றும் விலையில்லா வெள்ளாடுகள்/செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்களின்கீழ், 60,000 பெண் பயனாளிகளுக்கு 60,000 கறவைப்

[2016 ஆகஸ்ட் 19

பசுக்களும், ஏழ்மையிலும் ஏழ்மை நிலையில் உள்ள 7,00,000 பெண்களுக்கு 28,00,000 வெள்ளாடுகள்/செம்மறியாடுகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கறவைப் பசுக்களின் வாயிலாக தினமும் தோராயமாக 2.66 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்தக் கறவைப் பசுக்கள் ரூ.37.89 கோடி மதிப்பிலான 75,796 கன்றுகளை ஈன்றுள்ளன. மேலும், வழங்கப்பட்ட ஆடுகள், ரூ.1,116 கோடி மதிப்பிலான 44.67 இலட்சம் குட்டிகளை ஈன்றுள்ளன. விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள்/செம்மறியாடுகள் திட்டத்தில் வழங்கப்பட்ட கால்நடைகளின்மூலம் கிடைக்கப்பெற்ற சுமார் 6.71 இலட்சம் மெ.டன் தொழு உரத்தின் மதிப்பு ரூ.108.04 கோடி ஆகும். இதன் வாயிலாக கிராமப்புற ஏழை எளிய பெண்கள் பொருளாதார ஏற்றம் அடைந்துள்ளனர்.

8.2. கோழியின அபிவிருத்தித் திட்டம் (Scheme for Poultry Development - SPD)

நாமக்கல் மாவட்டத்தை மையமாகக் கொண்டு, தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியில் கோழிப் பண்ணைத் தொழில், வணிக ரீதியில் அபிவிருத்தியாகியுள்ளது. இந்த வெற்றியை, இதர மாவட்டங்களில் பிரதிபலிக்கச் செய்வதற்காகவும், கோழிப் பண்ணைத் தொழில் மேற்கொள்ளப்படாத பகுதிகளில் கோழிப் பண்ணைத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காகவும், தமிழ்நாடு அரசு, 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.22.35 கோடி நிதி ஒதுக்கீட்டில் கோழி அபிவிருத்தித் திட்டத்தைத் தொடங்கியது. இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, 2013-2014, 2014-2015 மற்றும் 2015-2016 ஆம் ஆண்டுகளிலும், கோழிப் பண்ணைத் தொகுப்புகளை ஏற்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு ஆண்டும் ரூ.25 கோடி ஒதுக்கீட்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது.

பயனாளிகளில் குறைந்தபட்சம் 30 விழுக்காட்டினர் கட்டாயமாக ஆதி திராவிடர்/பழங்குடியினர் இனத்தை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

8.2.1. கறிக்கோழி பண்ணை நிறுவுதல்

கறிக்கோழி வளர்ப்பு, ஒருங்கிணைப்பு மூலமாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன், அதில் ஒருங்கிணைப்பாளர்கள் ஒரு நாள் வயதுள்ள கோழிக் குஞ்சுகள், நோய் பாதுகாப்பு மற்றும் கோழிகளுக்குத் தேவையான தீவனங்களை பண்ணையாளர்களுக்கு

2016 ஆகஸ்ட் 19]

வழங்குகிறார்கள். மேலும், ஒருங்கிணைப்பாளர்களே உற்பத்தியாகும் கறிக்கோழிகளை சந்தைப்படுத்துதலையும் மேற்கொள்கிறார்கள். இதற்கான வளர்ப்புத் தொகையை ஒருங்கிணைப்பாளர்கள் பண்ணையாளர்களுக்கு வழங்கி வருகிறார்கள். 5,000 கோழிகள் கொண்ட கறிக் கோழிப் பண்ணை, ஒரு குடும்பத்தினுடைய உழைப்பை மட்டுமே கொண்டு இலாபகரமாக செயல்பட முடியும். ஆதலால், கூடுதலாக பணியாளர் எவரையும் ஈடுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை. இத்திட்டத்தின்கீழ் பயனாளி ஒருவருக்கு மாநில அரசின் 25 விழுக்காடு மானியமாக ரூ.2,68,750 வழங்கப்பட்டு வருகிறது.

8.2.2. நாட்டுக்கோழி வளர்ப்பு

நாட்டுக்கோழி இறைச்சிக்கு மாநிலமெங்கும் நல்ல விற்பனை வாய்ப்பு இருப்பதால், நாட்டுக்கோழிகளை 250/500 என்ற சிறிய அளவில் இலாபகரமாக வளர்க்கவும் மற்றும் பயனாளிகளே அதனை விற்பனை செய்யவும் ஊக்குவிக்கப்படுகின்றனர். பயனாளிகள் நாட்டுக்கோழி இனவிருத்தியாளர்களிடமிருந்தோ/ குஞ்சு பொரிப்பு நிறுவனங்களிடமிருந்தோ கோழிக் குஞ்சுகளைப் பெற்றுக் கொள்ளலாம். நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 250 கோழிகளை வளர்ப்பதற்கு பயனாளி ஒருவருக்கு மாநில அரசின் 25 விழுக்காடு மானியமாக ரூ.32,375 வழங்கப்பட்டு வருகிறது. பயனாளிகளை இந்தத் தொழிலில் தொடர்ந்து ஈடுபட ஊக்குவிக்கும்பொருட்டு, கோழிக் குஞ்சுகளின் விலையில் இரண்டாவது மற்றும் மூன்றாவது அணிக்கு முறையே 50 விழுக்காடு மற்றும் 30 விழுக்காடு ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.

சாதனைகள்

கோழி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், 2012-2013 முதல் 25 மாவட்டங்களில் ரூ.97.35 கோடி மொத்த செலவினத்தில் 2,362 கறிக்கோழிப் பண்ணைகளும், 10,358 நாட்டுக் கோழிப் பண்ணைகளும் நிறுவப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் வாயிலாக இதுவரை, கறிக்கோழிப் பண்ணை அலகுகளிலிருந்து 3.5 இலட்சம் மெ.டன் கறிக்கோழி இறைச்சியும், நாட்டுக் கோழிப் பண்ணை அலகுகளிலிருந்து 0.19 இலட்சம் மெ.டன் நாட்டுக் கோழி இறைச்சியும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளால் கறிக்கோழி மற்றும் நாட்டுக் கோழி அலகுகளிலிருந்து முறையே

ரூ.140 கோடி மற்றும் ரூ.289 கோடி கூடுதல் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

கோழியின அபிவிருத்தித் திட்டம் 2016-2017 ஆம் ஆண்டிலும் ரூ.25 கோடி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

8.3. தீவன அபிவிருத்தி

கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் அடர் தீவனமும், பசுந்தீவனமும் முக்கிய பங்கு வகிக்கின்றன. நல்ல தரமான பசுந்தீவனத்தை அடர் தீவனத்துடன் கலந்து கொடுப்பதால் பசுக்கள் மற்றும் எருமைகளில் காலதாமதமாக கருத்தரிப்பது குறைக்கப்படுகிறது. இதன் காரணமாக கன்று பிறப்புகளுக்கு இடையேயுள்ள காலம் குறைவதால், பண்ணை வருமானம் அதிகரிக்க வழி ஏற்பட்டுள்ளது.

8.3.1. மாநில தீவன அபிவிருத்தித் திட்டம் (State Fodder Development Scheme-SFDS)

அளவு அடிப்படையிலும், தர அடிப்படையிலும் பசுந்தீவன தேவைக்கும் உற்பத்திக்கும் மிகப்பெரிய இடைவெளி காணப்படுகிறது. உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் இருக்கும் வளங்களை திறமையாகப் பயன்படுத்திக் கொள்ளுதல் வாயிலாக, உலர் தீவனம் மற்றும் பசுந்தீவனத்தின் தேவைக்கும் உற்பத்திக்கும் உள்ள இடைவெளியைக் குறைப்பதற்காக, 2011-2012 முதல் இந்த அரசு, மாநில தீவன அபிவிருத்தித் திட்டத்தை ரூ.115 கோடி செலவில் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் பயனாளிகளில் குறைந்தபட்சம் 30 விழுக்காட்டினர் கட்டாயமாக ஆதி திராவிடர் / பழங்குடியினர் இனத்தை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு:

- *மாநிலம் முழுவதும் ஏறத்தாழ 1.62 இலட்சம் ஏக்கர் விவசாயிகளின் நிலங்கள் பசுந்தீவன அபிவிருத்தியின்கீழ் கொண்டு வரப்பட்டு, 6,720 இலட்சம் கம்பு நேப்பியர் தீவன புல் கரணைகள், 2,070.80 மெ. டன் தீவன சோள விதைகள், 383.16 மெ. டன் தீவன காராமணி விதைகள் மற்றும் 18 மெ. டன் கோ.எப்.எஸ் 29 விதைகள் ஆகியவை*

2016 ஆகஸ்ட் 19]

வழங்கப்பட்டதன்மூலம் 112 இலட்சம் மெ. டன் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

❖ கிடைக்கும் பசுந்தீவனத்தை சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்வதற்காக, 12,703 மின்சாரத்தில் இயங்கும் புல் நறுக்கும் கருவிகள் 75 விழுக்காடு மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

❖ தீவனம் அதிகம் கிடைக்கும் காலத்தில் அதைப் பதப்படுத்தி ஊறுகாய்ப்புல் தயாரித்து பற்றாக்குறையான காலங்களில் பயன்படுத்திட, 250 கிலோ கொள்ளளவு கொண்ட 40,000 சைலோ பைகள் ஒரு விவசாயிக்கு நான்கு பைகள் வீதம் 10,000 விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

❖ குறைவான நீர் ஆதாரத்தைப் பயன்படுத்தி, பசுந்தீவன உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் 10,483 நீர் தெளிப்பான் கருவிகள் 75 விழுக்காடு மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

❖ மிகவும் தரமான, புரதச் சத்து நிறைந்த, குறைந்த செலவில் உற்பத்தி செய்யக்கூடிய, அசோலா பாசியை வளர்த்து தீவனச் செலவைக் குறைக்க, மாநிலம் முழுவதும் 20,958 அசோலா அலகுகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

❖ கால்நடைகளுக்கு மரத்தீவனம் வழங்கும் பொருட்டு, அரசுப் பண்ணைகளில் கல்யாண முருங்கை, வெள்வேல், அகத்தி, சுபாபுல், சரக்கொன்றை, கிளிரிசிடியா போன்ற 32 இலட்சம் தீவன மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

❖ தேவையான நேரங்களில் தீவன விதைகள் விவசாயிகளுக்குத் தடையின்றி கிடைக்கும் பொருட்டு, தீவன விதை உற்பத்தி அலகுகள் துறைப் பண்ணைகளில் நிறுவப்பட்டுள்ளன.

❖ மேற்கண்ட திட்டம் 2016-2017 ஆம் ஆண்டிலும் ரூ.25 கோடி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

[2016 ஆகஸ்ட் 19

8.3.2 மேய்க்கால் புறம்போக்கு நிலங்களில் தீவன உற்பத்தி அலகுகளை நிறுவுதல்

மேய்க்கால் நிலங்கள், ஏழை விவசாயிகளின் கால்நடைகளின் மேய்ச்சலுக்கான ஆதாரமாக விளங்குகின்றன. அதிக அளவிலான பசுந்தீவனம் உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக, இந்த மேய்க்கால் நிலங்களுக்குப் புத்துயிரூட்டுவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. வேலூர் மாவட்டத்தில் 83.5 ஏக்கர் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் 61 ஏக்கர் மேய்க்கால் நிலங்கள் கண்டறியப்பட்டு, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையுடன் இணைந்து தீவன உற்பத்தி அலகுகள் நிறுவப்பட்டுள்ளன. இந்தத் தீவன உற்பத்தி அலகுகள்மூலம் சுற்றுப்புற கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு ஆண்டு முழுவதும் பசுந்தீவனம் வழங்கப்படும். ஐந்து ஆண்டு காலத்திற்கு பிறகு இந்த தீவன உற்பத்தி அலகுகள் தொடர் பராமரிப்பு மற்றும் பயன்பாட்டிற்கு சம்பந்தப்பட்ட ஊராட்சி அமைப்பிடம் ஒப்படைக்கப்படும். இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.6.94 கோடி ஆகும்.

8.3.3. தீவன கிடங்குகள்

வறட்சிக் காலங்களில் தீவனப் பற்றாக்குறை காரணமாக கால்நடைகளை விவசாயிகள் இடர்ப்பாடடைந்து விற்பதைத் தடுப்பதற்காக ரூ.19.30 கோடி மொத்த ஒதுக்கீட்டில் 201 தீவன கிடங்குகள் ஏற்படுத்தப்பட்டன. ஒரு கால்நடைக்கு நாளொன்றுக்கு மூன்று கிலோ வீதம் ஒரு பயனாளிக்கு ஐந்து கால்நடைகளுக்கு மிகாமல், கிலோ இரண்டு ரூபாய் வீதம் உலர் தீவனம் வழங்கப்பட்டது. இவற்றின் வாயிலாக 31,335 மெ.டன் உலர் தீவனம் 2,89,856 விவசாயிகளின் 12,31,603 கால்நடைகள் பயன்பெறும் வண்ணம் வழங்கப்பட்டுள்ளது.

8.4. உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள்

உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, சிறந்த கால்நடை மருத்துவ சேவைகளை வழங்குவதன் வாயிலாக, கால்நடை உற்பத்தித் திறன் அதிகரிக்கும். ஊரக மேம்பாட்டை முதன்மை

2016 ஆகஸ்ட் 19]

நோக்கமாகக் கொண்டு, மாநில, மைய அரசின் நிதி மற்றும் நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (RIDF) மூலம் துறையின் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

2011-2012 முதல் 2015-2016 முடியவுள்ள காலத்தில், பல்வேறு திட்டங்களின்கீழ் 1,615 புதிய கால்நடை நிலைய கட்டடங்கள் ரூ.422.376 கோடி மொத்த ஒதுக்கீட்டில் கட்டப்பட்டன.

அட்டவணை எண் 10 : கட்டமைப்பு மேம்பாடு—கட்டுமானப் பணிக்கான மொத்த ஒதுக்கீடு

வ. எண்	திட்டத்தின் பெயர்	கட்டடங்களின் எண்ணிக்கை	மொத்த ஒதுக்கீடு (ரூ. கோடியில்)
1.	மாநில நிதி	21	35.700
2.	கால்நடை மருத்துவ நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டுதல் (ESVHD)	256	25.516
3.	தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் (NADP)	95	16.670
4.	நபார்டு (NABARD)	1,243	344.490
	மொத்தம்	**1,615**	**422.376**

8.4.1. கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் புனரமைத்தல்

கடந்த ஐந்து ஆண்டுகளில் 1,163 கால்நடை நிலைய கட்டடங்களில் ரூ.78.31 கோடி செலவில் பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

8.4.2. ஒருங்கிணைந்த அலுவலக வளாகம் கட்டுதல்

2015-2016 ஆம் ஆண்டில், ரூ.29.70 கோடி நிதி ஒதுக்கீட்டில் புதிய ஐந்து மாடி கட்டடம், கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் மீன்வளத் துறையின் இயக்குனரகங்களின் நிர்வாக அலுவலகங்களுக்காக, சென்னை சைதாப்பேட்டையில் கட்டப்பட்டு வருகிறது.

[2016 ஆகஸ்ட் 19

8.5 கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்தும் திட்டங்கள்

கால்நடை உற்பத்தித் தொழிலுக்கு கால்நடைகளின் உடல்நலனே முதுகெலும்பு போன்றது. நுண்ணுயிரி மற்றும் ஒட்டுண்ணி தாக்குதல்கள் கால்நடைகளில் பெரும் பாதிப்பையும், இறப்பையும் மற்றும் உற்பத்தி இழப்பையும் ஏற்படுத்துகின்றன. கால்நடை நோய்களை தடுப்பது மற்றும் அறவே ஒழிப்பது இலாபகரமான கால்நடை உற்பத்திக்கு மட்டுமின்றி, நமது கால்நடைகள் மற்றும் கால்நடை பொருட்கள் உலக சந்தையில் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முக்கியமான காரணி ஆகும். முறையான நோய் தடுப்பு நடவடிக்கைகள் வாயிலாக, நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டு, அறவே ஒழிக்கப்படும்.

8.5.1. கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்துவதற்காக மாநிலங்களுக்கு உதவும் திட்டம் (Asistance to States for Control of Animal Diseases-ASCAD)

கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு மாநிலங்களுக்கு உதவிடும் (அஸ்காட்) திட்டம் மத்திய அரசின் 60 விழுக்காடு நிதியுதவியுடனும் மாநில அரசின் 40 விழுக்காடு நிதியுதவியுடனும் செயல்டுத்தப்படுகிறது. அஸ்காட் திட்டத்தின்கீழ் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த அடைப்பான், சப்பை நோய், தொண்டை அடைப்பான் மற்றும் ஆட்டம்மை போன்ற நோய்களுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. மேற்கண்ட நோய்களுக்கான தடுப்பூசி மருந்துகள் இராணிப்பேட்டை கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டு, மாநிலம் முழுவதும் பாதிப்புக்கு இலக்காகும் கால்நடைகளுக்கு இலவசமாக போடப்பட்டு வருகிறது.

அட்டவணை 11 : அஸ்காட் திட்டத்தின்கீழ் 2015–2016 ஆம் ஆண்டில் தடுப்பூசி போடப்பட்ட விவரம்

வ எண்	நோய் பெயர்	தடுப்பூசி போடப்படும் நோய்த்தொற்று மாவட்டங்களின் எண்ணிக்கை	தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகள் எண்ணிக்கை (இலட்சத்தில்)
1.	அடைப்பான்	20	39.19
2.	சப்பை நோய்	9	5.25
3.	தொண்டை அடைப்பான்	4	0.31
4.	ஆட்டம்மை	3	0.10

2016 ஆகஸ்ட் 19]

முந்தைய 5 ஆண்டுகளில் ஏற்பட்ட நோய்த் தாக்கத்தின் அடிப்படையில் நோய் முன்னறிவிப்பு மேற்கொள்ளப்படுகிறது. எனவே, நோய்க் கிளர்ச்சி ஏற்படுவதைத் தடுப்பதற்காக, நோய் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ள காலத்திற்கு முன்பாகவே தடுப்பூசிகள் போடப்படுகின்றன.

அ. அடைப்பான் (Anthrax)

முந்தைய காலங்களில் நிகழ்ந்த நோய்க் கிளர்ச்சிகளின் அடிப்படையில் 2016-2017 ஆம் ஆண்டில் தருமபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, திருநெல்வேலி, திருவள்ளூர், தூத்துக்குடி, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 19 மாவட்டங்களில், சுமாராக 21.38 இலட்சம் மாட்டினங்கள், 9.65 இலட்சம் செம்மறியாடுகள் மற்றும் 11.41 இலட்சம் வெள்ளாடுகளுக்கு தடுப்பூசி போட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆ. சப்பை நோய் (Black Quarter)

முந்தைய காலங்களில் நிகழ்ந்த நோய்க் கிளர்ச்சிகளின் அடிப்படையில் 2016-2017 ஆம் ஆண்டில், கடலூர், தருமபுரி, காஞ்சிபுரம், புதுக்கோட்டை, சிவகங்கை, தஞ்சாவூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 10 மாவட்டங்களில் சுமாராக 5.40 இலட்சம் மாட்டினங்களுக்கு தடுப்பூசி போட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இ. தொண்டை அடைப்பான் (Haemorrhagic septicaemia)

முந்தைய காலங்களில் நிகழ்ந்த நோய்க் கிளர்ச்சிகளின் அடிப்படையில் 2016-2017 ஆம் ஆண்டில், கிருஷ்ணகிரி, வேலூர், தூத்துக்குடி மற்றும் விழுப்புரம் ஆகிய நான்கு மாவட்டங்களில் சுமாராக 33,000 மாட்டினங்களுக்கு தடுப்பூசி போட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஈ. ஆட்டம்மை (Sheep pox)

முந்தைய காலங்களில் நிகழ்ந்த நோய்க் கிளர்ச்சிகளின் அடிப்படையில் 2016-2017 ஆம் ஆண்டில், தருமபுரி, சேலம், சிவகங்கை, திருநெல்வேலி, விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய ஆறு மாவட்டங்களில் சுமாராக 43,000 செம்மறியாடுகளுக்கு தடுப்பூசி போட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2016 ஆகஸ்ட் 19

8.5.2.கோமாரி நோய் தடுப்புத் திட்டம் (Foot and Mouth Disease Control Programme-FMDCP)

கோமாரி நோய் என்பது இரட்டைக் குளம்பின கால்நடைகளைத் தாக்கி, கொப்புளங்களை ஏற்படுத்தும் நச்சுயிரி தொற்று நோய் ஆகும். இந்நோய் வாயிலும், குளம்புகளுக்கிடையிலும் கொப்புளங்களை உண்டாக்கி அவை உடைந்து, கடுமையான காயங்களை உண்டாக்கும். இதனால் பால் உற்பத்தி குறைவு, இனவிருத்தி பாதிப்பு மற்றும் கன்றுகளில் அதிக இறப்பு ஆகியவற்றின்மூலம் அதிக அளவில் பொருளாதார இழப்பை ஏற்படுத்துகிறது. இந்த நோயைக் கட்டுப்படுத்த தடுப்பூசிப் பணி, கடுங்கண்காணிப்பு, வர்த்தக தடை மற்றும் கால்நடைகளை தனியே பிரித்து வைத்தல் போன்ற நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்காக, மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி பங்களிப்புடன் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கோமாரி நோய் தடுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை, 10 சுற்றுகள் கோமாரி நோய் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2015 செப்டம்பர் மற்றும் 2016 மார்ச் மாதங்களில் நடைபெற்ற 9-வது மற்றும் 10-வது சுற்று தடுப்பூசிப் பணியில் முறையே 93,69,912 மற்றும் 93,78,809 பசு மற்றும் எருமையினங்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு 2015-2016-ல் முதல் தவணையாக ரூ.3.79 கோடி, 2016-2017-ல் முதல் தவணையாக ரூ.7.09 கோடி விடுவித்துள்ளது.

8.5.3. தேசிய ஆட்டுக் கொல்லி நோய் தடுப்புத் திட்டம் (Peste des Petits Ruminants Control Programme-PPRCP)

'ஆட்டுக் கொல்லி' என்கிற நச்சுயிரி நோய், கடுமையான, எளிதில் தொற்றக்கூடிய நோய் ஆகும். காய்ச்சல், வாய்ப்புண், கழிச்சல், நிமோனியா ஆகிய அறிகுறிகள் கொண்ட இந்நோய் சில நேரங்களில் இறப்பினை ஏற்படுத்தும். மேலும், நோய் பாதிப்பு மற்றும் இறப்பு விகிதத்தின் காரணமாக இந்நோய் கிராமப்புற பொருளாதாரத்தில் பெரும் இழப்பை ஏற்படுத்துகிறது.

இந்நோயை கட்டுப்படுத்த, அனைத்து மாவட்டங்களிலும் 176 இலட்சம் செம்மறி மற்றும் வெள்ளாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட விலையில்லா வெள்ளாடுகள்/

2016 ஆகஸ்ட் 19]

செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் ஆடுகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் இத்தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

8.5.4.தேசிய கன்று வீச்சு நோய் தடுப்புத் திட்டம் (BrucellosisControl Programme)

கன்று வீச்சு நோய் என்பது கால்நடைகளையும் மனிதர்களையும் தாக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நுண்ணுயிரி நோய் ஆகும். இது கால்நடைகளில் ஐந்து முதல் ஆறு மாத கர்ப்ப காலத்தில் தாக்கி கருச் சிதைவினை ஏற்படுத்துகிறது. இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்காக தேசிய கன்று வீச்சு நோய் தடுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை மாநிலத்தின் 15 மாவட்டங்களில் 2.60 இலட்சம் எண்ணிக்கையிலான ஆறு முதல் எட்டு மாத வயதுடைய கிடேரிக் கன்றுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

8.5.5. தேசிய வெக்கை நோய் கடுங்கண்காணிப்பு மற்றும் கண்காணிப்புத் திட்டம் (National Project on Rinderpest Surveillance and Monitoring NPRSM)

விவசாயிகளுக்கு பெரும் பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் வெக்கை நோயை அறவே ஒழிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கடந்த மார்ச் 1998 முதல், தமிழ்நாடு தற்காலிகமாக வெக்கைநோய் இல்லாத மாநிலமாகவும், மே 2002 முதல் வெக்கை நோய் அறவே இல்லாத மாநிலமாகவும் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. வெக்கை நோய் இல்லாத நிலை தொடர மாநிலத்தில் தொடர் கடுங்கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

8.5.6. பறவைக் காய்ச்சல் நோய் (Avian Influenza)

இந்நோய், பறவைக் காய்ச்சல் 'A' வகை (H5N1) நச்சுயிரியின் தாக்கத்தால் பறவைகளுக்கு ஏற்படும் நோயாகும். உலகெங்கிலும் உள்ள வன நீர்ப்பறவைகளில் சாதாரணமாக இருக்கும் இந்த நச்சுயிரியானது, வீட்டுக் கோழிகள் மற்றும் இதர கோழியினப் பறவைகளையும் தாக்கக் கூடியதாகும். இந்நோய் பறவைகளிலிருந்து மனிதர்களுக்கும் பரவும் தன்மை கொண்டதாகும்.

[2016 ஆகஸ்ட் 19

8.5.6.1. கர்நாடகா மாநிலத்தில் ஏற்பட்ட பறவைக் காய்ச்சல் நோய்க் கிளர்ச்சி தமிழ்நாட்டில் பரவாமல் தடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

இந்திய அரசு 9-5-2016 அன்று கர்நாடகா மாநிலம் பிதார் மாவட்டம் அம்னாபாத் தாலுகாவில் உள்ள மோல்கேரா கிராமத்தில் பறவைக் காய்ச்சல் நோய் கண்டறியப்பட்டுள்ளதாக அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

கர்நாடகாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு பறவைக் காய்ச்சல் நோய் தொற்று பரவாமல் தடுப்பதற்காகவும், மாநிலத்தில் உள்ள கோழியினங்களைப் பாதுகாப்பதற்காகவும் முன்னெச்சரிக்கை மற்றும் தயார்நிலை நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகம் மற்றும் பின்வரும் தொடர்புடைய துறைகளுடன் இணைந்து எடுக்கப்பட்டுள்ளன:

அ. பொது சுகாதாரம்

ஆ. நகராட்சி நிருவாகம்

இ. தெற்கு இரயில்வே

ஈ. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

உ. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிருவாகம்

ஊ. வணிக வரித் துறை

எ. தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு

ஏ. கறிக்கோழிகள் உற்பத்தியாளர்கள் ஒருங்கிணைப்புக் குழு

ஐ. கோழிப் பண்ணையாளர்கள் கூட்டமைப்பு

8.5.6.2. கால்நடை பராமரிப்புத் துறையின் பங்கு

கர்நாடகா, ஆந்திரா மற்றும் கேரள மாநில எல்லையோரங்களில் உள்ள பத்து மாவட்டங்களில் 42 எல்லையோர சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு கோழிகள், வாத்துகள், முட்டை மற்றும் முட்டை சார்ந்த பொருட்கள், இறைச்சி மற்றும் இறைச்சி சார்ந்த பொருட்கள், கோழித் தீவனம் மற்றும் தீவன உட்பொருட்கள் தமிழகத்திற்குள் கொண்டு வருவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட பொருட்களை ஏற்றிக் கொண்டு

2016 ஆகஸ்ட் 19]

கர்நாடகாவில் இருந்து வரும் வாகனங்கள் திருப்பி அனுப்பப்படுகின்றன.

- ❖ *தமிழகத்திற்குள் நுழையும் அனைத்து வாகனங்களும் கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்யப்படுகின்றன.*
- ❖ *எந்தச் சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் வகையில் 1,200 அதிவிரைவு செயல்பாட்டுக் குழுக்கள் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டு, தயார் நிலையில் உள்ளன.*
- ❖ *கோழியினங்களில் அசாதாரண இறப்பு காணப்படுகின்றனவா என கால்நடை பராமரிப்புத் துறையினராலும் மற்றும் வனப் பறவைகளில் காணப்படுகின்றனவா என வனத் துறையினராலும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.*
- ❖ *கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.*
- ❖ *தேவையான அளவு கிருமி நாசினி, சுய பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் விசைத் தெளிப்பான்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.*

தமிழ்நாட்டில் இதுவரை, கோழியினம் மற்றும் வாத்துகளில் பறவைக் காய்ச்சல் காரணமாக எந்த ஒரு இறப்பும் ஏற்படவில்லை.

கர்நாடகா மாநிலத்தில் இந்நோய் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்ற அறிக்கை இந்திய அரசிடமிருந்து பெறப்படும் வரை மேற்கண்ட தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

8.5.7. கோழிக்கழிச்சல் நோய் (Ronikhet Disease)

கோழிக்கழிச்சல் நோய், கோழிகளில் அதிக இறப்பை ஏற்படுத்தக்கூடிய முக்கியமான நோய்களில் ஒன்றாகும். கோழிகளை இந்த நோயிலிருந்து பாதுகாப்பதற்காக, கால்நடை நிலையங்கள் அனைத்திலும், சனிக்கிழமைதோறும் மற்றும் கால்நடைப் பாதுகாப்புத் திட்ட முகாம்களின்போதும் இந்நோய்க்கெதிரான தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது மட்டுமின்றி, புறக்கடைக் கோழிகளுக்காக ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதத்தில், கோழிக்கழிச்சல் நோய்க்கெதிராக மாநிலம் தழுவிய

[2016 ஆகஸ்ட் 19

சிறப்பு தடுப்பூசி முகாம்கள் (இருவார முகாம்கள்) நடத்தப்பட்டு வருகின்றன.

8.6. தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் (National Agriculture Development Programme-NADP))

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டமானது, வேளாண் காலநிலை சூழ்நிலைகள், இயற்கை வளங்கள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, தேசிய ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வேளாண்மை மற்றும் துணைத் தொழில்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்வதற்காக, உள்ளடங்கிய மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சியை அடையும் பொருட்டு, மாநிலங்கள் விரிவான வளர்ச்சித் திட்டங்களை வகுப்பதை ஊக்குவிக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது. இந்தத் திட்டமானது வேளாண்மை மற்றும் துணைத் தொழில்களின் பல்வேறு பொருட்களில் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளது.

இத்துறை 2007-2008-ல் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கியது. 2015-2016 வரை ரூ.170.40 கோடி ஒதுக்கீட்டில் 50 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2015-2016 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன:

அ) மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் உற்பத்தியைப் பெருக்குவதற்காக நவீன கால்நடைக் கொட்டகைகளை அமைத்தல்

பண்ணைகளில் பராமரிக்கப்படும் பல்வேறு இன கால்நடைகளின் சுகாதாரம், நீடித்த ஆயுள் மற்றும் மேம்பட்ட உற்பத்தித் திறன் ஆகியவற்றுக்காகவும், பண்ணைப் பணியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பணியாளர்களுக்கு வசதியான வேலைச் சூழ்நிலைகளை வழங்குவதற்காகவும் 7 மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் ரூ.7.50 கோடி ஒதுக்கீட்டில் 13 நவீன கால்நடைக் கொட்டகைகள் கட்டப்பட்டு வருகின்றன.

ஆ) கால்நடைப் பண்ணைகளில் புதிய உயர் மரபணுத் திறன் கொண்ட கால்நடைகளை அறிமுகப்படுத்துதல்

உயர் மரபணுத் திறன் கொண்ட தரமான கால்நடைகளை அதிக எண்ணிக்கையில் உற்பத்தி செய்து, அவற்றை

2016 ஆகஸ்ட் 19]

விவசாயிகளுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு ரூ.1.96 கோடி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஏழு கால்நடைப் பண்ணைகளில் உயர் மரபுத் திறன் கொண்ட 1,050 எண்ணிக்கையிலான பசுக்கள், ஆடுகள் மற்றும் பன்றிகள் கொள்முதல் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

இ) இராணிப்பேட்டை, கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தை நல் உற்பத்தி தரத்திற்கு (Good Manufacturing Practice -GMP) மேம்படுத்துதல்

இராணிப்பேட்டை, கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள தடுப்பூசி மருந்துகள் உற்பத்தி செய்யும் பிரிவை நல் உற்பத்தி தரத்திற்கு உயர்த்துவதற்கு கூடுதலாக ரூ.15.90 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஈ) பல்லடத்தில் உயிரியல் பாதுகாப்பு நிலை II தர கோழி நோய் ஆய்வுக் கூடம் நிறுவுதல் (Bio Safety Level-BSL II)

திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில், கோழி நோய் கண்டறியும் ஆய்வுக் கூடத்தை உயிரியல் பாதுகாப்பு நிலை II தரத்தில் நிறுவுவதற்காக கூடுதலாக ரூ.2.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8.7. தேசிய கால்நடை இயக்கம் (National Livestock Mission-NLM)

மத்திய அரசு, 2014-2015 ஆம் ஆண்டில் ஏழு மத்திய அரசு உதவித் திட்டங்கள் மற்றும் ஏழு மத்திய பிரிவு திட்டங்களை ஒருங்கிணைத்தும் மற்றும் மாற்றி அமைத்தும் தேசிய கால்நடை இயக்கமாக செயல்படுத்தும்பொருட்டு வடிவமைத்துள்ளது.

மத்திய அரசு ரூ.39.95 கோடி மதிப்பீட்டிலான ஒன்பது திட்டங்களை அங்கீகரித்துள்ளது.

கால்நடை அபிவிருத்திக்கான துணை இயக்கம் - இன்னல் மேலாண்மை (கால்நடை காப்பீடு) திட்டத்தின்கீழ் இனவிருத்திக்கு உகந்த 3,64,947 கால்நடைகள் ரூ.26.01 கோடி ஒதுக்கீட்டில் காப்பீடு செய்யப்பட்டுள்ளன.

தீவனம் மற்றும் பசுந்தீவனம் மீதான துணை இயக்கத் திட்டத்தின்கீழ், கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன:

[2016 ஆகஸ்ட் 19

அ) *விதைகள் கொள்முதல் மற்றும் விநியோகம் செய்தலின் கீழ் 440 குவிண்டால் சான்று விதை மற்றும் உண்மைநிலை அடையாளமிடப்பட்ட பல்வேறு தீவனப் பயிர் விதைகள் விவசாயிகளுக்கு இலவச சிறுமுடிச்சுப் பைகளாக* (minikits) *பசுந்தீவன உற்பத்திக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த செலவினம் ரூ.1.28 கோடி ஆகும்.*

ஆ) *"தட்டைப் பயிறு விதைகள் உற்பத்தி மற்றும் விநியோகத்தின்" கீழ் 40 குவிண்டால் ஆதாரநிலை தட்டைப் பயிறு விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு, ஐந்து அரசுப் பண்ணைகளில் சான்றளிக்கப்பட்ட விதைகளாக பெருக்கப்பட்டு விவசாயிகளுக்கு பசுந்தீவனப் பயிர் உற்பத்தி செய்வதற்கு இலவசமாக வழங்கப்படுகிறது. இதற்கான மொத்த செலவினம் ரூ.96.50 இலட்சம் ஆகும்.*

இ) *கால்நடைகளுக்கு வழங்கப்படும் பசுந்தீவனம் விரயமாவதைக் குறைப்பதற்காக 4,698 விவசாயிகளுக்கு மின்விசை தீவன நறுக்கும் கருவிகள் 75 விழுக்காடு மானியத்தில் ரூ.9 கோடி செலவில் வழங்கப்பட்டன.*

8.8. கால்நடை பாதுகாப்புத் திட்டம் (Livestock Protection Scheme)

கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், கால்நடை மருத்துவ வசதிகள் போதுமான அளவு கிடைக்கப்பெறாத தொலைதூர கிராமங்களில் உள்ள விவசாயிகளின் கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு, அவர்களின் இருப்பிடங்களுக்கே சென்று முழுமையான உடல்நலம் பேணும் சேவைகள் வழங்கப்படுகின்றன.

அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், ஆண்டுதோறும் 5,500 முகாம்கள், ரூ.2.31 கோடி செலவில் நடத்தப்படுகின்றன.

8.9. கால்நடை பராமரிப்புத் துறையின் செயல்பாடுகளை கைப்பேசிமூலம் கண்காணித்தல்

கால்நடை பராமரிப்புத் துறையின் செயல்பாடுகளை கைப்பேசி மூலம் மாவட்ட தலைமையிடத்திலிருந்து அனைத்து கால்நடை மருந்தகங்களையும் கண்காணித்திடும் பொருட்டும், திட்டப் பணி விவரங்களை உடனுக்குடன் பெறும் பொருட்டும் திருச்சி மாவட்டத்தில் உள்ள கால்நடை நிலையங்களுக்கு முன்னோடி

2016 ஆகஸ்ட் 19]

திட்டமாக கைப்பேசிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ரூ.15.81 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. கால்நடை கணக்கெடுப்பு மற்றும் மாதிரி கணக்கெடுப்புத் திட்டம்

9.1.கால்நடை கணக்கெடுப்பு

கால்நடை கணக்கெடுப்புப் பணி 1919-20 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை கால்நடை கணக்கெடுப்பு நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது. இது குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் ஆற்ற வேண்டிய பல்வேறு பணிகளை உள்ளடக்கியது. 19-வது ஐந்தாண்டு கால்நடைக் கணக்கெடுப்பு 2012 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. தற்போது 2017 ஆம் ஆண்டில் 20-வது கால்நடைக் கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. முன்னேற்பாட்டுப் பணிகளான ஒருங்கிணைப்பு அலுவலர்கள் நியமனம், கணக்கெடுப்பாளர்கள்/ மேற்பார்வையாளர்கள் நியமனம் ஆகிய பணிகள் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கணக்கெடுப்பு நடத்தப்படும் காலம் 16 ஜூலை 2017 முதல் 15 அக்டோபர் 2017 வரை ஆகும். இந்தக் கணக்கெடுப்பில் மாநிலம் முழுவதும் பிரிவு வாரியாகவும் இனம் வாரியாகவும் கால்நடை கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.

9.2. ஒருங்கிணைந்த மாதிரி கணக்கெடுப்புத் திட்டம்

மத்திய, மாநில அரசுகளின் தலா 50 விழுக்காடு நிதியுதவியுடன் செயல்படும் மாதிரி கணக்கெடுப்புத் திட்டத்தில், 1977-1978 முதல் ஒவ்வோர் ஆண்டும் மாதிரி கணக்கெடுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் மத்திய அரசின் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் வழிகாட்டுதலின்படி பால், முட்டை, இறைச்சி மற்றும் கம்பளி ஆகியவற்றின் உற்பத்தி அளவு மதிப்பீடு செய்யப்படுகிறது. இந்தத் திட்டத்தில் ஒரு ஆண்டானது கோடைக்காலம், மழைக்காலம் மற்றும் குளிர்காலம் என மூன்று பருவங்களாக பிரிக்கப்பட்டு, பருவ வேறுபாடுகளால் ஏற்படும் உற்பத்தி மாற்றங்கள் கண்டறியப்பட்டு வருகிறது. 2012-2013ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசின் திருத்தப்பட்ட புதிய முறைமூலம் ஒரு மாவட்டத்தில் 10 முதல் 50 விழுக்காடு கிராமங்களில் மேற்கூறிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகின்றது.

கால்நடை வளர்ப்போரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக, பல்வேறு திட்டங்களை வகுக்கவும், மேற்பார்வையிடவும் மற்றும் மதிப்பாய்வு செய்யவும் மாதிரி கணக்கெடுப்புத் திட்டத்தின்மூலம் பெறப்படும் புள்ளிவிவரங்கள் பயன்படுகின்றன.

அட்டவணை 12 : கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தி விவரம்

பொருள்	அலகு	2014–2015	2015–2016	அதிகரிப்பு விழுக்காடு
பால் உற்பத்தி மதிப்பீடு	இலட்சம் மெட்ரிக் டன்	71.32	72.44	1.57
முட்டை உற்பத்தி மதிப்பீடு	இலட்சம் எண்ணிக்கை	1,59,253	1,61,252	1.26
இறைச்சி உற்பத்தி மதிப்பீடு	மெட்ரிக் டன்	4,91,900	5,44,500	10.69

10. விரிவாக்க பணிகள்

அடிப்படை மற்றும் நவீன கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றிய விவசாயிகளின் செயல்திறன் மற்றும் அறிவாற்றல் மேம்பாட்டிற்கு முக்கியமான கருவியாக விரிவாக்கமும் பிரச்சாரமும் விளங்குகின்றன. இவை பல்வேறு களப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதிலும், விவசாயிகள் அன்றாடம் எதிர்கொள்ளும் பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் நோய்களைக் கட்டுப்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவ்விரிவாக்கப்பணி, துறையின்மூலம் நிறைவேற்றப்படும் திட்டங்களின் வெளிப்படையான அணுகுமுறையை பொதுமக்களுக்கு விளக்குகிறது.

'காண்பதே கற்றல்' என்ற குறிக்கோளின்படி கால்நடை பராமரிப்பு பற்றிய பல்வேறு செயல் முறைகள் மற்றும் நோய் கண்டறிதல் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைக்க இத்துறை அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்தி வருகிறது. கால்நடை பராமரிப்பு மற்றும் தொடர்புடைய தொழில்கள் பற்றிய விவரங்களை சேகரித்து பொதுமக்களுக்கு வழங்குவதற்காக

2016 ஆகஸ்ட் 19]

இத்துறை அரசு பொருட்காட்சிகள் மற்றும் விழாக்களில் தவறாது பங்கேற்று வருகிறது. பொருட்காட்சிகளின்மூலம் நோய்த் தடுப்பு மற்றும் நோய் கட்டுப்படுத்துதல், கால்நடைகளை தாக்கும் கொடிய நோய்கள் பற்றிய அறிவு மற்றும் குடற்புழு நீக்கம், தடுப்பூசிப்பணி, செயற்கைமுறை கருவூட்டல், கன்று வளர்ப்பு, வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மேய்ச்சல் நில மேலாண்மை, இறைச்சி ஆய்வு, சுகாதார நடவடிக்கைகள், இறந்த கால்நடைகளின் உடல்களை முறையாக அப்புறப்படுத்துதல், சுகாதாரமற்ற இடங்களில் கிருமிநாசினி தெளித்தல் போன்ற விவரங்கள் விவசாயிகளும், கால்நடை வளர்ப்போரும் அறிந்து கொள்ளும் வண்ணம் எடுத்துரைக்கப்படுகின்றன.

2015-2016 ஆம் ஆண்டில் கால்நடை கண்காட்சிகள் நடத்துவதற்காக கால்நடை பராமரிப்புத் துறைக்கு ரூ.7.50 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டது. இத்துறை கீழ்க்கண்ட கண்காட்சிகளில் பங்கேற்றது:—

திண்டுக்கல்	—	கொடைக்கானல் - கோடை விழா
வேலூர்	—	ஏலகிரி கோடை விழா
	—	அரசு பொருட்காட்சி
நாமக்கல்	—	வல்வில் ஓரி விழா
கோயம்புத்தூர்	—	அரசு பொருட்காட்சி
மதுரை	—	அரசு பொருட்காட்சி
தஞ்சாவூர்	—	அரசு பொருட்காட்சி
திருநெல்வேலி	—	அரசு பொருட்காட்சி
திருவண்ணாமலை	—	அரசு பொருட்காட்சி மற்றும் தீபத் திருவிழா
சேலம்	—	ஏற்காடு கோடை விழா
தூத்துக்குடி	—	அரசுப் பொருட்காட்சி
கன்னியாகுமரி	—	அரசுப் பொருட்காட்சி

[2016 ஆகஸ்ட் 19

இவை மட்டுமன்றி, ஜனவரி 2016 முதல் மார்ச் 2016 வரை, சென்னை தீவுத் திடலில் நடைபெற்ற 42-வது அரசு பொருட்காட்சி மற்றும் கண்காட்சியிலும் துறை கலந்து கொண்டதோடு, இத்துறையின் அலங்கார ஊர்தி, சென்னை குடியரசு தின விழா அணிவகுப்பிலும் கலந்து கொண்டது.

11. பிராணிகள் நல நடவடிக்கைகள்

"ஒரு தேசத்தின் மாண்பு, அந்த தேசத்தில் கால்நடைகள் நடத்தப்படும் விதத்தைக் கொண்டே மதிப்பிடப்படுகிறது"— மகாத்மா காந்தி.

கால்நடை சந்தைகளிலும், வாகனப் போக்குவரத்தின்போதும் மற்றும்இறைச்சிக் கூடங்களிலும் கால்நடைகள் கொடூரமான முறையில் நடத்தப்படுவதை தடுக்கவும், அவற்றை மனிதாபிமான முறையில் நடத்தவும், தமிழக அரசு பிராணிகள் நல வாரியத்துடன் இணைந்து, செயல்பட்டு வருகிறது.

11.1 பிராணிகள் வதைத் தடுப்பு சங்கம் (Society for Prevention of Cruelty to Animals-SPCA)

பிராணிகள் வதைத் தடுப்பு சட்டம், 1960, பிரிவு 38 மற்றும் பிராணிகள் வதைத் தடுப்பு திருத்திய விதிகள், 2001-ன்படி, பிராணிகள் நலத் திட்டங்கள் மற்றும் விதிகளைத் திறம்பட செயல்படுத்துவதற்காக, தமிழகத்தின் எல்லா மாவட்டங்களிலும் பிராணிகள் வதை தடுப்பு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பிராணிகள் வதைத் தடுப்பு சங்கத்தின் முதன்மை நோக்கங்களாவன:

- ❖ *மாவட்டத்தில் பிராணிகள் வதை தடுப்பு சட்டம் 1960-*I *நடைமுறைப்படுத்துதல் மற்றும் பாதிக்கப்படும் பிராணிகளை மீட்டு பாதுகாத்தல்.*
- ❖ *பிராணிகளை வதைப்பவர்கள்மீது தண்டனை வழங்கும் பொருட்டு வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுத்தல்.*

11.2. கால்நடைகளை வாகனங்களில் ஏற்றிச் செல்லுதல்

மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் 8-7-2015 அன்று GSR *546* (E)*-ன்படியும், மத்திய*

2016 ஆகஸ்ட் 19]

மோட்டார் வாகன சட்டம் 2015-ஐ திருத்தியும், கால்நடை ஏற்றிச் செல்லும் வாகனங்களில் கால்நடைகளுக்குத் தேவையான இட அளவுகளை மாற்றி நிர்ணயித்து ஆணை பிறப்பித்துள்ளது. விதி எண்.125 (E)*-ன் படி, 1-1-2016 முதல் கால்நடைகளை ஏற்றிச் செல்ல பயன்படும் மோட்டார் வாகனங்கள்* IS *14904:2007 அல்லது* IS *5238:2001 அல்லது* IS *5236:1982-ல் இந்திய தர நிர்ணய அமைப்பு வழங்கியுள்ள அளவுகளின்படி இருத்தல் வேண்டும்.*

கால்நடைகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களில் ஒவ்வொரு கால்நடையும் தனித்தனியாக தடுப்புக்குள் இருக்கின்ற வகையில் நிரந்தரத் தடுப்புப் பலகைகள் கீழ்க்கண்ட அளவுகளில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்:

அட்டவணை 13 : கால்நடைகளுக்குத் தேவையான இட அளவு விவரம்

இனம்	இட அளவு
பசு மற்றும் எருமைகள்	2 சமீ
குதிரைகள்	2.25 ச.மீ
செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகள்	0.3 ச.மீ
பன்றிகள்	0.6 ச.மீ
கோழிகள்	40 ச. செ.மீ

12. ஜல்லிக்கட்டு

ஜல்லிக்கட்டு என்பது பொங்கல் திருவிழாவின்போது தமிழ்நாட்டில் கிராம மக்களிடையே நடத்தப்படுகின்ற பாரம்பரியமான விளையாட்டு நிகழ்ச்சியாகும். இவ்விளையாட்டு, 5,000 வருட பழமை வாய்ந்ததுடன், தமிழ்நாட்டின் கிராமப்புற சமூக பண்பாட்டு பழக்கங்களுடன் வரலாற்று தொடர்பு கொண்டுள்ளதாகும்.

ஜல்லிக்கட்டு நிகழ்வுகள் கடந்த 2006 ஆம் ஆண்டு முதலே நீதிமன்றங்களின் கண்காணிப்பில் நடத்தப்பட்டன. ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகவும், எதிர்ப்பாகவும் பல்வேறு காலகட்டங்களில் தனியார் மற்றும் பல்வேறு அமைப்புகள் சார்பில் வழக்குகள் மேன்மைமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டன.

[2016 ஆகஸ்ட் 19

பிராணிகள் நல வாரியம், 14-8-2007 அன்று மேன்மைமிகு உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு விடுப்பு மனு எண் 11686/2007 வாயிலாக ஜல்லிக்கட்டு நிகழ்வுகளை தமிழ்நாட்டில் தடை செய்யக் கோரி மனு செய்தது. இப்பொருள் தொடர்பாக மேன்மைமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த அனைத்து வழக்குகளும் மேன்மைமிகு உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு முதன்மை சிறப்பு விடுப்பு மனுவுடன் இணைக்கப்பட்டன.

தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியைத் தடை செய்ய 7-5-2014 அன்று உச்ச நீதிமன்றம் ஆணையிட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு 12 நாட்களுக்குள்ளாகவே, இத்தீர்ப்பு மற்றும் ஆணையை மறுபரிசீலனை செய்யக் கோரி மேன்மைமிகு உச்ச நீதிமன்றத்தில் சீராய்வு மனுவைத் தாக்கல் செய்தது. மேற்கண்ட சீராய்வு மனு நிலுவையில் உள்ளது.

காட்சி விலங்குகள் பட்டியலில் இருந்து காளைகளை நீக்குவதற்கு தமிழக அரசால் இடைவிடாத முயற்சிகள் கடந்த பல மாதங்களாக எடுக்கப்பட்டன. மேற்காணும் பிரச்சினை தொடர்பாக அரசு செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, தமிழ்நாடு அவர்களின் தலைமையிலான குழு, மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சக அலுவலர்கள் மற்றும் இந்திய அரசு தலைமை வழக்கறிஞருடன் கலந்துரையாடல் மேற்கொண்டது.

ஜல்லிக்கட்டு தொடர்பான தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14-1-2015 அன்று, மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் காட்சி விலங்குகள் பட்டியலில் இருந்து காளைகளை நீக்க சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சக அதிகாரிகளுக்கு உரிய அறிவுரைகள் வழங்கி, ஜல்லிக்கட்டு நிகழ்வுகள் எந்தவித தடையுமின்றி தொடர்ந்து நடைபெற நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

7-8-2015 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு அளிக்கப்பட்ட கோரிக்கை மனுவில், ஜல்லிக்கட்டின் மீதான தடையாணையை நீக்க வலியுறுத்தியும், தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடைபெற வழி வகை செய்யவும் கீழ்க்காணும் வழிமுறைகளை தெரிவித்துள்ளார்:

2016 ஆகஸ்ட் 19]

- ❖ *11-7-2011 நாளிட்ட மத்திய அரசு சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகம் வெளியிட்ட* GSR *528* (E) *அறிவிக்கையில் காட்சி விலங்காக சேர்க்கப்பட்ட காளைகளை, பட்டியலில் இருந்து நீக்குவதற்கு மத்திய அரசு, சுற்றுச் சூழல் அமைச்சகத்திற்கு ஆணையிட வேண்டும்.*

- ❖ *1960 ஆம் ஆண்டின் பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டத்தின் (மத்திய சட்டம்) பிரிவு 11 உட்பிரிவு (3)-ல் புதிய உட்பிரிவு* 'f-*ஐ சரியான இடத்தில் ஏற்கெனவே விதியில் விலக்களிக்கப்பட்டுள்ள இனங்களுடன் சேர்த்து, குறிப்பாக ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிக்கும் விலக்களித்து, உரிய திருத்தங்கள் வெளியிடப்பட வேண்டும். 1960 ஆம் ஆண்டின் பிராணிகள் வதைத் தடுப்பு சட்டத்தின் உண்மைத் தன்மை மாறாமல் மேற்படி விதிகளுக்கு ஏற்றவாறு திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும்.*

அதற்கேற்ப, மத்திய அரசு, சுற்று சுழல், வனம் மற்றும் பருவ நிலை மாற்றம் அமைச்சகத்தால் 7-1-2016 அன்று ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடத்திட GSR *13* (E)*-ன்படி அனுமதி வழங்கி அறிவிக்கை வெளியிடப்பட்டது. மேற்படி அறிவிக்கையை செயல்படுத்திட 12-1-2016 அன்று மேன்மைமிகு உச்சநீதிமன்றத்தில் தற்காலிக தடையாணை விதிக்கப்பட்டது. 12-1-2016 அன்றே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 2016 பொங்கல் பண்டிகையினை ஒட்டி ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியை நடத்திட ஏதுவாக உடனடியாக ஜல்லிக்கட்டு தொடர்பான அவசர சட்டம் நிறைவேற்றிட கடிதம் எழுதினார்.*

தமிழ்நாடு அரசு, ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியை நடத்த வேண்டி 8-3-2016 அன்று ஒரு பொது எதிர் உறுதி மனுவை மேன்மைமிகு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. ஜல்லிக்கட்டு தொடர்பான வழக்கின் இறுதி விசாரணை மேன்மைமிகு உச்ச நீதிமன்றத்தில் ஆகஸ்ட் 30, 2016 அன்று நடைபெற உள்ளது.

14-6-2016 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு ஜல்லிக்கட்டின் மீதான தடையாணையை நீக்க கோரி மீண்டும் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

[2016 ஆகஸ்ட் 19

மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் சட்டமன்ற பேரவையில் 16-6-2016 அன்று நிகழ்த்திய உரையில் ஜல்லிக்கட்டு மீதான தடை ஆணையை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் பண்பாடு மற்றும் சமய உணர்வுகளுடன் இரண்டறக் கலந்து விட்ட இம்மண்ணின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிகளை தொடர்ந்து நடத்துவதற்கு தமிழக அரசு இவ்வாறாக தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

13. தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை

தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை, தேசிய பசு மற்றும் எருமையின இனவிருத்தித் திட்டத்தினை செயல்படுத்தும் மாநில செயல்பாட்டு நிறுவனமாக நிறுவப்பட்டது. இம்முகமை 2003 முதல் இம்மாநிலத்தில் மாட்டின மற்றும் எருமையின இனப்பெருக்க பணிகளை ஒருங்கிணைத்து வருகிறது.

இனப்பெருக்க வயதிலுள்ள அனைத்து பசு மற்றும் எருமைகளை செயற்கை முறை கருவூட்டல் மற்றும் இயற்கை முறை இனவிருத்தி மூலம் இனப்பெருக்க திட்டத்தின்கீழ் கொண்டுவருவதும், பால் உற்பத்தி மற்றும் மாடுகளின் தனிப்பட்ட பால் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதும் இம்முகமையின் குறிக்கோளாகும்.

இக்குறிக்கோள்களை அடைய கீழ்க்கண்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன:

1. தரமான மரபியல் தன்மை கொண்ட உள்ளீடுகளை வழங்குதல்.

2. உறைவிந்து உற்பத்திக்கு உயர்ந்த மரபியல் தன்மை கொண்ட தரமான காளைகளை அறிமுகப்படுத்துதல்.

3. உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் மற்றும் விந்து வங்கிகளில் தரக் கட்டுப்பாட்டினை அமல்படுத்துதல்.

4. உறைவிந்து மற்றும் செயற்கைமுறை கருவூட்டலுக்கான உயர்தரமான உபகரணங்களை கொள்முதல் செய்து வழங்குதல்.

2016 ஆகஸ்ட் 19]

5. *திரவ நைட்ரஜன் கொள்முதல், சேமிப்பு மற்றும் விநியோக முறையை சீர்படுத்துதல்.*

6. *இனப்பெருக்க வசதிகளை கீழ்க்கண்ட வழிகளில் அதிகரித்தல்.*

❖ *கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி மற்றும் தேவையான உபகரணங்களை வழங்கி புதிய நடமாடும் செயற்கைமுறை கருவூட்டல் மையங்களை துவக்குதல் மற்றும் கால்நடை வளர்ப்போரின் வீடுகளுக்கு சென்று கால்நடைகளுக்கு இனப்பெருக்கப் பணி மேற்கொள்வதை ஊக்குவித்தல்.*

❖ *நிலையான செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களை நிலையான மற்றும் நடமாடும் நிலையங்களாக செயல்பட வசதி செய்தல்.*

7. *பாரம்பரிய உள்நாட்டு கால்நடை இனங்களை பாதுகாத்தல் மற்றும் பால் உற்பத்தி திறனை பதிவு செய்து தரமான மரபியல் தன்மை கொண்ட காளைகளை உருவாக்குதல்.*

8. *முறையான பயிற்சிகளின்மூலம் மனித வளத்தை மேம்படுத்துதல்*

13.1. மேற்கொள்ளப்படுகின்ற திட்டப் பணிகள்

அ. தரமான உறைவிந்து உற்பத்தி மற்றும் விநியோகம்

அனைத்து உறைவிந்து உற்பத்தி நிலையங்களிலும் இந்திய அரசின் உறைவிந்து உற்பத்தி நிலையங்களுக்கான குறைந்தபட்ச தர செயல் முறைகள் செயல்படுத்தப்படுகின்றன. 2015-2016 ஆம் ஆண்டில் தரமான சிறந்த மரபியல் தன்மை கொண்ட பொலிகாளைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட 83.82 இலட்சம் உறைவிந்து குச்சிகள், கால்நடை பராமரிப்புத் துறை, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் மற்றும் நாட்டிலுள்ள மற்ற கால்நடை அபிவிருத்தி முகமைகளுக்கும் கோரிக்கை அடிப்படையில் வழங்கப்படுகிறது.

[2016 ஆகஸ்ட் 19

ஆ. கருமாற்று தொழில்நுட்ப திட்டம்

கருமாற்று தொழில்நுட்பம் சிறந்த மரபுத் தன்மை வாய்ந்த பசுவிலிருந்து அதிகபட்சமான கன்றுகளை குறைந்த காலத்தில் பெற்று மந்தையின் மரபியல் முன்னேற்றத்தை செயற்கைமுறை கருவூட்டலைவிட வேகமாக அடைவதற்கான ஓர் உத்தி ஆகும்.

தேசிய பசு மற்றும் எருமையின இனவிருத்தித் திட்டத்தின்கீழ் கருமாற்று தொழில்நுட்பத்திற்காக ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் மாவட்ட கால்நடை பண்ணை ஓசூர் வாயிலாக சேலம், திருப்பூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, தேனி, நாமக்கல், கரூர், கோயம்புத்தூர், வேலூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் மாநிலத்தின் பொலிகாளை தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் உயர்ந்த மரபு தன்மை கொண்ட பொலிகாளைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இத்தொழில்நுட்பத்தின் வழியாக பிறக்கும் காளைக்கன்றுகள் ஒவ்வொன்றும் ரூ.5,000 வீதம் கால்நடை வளர்ப்போரிடமிருந்து வாங்கப்பட்டு உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் வருங்கால உறைவிந்து உற்பத்திற்காக பராமரிக்கப்படுகின்றன. கிடேரி கன்றுகளை உரிமையாளர்களே வைத்துக் கொள்ள அனுமதிக்கப் படுகிறது.

கருமாற்று தொழில்நுட்பத்தின் வாயிலாக இதுவரை 149 கன்றுகள் (83 காளைக்கன்றுகள் மற்றும் 66 கிடேரிக்கன்றுகள்) பிறந்துள்ளன.

இ. புதிய நடமாடும் செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களை ஏற்படுத்தி மாநிலத்தில் செயற்கைமுறை கருவூட்டல் பணி அமைப்பினை பலப்படுத்துதல்

2003-2004 முதல் 2015-2016 ஆம் ஆண்டுவரை 1,742 கிராமப்புற இளைஞர்களுக்கு தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையால் செயற்கைமுறை கருவூட்டல் பயிற்சி அளிக்கப்பட்டது. இதுவரை 21.72 இலட்சம் செயற்கைமுறை கருவூட்டல் பணி கிராமப்புற இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2016 ஆகஸ்ட் 19]

ஈ. கால்நடை பராமரிப்புத் துறை, தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் மற்றும் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் வாயிலாக செயற்கைமுறை கருவூட்டல் பயிற்சி நிலையங்களை பலப்படுத்துதல்

2015-2016 ஆம் ஆண்டு கால்நடை பராமரிப்பு துறையில் உள்ள மாவட்ட கால்நடை பண்ணை நடுவூர் மற்றும் ஆட்டுப்பண்ணை முகுந்தராயபுரம் ஆகிய இடங்களிலுள்ள இரண்டு பயிற்சி நிலையங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின் சேலம், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய இடங்களிலுள்ள பயிற்சி நிலையங்களை பலப்படுத்த தேசிய மாட்டின இனப்பெருக்க திட்டத்தின்கீழ் ரூ.10.00 இலட்சம் வீதம் நிதி இசைவளிக்கப்பட்டு பயிற்சி நிலையங்கள் பலப்படுத்தப்பட்டன. கால்நடை மருத்துவ மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஒரத்தநாட்டில் ரூ.50.00 இலட்சம் செலவில் மண்டல பயிற்சி நிலையம் நிறுவ இசைவளிக்கப்பட்டுள்ளது.

உ. பாரம்பரிய உள்நாட்டு கால்நடை இனங்களை பாதுகாத்தல்

இந்த நிதியாண்டில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்மூலம் பர்கூர் இன கால்நடைகளை மேம்படுத்தவும், பாதுகாக்கவும் ரூ.1.37 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

ஊ. காங்கேய இன மாடுகளில் பால் உற்பத்தி திறனை பதிவு செய்யும் திட்டம்

இத்திட்டம் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது .இத்திட்டத்தின்கீழ் சிறந்த காங்கேய இன பசுக்கள் தேர்வு செய்யப்பட்டு, செயற்கைமுறை கருவூட்டல் செய்யப்படுகிறது. இதன்மூலம் அதிக பால் கறவை கொண்ட பசுக்களுக்குப் பிறக்கும் காளைக்கன்றுகள் தேர்வு செய்யப்பட்டு, அவை உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் உறைவிந்து உற்பத்திக்காக வளர்க்கப்படுகின்றன. இத்திட்டம் கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருச்சி ஆகிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பிறந்த 17 காங்கேயம் காளைக்கன்றுகள் ஒசூர் மாவட்ட கால்நடை பண்ணையில் வருங்கால உறைவிந்து உற்பத்திக்காக பராமரிக்கப்பட்டு வருகிறது.

[2016 ஆகஸ்ட் 19

13.2. கால்நடை காப்பீட்டுத் திட்டம்

தேசிய கால்நடை இயக்ககத்தின்கீழ் செயல்படுத்தப்படும் கால்நடை காப்பீட்டுத் திட்டமானது தற்பொழுது தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 2015-2016 ஆம் ஆண்டு ரூ.797.83 இலட்சம் நிதி இசைவளிக்கப்பட்டு 2.70 இலட்சம் கால்நடைகள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன.

13.3. தேசிய பால்வள திட்டம்—நிலை—1

மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் உறைவிந்து உற்பத்தி நிலையத்தை பலப்படுத்துதல்

மாநிலத்தின் உறைவிந்து தேவையை பூர்த்தி செய்யவும் உறைவிந்து உற்பத்தியின் தேசிய இலக்கை அடைய உதகமண்டலம் கால்நடைப் பண்ணையில் உறைவிந்து உற்பத்தி நிலையத்தை ரூ.6.46 கோடி செலவில் பலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2011-2012 ஆம் ஆண்டில் 13.34 இலட்சமாக இருந்த இந்நிலையத்தின் உறைவிந்துக் குச்சிகளின் உற்பத்தி எண்ணிக்கையினை 2017-2018 ஆம் ஆண்டில், 30 இலட்சமாக உயர்த்துவதே இதன் இலக்காகும்.

உதகமண்டலம் மாவட்ட கால்நடைப் பண்ணை உறைவிந்து குச்சிகள் உற்பத்தி 2012-2013 ஆம் ஆண்டில் 13.40 இலட்சத்திலிருந்து 2015-2016 ஆம் ஆண்டில் 18.17 இலட்சமாக உயர்ந்துள்ளது.

14. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

14.1. பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவ கல்விக்கென 1989-ல் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஆகும். இப்பல்கலைக்கழகத்தின் நோக்கங்களாவன:

❖ கால்நடை மருத்துவம், விலங்கின அறிவியல் மற்றும் உணவு அறிவியலில் இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டப் படிப்புகளுக்கான தரமான கல்வியை அளித்தல்


❖ கால்நடை மற்றும் கோழி உற்பத்தி, நலப் பாதுகாப்பு மற்றும்

2016 ஆகஸ்ட் 19]

அவற்றிலிருந்து பெறப்படும் மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் பற்றிய அடிப்படை மற்றும் உயர்நிலை ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்

❖ கால்நடை மற்றும் கோழியின வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் உரிய தொழில்நுட்பத் தகவல்களை கால்நடை பராமரிப்புத் துறையைச் சார்ந்தவர்களுக்கும், பண்ணையாளர்களுக்கும் விரிவாக்கக் கல்விமூலம் பரப்புதல்

14.2. பல்கலைக்கழக நிர்வாகக் கட்டமைப்பு



[2016 ஆகஸ்ட் 19

14.3. பல்கலைக்கழகத்தின் அங்கங்கள்

இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டப் படிப்புகளுக்கான கல்வியை, கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கின அறிவியல் பாடப் பிரிவுகளில் அளிப்பதற்கென நான்கு கல்லூரிகள் மற்றும் உணவு அறிவியல் பாடப் பிரிவில் அளிப்பதற்கென இரண்டு கல்லூரிகள்; ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் மற்றும் இனவிருத்திக்கென கால்நடைகளை பண்ணையாளர்களுக்கு வழங்குதற்கென எட்டு ஆராய்ச்சி நிலையங்கள்; நோயறிதல், நோய்களைக் கண்காணித்தல் மற்றும் தடுப்பூசிகள் உருவாக்குதல், தீவன பகுப்பாய்வு மற்றும் உற்பத்திக்கென 12 ஆய்வகங்கள்; கால்நடை மற்றும் கோழியின வளர்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் உரிய தொழில்நுட்பத் தகவல்களை கால்நடை பராமரிப்புத் துறையைச் சார்ந்தவர்களுக்கும், பண்ணையாளர்களுக்கும் பரப்புவதற்கென 20 கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள்; கால்நடைப் பண்ணையாளர்களுக்கு உகந்த பயிற்சிகளை அளிப்பதற்கென மூன்று உழவர் பயிற்சி மையங்கள்; கால்நடைப் பராமரிப்பு, வேளாண்மை மற்றும் தோட்டக் கலைகள் சார்ந்த முக்கிய தொழில்நுட்பங்கள் குறித்து கால்நடைப் பண்ணையாளர்களிடையே பிரபலப்படுத்துவதற்கு என மூன்று வேளாண் அறிவியல் நிலையங்கள் இப்பல்கலைக்கழகத்தின் அங்கங்களாக உள்ளன.

14.4. 2015–16 ஆம் ஆண்டில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள்

❖ *தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் அதன் இரண்டு உறுப்புக் கல்லூரிகளான சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் ஆகியவற்றிற்கு புது தில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், 2020 வரை அங்கீகாரம் அளித்துள்ளது.*

❖ *மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் தேசிய தரவரிசை நிறுவனத்தின் அறிவிப்பின்படி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், இந்திய பல்கலைக் கழகங்களில் 36-வது இடத்தினையும் மாநில*

அளவில் 3-வது இடத்தினையும் பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகம், கல்வி மற்றும் கல்வி கற்றலுக்கான சூழல்களை வழங்குவதில் தேசிய அளவில் 5-வது இடத்தையும் மாநில அளவில் முதல் இடத்தினையும் பெற்றுள்ளது. இந்தியாவில் உள்ள 12 கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகங்களில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது இப்பல்கலைக்கழகம்.

❖ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலியில், நடமாடும் கால்நடை நோய் பரிசோதனைக் கூட வாகனத்தை 9-6-2015 அன்று துவக்கி வைத்தார்.

❖ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், புது தில்லியில் உள்ள வேளாண் அறிவியல் தமிழ் இயக்கத்துடன் இணைந்து, "தமிழால் இயலும்" எனும் நாடளாவிய முதல் வேளாண் அறிவியல் தமிழ் கருத்தரங்கினை, 13-6-2015 மற்றும் 14-6-2015 தேதிகளில் நடத்தியது.

❖ தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக நிதியுதவியுடன் செயல்படும், "கால்நடை மற்றும் கோழியின தொழிற்சாலைகளுக்கான பண்ணை சாரா நடவடிக்கைகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி" திட்டத்தின்கீழ், நடத்தப்படும் "கால்நடை தடுப்பூசியாளர்" மற்றும் "கால்நடை மற்றும் கோழிப் பண்ணைகளுக்கான உயிரி பாதுகாப்பு மேலாண்மை தொழில்நுட்பங்கள்" ஆகிய பயிற்சி வகுப்புகள், திருநெல்வேலியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 20-6-2015 அன்று துவக்கி வைக்கப்பட்டன.

❖ மாதவரம் பால்பண்ணையில் உள்ள பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணையில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.28.85 இலட்சம் செலவில் "நீர்கட்டு (ஹைட்ரோ போனிக்ஸ்) முறை பசுந்தீவன உற்பத்தி அலகு" அமைக்கப்பட்டது.

[2016 ஆகஸ்ட் 19

- ❖ ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலி கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி, ஓசூர், திருவண்ணாமலை, விழுப்புரம், இராஜபாளையம், திருச்சி, கால்நடை மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் மற்றும் தேனி, உழவர் பயிற்சி மையத்தில் ரூ.129.91 கோடி மதிப்பில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சிமூலம் 15-7-2015 அன்று திறந்து வைத்தார்.

- ❖ புதிதாக வடிவமைக்கப்பட்ட பண்ணை உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களைப் பரிசோதிக்கவும், பரிசோதனையில் வெற்றி பெற்ற உபகரணங்களை அதிக எண்ணிக்கையில் உற்பத்தி செய்து பண்ணையாளர்களுக்கு விற்பனை செய்யவும் "பல்கலைக்கழக புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்பு மற்றும் கருவிமயமாக்கல் மையம்" பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணையில் நிறுவப்பட்டுள்ளது.

- ❖ இப்பல்கலைக்கழகம், சமீபத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் 38 சிறப்பு கால்நடை மருத்துவ முகாம்களை நடத்தி, 32,121 பிராணிகளுக்கு சிகிச்சை அளித்தது.

- ❖ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பதினெட்டாவது பட்டமளிப்பு விழா, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 5-2-2016 அன்று நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் வேந்தரும் மேதகு தமிழக ஆளுநருமான டாக்டர் கே. ரோசய்யா அவர்கள் தலைமை வகித்து 309 மாணாக்கர்களுக்கு பட்டம் மற்றும் பட்டயங்களை வழங்கினார். மேலும், அஞ்சல் வழியில் பட்டங்களைப் பெற விண்ணப்பித்த 204 மாணாக்கர்களுக்கும் பட்டங்களை அளிக்க ஒப்புதலும் வழங்கினார்.

- ❖ பயிற்சி அளிப்பதோடு கால்நடைகளைத் தாக்கும் நோய்களைக் கண்டறிந்து உதவிட, மதுரையிலுள்ள கால்நடை மருத்துவ

2016 ஆகஸ்ட் 19]

பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ரூ.1 கோடி செலவில் கால்நடை மருத்துவ பயிற்சி மற்றும் நோயறி மையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

- ❖ தமிழ்நாடு புதுமை முயற்சித் திட்டத்தின்(TANII) கீழ், ரூ.12.76 கோடி செலவில் "சிறு விலங்கினங்களுக்கான பரிசோதனை வசதிகளுடன்கூடிய விலங்கின உயிர்பாதுகாப்பு நிலை-III ஆய்வகத்தை" மாதவரத்தில் அமைக்க தமிழக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன்மூலம், சென்னையிலேயே, பறவைக் காய்ச்சல் மற்றும் கோமாரி நோய்களை ஆய்வக சோதனைகள்மூலம் உறுதிப்படுத்த இயலும்.

- ❖ தமிழகத்தின் குக்கிராமத்தில் இருக்கும் கால்நடைகளுக்கும் 24 மணிநேரமும் கால்நடை மருத்துவ அவசர சிகிச்சை அளிக்கும் பொருட்டு, "கிராமப்புற கால்நடை நலத்திற்கான நடமாடும் கால்நடை மருத்துவ சிகிச்சை ஊர்தி" ["Animal Mobile Medical Ambulance (AMMA) for rural veterinary health care in Tamil Nadu"] எனும் வசதியினை, தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.6.34 கோடியில் ஏற்படுத்த பல்கலைக்கழகத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. நாட்டிலேயே இங்கு தான் முதன்முறையாக இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- ❖ 2015-2016 ஆம் ஆண்டில், இப்பல்கலைக்கழகம் நான்கு மண்டல செயற்கை முறை கருவூட்டல் பயிற்சி மையங்களை தேசிய மாட்டின இனவிருத்தி திட்டத்தின்கீழ் ரூ.100 இலட்சம் செலவில் அமைத்துள்ளது.

14.5. 2015–2016 ஆம் ஆண்டின் பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகள்

நம் நாட்டிலுள்ள பன்னிரெண்டு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகங்களுள், முன்னோடியாகத் திகழும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கல்வி, ஆராய்ச்சி, மருத்துவம் மற்றும் விரிவாக்கக் கல்வி குறித்த செயல்பாடுகளின் விவரம் பின்வருமாறு:

[2016 ஆகஸ்ட் 19

14.5.1. கல்வி

இப்பல்கலைக்கழகத்தில் 2015-2016 ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவர் சேர்க்கை எண்ணிக்கை பின்வருமாறு:

அட்டவணை எண் 14: மாணவர் சேர்க்கை

பாடப்பிரிவு		எண்ணிக்கை
பி.வி.எஸ்சி & ஏ.எச். – கால்நடை மருத்துவம் (அயல்நாடுவாழ் இந்தியர், அயல்நாட்டினர், காஷ்மீரிலிருந்து குடிபெயர்ந்தோர் உட்பட)	:	336
பி.டெக் (உணவு பதனிடுதல் தொழில்நுட்பம்)	:	20
பி.டெக்(கோழியின உற்பத்தித் தொழில்நுட்பம்)	:	20
பி.டெக்(பால்வள தொழில்நுட்பம்)	:	20
எம்.வி.எஸ்சி. (அயல்நாட்டினர்–5 உட்பட)	:	125
எம்.டெக். (உணவு பதனிடுதல் தொழில்நுட்பம்)	:	10
எம்.எஸ்சி (உயிர்த் தகவலியல்)	:	10
எம்.எஸ்சி (உயிர் புள்ளியியல்)	:	3
எம்.பில் (உயிர்த் தொழில்நுட்பவியல்)	:	8
முதுகலைப் பட்டயப் படிப்புகள் (விலங்கின அறிவியல்)	:	18
முனைவர் பட்டம் (கால்நடை மருத்துவம்)	:	98
முனைவர் பட்டம் (உணவு தொழில்நுட்பம்)	:	5
எம்.பி.ஏ. (உணவு மற்றும் கால்நடை தொழில் மேலாண்மை)	:	10

14.5.2. ஆராய்ச்சி சாதனைகள்

- ❖ *ஆட்டுக்கொல்லி நோய்க்கு எதிரான மரபணு மூலக்கூறு தடுப்பூசி தயாரிக்கப்பட்டது.*
- ❖ *நாய்கள் மற்றும் கொறித்துண்ணிகளும் எலிக்காய்ச்சலுக்குக் காரணமான எல். ஆடம்னேலிஸ் வகை நுண்ணுயிரியைப்*

பரப்பக்கூடிய காரணிகளாக விளங்குகின்றன. மனிதர்கள் மற்றும் நாய்கள் செப்டம்பர்—டிசம்பர் மாதங்களில், எலிக்காய்ச்சல் நோயினால் அதிகம் தாக்கப்படுவது அறியப்பட்டுள்ளது.

❖ பொதுவான தீவனப் பயிர்களை முக்கியமாக கோ4 எனும் தீவனப் பயிரை உற்பத்தி செய்யும்போது கார்பன் உட்கிரகிக்கும் திறன் அதிகமாக உள்ளது எனவும் அது காலநிலை மாற்றத்தில் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

❖ தொழில் செறிந்த வேலூர், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில், மாடுகளில் உலோக தாக்கத்தினை கண்காணிக்க கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆறுகளைச் சுற்றி அமைந்துள்ள தொழிற்சாலைகளே மாசுகளுக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளன. பால் மற்றும் தசைகளில் கனஉலோகங்களின் அளவுகளை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளாக தீவனப்புல் மற்றும் தண்ணீரும் விளங்குகின்றன. தீவனம் மற்றும் மண் ஆகியவையும் கன உலோகங்களின் அளவுகளை நிர்ணயிப்பதில் சமமான பங்காற்றுகின்றன. பொதுவாக கோடை காலத்தில் கனஉலோகங்களின் அளவு மழைக்காலத்தை விட அதிகமாக இருந்தது என அறியப்பட்டுள்ளது.

❖ இறந்த கோழிகள் மற்றும் பண்ணை கழிவுகளை எளிய முறையில் அப்புறப்படுத்துவதற்கு குவியல் முறையில் மட்கு உரமாக்குதல் ஏற்ற முறை என்றும், பொருளாதார ரீதியாகவும் பலனளிக்கும் என்பதும் கண்டறியப்பட்டது.

❖ 0.5 சதவிகிதம் வெற்றிலை மற்றும் துளசி சாறினை பாலில் சேர்த்து வைக்கும்போது அதன் இருப்புக் காலம் 5 மணிநேரம் அதிகரித்தது அறியப்பட்டது. பதப்படுத்த பாலில் 0.5 சதவிகிதம் வெற்றிலை சாறு சேர்க்கப்பட்டபோது, ஐந்து நாட்கள் வரை இருப்பு வைத்துப் பயன்படுத்த உகந்ததாக இருந்தது.

❖ அத்தி பழக்கூழ் 20 சதவிகிதம், தேன் 7 சதவிகிதம் இவற்றுடன் லாக்டோ பேசில்லஸ் ராம்னோஸஸ் என்னும் நன்மை செய்யும் நுண்ணுயிரி சுமார் 4 சதவிகிதமும்

உணவுக் கட்டுப்பாடுக்கு உகந்த சின்பயாடிக் ஐஸ்கிரீம் தயாரிக்க உகந்தது என அறியப்பட்டது.

14.5.2.1 உருவாக்கப்பட்ட புதிய பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்கள்

❖ ICAR-TANUVAS நடமாடும் கோழி பதப்படுத்தும் கருவி

❖ பன்றிகளை அடையாளம் காண நிரந்தர பச்சையிடும் தொழில்நுட்பம்

❖ புதிய ரீக்காம்பிணன்ட் மல்டிஎபிடோப் அண்டிஜெனைப் பயன்படுத்தி லெப்டோ ஸ்பைரோசிஸ் நோயைத் துல்லியமாக கண்டறிய, IgM சார்ந்த என்சைமுடன் இணைந்த இம்யூனோசார்பெண்ட் சாதனம்

14.5.3. சிகிச்சைப் பணிகள்

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் கால்நடை மற்றும் செல்லப் பிராணிகளுக்கு 24 மணி நேரமும் சிசிச்சை அளித்து வருகின்றது. 2015 ஆம் ஆண்டில், மொத்தம் 1,88,003 பிராணிகளுக்கு புறநோயாளிகள் பிரிவின்கீழ் சிகிச்சைகள் அளிக்கப்பட்டன, மேலும், 4,255 பெரிய விலங்கினங்கள் மற்றும் 663 சிறு விலங்கினங்களுக்கு உள்நோயாளிகள் பிரிவின்கீழ் சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. வெறிநோயால் பாதிக்கப்பட்ட விலங்குகளை வைத்துக் கண்காணிக்க, ஒரு தனிக் கண்காணிப்புப் பிரிவு அனைத்து கல்லூரிகளிலும் இயங்கி வருகின்றது. இப்பல்கலைக்கழகத்தின் மருத்துவமனைகளில் ஹீமோடையலைசர் (Haemodialyser), எண்டோஸ்கோபிக் இமேஜ் பதிவுக் கருவி (Endoscopic image documenting system), கலர் டாப்லர் அல்ட்ராசோனோகிராம் (Colour Doppler ultrasonogram), எலக்ட்ரோகார்டியோகிராம் (Electrocardiogram) வைட்டல் சைன் கருவி (Vital sign moitor) ஆகிய உள்கட்டமைப்பு மருத்துவ வசதிகள் உள்ளன.

14.5.4. ஆய்வகப் பணிகள்

❖ **கால்நடைத் தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான மருந்து கண்காணிப்பு ஆய்வகம், மாதவரம் பால்பண்ணை, சென்னை**

கால்நடைத் தீவனம் மற்றும் கால்நடைப் பொருட்களில் பூஞ்சைக்காளான் நச்சு, பூச்சிக் கொல்லி நச்சுப் படிவங்கள்

உள்ளனவா என்ற பகுப்பாய்வுப் பணியினை இந்த ஆய்வகம் மேற்கொண்டுள்ளது. 2015-2016 ஆம் ஆண்டில், தொழில்முனைவோர் மற்றும் கால்நடைப் பண்ணையாளர்கள் நச்சு அற்ற கால்நடை மற்றும் கோழித் தீவன உற்பத்தியை மேற்கொள்ளும் பொருட்டு 3,121 மாதிரிகள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன.

❖ **கால்நடைத் தீவன பகுப்பாய்வு மற்றும் தர நிர்ணய ஆய்வகம், நாமக்கல்**

மொத்தம், 25,067 மாதிரிகள் பெறப்பட்டு 61,577 சோதனைகளை இந்த ஆய்வகம் செய்துள்ளது. தீவனம் மற்றும் தீவன உபப் பொருட்களில், அடிப்படை உணவுச் சத்து, தாதுச் சத்து, கலப்படப் பொருட்கள் மற்றும் பூஞ்சாண நச்சு ஆகியவை குறித்த 54 வகையான பகுப்பாய்வு சோதனைகள் செய்யப்பட்டன.

❖ காலநிலை பற்றிய செய்தி துண்டுப் பிரசுரங்கள் வாரத்திற்கு இருமுறை பிரசுரிக்கப்பட்டு, தமிழகத்தின் வடமேற்கு வேளாண் காலநிலை மண்டலத்தில் உள்ள பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

❖ **மனித மற்றும் விலங்கினத்திற்கிடையே பரவும் நோய்கள் ஆராய்ச்சிக் கூடம், மாதவரம் பால்பண்ணை, சென்னை**

எலிக்காய்ச்சல் நோயைக் கண்டறிய, மனிதர்கள் மற்றும் கால்நடைகளிடமிருந்து முறையே 3,143 மற்றும் 3,252 ஊநீர் மாதிரிகள் மேட் (MAT-Microscopic Agglutination Test) பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

14.5.5. விரிவாக்கப் பணிகள்

இப்பல்கலைக்கழகத்தின் செயலாக்கங்கள் பின்வருமாறு:

❖ கறவைமாடு வளர்ப்பு, வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, பால் மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு, தீவனம் மற்றும் தீவனப் பயிர் வளர்ப்பு உள்ளிட்ட 22 தலைப்புகளில், மொத்தம் 826 உள்ளிருப்பு மற்றும் 761 வெளிப்புறப் பயிற்சிகள்

நடத்தப்பட்டதன் வாயிலாக 13,062 தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினர் பிரிவினர் உட்பட 62,873 கால்நடைப் பண்ணையாளர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

❖ தமிழக அரசின் தீவன அபிவிருத்தித் திட்டம், புதுவாழ்வுத் திட்டம் மற்றும் கோழியின அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின் 7,894 திட்டப் பயனாளிகளுக்கென மொத்தம் 190 பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

❖ தமிழக அரசின் "விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள்/செம்மறியாடுகள் வழங்கும் திட்டங்களின்கீழ்" 64,733 பயனாளிகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

❖ தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் நிறுவன நாள் விழா-2015 மற்றும் கால்நடை மற்றும் கோழிப் பண்ணையாளர்கள் தின விழா, 19-9-2015 மற்றும் 20-9-2015 தேதிகளில் திருச்சிராப்பள்ளியில் நடத்தப்பட்டன. பண்ணைத் தொழிலில் குறைந்த செலவிலான தொழில்நுட்பங்கள், கால்நடை மற்றும் கோழியினங்கள் மற்றும் கல்வி வாய்ப்புகள் பற்றிய கண்காட்சி நடத்தப்பட்டது. கண்காட்சியை 5000-க்கும் மேற்பட்ட பண்ணையாளர்கள் பார்வையிட்டதோடு, 2000-க்கும் மேற்பட்ட பண்ணையாளர்கள் மற்றும் 500 பள்ளி மாணவர்கள் அறிவுப் பகிர்வு அமர்வில் பங்கேற்றனர்.

❖ இப்பல்கலைக்கழகம், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அறக்கட்டளைச் சொற்பொழிவை 30-9-2015 அன்று நடத்தியது. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் துணைத் தலைமை இயக்குநர் (கால்நடை அறிவியல்) அவர்கள், "உணவுப் பாதுகாப்பிற்கு கால்நடை மற்றும் கோழியின உற்பத்தித் திறனைப் பெருக்குதல்" எனும் தலைப்பில் அறக்கட்டளைச் சொற்பொழிவை ஆற்றினார்.

❖ காட்டுப்பாக்கம், குன்றக்குடி மற்றும் நாமக்கல்லில் உள்ள வேளாண் அறிவியல் நிலையங்களில் "மண்புழு உரம் தயாரித்தல்" குறித்து பயிற்சிகள் பண்ணையாளர்களுக்கு தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

2016 ஆகஸ்ட் 19]

14.5.6. திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்

2015-2016 ஆம் ஆண்டில், இப்பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவ முறைகளில் உள்ள நவீன தொழில்நுட்பங்களைக் கள கால்நடை மருத்துவர்கள் பெறும் பொருட்டு, 22 பாடப் பிரிவுகளில் முதுகலை பட்டய வகுப்புகளை நடத்தியது. இவற்றைத் தவிர, கால்நடை மற்றும் கோழியின உற்பத்தியைப் பெருக்கி கிராமப்புற வருவாயை பெருக்கும் பொருட்டு 15 பாடப் பிரிவுகளில் திறன் மேம்பாட்டு வகுப்புகள் மற்றும் 10 பாடப் பிரிவுகளில் சுய வேலை வாய்ப்பு வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. 2015-2016 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட முதுகலை பட்டயம், திறன் மேம்பாடு மற்றும் சுய வேலை வாய்ப்பு வகுப்புகளில் முறையே 48, 65 மற்றும் 488 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

14.6. தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கும், சாரோன் போக்பண்ட் ஃபுட்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தம், இரு தரப்பிடையே குறிப்பாக திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்கான பாடத்திட்டங்களை உருவாக்குதல், மாணவர் பரிமாற்றத்திற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல், பி.டெக். (கோழியின உற்பத்தி தொழில்நுட்பம்) மாணவர்களுக்குத் தொழில்சார் வேலைவாய்ப்பிற்கு உதவுதல், தொழில் முனைவோராவதற்கு மாணவர்களுக்கு உதவுதல் மற்றும் அந்நிறுவனத்தில் வேலை வாய்ப்பினைப் பெறவும் வழி வகை செய்யும். தாய்லாந்தில் உள்ள அந்நிறுவனத்தின் தலைமையகத்தில், பல்கலைக்கழகத்தின் மாண்புமிகு துணைவேந்தர் அவர்கள் 1-10-2015 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

14.7. 2016–17 ஆம் ஆண்டிற்கான முன்னுரிமைகள்

1. புதிய பயிற்சிமற்றும் ஆராய்ச்சி மையங்கள்

தற்போது இப்பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையங்கள், தமிழகத்தின் 25 மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. மேலும் மூன்று மாவட்டங்களில் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களை நிறுவ திட்டமிட்டு உள்ளது.

[2016 ஆகஸ்ட் 19

2. அடுத்த இரண்டு ஆண்டிற்கான முன்னுரிமைத் திட்டங்கள்

- ❖ *மண்டல ஆராய்ச்சிப் பண்ணை, புதுக்கோட்டையில், 2016-2017 கல்வியாண்டு முதல் கால்நடை மருத்துவ பல்தொழில்நுட்ப வகுப்புகள் துவங்குதல்*
- ❖ *கால்நடை மற்றும் கோழியின கழிவு மேலாண்மை மையங்கள் அமைத்தல்*
- ❖ *பல்கலைக்கழகத்தில் பசுமை முயற்சியாக, சூரிய மின்இயக்கப் பண்ணைகள் அமைத்தல்*
- ❖ *புதிய உத்திகளைக் கொண்டு செறிவூட்டல்மூலம் புதுமையான உணவுப் பொருட்களை உருவாக்குதல்*


15. நிதி ஒதுக்கீடு 2016–17


2016-2017 ஆம் ஆண்டுக்கு ரூ.1,188.9667 கோடியை அரசு ஒதுக்கியுள்ளது. அதில் ரூ.1,095.1863 கோடி வருவாய் செலவினமாக இருக்கும் என்றும், ரூ.93.7803 கோடி மூலதன செலவினமாக இருக்கும் என்றும், கடன் ரூ.1,000 இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

16. முடிவுரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையுடன்கூடிய தலைமையின்கீழ், கால்நடை பராமரிப்புத் துறை, கிராமப்புறங்களில் பொருளாதார முன்னேற்றத்தை உருவாக்கி வருகிறது. இத்துறையின்மூலம் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஏழைகள் மற்றும் பெண்களுக்கு ஆதரவாக அவர்களை மையப்படுத்தி செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களின் மூலமாக சிறு, குறு மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களின் வருவாய் பல மடங்கு உயர்ந்துள்ளது.

கால்நடை பராமரிப்புத் துறை எதிர்வரும் ஆண்டுகளில் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டம் 2023-ல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கை அடைவதற்காக கடினமாக உழைக்க உறுதிபூண்டுள்ளது.


நிதி ஒதுக்கீடு
(ரூபாய் கோடியில்)
676.5
814.03
990.79
1069.25
1097.42
1188.97
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16
2016-17
0
200
400
600
800
1000
1200
1400


தீவன அபிவிருத்தியின்கீழ் கொண்டு வரப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கரில்)
80000
70000
60000
50000
40000
30000
20000
10000
0
521
24584
29529
45650
62063
72936
2010-11
2011-12
2012-13
2013-14
2014-15
2015-16

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.